வெளியீடு: 13 - 3 - 2003 Issued : 13 - 3 - 2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 30, 2002 — தொகுதி 26 — எண் 1

**Tuesday the 30th April, 2002 — Volume 26 — No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

302/2003

30-4-2002

## உள்ளடக்கம்


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-ix

Governor and Council of Ministers xi-xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xv-xviii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xix-xxix

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 9) 1-35

2. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 36-37

3. மானியக் கோரிக்கைகள், *2002-2003,* விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 38 - பொதுப் பணித் துறை
(ஆ) கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை
(இ) கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
(ஈ) கோரிக்கை எண் 34 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
(உ) கோரிக்கை எண் 23 - உள் துறை-சிறைச் சாலைகள்
— 37-116

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 37-103

பக்கங்கள்

3\. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஊ) கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் 116-165

*மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் 117,124,146-161

திரு. சோ. பாலகிருஷ்ணன் 124-129

*திரு. ஆர்.டி. கணேசன் 130-136

திருமதி பூபதி மாரியப்பன் 136-139

*திரு. கி. பாரிமோகன் 140-146

(எ) கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை 165-173,181-254,270-290,291-293

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி 166,173,270-290

(ஏ) கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை 173-181,254-269,294-296

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 174,180-181,254-269

*திரு. வி.கே. லட்சுமணன் 181-189

திரு. என்.கே. பெருமாள் 192-199

*திரு. பி.எஸ். உலகரட்சகன் 200-207

திரு. போளூர் வரதன் 208-218

செல்வி க. பாலபாரதி 219-223

திரு. க. பதினெட்டாம்படியான் 223-228





பக்கங்கள்

3\. மானியக் கோரிக்கைகள் 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(ஏ) கோரிக்கை என் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை—தொடர்ச்சி

திரு. வை. சிவபுண்ணியம் 228-240,286-287

திரு. எச். ராஜா 233,240-250,290

*திருமதி சான்ட்ரா டான் க்ரவல் 251-254

4\. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்— 297-298

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

4. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
225162
சென்னை-600 008
நூலகம்

**5. சட்டத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :**

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

**6. இந்துசமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :**

இந்துசமய மற்றும் அறநிலையங்கள்.

**7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. செ. செம்மலை :**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

**8. உள்ளாட்சித் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. ப. தனபால் :**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

**10. வருவாய்த் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



**11. வேளாண்மைத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**12. சமூக நலத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**14. போக்குவரத்துத் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

**15. மின் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** – **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

**17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. மோகன் :**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**18. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

**19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :**

கால்நடை பராமரிப்பு.

**21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

**22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



**23. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

**25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**26. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :**

மீன்வளம்.

**27. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர் :**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including Minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan and Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development.



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines and Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests and Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

**19. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

**20. Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

**21. Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

**22. Minister for Labour** .. **The Hon. Thiru Va.Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

**23. Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

**24. Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

**25. Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

**26. Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

**27. Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.க. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*12-3-2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. (விடுப்பு) | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி. பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச. இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

| | | |
|---|---|---|
| 21. ஆறுமுகம், திரு. த. | .. | திருவொற்றியூர் |
| 22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 23. ஆஸ்டின், திரு. | .. | நாகர்கோவில் |
| 24. இரவிராஜ், திரு. கோ. | .. | திருத்தணி |
| 25. இராசேந்திரன், திரு. சி. | .. | திருவோணம் |
| 26. இராசேந்திரன், திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 27. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 28. இராமசாமி, திரு. பி.சி. | .. | மொடக்குறிச்சி |
| 29. இராமச்சந்திரன், திரு. எஸ். | .. | கலசப்பாக்கம் |
| 30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். | .. | சாத்தூர் |
| 32. இராமு, திரு. ந. | .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 33. இராம் பிரபு, திரு. இரா. | .. | பரமக்குடி (செ.வ.) |
| 34. இராஜசேகர், திரு. மா. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 35. இராஜரெத்தினம், திரு. ப. | .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 36. இராஜா, திரு. டி.கே. | .. | திருப்பத்தூர் |
| 37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. | பத்மநாபபுரம் |
| 38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. | ஆலங்குளம் |
| 39. இலட்சுமணன், திரு. கே.என். | .. | மயிலாப்பூர் |
| 40. இளவழகன், திரு. ப. | .. | அரியலூர் |
| 41. இளையகண்ணு, திரு. கா.தி. | .. | ஏற்காடு (ஆவா.) |
| 42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | |
|---|---|---|
| 43. ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. | திருவல்லிக்கேணி |
| 45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |
| 46. உமாதேவன், திரு. கே.கே. | .. | திருப்பத்தூர் |
| 47. உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. | செய்யாறு |
| 48. ஏழுமலை, திரு. வெ. | .. | செஞ்சி |
| 49. கணபதி, திரு. ந. | .. | வானூர் (செ.வ.) |
| 50. கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 51. கணேசன், திரு. ஆர்.டி. | .. | தேனி |
| 52. கண்ணன், திரு. ஏ.எஸ். | .. | பொன்னேரி (செ.வ.) |
| 53. கந்தசாமி, திரு. கு.ரா. | .. | சத்தியமங்கலம் |
| 54. கந்தசாமி, திரு. கா. | .. | குன்னூர் (செ.வ.) |
| 55. கருணாகரன், திரு. கே.சி. | .. | சிங்காநல்லூர் |
| 56. கருணாநிதி, திரு. மு. | .. | சேப்பாக்கம் |
| 57. கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 58. கருப்பணன், திரு. கே.சி. | .. | பவானி |
| 59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 60. கலாவதி, திருமதி கு. | .. | சேந்தமங்கலம் (ஆவா.) |
| 61. கனகதாரா, செல்வி சி. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 62. கனிதா சம்பத், திருமதி எஸ். | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 63. காசாம்பு பூமாலை, திருமதி | .. | சங்கராபுரம் |
| 64. காமராஜ், திரு. மே.ப. | .. | தாரமங்கலம் |
| 65. கார்த்தி, திரு. மு. | .. | சேலம்-2 |

66. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்
67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
68. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
69. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
71. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
72. கோபிநாத், திரு. கே. - ஒசூர்
73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
74. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
75. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
76. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
77. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
78. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
80. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
81. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
82. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
83. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
85. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
86. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
87. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
88. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
90. சாமி, திரு. ஆர். - மேலூர்
91. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
92. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
93. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
94. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
95. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
97. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
98. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
99. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
100. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
101. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
102. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
103. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
104. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
105. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
106. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
107. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
108. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
109. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
110. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
111. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
122. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. - காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு



134. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. - இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி - போளூர்
141. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்

161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்

162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி

163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி

164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்

166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

167. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திக்குளம்

168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

169. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)

170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு

171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)

173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு

175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

176. மணி, திரு. டி. - விளவங்கோடு

177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்

178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை

180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி

181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி

182. மில்லர், திரு. அ. - கடலூர்

183. முரளிதரன், திரு. கே.வி. - தளி

184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)

185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்

186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. - சின்னசேலம்

189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்

191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்

193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்

194. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்

195. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்

196. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி

197. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

198. ராஜா, திரு. எச். - காரைக்குடி

199. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

200. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

201. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | - | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | - | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | - | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | - | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | - | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | - | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | - | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | - | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | - | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | - | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | - | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. | - | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | - | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | - | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | - | சேலம்-I |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | - | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | - | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | - | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | - | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | - | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | - | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | - | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | - | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | - | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | - | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | - | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | - | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | - | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | - | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | - | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | - | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | - | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | - | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | - | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 17, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033**
**2002 ஏப்ரல் 30, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட, ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணை புரியும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

**(பட்டியல் 9)**

**உதவித் தொகை**

**வினா எண் 14206—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் மரணமடைந்தால், ஈமச் சடங்கு செய்ய ரூ.2,000 வழங்க அரசு இந்நிதியாண்டில் முன்வருமா?

[2002 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் மாவட்டம், அண்ணமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைப்பதற்காக 2001-2002 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, அரசாணை (நிலை) எண் 581, கல்வித் துறை, நாள் 14-7-1994-ன்படி, பசுமை வேலி அமைப்பது தொடர்பாக வனத் துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4—

## உடற்பயிற்சி மையம்

**வினா எண் 10225—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், கக்கன்ஜி நகரில், இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உடற்பயிற்சி மையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தற்போதுள்ள நிதிநிலையில், திருவள்ளூர் மாவட்டம், பட்டாபிராம், கக்கன்ஜி நகரில், இளைஞர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் உடற்பயிற்சி மையம் ஏற்படுத்திட வழிவகை இல்லை.

5—

## மேல்நிலைப் பள்ளிகள் தொடங்குதல்

**வினா எண் 12307—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 30]

2001-2002 ஆம் கல்வியாண்டில் சேலம் மாவட்டத்தில் புதியதாக எத்தனை மேல்நிலைப் பள்ளிகள் தொடங்க அரசு ஆவன செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில், கீழ்க்கண்ட ஆறு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி, ஆணை வெளியிடப்பட்டுள்ளது:

1. அரசு உயர்நிலைப் பள்ளி, செட்டிமாங்குறிச்சி
2. அரசு உயர்நிலைப் பள்ளி, உடையாப்பட்டி
3. அரசு உயர்நிலைப் பள்ளி (மகளிர்), வீரகனூர்
4. அரசு உயர்நிலைப் பள்ளி (மகளிர்), தலைவாசல்
5. அரசு உயர்நிலைப் பள்ளி, கே. மேரூர்
6. அரசு உயர்நிலைப் பள்ளி, ஜாகிர் அம்மாபாளையம்.

6—

## விளையாட்டு ஊக்கத் தொகை

**வினா எண் 12381—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, விளையாட்டு ஊக்கத் தொகை எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) எடப்பாடி தொகுதியில், எத்தனை பேருக்குக் கிடைத்துள்ளன?

[2002 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டத்தில் மொத்தம் 17 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அந்த 17 சிறந்த விளையாட்டு வீரர்களில், எடப்பாடி தொகுதியைச் சார்ந்த எவரும் இடம் பெறவில்லை.

7—

**மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா எண் 12616—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 2000-2001 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர், அரசு உயர்நிலைப் பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.



2002 ஏப்ரல் 30]

8—

**மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

**வினா எண் 12619—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி பூங்குளம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 2001-2002 ஆம் கல்வியாண்டில் 125 அரசு/நகராட்சி/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பண்ருட்டி தொகுதி, பூங்குளம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளி குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கப்பட்டு, அரசின் நிதிநிலைக்குட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கருதப்படும்.

9—

**உடற்பயிற்சி சாதனங்கள்**

**வினா எண் 16458—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சி, கீழ உவரி கிராம இளைஞர்களுக்கு உடற்பயிற்சி சாதனங்கள் வழங்கிட அரசு முன்வருமா?

[2002 ஏப்ரல் 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:**

தற்போதுள்ள நிதிநிலையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், க. உவரி ஊராட்சி, கீழ உவரி கிராம இளைஞர்களுக்கு உடற்பயிற்சி சாதனங்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்மூலம் வழங்கிட வழிவகை இல்லை.

10—

**குடிநீர்**

**வினா எண் 3420—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001-ல் எடப்பாடி நகராட்சிப் பகுதியில், குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகள் எத்தனை?

(ஆ) அதில் பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்ட பகுதிகள் எத்தனை? அதனால் பலனடையும் மக்கள் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001-ல் எடப்பாடி நகராட்சிப் பகுதியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எந்தவொரு மேல்நிலைத் தொட்டியும் கட்டப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

11—

**கூடுதல் திறன் மின் இயக்கி**

**வினா எண் 3800—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 30]

(அ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டையில் உள்ள 12 ஹெச்.பி. ஆழ்துளைக் கிணறு மின் இயக்கிக்குப் பதிலாக, 15 ஹெச்.பி. மின் இயக்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அரசின் நிதி நெருக்கடி காரணமாக, கூடுதல் செலவினங்களை மேற்கொள்ள அரசால் தற்போது இயலாது. மேலும் குடிநீர்ப் பராமரிப்புப் பணி, கிராம ஊராட்சியின் பொறுப்பாகும். தற்போது பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டையில் உள்ள 12 ஹெச்.பி. மோட்டார் நீர் வெளியேற்றும் திறன் குறைவாக இருந்தால், கூடுதல் திறன் கொண்ட 15 ஹெச்.பி. மின் மோட்டார் வாங்கிப் பொருத்த வேண்டும் என ஊராட்சி விரும்பினால், ஊராட்சி நிதியில் வாங்கிப் பொருத்த ஊராட்சித் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12—

**மின் மோட்டார் பொருத்துதல்**

**வினா எண் 4219—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மேல்வடகுத்து கிராமத்தில் குடிநீர்த் தொட்டிக்கு மின் நீரேற்றும் இயக்கி பொருத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடகுத்து ஊராட்சிக்கு உட்பட்ட மேல்வடகுத்து குடியிருப்பில் தற்சமயம் 15,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மின் மோட்டார் மிகவும் பழுதடைந்து இருப்பதால், புதிய மின்

[2002 ஏப்ரல் 30

மோட்டார் ஒன்று, ராஜிவ் காந்தி தேசியக் குழுமம் மூலமாக, மக்கள் பங்கேற்புடன்கூடிய புனரமைப்புத் திட்டத்தின்மூலம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் புதிய மின் மோட்டார் பொருத்தி, இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 4225—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சியைச் சார்ந்த நடுமேட்டுக்குப்பம் பகுதியில் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய புதிய குடிநீர்த் திட்டப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. விரைவில் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

14—

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 4226—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ஆராய்ச்சிக்குப்பம் கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படுமா?



2002 ஏப்ரல் 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சியைச் சார்ந்த ஆராய்ச்சிக்குப்பம் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்னிறைப்பான் திட்டத்திற்கான நீராதாரமான ஆழ்துளைக் கிணறு பழுதுபட்டுள்ளதால், குடிநீர்த் திட்டம் தற்சமயம் செயல்படவில்லை. இத்திட்டத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கு ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மக்களின் பங்கேற்புடன்கூடிய திட்டம், செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், இத்திட்டம் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 4306—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெத்தநாயக்கன்குப்பம் பிரதான சாலையில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெத்தநாயக்கன்குப்பம் ஊராட்சியைச் சார்ந்த பெத்தநாயக்கன்குப்பம் குடியிருப்பில், தற்சமயம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்பில் குடிநீர் விநியோகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி

[2002 ஏப்ரல் 30

செயய ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டம் மூலமாக புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பகிர்மானக் குழாய் சீரமைக்கும் பணி மேற்கொள்ள நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

16—

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா எண் 4751—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கூத்தாடி பாளையத்திற்குப் போதுமான தெருவிளக்குப் போட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கூத்தாடிபாளையம் கிராமத்தில் 15 வீடுகள் உள்ளன. இப்பகுதிக்கு ஏற்கெனவே இரண்டு தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிகின்றன. இதைத்தவிர, கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைப்பதற்குத் தற்போது சாத்தியமில்லை.

17—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 5076—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கீழிருப்பு கிராமத்திலுள்ள வடக்குத் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழிருப்பு ஊராட்சியைச் சார்ந்த கீழிருப்பு குடியிருப்பு, வடக்குத் தெரு, கீழிருப்பு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்குத் தற்சமயம் 10,000 லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கீழிருப்பு வடக்குத் தெருவிற்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை. எனவே, இக்கேள்வி எழவில்லை.

18—

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 5079—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான் கிராமத்தில் வடக்குத் தெருவிலுள்ள எமராஜன் கோயில் திடலில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான் குப்பம் குடியிருப்பில் 60,000 லிட்டர் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுகள் கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தனியாக ஓர் ஆழ்துளைக் கிணறு ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

[2002 ஏப்ரல் 30

19—

## குடிநீர் வசதி

**வினா எண் 5083—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வடகுத்து காலனியில் குடிநீர் வசதி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடகுத்து ஊராட்சிக்குட்பட்ட வடகுத்து காலனி குடியிருப்பில் தற்சமயம் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மூலம் காலனி பகுதி மக்களுக்குப் போதிய அளவு குடிநீர் கிடைக்கப் பெறாததால், ராஜீவ் காந்தி தேசியக் குடிநீர்க் குழுமம் மூலமாக மக்களின் பங்கேற்புடன்கூடிய குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், பணிகள் மேற்கொள்ள, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

20—

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 5086—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரசிங்கன்குப்பம் கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி ஒன்றியம், வீரசிங்கன்குப்பம் குடியிருப்பில் தற்சமயம் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், மக்களின் கூடுதல் குடிநீர்த் தேவைக்காக மக்கள் பங்கேற்புடன்கூடிய ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தில் எடுத்து செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளிடமிருந்து பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்.

21—

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 5087—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெய்க்காநத்தத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், கோரணப்பட்டு ஊராட்சியைச் சார்ந்த பெய்க்காநத்தம் குடியிருப்பில் தற்சமயம் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்டத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வழங்குதலில் பற்றாக்குறை இருப்பதால், கூடுதல் குடிநீர் வசதிக்கு ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்க் குழுமம் மூலமாக மக்களின் பங்கேற்புடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை

[2002 ஏப்ரல் 30

பெறப்பட்டவுடன், புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

**தண்ணீர் வசதி**

**வினா எண் 5503 (ஆ)—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து, தண்ணீர் வசதி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சிலம்பிநாதன்பேட்டை ஊராட்சியைச் சார்ந்த சிலம்பிநாதன் குடியிருப்பில் தற்சமயம் ஒரு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்காக ராஜிவ் காந்தி தேசியக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் புதிய திட்டம் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்கேற்புத் தொகை பெறப்பட்டவுடன், புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

**குளம்**

**வினா எண் 5586—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சிக்குச் சொந்தமான, புல எண் 115/2-ல் உள்ள குளம்



2002 ஏப்ரல் 30]

பலரால் ஆக்கிரமிக்கப்பட்டு, பொது மக்களுக்கு இடையூறாக உள்ளதால் ஆக்கிரமிப்பை அகற்ற பேரூராட்சி அதிகாரிகளுக்கு அரசு உத்தரவிடுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை பேரூராட்சிக்குச் சொந்தமான புல எண் 115/2-ல் உள்ள 0.22.5 ஏர்ஸ் பரப்பளவு உள்ள குளம் பலரால் ஆக்கிரமித்துள்ள நிலையில், வருவாய்த் துறையினரைக் கொண்டு முழுமையான அளவில் அளவீடுகள் கண்டறிந்து, மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்போடு அகற்றிட, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

24—

**பொது குடிநீர்க் குழாய்**

**வினா எண் 7328—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி, ராமகிருஷ்ணா பள்ளி முன்பு இருக்கும் குழாயிலிருந்து பொது குடிநீர்க் குழாய் வைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திசையன்விளை பேரூராட்சி, ராமகிருஷ்ணா பள்ளிமுன்பு, தற்போது ஆழ்குழாய்க் கிணற்றில் கம்ப்ரசர் மோட்டார் மாட்டி, சின்டெக்ஸ் டேங்க் வாயிலாகக் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும், பள்ளியின் பக்கத்தில் ஒரு தெரு பைப் அமைக்கப்பட்டு, அதன் வாயிலாகவும் 2 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகிறது. எனவே பொது குடிநீர்க் குழாய் அமைக்கத் தேவை எழவில்லை.

[2002 ஏப்ரல் 30

25—

### மின்சாரத் தெருவிளக்கு

**வினா எண் 8754—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொள்ளுபுரம் ஒன்றியம், சதுரபபாளையத்தான் வளவு பகுதியில் ஒரு மின்சாரத் தெருவிளக்கு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு தகவல் தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொள்ளுபுரம் ஒன்றியம், சதுரபாளையத்தான் வளவு என்னும் இடத்தில் சுமார் 20 வீடுகள் உள்ளன. அங்கு 100 வாட்ஸ் குழல் விளக்குகள் மூன்றும், 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு ஒன்றும் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிந்து வருகின்றன. ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க, தற்போது சாத்தியமில்லை.

26—

### புதிய ஆழ்குழாய்ப் பம்பு

**வினா எண் 8775—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், மலையான்குளம் ஊராட்சி, அரிசன காலனி வடக்கு தெரு, மாதுடையான்குளம், பண்பிண்டு ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்குழாய்ப் பம்பு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி அரிசன காலனி வடக்குப் பகுதி, மலையான்குள குடியிருப்புடன் இணைந்த பகுதியாகும். நடப்பு நிதியாண்டில் அரிசன காலனி பகுதிக்கு சத்துணவுக் கூடம் அருகில் புதிய ஆழ்துளைக் கிணற்றுடன்கூடிய கையிறைப்பான் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மாதுடையான்குளம், பண்பிண்டு மாதுடையான்குளம் குடியிருப்புடன் இணைந்த பகுதியாகும். மாதுடையான்குளம் குடியிருப்பில் 2000-2001 ஆம் நிதியாண்டில் ஆழ்துளைக் கிணறு நீராதாரத்துடன் கூடிய தனி மின் விசைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதன் மூலம் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

27—

### குடிநீர்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 10165—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வழூர் அகரம் ஊராட்சியில் குடிநீர்க் கிணறு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி, வழூர் அகரம் ஊராட்சியில் 17 கைப்பம்புகளும், விசைப்பம்புத் திட்டங்கள் 5-ம், வீட்டுக் குடிநீர் இணைப்புகள் 83-ம், பொதுக் குழாய் இணைப்பு 27-ன் மூலமாகவும் தற்போது குடிநீர் விநியோகம் சீராக நடைபெற்று வருகிறது. குடிநீர் வசதி போதுமான நிலையில் உள்ளதால், தற்போது புதிதாகக் குடிநீர்க் கிணறு அமைக்கத் தேவை எழவில்லை.

[2002 ஏப்ரல் 30

28—

**சோடியம் மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 10530—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட மதனகோபாலபுரம் ஊராட்சியில், ரோட்டுத் தெருவில் புதியதாக ஒரு மின் கம்பம் அமைத்து சோடியம் மின் விளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (2டி) எண் 151, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14-8-2001-ன்படி கிராமப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக குழல் விளக்குகளுடன்கூடிய தெருவிளக்குகள் மட்டுமே நிறுவப்பட வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கான நிதியினை, சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்குட்பட்டு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக் குழு மானியத்திலிருந்தோ மேற்கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட மதனகோபாலபுரம், ரோட்டுத் தெருவில் புதியதாக மின் கம்பம் அமைத்து சோடியம் மின் விளக்கு அமைத்துத்தர வழிவகை இல்லை.

29—

**மின் விளக்கு அமைத்தல்**

**வினா எண் 12848—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் மேலமூங்கிலடி-தையாகுப்பம் இணைப்புச் சாலையில் புதிதாக மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, மேலமூங்கிலடி, தையாகுபபம் ஊராட்சிகளில் நிதிநிலை, தற்போதுள்ள தெருவிளக்குகள் மற்றும் குடிநீர்ப் பராமரிப்புப் பணிக்கே பற்றாக்குறையாக உள்ளது. எனவே, மேலமூங்கிலடி - தையாகுப்பம் இணைப்புச் சாலைக்கு தெருவிளக்கு வசதி செய்துதர தற்போது சாத்தியமில்லை.

30—

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா எண் 13706—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் கிராமத்திலுள்ள கத்திரிப்பட்டி, ஊர்நத்தம், மலையாள் தெரு ஆகிய ஊர்களில் தெருவிளக்குகள் போதிய அளவு இல்லையாதலால், அங்கு தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் கிராமத்திலுள்ள கத்திரிப்பட்டியில் 1 தெருவிளக்கும், ஊர்நத்தத்தில் 3 தெரு விளக்குகளும், மலையாள் தெருவில் 9 தெருவிளக்குகளும் தற்போது உள்ளன. தற்போது ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைக்க இயலாது.

[2002 ஏப்ரல் 30

31—

**பயணிகள் ஓய்வு அறை**

**வினா எண் 1485—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி பேருந்து நிலையத்தில் பயணிகள் ஓய்வு அறை கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து நீண்ட தூரப் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. மேலும் இந்நகராட்சிக்கு அருகில் சுற்றுலாத் தலம் ஏதுமில்லை. வெளியூர்ப் பயணிகள் அதிகம் வர வாய்ப்பில்லை. இந்நகராட்சியின் பரப்பளவில் 80% கிராமப் பகுதியாகவே உள்ளது. மேலும், நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. எனவே, இப்பேருந்து நிலையத்தில் பயணிகள் ஓய்வு அறை தேவையற்றதாக உள்ளது.

32—

**கூடுதல் தெருவிளக்கு**

**வினா எண் 14860—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், ஜீவா நகருக்கு, போதுமான தெருவிளக்குகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதலாகத் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் ஊராட்சிக்குட்பட்ட ஜீவா நகரில் மொத்தம் 11 குடியிருப்புகள் உள்ளன. அதன் மக்கள் தொகை சுமார் 50 ஆகும். இக்குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே ஒரு தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சியில் நிதி வசதி இல்லாத காரணத்தால் கூடுதலாகத் தெருவிளக்குகள் அமைக்க, தற்போது சாத்தியமில்லை.

33—

**சோடியம் மின் விளக்குகள்**

**வினா எண் 15356—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் கிராமம், ஆதிதிராவிட இன மக்கள் வசிக்கும் பகுதியில் கூடுதலாக சோடியம் மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை (2டி) எண் 151, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14-8-2001-ல் கிராமப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக குழல் விளக்குகளுடன்கூடிய தெருவிளக்குகள் மட்டுமே நிறுவப்பட வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், இதற்கான நிதியினை சட்டமன்ற உறுப்பினர்களின் ஒப்புதலுக்குட்பட்டு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக் குழு மானியத்திலிருந்தோ மேற்கொள்ளலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் கிராமம், ஆதிதிராவிட இன மக்கள் வசிக்கும் பகுதியில் கூடுதலாக சோடியம் மின் விளக்குகள் அமைத்துத் தர அரசிற்கு வழிவகை இல்லை.

[2002 ஏப்ரல் 30

34—

### ஊதிய உயர்வு

**வினா எண் 14383—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்நிதியாண்டில் ஊதிய உயர்வு தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழக அரசு அச்சகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இந்நிதியாண்டில் ஊதிய உயர்வு தர தற்போது திட்டம் ஏதுமில்லை. ஏனைய அரசு ஊழியர்களைப் போன்று இவர்களுக்கும் ஓர் ஆண்டு முடிந்தபின் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது.

35—

### கருவிகள் வழங்குதல்

**வினா எண் 14163—திரு. பீஎச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பண்ணை இயந்திரமாக்கும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் கருவிகள் வழங்க அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன் மகாதேவி ஒன்றியத்திற்கு ஒரு கதிரடிக்கும் இயந்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயனாளி தேர்வு செய்யப்பட்டு



2002 ஏப்ரல் 30]

வருகின்றது. மேற்படி கதிரடிக்கும் இயந்திரம் தேவைப்படும் விவசாயி, சேரன்மகாதேவி வேளாண்மை வளர்ச்சி அலுவலரை அணுகி, பயன்பெறலாம். இதற்காக மானியம் ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆகும்.

2. பவர் டில்லரைப் பொறுத்தவரை கடையம் ஒன்றியத்திற்கு ஒரு எண்ணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திரு. பெ. நாராயணன், த/பெ. பெரியசாமி நாடார், 16/3, நடுத்தெரு, அருணாசலம்பட்டி, கடையம் என்ற முகவரியிலுள்ள பயனாளியிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இதற்கான மானியம் ரூ.30,000 ஆகும். மேலும் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இதர வேளாண்மை இயந்திரங்களையும், அம்மாவட்டத்தின் இதர ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

36—

### அரசு பால்வாடி

**வினா எண் 1670—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், தொட்டிக்குப்பத்தில் அரசு பால்வாடி கட்டித் தருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

பண்ருட்டி வட்டம், தொட்டிக்குப்பம், துணை கிராமமாக உள்ளது. இக்கிராமப் பயனாளிகள் 1 கி.மீ. தொலைவிலுள்ள மருங்கூர் பிரதான மையத்தில் பயனடைகின்றனர். இங்கு கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதியோ, நிதி ஒதுக்கீடோ இத்திட்டத்தில் இல்லை. எனவே, துணை கிராமமாக இருக்கும் தொட்டிக்குப்பத்தில் மையக் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

[2002 ஏப்ரல் 30

37—

### தையல் இயந்திரம் வழங்கல்

**வினா எண் 3468—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் சத்தியவாணிமுத்து அறக்கட்டளைத் திட்டத்தில், வறுமைக்கோட்டின் கீழுள்ளவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுகிறது?

(ஆ) 2000 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக அரசின் சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டுதோறும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 20 முதல் 40 வயதுடைய, தையல் தெரிந்த வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் ஏழை மகளிர் விதவையர், கணவனால் கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம்.

(ஆ) மேற்படி திட்டத்தின்கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 2215 நபர்களும், 2000-2001 ஆம் ஆண்டில் 1575 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

38—

### சத்துணவு மையம்

**வினா எண் 5454—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சியிலுள்ள குழிப்பாண்தண்டலம் ஊராட்சியில், ஆண்டிக்குப்பம் கிராமத்தில் சத்துணவு மையம் ஆரம்பிக்கும் நோக்கம் அரசிடம் உள்ளதா?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குழிப்பாண்தண்டலம் ஊராட்சியிலுள்ள ஆண்டிக்குப்பம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி/ உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லை. ஆகையால் இந்தக் கிராமத்தில் புதிய பள்ளி சத்துணவு மையம் ஏற்படுத்துவதற்கு வழி ஏதும் இல்லை.

39—

### சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 5588—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, ப. ஆண்டிக்குப்பத்தில் சத்துணவுக் கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, ப. ஆண்டிக்குப்பத்தில் சமுதாய ஊட்டச்சத்து மையம் தனியாக இயங்கவில்லை. ஆனால், இக்கிராமத்திற்கு அருகில் உள்ள பணிக்கன்குப்பம் கிராமத்தில் உள்ள சமுதாய ஊட்டச்சத்து மையத்தின் துணை கிராமமாகக் கொண்டு பிரதான் மந்திரி கிராமோதைய யோஜனா திட்டத்தில் சேர்க்கப்பட்டு பயனாளிகளுக்கு இணை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

[2002 ஏப்ரல் 30

40—

**சத்துணவுக் கூடம் புதுப்பித்தல்**

**வினா எண் 9656—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், மீனாம்பாள் நகர், 3-வது தெருவிலுள்ள சத்துணவு கூடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், மீனாம்பாள் நகர், 3-வது தெருவில் தற்போது உள்ள பழுதடைந்த சத்துணவுக் கூடம் பழுதுபார்க்கப்படும்.

41—

**விடுதிகள்**

**வினா எண் 10556—திரு. கி. பாரிமோகன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதியில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் விடுதிகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த விடுதிகள் அரசுக் கட்டடங்களில் இயங்குகின்றன?



2002 ஏப்ரல் 30]

விடை—

**மாண்புமிகு திரு. செ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதியில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ், கீழ்க்குறிப்பிட்ட 5 விடுதிகள் இயங்கி வருகின்றன:

(1). கல்லூரி மாணவர் விடுதி, தருமபுரி, (2) கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி, (3) பள்ளி மாணவர் விடுதி, தருமபுரி, (4) பள்ளி மாணவியர் விடுதி, தருமபுரி, (5) பள்ளி மாணவர் விடுதி, நல்லம்பள்ளி.

அதில் கீழ்க்கண்ட மூன்று விடுதிகள் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

(1). கல்லூரி மாணவர் விடுதி, தருமபுரி, (2) கல்லூரி மாணவியர் விடுதி, தருமபுரி, (3) பள்ளி மாணவியர் விடுதி, தருமபுரி.

42.

**புதிய பேருந்துகள்**

**வினா எண் 4736—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள பழையார், திருமுல்லைவாசல் கீழ மூவர்க்கரை ஆகிய கிராமங்களுக்கு பழைய பேருந்துகளுக்குப் பதில் புதிய பேருந்துகள் இயக்கத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதியில் உள்ள பழையார், திருமுல்லைவாசல் கீழ மூவர்க்கரை தடங்களில் இயக்கப்படும் பேருந்துகள் அனைத்தும் பழுதுபார்க்கும் பணிமனையில் பழுதுகள் சீர் செய்யப்பட்டு நல்ல நிலையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும்,

[2002 ஏப்ரல் 30

புதிய பேருந்துகள் பெறப்பட்டவுடன், மேற்கூறிய கிராமங்களுக்கு இயக்கப்பட்டு வரும் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக, வயதின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து, புதிய பேருந்துகள் வழங்குவது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

43—

**பேருந்துகள் விடுதல்**

**வினா எண் 7864—திரு. மா. இராஜசேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் கிராமப்புறப் பகுதியில் ஊஞ்சாம்பட்டி, முக்கூர், நத்தம், சொக்கான்பட்டி, கோவில் செல்லம்பட்டி, கோட்டைப்பட்டி, நரிக்குளம், கோவில் செந்தட்டியாபுரம், அம்மன்கோவில்பட்டி, வடகரை, தென்கரை, சங்கரலிங்கபுரம், கிழவிகுளம், முத்தாநதி போன்ற பகுதிகளில் காலை நேரங்களில் தற்போது புதியதாகப் பேருந்துகள் விடப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இராஜபாளையம்-ஊஞ்சாம்பட்டி வழித்தடத்தில் தினசரி 4 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கொருக்காம்பட்டி, முக்கூர், நத்தம், கோட்டைப்பட்டி, கோவில் செந்தட்டியாபுரம் ஆகிய கிராமங்கள் இராஜபாளையம்-கலிங்கப்பட்டி (தொடுதல்) செல்லம்பட்டி தடப் பேருந்து இயக்கப்படும் சாலையிலிருந்து சுமார் 1.0 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேலும் முத்தாநதி மற்றும் அம்மன்கோவில்பட்டி கிராமங்களும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. அரசு விதிகளின்படி, பேருந்துகள் இயக்கப்படும் பிரதான சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகக் கருதப்படும். இராஜபாளையம்-வலையப்பட்டி (வழி) அம்மன்கோவில்பட்டி விலக்கு, நரிக்குளம் தடத்தில் தினசரி 6 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இராஜபாளையம்-வடகரை/தென்கரை/கலிங்கப்பட்டி (வழி) சங்கரலிங்கபுரம், கிழவிக்குளம், முத்தாநதி விலக்கு, அம்மன்கோவில்பட்டி விலக்கு வழித்தடத்தில்



2002 ஏப்ரல் 30]

முறையே, 14, 10, 4 தனி நடைகள் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் வடகரை/தென்கரை செல்லும் நான்கு நடைகளில் முத்தாநதி கிராமத்தைத் தொடுதல் செய்து பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், நகரப் பேருந்துகள் அனைத்தும் மிகக் குறைந்த இடைவெளி நேரங்களில் பல்முனை வழித்தடத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கோரிக்கைத் தடங்களில் காலை நேரங்களில் புதிதாகப் பேருந்துகள் விட இயலாத நிலை உள்ளது.

44—

**தொழிற்சாலைகள் அமைத்தல்**

**வினா எண் 9836—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில் தொழிற்சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விருதுநகர் மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த நரிக்குடி ஒன்றியத்தில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் இப்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

**ஊதுபத்தித் தொழிற்சாலை**

**வினா எண் 10588—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்டராம்பள்ளி சந்தன ஆலையிலுள்ள உபயோகமற்ற பொருட்கள் (மரத்தூள்கள்) கொண்டு ஊதுபத்தித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், நாட்டராம்பள்ளி சந்தன ஆலையிலுள்ள உபயோகமற்ற பொருட்கள் (மரத்தூள்கள்) கொண்டு ஊதுபத்தித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

46—

**கடனுதவி**

**வினா எண் 8032—திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், செவ்வீர்க்குப்பம் ஒன்றியம், ஏழை மக்களுக்கு சிறு தொழில்கள் தொடங்கவும், தையல் இயந்திரங்கள் வழங்கவும், வங்கிகள் மூலம் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



(ஆ) 2000-2001 ஆம் ஆண்டில் பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், செவ்வீர்க்குப்பம் பகுதியிலிருந்து 9 நபர்களுக்கு சிறு தொழில் தொடங்கவும், தையல் இயந்திரம் வாங்கவும் ரூ. 6,92,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியைச் சேர்ந்த மற்றவர்களும் விண்ணப்பங்கள் அளித்தால், அவர்களில் தகுதியுள்ள நபர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன் வசதி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

**செங்கல் தொழில்**

**வினா எண் 9509—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி சுற்று வட்டாரத்தில் செம்மண், களிமண் அதிகமாகக் கிடைப்பதைக் கொண்டு செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

எடப்பாடி சுற்று வட்டாரத்தில் செங்கல் தொழிற்சாலை அமைக்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், மாவட்டத் தொழில் மையம் தக்க ஆலோசனைகள் வழங்கி, தொழிற்சாலை தொடங்க அனைத்து உதவிகளையும் செய்யும். எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தை தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்துள்ளதால் அங்கு சேம்பர் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பித்தால் அதற்கு 15% மாநில முதலீட்டு மானியம், அதிகபட்சமாக ரூ. 15 இலட்சம் வரை வழங்கப்படும். மேலும் தொழில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்கு முறையே, 40%, 30% மற்றும் 20% குறைந்த அழுத்த மின் மானியமும் அரசால் வழங்கப்படும்.

48—

## அரசு அலுவலர் குடியிருப்பு

**வினா எண் 1689—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி (அரியலூர் மாவட்டம்) செந்துறையில் அரசு அலுவலர் குடியிருப்பு கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடியிருப்பு கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 373, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-2-1998-ன்படி மாவட்டத் தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடத்தில் மட்டுமே அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அரியலூர் மாவட்டத்தில் ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒரு தாலுக்காத் தலைமையிடம் என்பதால், அரசு அலுவலர்களுக்கு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயற்படுத்தவில்லை. இருப்பினும், இப்பகுதியில் அரசு அலுவலர்களிடமிருந்து வாடகைக் குடியிருப்புகளுக்குப் போதிய தேவையும், அரசுக்குச் சொந்தமான தக்க நிலமும், மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையும் கிடைக்கப்பெறின், அரசின் நிதி உதவியுடன், திட்டம் வாரியத்தால் செயற்படுத்தப்படும்.

49—

## குடியிருப்பு

**வினா எண் 13253—திரு. பீஎச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேரன்மகாதேவி பேரூராட்சிப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) பேரூராட்சிப் பணியாளர்களுக்கு என்று தனியாக, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்படுவதில்லை.

(ஆ) எழவில்லை.

50—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 13552—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகம் முழுவதும் காலியாகவுள்ள கால்நடை மருத்துவர் பணியிடங்களை நிரப்ப இந்நிதியாண்டில் அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இந்நிதியாண்டில் 94 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களும், 4 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியிடங்களும் காலியென மதிப்பீடு செய்யப்பட்டு, மேற்படி பணியிடங்களை தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் நிரப்புவதற்கு, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2002 ஏப்ரல் 30

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,...

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமது பதிலுரையைத் தொடரலாம்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவர்களை, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை முடியட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** அப்புறம் எங்களுக்கு Zero hour கிடைக்காதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Zero hour இல்லை. அமைச்சர் அவர்கள் நேற்றே பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) பேச ஆரம்பித்துவிட்டார்கள். (குறுக்கீடு) நேற்றே பேச ஆரம்பித்துவிட்டார்கள். உரை முடியட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் மின் வெட்டு .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த மானியக் கோரிக்கை வரும்போது வேண்டுமானால் கேட்கலாம்.

**திரு. இ. புகழேந்தி:** தலைவர் அவர்களே, விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் ....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி, அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடங்கிவிட்டார்கள்.



2002 ஏப்ரல் 30]

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் கூட்டத் தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருக்கின்றார்கள் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரை முடியட்டும், பதிலுரை முடியட்டும்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 38 - பொதுப் பணித் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை**

**(இ) கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 34 - பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**(உ) கோரிக்கை எண் 23 - உள் துறை—சிறைச்சாலைகள்**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில், மாபெரும் அரசியல் அறிஞர்கள் அமர்ந்திருந்த இந்தப் பெருமைக்குரிய சபையில், ஒரு சாதாரணத் தொண்டனான என்னையும் அரசியலில் ஆளாக்கி, அமைச்சராக்கிய எங்கள் இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் பணிவான நன்றியைக் காணிக்கையாக்குவது என் நீங்காக் கடமையாகும். நான் அரசியலில் அனுபவம் மிக்கவன் அல்ல. எதையும் அறிந்து கற்றவனும் அல்ல. நான் கற்ற கல்வியும், பெற்ற அறிவும், நன்றி மறவாமை என்ற ஒன்று மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா அவர்களின் கருணையால் நான் சட்டமன்ற உறுப்பினர் ஆனேன்; அமைச்சர் என்ற அங்கீகாரம் பெற்றேன். எல்லாவற்றுக்கும் மேலாக, அறிவுப் பெட்டகமாக, பன்மொழிப் புலமை பெற்றவரான, அரசியல் நெறியில் ஈடு, இணையற்றவரான மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஒருவர் மட்டுமே அமருகின்ற ஆசனத்தில், முதல்வர் என்ற பெருமைக்குரிய நாற்காலியில், இந்த எளியவனை, சிறிய

தொண்டனை அமர வைத்துப் பார்த்த எங்கள் அன்புத் தெய்வமே, இன்னும் ஆயிரம் ஜென்மங்கள் எடுத்து வந்தாலும், நன்றிக் கடன் தீர்க்க இயலாது. ஒரு சராசரி மனிதனைச் சரித்திரத்தில் இடம் பெறச் செய்த சரித்திரம், அம்மா அவர்களின் சரித்திரமாகத்தான் இருக்கும். இதனை எண்ணி, என் கருணைத் தாயின் காலடியில் கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் குற்றவியல் நீதி நிர்வாகத்தில், சிறைத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. நீதிமன்றங்களில் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளைப் பாதுகாப்பான சிறையில் வைப்பதன் வாயிலாகச் சிறைத் துறை பொது மக்களுக்குப் பணியாற்றுகிறது. அதே நேரத்தில், குற்றவாளிகளை மனிதாபிமானத்துடன் கவனித்து, அவர்கள் மனம் திருந்தி, சமுதாயத்தில் பயனுள்ள வாழ்க்கை நடத்துவதற்கும் சிறைத் துறை உதவுகிறது. குற்றவாளிகளைச் சீர்திருத்துவது, அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பது என்ற அடிப்படையில் சிறைத் துறை செயல்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாகவும், சிறைத் துறைக் கொள்கை விளக்கக் குறிப்பின்மீது உரையாற்றியபோதும் சிறைகள் நவீனப்படுத்துதல், சிறைகளில் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துதல், சிறைச்சாலைகளில் போதிய பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துதல், சில இடங்களில் கிளைச் சிறைச்சாலைகள் அமைத்தல், சில கிளைச் சிறைச்சாலைகளை மாவட்டச் சிறைச்சாலைகளாக மாற்றுதல், சிறைச்சாலைகளில் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், சிறைக் கைதிகளுக்குச் சிறந்த மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தல், தரமான உணவு வழங்குதல், படித்த கைதிகளுக்குச் சலுகைகள் வழங்குதல், மாவட்டங்களில் பெண்களுக்கெனத் தனிச் சிறைச்சாலைகள் அமைத்தல், சிறைச்சாலைகளில் பார்வையாளர்களை அனுமதித்தல், சிறைத் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் நலன், தவறு செய்யும் ஊழியர்களின்மீது நடவடிக்கை எடுத்தல், சிறைவாசிகளுக்கும், சிறைப் பணியாளர்களுக்கும் மோதல்களை தவிர்த்தல், சிறை நடைமுறை நூல் தொகுப்பைத் திருத்தியமைத்தல் போன்ற கருத்துகளை வலியுறுத்திச் சொல்லியிருந்தீர்கள். சிறைச்சாலைகளில் கட்டடங்களைப் பழுதுபார்த்தல், நவீனக் கழிப்பிடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் அவ்வப்போது செய்யப்பட்டு வருகின்றன. சிறைவாசிகள் நடத்தப்படும் விதத்தில் ஏதேனும் மனித உரிமை மீறல்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிய, மாநில மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் மாநிலத்தில் சில



மத்திய சிறைகளைப் பார்வையிட்டனர். தீர விசாரித்த பின், சிறைச்சாலைகளில் மனித உரிமை மீறல்கள் இல்லை என்பதை ஆணையம் கண்டறிந்துள்ளது. அவ்வுறுப்பினர்கள் சிறையில் சிறைவாசிகளின் வாழ்நிலை மேம்பாட்டில் மிகவும் திருப்தி அடைந்தனர். மேலும், தலைமை அமர்வு நீதிபதிகள் சிறைச்சாலைகளை முறையாகப் பார்வையிட்டு, சிறைவாசிகளின் குறைகளைக் கேட்கின்றனர். அச்சமயத்தில் எந்தவொரு மனித உரிமை மீறல் நிகழ்வினையும் அவர்கள் கண்டறியவில்லை. குற்றவாளிகள் சிறைகளில் அனுமதிக்கப்படும் முன் மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன என்ற உண்மை நிலையைக் கண்டறிந்து, தேசிய மனித உரிமை ஆணையம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசைப் பாராட்டியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-05

கடந்த ஆண்டு, 2001-2002, சிறைத் துறைக்கு 60 கோடியே 56 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு 2002-2003-ல் 63 கோடியே 62 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும், 2 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு ஆகும்.

சிறைத் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு தனது பங்காக 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது. அதற்கு ஈடாக, மாண்புமிகு அம்மா அவர்களும் 40 இலட்சம் ரூபாய் வழங்கி, மொத்தம் 80 இலட்சம் ரூபாயில், ரூபாய் 20 இலட்சம்—வேலூர் மத்திய சிறையில் முழுமையாக வரையறுக்கப்பட்ட பகுதியில் பயன்படத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்காகவும், ரூபாய் 42 இலட்சம்—புழல் மத்திய சிறையில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தி, 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்துவதற்காகவும், ரூபாய் 13 இலட்சம்—திருச்சி, பெண்கள் தனிச் சிறைத் துறைக்கு நீரடிக் கழிப்பிட வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறைவாசிகள் மற்றும் சிறைத் துறைப் பணியாளர்களின் நலத்தை மேம்படுத்துவதைக் கருத்திற் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 30

சிறைத் துறையின் செயல்பாட்டை 19-6-2001, 20-6-2001 மற்றும் 21-06-2001 ஆகிய நாட்களில் அக்கறையுடன் ஆய்வு செய்தார்கள். அவ்வாய்வின்போது எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, பின்வரும் திட்டங்களைச் சிறைத் துறையில் செயல்படுத்துவதற்காக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்:

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள பயிற்சி அளிக்கப்படாத தற்போதுள்ள 396 சிறைக் காவலர்களுக்கும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ள சிறைக் காவலர்களுக்கும், 6 மாத கால அடிப்படைப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, கோயம்புத்தூரிலும், சேலத்திலும் சிறைக் காவலர்கள் பயிற்சி தற்காலிக மையம் தொடங்குவதற்கு சிறைத் துறைத் தலைவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சிறைக் காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக—தற்காலிகமாக மூடப்பட்டிருந்த—வேலூரில் இருந்த சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளியைப் புதுப்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளைக் கண்டுபிடித்துத் தடுக்கும் வகையில், சிறைத் துறையில் புலனாய்வு விழிப்புப் பணிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கிளைச் சிறையின் நிர்வாகப் பணியைக் கவனித்து வருகின்ற சிறைக் கண்காணிப்பாளர் பணிக்கு வராதபோது, அந்நிர்வாகப் பணியைக் கவனிப்பதற்காக அரசு ஒவ்வொரு கிளைச் சிறையிலும் உள்ள 112 சிறைக் காவலர்கள், நிலை-1 பதவியிடங்களைத் தலைமை சிறைக் காவலர்களாக நிலை உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இது இம்மாநிலத்தில் உள்ள கிளைச் சிறைகளின் நிர்வாகத்தினைச் சீரமைப்பதற்கு உதவும்.

சிறைக் கட்டமைப்புப் பாதுகாப்பு என்பதன்கீழ், பல பகுதிகளுக்கு 8 மணி நேர வேலை முறையை நீடிக்கும் பொருட்டு, கூடுதலாக 352 சிறைக் காவலர், நிலை-2 பணியிடங்களை ஏற்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்தகைய சிறைக் காவலர்கள் பணி நியமனம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் செய்யப்படும். சிறைவாசிகளின் நலன் கருதியும், நிருவாகச் சீரமைப்பு என்ற முறையிலும் சிறப்பு நடவடிக்கையாக சிறைவாசிகளைச் சிறைகளிலேயே வைத்து விசாரணை செய்யும்



2002 ஏப்ரல் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

'தொலைக்காட்சிக் கலந்தாய்வு' என்ற முறையைச் சிறைகளில் நடைமுறைப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்தமட்டில், அரசுக்கு வருவாய் ஈட்டித் தரும் துறைகளில் ஆயத்தீர்வைத் துறை இரண்டாவது இடம் வகிக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்றவுடன், கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த மதுபான ஏல முறையில், சிண்டிகேட் காரணமாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து, அதனைச் சரி செய்யும் வழியில், புதிய உரிமம் வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தி, அரசுக்கு அதிக வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்கியதன் மூலம் கிடைத்த மொத்த வருவாய் 481 கோடி ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டில் உரிமம் வழங்கியதில் இதுவரை கிடைத்த மொத்தத் தொகை 609 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இது மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்கும் முறையில் இதுவரை இல்லாத அளவுக்குக் கிடைத்த அதிகபட்சத் தொகையாகும். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அரசின் கவனக் குறைவு காரணமாக, மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதில் இருந்த குறைபாடுகளையும், மற்றும் போலி மதுப் புழக்கத்தினால், அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பினையும் சரி செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எடுத்த பல்வேறு உன்னதமான நடவடிக்கைகளின் மூலம், எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு 2058 கோடி ரூபாய் ஆயத்தீர்வை மூலமாக வருவாய் கிடைத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் சென்ற ஆண்டு கிடைத்த ஆயத்தீர்வை வருவாயைவிட, 190 கோடி ரூபாய் அதிகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2001-2002 ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை வருவாயாகப் பெறப்பட்ட தொகையான 2058 கோடி ரூபாயுடன் மதுபான விற்பனை வழியாக

வசூலிக்கப்பட்ட விற்பனை வரியான 1636 கோடி ரூபாயையும் சேர்த்து, இத்துறை மொத்தமாக 3694 கோடி ரூபாய் வருவாயை அரசுக்கு ஈட்டித் தந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவி ஏற்றவுடன், மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் செயல்பாடுகளில் இருந்த குறைகளைக் களைந்து, மேம்படுத்தி, அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவோம் என்ற வாக்குறுதியை இந்த அவைக்கு அளித்தோம். இன்று இந்த ஓராண்டு காலத்தில் வரலாறு காணாத அளவுக்கு அதிக வருவாயினை ஈட்டித் தந்து எங்களது வாக்குறுதியினை நிறைவேற்றி உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியின்போது, கள்ளச்சாராய விற்பனையாலும், அண்டை மாநிலங்களிலிருந்து கடத்தப்பட்ட, தீர்வை செலுத்தாத மற்றும் போலி மதுபானங்களின் விற்பனையினாலும் அரசுக்கு அதிக வருவாய் இழப்பு ஏற்பட்டது. இந்தக் குறைபாடுகள் எல்லாம் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் பெருமளவில் குறைக்கப்பட்டு உள்ளதால்தான் அரசுக்கு அதிக வருவாய் வந்துள்ளது என்பதை மீண்டும் அறுதியிட்டுக் கூறுகிறேன். எந்தெந்த வகையில் எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு ஊறு விளைவிக்கும் கள்ளச்சாராயம் போன்றவற்றை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவற்றையெல்லாம் எடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிகுந்த வேகத்தைக் காட்டியுள்ளது. அதனைச் செயல்படுத்தும் வகையில், சென்னை, மதுரை மற்றும் சேலத்தைத் தலைமையிடங்களாகக் கொண்டு, 3 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மண்டலங்கள் உருவாக்கப்பட்டன. கள்ளச்சாராயம் மிகுதியாகக் காணப்படும் மாவட்டங்கள் மற்றும் எல்லையோரப் பகுதிகளில், தீர்வை செலுத்தப்படாத மது வகைகளின் ஊடுருவல் மற்றும் தெளிந்த சாராவி போன்றவற்றைக் கடத்துதல் ஆகியவற்றைத் தடை செய்ய, 8 மதுவிலக்கு அமலாக்க அலகுகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலியான மதுபானங்களைக் கைப்பற்றுவதில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் உள்ள பணியாளர்கள் ஆர்வமுடன் செயலாற்றுவதை ஊக்குவிப்பதற்காக இவ்வரசு ஒரு வெகுமதித் திட்டத்தினை அறிவித்துள்ளது. அதன்படி, பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களின் 10 சதவீத மதிப்பு வரை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு வெகுமதியாகக் கொடுக்கலாம் என மாண்புமிகு அம்மா அவர்கள்



ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறான பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட வாகனங்கள், தீர்வை செலுத்தப்படாத மற்றும் போலி மதுபானங்கள், தெளிந்த சாராவி, கள்ளச்சாராயம் போன்றவற்றின் மொத்த மதிப்பு 40 கோடி ரூபாயாக இருப்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கள்ளச்சாராயத் தொழிலிலிருந்து திருந்திய நபர்களின் மறு வாழ்விற்கு உதவி செய்யும் நோக்குடன், கோயம்புத்தூர், மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 91 நபர்களுக்கு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் முயற்சியின் பேரில், வங்கிக் கடன் உதவி மூலம் 14 இலட்சம் ரூபாய் மதிப்பில் கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் 70 நபர்களுக்குக் காலடி மிதி தயாரிக்கும் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் 10 நபர்களுக்கு கணினிப் பயிற்சியும் மற்றும் 10 நபர்களுக்கு ஓட்டுநர் உரிமம் எடுத்தும் கொடுக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் இந்த மறு வாழ்வு உதவி இன்னும் விரிவான முறையில் அனைத்து கள்ளச்சாராய கரும்புள்ளி கிராமங்களிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையைப் பொறுத்தமட்டில், நம்முடைய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானதாகும். ஒரு மாநிலத்தின் சமூக, தொழில் மற்றும் பொருளாதார மேம்பாடு, சாலை வளர்ச்சியின் அடிப்படையில்தான் அமைகிறது. Infrastructure is the backbone of the State's economy. தமிழகத்தை முதல்நிலை மாநிலமாக உயர்த்திக் காட்டுவதில், சிறந்த சாலை வசதிகள் பெரும் பங்கினை வகிக்க வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முழுக் கவனம் செலுத்தி வருகிறது. தமிழகத்தில் தற்போது 3850 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள், 7136 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகள், 7408 கிலோ மீட்டர் மாவட்ட முக்கியச் சாலைகள், 40,853 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகள் மற்றும் 1366 கிலோ

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 30

ட்டர் கரும்புச் சாலைகள் என மொத்தம் 60,613 கிலோ மீட்டர் சாலைகளை நெடுஞ்சாலைத் துறை பராமரித்து வருகிறது. குறைந்த நிதி ஆதாரம் இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்று முடிவடைந்த கடந்த 9 மாதங்களில் கீழ்க் குறிப்பிடும் சாதனைகளை நிறைவேற்றியுள்ளது:

'நபார்டு' வங்கியின் நிதி உதவியுடன் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதியைக் கொண்டு, மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 9 மாதங்களில், 215 கிலோ மீட்டர் நீள சாலைகளின் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் நோக்கத்துடன், நபார்டு வங்கி நிதி உதவியுடன் 160 கிராமங்களை இணைக்கும் வகையில் 351 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

'ஹட்கோ' நிதி உதவியைக் கொண்டு, சென்னை நகரைச் சுற்றி ஆரச் சாலைகளை அமைத்து, மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் கடந்த ஓராண்டில் 49 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மற்றும் 5 சிறிய பாலங்கள் கட்டி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

'டிட்கோ' எனப்படும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மூலம், பழுதடைந்த மாவட்ட இதர சாலைகளைப் படிப்படியாகச் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, கடந்த ஓராண்டில் 2557 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது விதிக்கப்படும் மேல் வரி வசூலிலிருந்து சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள்' மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் தேவைப்படும் பகுதிகளில் ஓடுதளத்தை மேம்பாடு செய்தல், அகலப்படுத்தி வலுப்படுத்துதல் மற்றும் விபத்துப் பகுதிகளை



2002 ஏப்ரல் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மேம்படுத்துதல் போன்ற 252 பணிகளை 156 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது. இதில் 162 பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டு தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகள் திட்டத்தின்கீழ் 279 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓடுதளம் மேம்படுத்துதல், 110 கிலோ மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த இருவழித் தடச் சாலைகள் பலப்படுத்துதல், 5 சிறிய பாலங்கள் மற்றும் 11 தாம்போகிகள் கட்டுதல் ஆகிய பணிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் 97.00 கோடி ரூபாய் நிதியில் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

நபார்டு நிதி உதவியைக் கொண்டு ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் மாவட்ட இதர சாலைகளில் பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 117 பாலப் பணிகளில், 75 பாலப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளைத் துரிதமாக முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கிராம இணைப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் 6.96 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்ட 24 பாலப் பணிகளில் 9 பாலப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கடந்த 9 மாதங்களில், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மொத்தம் 3102 கிலோ மீட்டர் சாலைப் பணிகளில், 9 சிறிய பாலப் பணிகள், ஒரு இரயில்வே மேம்பாலப் பணி மற்றும் 94 பெரிய பாலப் பணிகளை முடித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001-2002 ஆம் ஆண்டில் 2817 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளும், 151 கிலோ மீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளும், மாநில நெடுஞ்சாலைகளாக வகைப்படுத்தி உயர்த்தப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். குறுகிய காலத்தில் மேற்கண்ட சாதனைகளை நிகழ்த்தியது அல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்தும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த ஆட்சியில் முக்கிய இரயில் கடவுகளில் 37 இரயில்வே மேம்பாலங்கள் கட்டிட 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில்

தமிழக அரசு ஒப்புதல் வழங்கியது. ஆனால் இப்பணிகளைத் தொடங்குவதற்கு தக்க ஆய்வு நடவடிக்கைகள் தொடராமல் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்த்திட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, பணிகளுக்கான விவர மதிப்பீடுகளை விரைந்து தயார் செய்ய நடவடிக்கை எடுத்தது. அதனடிப்படையில், உடனடியாக 12 இடங்களில் 116 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவையாவன:-

(1) ஆலந்தூர் தொகுதி, மீனம்பாக்கம் இரயில் நிலையத்திற்கு அருகில் 10.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(2) திருவள்ளூர் தொகுதி, பெரியகுப்பம் சாலையில் 23.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(3) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திற்கு அருகில் 9.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(4) மொரப்பூர் தொகுதி, மொரப்பூரில் 9.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(5) கரூர் தொகுதி, வெங்கைமேடு அருகில் 12.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(6) வீரபாண்டி தொகுதி, சிவத்தபுரம் அருகில் 5.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கீழ்ப்பாலம்;

(7) ஓமலூர் தொகுதி, ஓமலூர் அருகே 5.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(8) திருப்பூர் தொகுதி, பெருந்துறை-காங்கேயம் சாலையில் 6.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(9) திருப்பூர் தொகுதி, விஜயமங்கலம் சாலையில் 7.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;

(10) சமயநல்லூர் தொகுதி, கூடல் நகர் அருகில் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம்;





(11) கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி—நல்லி இரயில் நிலையங்களுக்கு இடையே 6.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில்பட்டியில் இரயில்வே மேம்பாலம்;

(12) கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி-குமாரபுரம் இடையே 7.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோவில்பட்டியில் இரயில்வே மேம்பாலம்.

எஞ்சியுள்ள 25 மேம்பாலப் பணிகளுக்கும் திட்டப் பணிகள் தயார் செய்து, தொடர் நடவடிக்கையாகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறட்கோ நிதியுதவியுடன் 75.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 60 பாலங்கள் மற்றும் 18 சாலைப் பணிகள் ஆகியவற்றைத் தொடங்கிடும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய காவிரி வடிநில மாவட்டங்களில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட வலுவிழந்த 94 பாலங்களும் மற்றும் தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் 28 பாலங்களும், 79.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டுவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 110 பாலங்கள் உறட்கோ நிதியுதவியுடன் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பு ஆண்டில் திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளுக்கு நிதியொதுக்கீடு மூலம் சுமார் 6,500 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்திடவும், 226 சிறிய மற்றும் பெரிய பாலங்கள் கட்டிடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை-எண்ணூர்—மணலி சாலை மேம்பாட்டுத் திட்டத்தைச் செயலாக்கிடவும், கடற்கரையோரப் பகுதிகளைப் பலப்படுத்திடவும் மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுக் குழுமத்தின் மூலம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உளுந்தூர்பேட்டை-சேலம் மற்றும் திண்டுக்கல்—பழனி, மேலும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 30

சென்னை-திருச்சி-திண்டுக்கல் ஆகிய தேசிய நெடுஞ்சாலைகளை 530 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசு நிதி மூலம் மேம்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாலைப் பராமரிப்பில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஒரு புதிய அணுகுமுறையைக் கையாள முடிவு செய்துள்ளது. இதன்படி சாலை மேம்பாடு செய்திடும் ஒப்பந்தக்காரரே அச்சாலையை மூன்று ஆண்டுகளுக்குப் பராமரித்திட, ஒருங்கிணைந்த ஒப்பந்த முறை செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலத்திலுள்ள அனைத்து சாலை ஓரங்களிலும் நிழல் தரும் மரங்களை நட்டு, வளர்த்து ஒரு குறிப்பிட்ட காலம் வரை பராமரித்து நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்திடும் முறை, வனத் துறை மூலம் பரவலாகவும், ஒரு சிறப்புத் திட்டமாகவும் செயல்படுத்தப்படும்.

திறன்பட்ட மேம்பாடு மற்றும் பராமரிப்பிற்காக சென்னை மாநகராட்சிக் கட்டுப்பாட்டில் உள்ள சுங்கச்சாவடி-திருவான்மியூர் சாலை, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, சர்தார் பட்டேல் சாலை போன்ற சில முக்கியச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெடுஞ்சாலைத் துறையின் நடவடிக்கைகள், செயற்குறிப்புகள் மற்றும் ஏனைய விவரங்கள் பற்றிப் பொது மக்கள் அறிந்திடும் பொருட்டு, ஓர் இணைய தளம் தொடங்கப்பட உள்ளது. மின்சார வாரியம், தொலைத் தொடர்புத் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற நிறுவனங்கள் அடிக்கடி சாலைகளைத் தோண்டுவதைத் தவிர்த்திட, புதிதாக அமைக்கப்படும் பல்வழித்தடச் சாலைகளின் இருபுறங்களிலும் பெட்டி போன்ற ducts வசதிகள் அமைக்கப்படும். சாலைகள் பராமரிப்பது, சீரமைப்பது போன்ற பணிகளுக்குப் பல்வேறு முன்னேறிய நாடுகளில் பயன்படுத்தப்படும் தற்கால புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள். அண்டை மாநில எல்லைப் பகுதியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த அனைத்து சோதனைச் சாவடிகளையும் ஒருங்கிணைத்து, ஒரு சோதனைச் சாவடி மையம் (Integrated Check-Post) ஏற்படுத்தப்படும். வாகனப் போக்குவரத்து தடையின்றி நடைபெற இச்சோதனைச் சாவடிகளுக்கு அணுகு சாலைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில், பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் பாசனம் மற்றும் கட்டடங்கள் மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பொதுப் பணித் துறையானது பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பாசனத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவது, பராமரிப்பது மற்றும் மாநில அரசுத் துறைகளுக்கும், அரசின் இதர துறைகளுக்குமான கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பது, பராமரிப்பது ஆகிய பணிகளை நிறைவேற்றுகிறது.

தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி:—முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் 23 பெரிய மற்றும் நடுத்தரத் திட்டங்களின் மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. 9-வது திட்ட காலத்தில் 2001-2002 முடிய சிறு பாசனத் திட்டங்கள், கிணற்றுப் பாசனம் உட்பட, பாசன வசதி பெறும் பகுதி மொத்தம் 29.77 இலட்சம் எக்டேராக உயர்ந்தது. 2002-2003 ஆம் ஆண்டில் முடிவுபெறும் பாசனத் திட்டங்கள் மூலமாக 2000 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 10-30

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்:—நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும் வகையில், நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கிடு செய்து, அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் நோக்கமாகும். முதன்முறையாக, இந்தப் பெருந் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதல் பெற மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்களின் அரசு, 1993 முதல் 1995 வரை எடுத்த முயற்சியால் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் காக்க இச்சிறப்பான திட்டம் 807.4 கோடி ரூபாய் திட்ட மதிப்பில், உலக வங்கி உதவியோடு 1995 செப்டம்பர் மாதத்திலிருந்து தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் மூலம் 6 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பில் 40 இலட்சம் விவசாயிகள் பயன்பெற்று வருகிறார்கள். தற்போது, 1062 கோடி ரூபாய்க்கு இந்தத் திட்டம் விரிவாக்கப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 6 இலட்சம் எக்டேர்

பரப்பிலான 41 பாசன அமைப்புகளின் ஆயக்கட்டுப் பகுதிகள் மேம்படுத்தும் பணி மற்றும் கீழ்க்காணும் 9 முடிவுறாத நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன:—

அவை:—(1) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொய்கையாறு திட்டம்;

(2) திருநெல்வேலி மாவட்டத்தில் நம்பியாறு திட்டம்;

(3) வேலூர் மாவட்டத்தில் இராஜாத்தோப்புகானாறு திட்டம்;

(4) வேலூர் மாவட்டத்தில் மோர்தானா திட்டம்;

(5) திருநெல்வேலி மாவட்டத்தில் அடவிநயினார்கோவில் திட்டம்;

(6) விருதுநகர் மாவட்டத்தில் கிருதுமால்-அத்திக்குளம் திட்டம்;

(7) திருநெல்வேலி மாவட்டத்தில் வடக்குப் பச்சையாறு திட்டம்;

(8) தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை திட்டம்;

(9) திருநெல்வேலி மாவட்டத்தில் கொடுமுடியாறு திட்டம்;

மேற்கண்ட திட்டங்களில், விருதுநகர் மாவட்டத்தில் கிருதுமால் அணைக்கட்டு, வேலூர் மாவட்டத்தில் இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் மற்றும் தேனி மாவட்டத்தில் சோத்துப்பாறை நீர்த்தேக்கம் ஆகிய மூன்றும் முடிவுற்றன. மற்றத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 6 திட்டப் பணிகளை 2002-2003 நிதியாண்டில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் பணிகள் உலக வங்கியின் அனுமதியுடன் 31-3-2003-க்குள் நிறைவேற்றப்படவுள்ளன. மேலும், 106.26 கோடி ரூபாய் செலவில், பாலாறு, தாமிரபரணி, வைகை வடிநிலப் பகுதியில் 80.800 எக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 620 பாசன ஏரிகளின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு trend-setter எனச் சொல்லப்படும் விவசாயத் துறை பெரும் பங்கினை வகிக்க வேண்டும். ஆனால், விவசாயப் பொருளாதாரச் சிறப்பிற்கு அடிப்படையான தண்ணீர் வசதி நமக்கு மிகவும் குறைவாகவே உள்ளது. தமிழகத்தில் நிலத்தடி நீரும் மிகவும் குறைந்துவிட்ட நிலையிலுள்ளது. நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதன் மூலம்தான் விவசாயத்தில் ஒரு நல்ல வளர்ச்சியை நம்மால் உருவாக்க முடியும். ஏற்கெனவே தமிழகத்தில்



இருக்கின்ற பொதுப் பணித் துறை மற்றும் உள்ளாட்சித் துறையின் பராமரிப்பிலுள்ள 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மானாவாரி ஏரி, குளங்கள் நீண்ட நாட்களாகத் தூர் வாரப்படாமல் உள்ளன. நிலத்தடி நீரை அதிகப்படுத்தி, அதன் மூலம் தமிழகத்திலுள்ள கிணறுகளுக்கும், பம்புசெட்டுகளுக்கும் போதிய தண்ணீர் ஆதாரத்தைப் பெருக்கும் அவசியத்தை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2900 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டுத் தொகையில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2 என்ற புதிய திட்டத்தைத் தயாரித்து மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு 13-3-2002-ல் அனுப்பி உள்ளது. இந்தத் திட்டத்தினை மத்திய நீர்வள அமைச்சகத்திலிருந்து உலக வங்கிக்குப் பரிந்துரை செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் வாயிலாக 6 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பும், 30 இலட்சம் விவசாயிகளும் பயன்பெறுவர். இந்தத் திட்டத்தின் மூலம் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-1-ல் விடுபட்ட சில பணிகள் மற்றும் பாசனத் திட்டங்கள், பாசனப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்கள், சுற்றுப்புறச் சூழலை நிலைநிறுத்தும் பணிகள், மானாவாரி ஏரி, குளங்கள் மேம்படுத்தும் பணிகள், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதாரத்தை ஒருங்கிணைத்து மேம்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-35

சென்னைக் குடிநீர்த் திட்டம் 2-ல் சென்னை வாழ் மக்கள் சந்தித்து வரும் குடிநீர்ப் பிரச்சினை கடந்த ஆட்சிக் காலத்தில் எந்த அளவிற்கு சென்னை வாழ் மக்களைப் பாதித்தது என்பதை அவை அறியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற ஆண்டு முதல்வராகப் பொறுப்பு ஏற்றபோது இந்தக் கடும் குடிநீர்ப் பஞ்சத்திலிருந்து மக்களைக் காக்க நெய்வேலியிலிருந்தும், ஈரோட்டிலிருந்தும் இரயில் மூலமாகத் தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவந்து போர்க்கால அடிப்படையில் 75 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து சென்னை வாழ் மக்களின் தாகம் தணிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டுமின்றி சென்னை வாழ் மக்களும் அறிவார்கள். இந்தப் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. இதற்கு நிரந்தரப்

பரிகாரம் கட்டாயம் தேவை என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலையாய எண்ணம். அந்த அடிப்படையில்தான் கிருஷ்ணா நீரைத் துரிதமாக சென்னைக்குக் கொண்டுவரும் நடவடிக்கை, வீராணம் நீரை சென்னை வாழ் மக்களுக்குத் தந்திடும் நடவடிக்கை போன்ற ஆக்கப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் முடுக்கிவிட்டு இருக்கின்றார்கள். இதனுடைய தொடர் நடவடிக்கையாக சென்னைக் குடிநீர்த் திட்டம்-2 என்ற திட்டத்தின் அடிப்படையில் கொசஸ்தலையாறு குறுக்கே திருக்கண்டலம் என்னும் இடத்தில் 67 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆணையிட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கூவம் ஆற்றின் குறுக்கே ஜமீன் கொரட்டூர் என்னும் இடத்தில் 42 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக்கரணையில் 66 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பாலாற்றின் குறுக்கே வயலூர் அருகே 80 கோடி ரூபாய் செலவில் நீர்த்தேக்கம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அடையாறு குறுக்கே 23 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகள் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொசஸ்தலையாறு குறுக்கே 13 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகள் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றுடன் இதர சிறு திட்டங்களையும் சேர்த்து மொத்தம் 493 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் பாலாறு ஆகிய ஆறுகளில் வரும் உபரி நீரைத் தேக்குவதற்கு மேற்குறிப்பிட்டவாறு சிறிய தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்கள் கட்ட திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பணிகளை சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்துடன் பொதுப் பணித் துறை இணைந்து செயல்படுத்தும்.

கூவம் நதியைச் சீர் செய்து அழகுபடுத்தும் திட்டம்:—சென்னைப் பெருநகர எல்லைக்குள் ஓடும் கூவம் நதியைச் சீர்செய்து அழகுபடுத்தவும், அதில் படகு செல்லும் வகையில் உள் நீர்வழிப் பாதை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல்கட்டமாக கூவத்தின் முகத்துவாரத்திலிருந்து பணி மேற்கொள்ளப்படவுள்ளது:



(1) ஆற்றில் தூர் வாரும் பணிகள் மற்றும் கரையைச் சீர் செய்தல்.

(2) கடல் முகத்துவாரத்திலுள்ள மண் திட்டுக்களை அகற்றி ஆற்றின் முகத்துவாரத்தில் கற்கொறடு அமைத்து எப்போதும் முகத்துவாரம் திறந்தே இருக்க வழிவகை செய்தல்.

(3) கூவம் ஆற்றின் இரு கரைகளிலும் மின் வசதியுடன் கூடிய பொழுதுபோக்குப் பூங்காக்கள் அமைத்தல்.

(4) கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்து அமைத்தல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெரினா கடற்கரையைப் பராமரித்தல்: நேப்பியர் பாலம் அருகில் கூவம் முகத்துவாரத்திலிருந்து கலங்கரை விளக்கம் வரை காமராஜர் சாலையின் கிழக்குப் பகுதியான மெரினா கடற்கரை உலக அளவில் இரண்டாம் நிலையிலுள்ள சிறப்புப் பெற்ற கடற்கரையாகும். இக்கடற்கரைப் பகுதியின் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்தவும், இப்பகுதியைப் புதுப்பொலிவு மிக்க பகுதியாக மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த செயல் திட்டங்களைப் பொதுப் பணித் துறை மேற்கொண்டுள்ளது. இதற்காக அடையாள ஒதுக்கீடாக 1 கோடி ரூபாய் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுப் பணித் துறையின்கீழ் வருகின்ற கட்டட அமைப்பு: பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு தமிழகத்திலுள்ள சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, உள் துறை, கல்வித் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் வருவாய்த் துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகளுக்காகப் புதிய கட்டடங்கள் கட்டுதல், பராமரிப்புப் பணிகள் போன்றவற்றைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் ஒரு சரியான விளக்கத்தினைத் தெரிவித்துக்கொள்வதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். காவிரி நீரைப் பற்றியும், இன்றைய சூழ்நிலையில் இங்கு ஏற்பட்டிருக்கின்ற பதட்ட நிலையைப் பற்றியும் இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு அச்சத்தினையும், தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை போன்ற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 30

மாவட்டங்களில்—தஞ்சை போன்ற மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் பெறுகின்ற மாவட்டங்கள் அனைத்திலும்—வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் கவலையோடு இருக்கின்றார்கள் என்ற சூழ்நிலையையும் இங்கே எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அதற்கு நான் சில விளக்கங்களை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

19 மற்றும் 20-8-1968 அன்று, அன்றைய தமிழக பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி, அன்றைய மைசூர் முதல்வர் திரு. வீரேந்திர பாட்டீல், அன்றைய மத்திய அமைச்சர் டாக்டர் கே.எல். ராவ் ஆகியோர் கர்நாடகத்தில் ஹேமாவதி அணை கட்டுவது பற்றி டெல்லியில் பேச்சுவார்த்தை நடத்தி, அதுபற்றி ஓர் உடன்பாடான முடிவுக்கு வந்தார்கள். அதன்படி ஹேமாவதி அணை கட்டுவதில் தமிழக அரசுக்கு எந்தவித மறுப்பும் இல்லையென்று திரு. கருணாநிதி அவர்கள் கூறிவிட்டார்கள். கர்நாடக அரசு ஹேமாவதி அணையைக் கட்டுவதற்கு முன்பு மைய அரசின் நீர் மற்றும் மின் கழகத்தின் தொழில்நுட்ப அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். ஹேமாவதி அணை பற்றிய முழுத் தகவல்களையும், குறிப்பாக, எந்த அளவுத் தண்ணீர் தேக்கி வைக்கப்படும் என்பதையும், தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடப்படும் என்பதையும் முன்கூட்டியே உத்தரவாதம் அளித்தும், கர்நாடக அரசு தமிழக அரசுக்குக் கருத்துகளை அனுப்பியிருக்க வேண்டும். அதன்பின் தமிழ்நாடு அரசு அங்கு நேரில் சென்று ஆய்வு செய்து சம்மதம் தெரிவித்த பின்புதான் கர்நாடக அரசு அணை கட்டவேண்டுமென்று 1924 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தில் உள்ளது.

இந்த விவரங்களைக் கர்நாடக அரசு அளித்த பிறகுதான் ஹேமாவதி அணையைக் கட்டுவதற்கு திரு. கருணாநிதி இசைவளித்திருக்க வேண்டும். கர்நாடக அரசின் உத்தரவாதத்தை முன்கூட்டியே எழுத்து மூலம் பெறாமலும், மைய அரசினுடைய தொழில்நுட்ப அனுமதியைப் பெறாமலும் ஹேமாவதி அணையைக் கட்டுவதற்கு திரு. கருணாநிதி அவர்கள் 1968 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே இசைவு தந்தது, தமிழக விவசாயிகளுக்கு இழைத்த மாபெரும் துரோகம் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக மக்களுக்கு திரு. கருணாநிதி அவர்கள் தீங்கிழைத்ததைச் சட்டமன்றப் பேரவையில் திரு. கருத்திருமன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். 'அணையைக் கட்டிவிட்டு, தண்ணீர் தராவிட்டால் என்ன செய்வது? தருவேன் என்று சொல்வதெல்லாம்



2002 ஏப்ரல் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தாஜா செய்யும் வேலை' என்று சட்டமன்றப் பேரவையில் திரு. கருத்திருமன் அவர்கள் எடுத்துரைத்தார்கள். திரு. கருணாநிதி அவர்கள் காவிரிப் பிரச்சினையில், ஹேமாவதி அணை கட்ட கர்நாடக அரசுக்கு அனுமதி அளித்த செயல் தமிழகத்திற்கு அவர் இழைத்த மாபெரும் துரோகம். 17-1-1969-ல் கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல், கர்நாடக சட்டமன்றத்தில் பேசுகிறபோது, மைய அரசின் நீர் மற்றும் மின் கழகத்தினுடைய தொழில்நுட்ப அனுமதி கிடைக்கவில்லை என்றாலும், ஹேமாவதி அணையைக் கட்டத் தொடங்குவோம் என்று அறிவித்தார். கர்நாடக அரசு ஒரு இலட்சம் ஏக்கர் பாசனப் பயன் பெறும் வகையில் மட்டுமே கட்டலாம் என்ற உடன்பாடு இருந்தும், 7 இலட்சம் ஏக்கருக்கு மேலான பாசனத்திற்கு அணை கட்டும் பணிகளை மேற்கொண்டது தமிழக விவசாயிகளுக்கு மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பாதகத்திற்கு திரு. கருணாநிதி அவர்கள் காரணமாக அமைந்துவிட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன? சொல்லுங்கள். சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** அவ்வளவு அப்ஜெக்ஷனும் சொல்லி முடிந்து போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. துரைமுருகன், எல்லாவற்றையும் கேட்டுவிட்டுச் சொன்னீர்கள் என்றால், எல்லா விளக்கங்களையும் சொல்லிவிடலாம். அதற்காகத்தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கர்நாடக அரசு, ஒரு இலட்சம் ஏக்கர் பாசனப் பயன் பெறும் வகையில் மட்டுமே அணை கட்டலாம் என்ற உடன்பாடு இருந்தும், 7 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசனத்திற்கு அணை கட்டும் பணிகளை மேற்கொண்டது தமிழக விவசாயிகளுக்கு மாபெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த பாதகத்திற்கு திரு. கருணாநிதி அவர்கள் காரணமாக அமைந்து விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும், 9-2-1970-ல் மைய அரசின் பாசன அமைச்சர் திரு. கே.எல். ராவ் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் தமிழக

மற்றும கர்நாடக முதலமைச்சர்கள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் கர்நாடக அரசு, 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தத்தை ஏற்கமாட்டோம் என்று தெரிவித்து, அணை கட்டும் பணியைத் தொடருவோம் என்று அறிவித்தது. கர்நாடக அரசிற்குச் சாதகமாக திரு. கருணாநிதி அவர்கள், 24-8-1968 அன்றே சட்டமன்றத்தில் பேசுகின்றபோது, 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தம், 1974 ஆம் ஆண்டு வரை செயல்படும் திறனில் இருக்கும் என்று கூறினார்கள். இந்த ஒப்பந்தம் 1974-க்குப் பிறகு செயல் திறனை இழந்துவிடும் என்ற பொருள்பட 1968-லேயே திரு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றத்திலே கூறினார்கள். இச்செயலும், தமிழக மக்களுக்கு அவர் இழைத்துள்ள மாபெரும் துரோகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு, திரு. கருத்திருமன் போன்றவர்களும், தமிழக விவசாயிகளும் எழுப்பிய எதிர்ப்புக் குரலையொட்டி, 4-8-1971-ல் திரு. கருணாநிதி அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொட்ர்ந்தது. அம்மனுவில் காவிரி நடுவர் மன்றம் அமைக்கக் கோரியது. 8-7-1971-ல் காவிரி நதி நீர் பற்றிச் சட்டமன்றத்தில் நடந்த விவாதத்திற்கு திரு. கருணாநிதி அவர்கள் பதில் அளித்தது, முரசொலி நாளேட்டில் ஒரு செய்திக் குறிப்பாக வெளியிடப்பட்டது.

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப நடக்கும் காவிரி காய்வதோ? எங்கள் தமிழகம் கொடும் பாலைவனம் ஆவதோ? எங்கள் தமிழர் வங்கத்து அகதிகள்போல் அலைவதோ? மத்திய அரசே! 15 நாளில் பதில் தருக; இல்லையேல், இதுகுறித்து கிளர்ச்சி துவங்குவோம்." காவிரி சிக்கல் பற்றிய விவாதத்தின்போது அன்றைய தமிழக முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்களின் உரிமைக் குரல் இது. இப்படி ஒரு போர்க் குரலைச் சட்டசபையில் எழுப்பினார்கள். ஆனால், அதே நேரத்தில், கர்நாடக அரசு, ஹேமாவதி அணையைத் தொடர்ந்து கட்டியதோடன்றி, ஒரு இலட்சம் பாசனப் பரப்பிற்கு பதிலாக, 7 இலட்சம் ஏக்கராக விரிவாக்கம் செய்துள்ளது. மேலும், 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், கர்நாடக அரசைக் கட்டுப்படுத்தாது என்றும் தெரிவித்தார்கள். 21-5-1972 அன்று பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், காவிரி நீர்ப் பிரச்சினையில் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணலாம் என்று தெரிவித்ததை திரு. கருணாநிதி அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். 8-7-1971-ல் தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கினைத் திரும்பப் பெற்றுக் கொண்டது தமிழக விவசாயிகளுக்கு திரு. கருணாநிதி இழைத்த



மாபெரும் துரோகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே திரு. கருணாநிதி அவர்கள்தான் 24-6-1969-லேயே அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், மத்திய அரசு நீர் மற்றும் மின் கழகத்தின் அனுமதி இல்லாமலேயே அணையைத் தொடர்ந்து கட்டுவோம் என்றும், கட்டும் பணி விரைவாக முன்னேற்றம் அடைந்து வருகிறது என்றும் கர்நாடக முதலமைச்சர் 17-1-1969-ல் கர்நாடக சட்டப் பேரவையில் கூறியது தனக்குக் கவலை அளிப்பதாக இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்தக் கர்நாடக அரசு, காவிரி நதியின் குறுக்கே அணையைக் கட்டிக் கொண்டே செல்வதால், தமிழக காவிரி விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், காவிரி வழக்கை உச்ச நீதி மன்றத்தில் இருந்து திரு. கருணாநிதி வாபஸ் பெற்றது, தமிழக விவசாயிகளுக்கு அவர் இழைத்திட்ட பெரும் துரோகம் அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

18-11-1986-ல், தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருட்கள் விவசாய நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் 1983-ல் தொடுத்த வழக்கில் புரட்சித் தலைவி அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு நடுவர் மன்றம் அமைக்க உச்ச நீதிமன்றத்தைக் கோரியது. ஆனால், மீண்டும் திரு. கருணாநிதி அவர்கள் நீதிமன்றம் மூலம் சட்ட ரீதியாகத் தமிழக மக்களுக்குப் பாதுகாப்பை வாங்கித் தராமல், ஒரு பல் இல்லாத அதிசயம், அதிகாரம் இல்லாத, அரசியல் ரீதியான காவிரி ஆணையத்தை ஒத்துக்கொண்டது தமிழகத்திற்கு இழைத்த மற்றொரு துரோகம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதிகாரம் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தி, காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

1972-ல் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை திரு. கருணாநிதி திரும்பப் பெற்றது, 30 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழக விவசாயிகளின் வயிற்றில் அடிக்கப்பட்ட செயலாகும். இதன் மூலம் திரு. கருணாநிதி அவர்கள் காவிரிப் பிரச்சினையில் ஓர் இருண்ட நிலையைத் தமிழகத்திற்கு உருவாக்கிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் வேண்டுமென்றே, திட்டமிட்டு, உண்மைக்கு மாறான தகவல்களை ... (குறுக்கீடுகள்) It is my right to say.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அவர் சொன்னதை நான் உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டு இருந்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) கேளுங்கள்; மறுபடியும் பதில் சொல்வதற்கு முதலமைச்சர் இருக்கிறார்; அமைச்சர் இருக்கிறார்; சொல்லட்டும். (குறுக்கீடுகள்) அதுபற்றி எனக்கு அக்கறை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எனவே, திட்டமிட்டு, வேண்டுமென்றே தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்து இருக்கிறார் என்பதைத் தங்களுக்குத் தெரிவிப்பது என் விருப்பம். முதலிலே வந்து, ஹேமாவதி அணை கட்டுவதற்கு கலைஞர் அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது ஒத்துக்கொண்டார்கள் என்ற ஒரு தவறான தகவலை எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், பொத்தாம் போக்கிலே தெரிவித்து இருக்கிறார். அவருக்கு இந்த இலாகா புதியது. எனவே, இந்த இலாகாவின் நீண்ட நெடிய வரலாற்றை அங்கு இருக்கின்ற காவிரி டெக்னிக்கல் செல்லிலோ, என்ஜினியர்களிடமோ கேட்டுத் தெரிந்து இருக்கவேண்டும். காங்கிரஸ் ஆட்சி இருக்கும்போது.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அவர் டில்லியிலே நடந்த கூட்டத்தை வைத்துச் சொல்கிறார்; கே.எல். ராவ்...

**திரு. துரைமுருகன்:** No, no. நான் சொல்வது, ஹேமாவதி அணையைக் கட்டுவதற்கு கலைஞர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்பது பற்றி. திராவிட முன்னேற்றக் கழகம் 1967-லே ஆட்சிக்கு வருகிறபோதே ஹேமாவதி அணையைக் கட்டிக் கொண்டிருந்தார்கள்; ஹேரங்கி கட்டியிருக்கிறார்கள். கபினி கட்டியிருக்கிறார்கள். பல அணைகளைக் கட்டிக் கொண்டிருக்கிற காலத்திலேயே, பெரியவர் பக்தவத்சலம் இருக்கிற காலத்திலேயே அது குறித்துக் கடிதம் எழுதினார். ஆனால், அங்கு இருக்கிற கர்நாடக அரசு கண்டுகொள்ளவில்லை.



பிறகு, அண்ணா அவர்கள் முதலமைச்சர் ஆன பிறகு, வீரேந்திர பாட்டீல் அப்போது முதலமைச்சர் கர்நாடகத்தில்; அப்போது அவரிடத்திலே பொதுப் பணித் துறை இருந்தது; கலைஞர் அவர்கள் இங்கே பொதுப் பணித் துறை அமைச்சர்; எனவே, முதன்முதலாக இந்தக் காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு மைசூர் மந்திரியோடு பேசிய ஒரு முதலமைச்சர் எங்களுடைய கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டத்திலேயே இது குறித்து விளக்கமாக எடுத்துத் தெரிவித்து, காவிரியில் அணை கட்டக் கூடாது; ஏற்கெனவே— கர்நாடக அரசு ஏதாவது ஒரு அணை கட்ட வேண்டுமானால், அதனுடைய மொத்த விவரங்களையும் தமிழ்நாட்டிற்குத் தெரிவிக்க வேண்டும். இங்கு இருக்கிற தமிழ்நாடு அரசு ஒத்துக்கொண்ட பிறகுதான் அங்கு அணை கட்டப்பட வேண்டும்; அந்த அணை கட்டுவதிலே பிறகு எவ்வளவு நீரை அவர்கள் தேக்கலாம்; நாம் எவ்வளவு நீரைத் தேக்க அடுத்து அணை கட்டலாம் என்ற விவரம் எல்லாம் 1924 ஆம் வருட ஒப்பந்தத்திலே இருக்கிறது. எனவே, தமிழகத்திற்குத் தெரிவிக்காமலே, தமிழக என்ஜினியர்களைக் கலக்காமலே அவர்கள் பல அணைகளைக் கட்டினார்கள். அதில் ஒரு அணை ஹேமாவதி அணை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை கலைஞர் ஒத்துக்கொண்டார் என்ற ஒரு தவறான தகவலை, ஆதாரம் இல்லாமலே இங்கே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

இரண்டாவது, அவர் சொன்னதற்குக் காரணம், இந்தக் காவிரி ட்ரிபியூனல் பற்றி அன்றைக்கே பேசினோம். 1971 ஆம் ஆண்டு, அன்றைக்கு இருந்த பெரியவர் மூப்பனார் அவர்களும், முரசொலி மாறன் அவர்களும், மன்னை அவர்களும் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள், ட்ரிபியூனல் வேண்டுமென்று. ஆனால், 1972 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள், அந்த வழக்கை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டார்கள். ஏனென்று கேட்டால், நான் தலையிட்டு உட்கார்ந்து பேசுகிறேன்; எனவே, நீங்கள் இதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டபோது, கலைஞர் சொன்னார், 'வழக்கு இருக்கட்டும்; பேசலாம்' என்று. ஆனால் ஒரு நாட்டினுடைய பிரதமர் சொன்னார்; 'மற்றொரு மாநிலத்திற்கும், இந்த மாநிலத்திற்கும் தொடர்புடைய ஒரு பிரச்சினையில் நான் பேசுகிறபோது, வழக்கு இருக்கிற காரணத்தால் அவர்கள் கொஞ்சம் தயங்குகிறார்கள்' என்று சொன்னபோது, கலைஞர் உடனே எடுத்தேன், கவிழ்த்தேன் என்று அந்த வழக்கை வாபஸ் வாங்கவில்லை. ஆனால் என்ன செய்தார்கள் என்று கேட்டால், இந்த மாமன்றத்திலே இருக்கிற

[திரு. துரைமுருகன்] [2002 ஏப்ரல் 30

எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசி அவர்களிடத்திலே ஒப்புதல் பெற்ற பிறகுதான் அந்த வழக்கை வாபஸ் பெற்றார்கள். பெறுகிறபோதுகூட என்ன கண்டிஷன் என்று கேட்டால், தமிழக அரசோ அல்லது மற்றவர்களோ மீண்டும் அந்த வழக்கை நாங்கள் தொடுக்கலாம் என்ற உறுதிப்பாட்டின் அடிப்படையிலேதான் அவற்றை நாங்கள் அன்றைக்கு வாபஸ் பெற்றுக்கொண்டோமே தவிர, வேறல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-55

மூன்றாவதாக, ஆணையத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஆணையத்தைப் பற்றி நான் இப்போது தெரிவிக்கிறேன். 'To implement the order of the Tribunal'—அந்த ட்ரிபியூனலுடைய இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு ஸ்கீம் தேவை. அதற்காகத்தான் பிரதமர் தலைமையிலேயே ஓர் ஆணையத்தை, கலைஞர் ஆட்சி இருக்கிறபோது கொண்டு வந்து இருக்கிறோம். அந்த ஆணையம் உங்களுக்கு இப்போது, சரிப்பட்டு வராது என்று நீங்கள் கருதினால், எங்களுக்கு ஒன்றும் இல்லை. நாங்கள் பிரதமரையே தலைவராக வைத்து ஓர் ஆணையத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த ஆணையத்தை நீங்கள் இப்போது வேண்டாம் என்று சொன்னால், எங்களுக்கு இந்த ஆணையம் தேவையில்லையென்று பிரதமருக்குக் கடிதம் எழுதிவிட்டு, அதற்கு மாற்றாக ஓர் ஆணையத்தையோ, வேறு ஸ்கீமையோ கொண்டு வாருங்கள். யார் வேண்டாம் என்று சொல்லப் போகிறார்கள்? ஆனால், வேறு வழி இல்லாமல், இருப்பதிலேயே அது பரவாயில்லை என்பதால்தான் அந்தத் திட்டத்தை நாங்கள் அன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம்.

நான்காவதாக அவர் தெரிவித்த இன்னொரு கருத்து; கேஎல். ராவ் காலத்தில்; அவர் மறுபடியும் நாங்கள் ஏதோ ஒத்துக்கொண்டோம் என்றெல்லாம் இங்கே தவறான தகவலைச் சொன்னார்கள். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு முடிந்துவிட்டது என்ற ஓர் எண்ணம் தோன்றுகிற வகையில் இந்த மாமன்றத்திலேயே பேசியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். 1989-லே பொதுப் பணித் துறை அமைச்சராக நான் இருந்தபோது, அன்றைக்குப் பிரதமராக இருந்த வி.பி. சிங் அவர்களைச் சந்திப்பதற்காக, அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ராதா—அ.தி.மு.க. சார்பில்—அவர்களையெல்லாம் அழைத்து,



2002 ஏப்ரல் 30] [திரு. துரைமுருகன்]

நாங்கள் பேசி, இந்த மாமன்றத்தின் சார்பில் வி.பி.சிங்கைச் சந்திப்பது என்று எம்.எல்.ஏ.-க்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், எம்.பி-க்களோடு போவது என்று இங்கிருந்து எல்லோருக்கும் டிக்கெட் எடுத்தோம், ஆனால் பல பேர் இங்கே வர மறுத்துவிட்டார்கள். மீதிப் பேர் டெல்லிக்கு வந்தார்கள்; என்னோடு வர மறுத்துவிட்டார்கள். ஆனால் என்னோடு வந்தவர்களிலே, வைஜயந்திமாலா மட்டும் காங்கிரஸ் சார்பிலே வந்தார். மற்றவர்களை அழைத்துக்கொண்டு வி.பி. சிங்கைப் பார்த்து, எங்களுக்கு ட்ரிபியூனல் அமையுங்கள் என்று ஒரு மனுக் கொடுத்தோம். ஆனால், அதற்கு மறுநாள், மறைந்துவிட்ட எஸ்.டி. சோமசுந்தரம், அன்றைக்கு பாராளுமன்ற உறுப்பினர், அவர் தலைமையிலே அ.தி.மு.க. சார்பிலே ஒரு மனுவைக் கொண்டு போய்க் கொடுத்தார்கள். ஆனால், அந்த மனுவிலே என்ன எழுதப்பட்டிருக்கிறது தெரியுமா? இன்றைக்கு நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதில், "The Delegation, 22 Congress-I and 12 AIADMK MPs. besides one M.P. each belonging to All India Muslim League and United Communist Party; The Meeting reportedly lasted nearly half-an-hour. The Memorandum noted that the agreement of sharing of water between Tamil Nadu and Karnataka had ended in 1974". ஆக, '1924 Agreement came to an end in 1974' என்று—1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு முடிந்துவிட்டது என்ற துரோகத்தை எழுத்து வடிவிலே வடித்துக் கொடுத்தது யார்? கலைஞரா? அல்லது உங்களுடைய ஆட்சியா? இந்த அவையிலே மறுநாள் அதுபற்றி ஒரு பெரிய பிரளயம் ஏற்பட்டது. இந்த அவையிலே நம்முடைய லத்தீப் அவர்கள் அதுகுறித்துப் பேசினார்கள். மிக heated discussion. அப்போதுகூடச் சொன்னார் எஸ்.ஆர். ராதா. அப்படி வந்திருக்காது என்றார். 'ஹிண்டு'விலா என்று கேட்டார். உடனே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள்—

"Quick on his feet, the Chief Minister said, he would only be happy if the memorandum did not contain such a reference. If, however, 'The Hindu', a neutral and widely circulated newspaper had published something which was not contained in the memorandum, it deserved to be condemned. If the Leader of Opposition could produce a copy of the memorandum and if the newspaper report was wrong, the House could have even adopted a resolution, condemning 'The Hindu', he said".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எதிர்க்கட்சித் துணைத் தலைவரை நான் கேட்டுக்கொள்வது, இதுபற்றி விவாதம் அல்ல. இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று விரும்பினீர்கள். அந்தப் பதிலிலே நீங்கள் சொல்ல வேண்டியது.(குறுக்கீடு) இல்லை, இல்லை. 1974 ஆம் ஆண்டோடு முடிந்துவிட்டது என்கிற பொருள்பட முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே பேசிவிட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அதை, இல்லை என்று நீங்கள் மறுத்துச் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் சொல்வது, Categorically a written statement has been made before the Hon. Prime Minister of India that 1924 agreement came to an end in 1974. ஆனால் நாங்கள் அப்படியில்லை. —1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 50 ஆண்டுகளுக்கு இருந்து, 1974 ஆம் ஆண்டு. அதில் சில பிரிவுகளை, past experience-ஐ வைத்து, தண்ணீர் ஷேரிங்-ஐப் பற்றிப் புரிந்துகொள்வதற்காக, ஒரு வகையில் கன்சிடர் பண்ணுவதற்குத்தான் என்று போட்டிருக்கிறார்களே தவிர, 50 ஆண்டுகளுக்குப் பிறகும் வருகிறது என்பதுதான் முறையே தவிர, வேறு அல்ல. கலைஞர் அவர்கள் படிக்காதவர் அல்ல. இன்னும் சொல்லப் போனால், முதன்முதலாக இதிலே பேசியவர் கலைஞர் அவர்கள்தான். முதன்முதலாகப் பேச்சுவார்த்தையிலே கலந்துகொண்டவர் கலைஞர் அவர்கள்தான். முதன்முதலாக ட்ரிபியூனல் வேண்டுமென்று கேட்டவர் கலைஞர்தான். அந்த ரெசல்யூஷனை இந்த மன்றத்திலே கொண்டு வந்தவர் கலைஞர் தான்.

முற்பகல் 11-00

Fact Finding Committee-ஐக் கொண்டு வந்தவர் கலைஞர்தான். இந்திர காந்தியை இதிலே ஈடுபட வைத்தவர் கலைஞர்தான். மத்திய அரசை ஈடுபட வைத்தது கலைஞர்தான். வழக்குத் தொடுக்கப் போனவர் கலைஞர்தான். அந்த வழக்கில் ஒரு ட்ரிபியூனலைக் கொண்டு வந்தவர் கலைஞர்தான். அந்த ட்ரிபியூனலிலே interim order வேண்டுமென்று கேட்டவரும் கலைஞர்தான். அத்தகைய அதிகாரம் எங்களுக்கு இல்லை என்று சொன்னபோது, இல்லை இல்லை, உண்டு என்று சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனவரும் கலைஞர்தான். ஆக, 205 டி.எம்.சி. இன்றைக்குக் கிடைப்பதற்கு வழிவகுத்தவரும் கலைஞர்தான்.



To implement the order of the tribunal—இந்த order of the tribunal-ஐப் போடுவதற்கு ஆணையத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர்தான்.

காவிரியின் வாழ்க்கையிலே ஒவ்வொரு அங்குலத்தினுடைய முன்னேற்றத்திற்கும் கலைஞர் அவர்கள்தான் காரணமாக இருந்து இருக்கிறார். விவரம் தெரியாமல் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக வருத்தப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நல்ல அற்புதமான வசனம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** அல்ல. என்னுடைய உரிமை இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபப்படாதீர்கள். உட்காருங்கள். நீங்கள் தொடர்ந்து அடுக்கு மொழியில் சொன்ன காரணத்தினால் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபம் பலவீனத்தின் அறிகுறி என்று ஒரு பொருள் உண்டு. கோபப்பட வேண்டியதில்லை. நானும் கோபப்பட்டுப் பேசவில்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** இந்த அவையிலே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தொடர்ந்து அடுக்கு மொழியில் சொன்ன காரணத்தினால் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நான் எதிர்க்கட்சியில் அமர்ந்த நாளிலே இருந்து இதுவரையில் நான் கோபப்பட்டது இல்லை. கோபப்படக் கூடாது என்ற முடிவோடுதான் நான் சபையிலே வந்தேன். அங்கு இருக்கும்போதாவது படலாம். இங்கு உட்கார்ந்த பிறகு, இன்னும் கோபத்தை அடக்கி இருக்கிறேன். கோபம் வரவேண்டிய அவசியம் இல்லை. காரணம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும் கோபப்படாமல் இருக்கத்தான் முயற்சி செய்கிறேன். நீங்கள்தான் கோபத்தைக் கிளப்பி விடுகிறீர்கள், சில நேரத்தில்.

**திரு. துரைமுருகன்;** பெரிய ஒரு குற்றச்சாட்டைத் தூக்கி எங்கள் கட்சியின்மீது போட்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு விளக்கம் சொல்ல, போதிய அவகாசம் கொடுத்தேன். சொல்லி இருக்கிறீர்கள் (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன் :** நீங்கள் கொச்சைப்படுத்துவதுபோல் 'வசனம்' என்று சொன்னீர்களே, அதை நினைத்துத்தான் நான் வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் தொடர்ந்து அடுக்கு மொழியில் சொன்ன காரணத்தினால் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய குற்றச்சாட்டுக்கு முதல் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில கருத்துகளை இங்கே சொன்னார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்க விரும்புவது, 1924 ஒப்பந்தத்தின்படி ஹேமாவதி அணை கட்டுவதற்குத் தமிழக அரசினுடைய டெக்னிக்கல் அனுமதியைப் பெற்று இருக்க வேண்டும். மத்திய அரசினுடைய அனுமதியையும் பெற்று இருக்க வேண்டும். அந்த அணை கட்டுவதற்கு 1 இலட்சம் ஏக்கர் என்ற அளவிலும், 35 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட ஓர் அணைக்கட்டு கட்ட வேண்டும் என்பதுதான் 1924 ஒப்பந்தத்தில் கூறப்படுகின்ற கூற்று—ஷரத்து. அதை அவர்களுமே ஒத்துக்கொள்கிறார்கள். நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, 1971-ல் தமிழகத்தில் இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் கடும் எதிர்ப்பைச் சொல்லியதற்குப் பிறகு, திரு. கருணாநிதி அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நான் ஒத்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், பாரதப் பிரதமர் அவர்களே நேரிடையாகத் தொடர்பு கொண்டு சுமுகமான முறையில் நான் பேசித் தீர்க்கின்றேன்; வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் என்று சொன்னார்கள். நானும் ஒத்துக்கொள்கிறேன். ஒரு நாட்டின் பிரதமரே வழக்கை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். நான் சுமுகமான முறையில் பேசித் தீர்க்கின்றேன் என்று சொன்னதன் பேரில் மரியாதை கொடுத்து ஓர் அரசு கேட்க



வேண்டியதுதான்; கேட்டு இருக்கின்றார்கள். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடந்தது? வாபஸ் பெற்றபோது ஏதாவது நிபந்தனையுடன் கூடிய வாபஸ் என்ற வகையில் வழக்கை வாபஸ் பெற்றார்களா அவர்கள்? இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 1924 ஒப்பந்தத்தின்படி ஒரு இலட்சம் ஏக்கராக இருந்த ஹேமாவதி ஆயக்கட்டின் பாசனப் பரப்பளவை 7 இலட்சம் ஏக்கராக, தொடர்ந்து அவர்கள் விரிவுபடுத்திக் கொண்டு சென்று இருந்தார்கள். ஹேமாவதி அணைக்கட்டை, தமிழ்நாட்டின் அனுமதியைப் பெறாமலும், டெல்லியினுடைய அனுமதியைப் பெறாமலும் தொடர்ந்து கட்டிக்கொண்டு இருந்தார்கள் என்பதுதானே உண்மை? அதைத் தடுத்து நிறுத்துகின்ற பொறுப்பு அரசில் இருக்கின்ற முதலமைச்சரைச் சார்ந்ததா, இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். நாட்டின் பிரதமர் அழைத்துப் பேசி, நான் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கின்றேன் என்று சொன்னார்கள். தொடர்ந்து 1976 வரை தமிழகத்தின் முதலமைச்சராக திரு. கருணாநிதி அவர்கள்தானே இருந்தார்கள்? 1972-ல் வழக்கு வாபஸ் பெறப்பட்டு, 1976 வரை கிட்டத்தட்ட 4 ஆண்டுகள் தொடர்ந்து அணை கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. தடுத்து நிறுத்துவதற்கு உத்தரவாதம் தந்த நம்முடைய பாரதப் பிரதமர் அவர்களிடம் ஏன் சென்று முறையிடவில்லை? முறையிட்டிருந்தும், சரியான பதில் பாரதப் பிரதமர் அவர்களிடமிருந்து வரவில்லை என்றால், மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு ஏன் செல்லவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் தமிழகத்திற்கு முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி செய்த துரோகத்தை யாரும் மறுக்க முடியாது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

அடுத்தபடியாக, பிரதமர் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். நானும் ஒத்துக்கொள்கிறேன். பிரதமர் தலைமையிலே ஆணையம் அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஒத்துக்கொள்கிறேன். அந்த ஆணையத்திலிருந்து இடைக்காலமாக ஏதாவது ஒரு தீர்ப்பு வாங்கி வந்தார்களா? தமிழகத்திற்குத் தண்ணீர் பெறப்படுகின்ற அளவு பற்றி அந்த ஆணையத்தின் மூலம் எழுத்துப்பூர்வமாக ஏதாவது ஓர் உத்தரவை இவர்கள் உத்தரவாதமாகப் பெற்றார்களா? இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் உச்ச நீதிமன்றம்தான் மைய அரசுக்கு அறிவுறுத்தி 205 டி.எம்.சி. தண்ணீர்

தரவேண்டும் என்று சொன்னது. ஆணையத்திலிருந்து எந்த உத்தரவும் வரப்பெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதிகாரம் இல்லாத ஆணையம் தேவைதானா என்பதுதான் எங்களது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கேள்வி. அதைத்தான் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிகாரம் இல்லாத ஓர் ஆணையம் தேவையா? இல்லை. அந்த ஆணையத்தின் மூலம் எந்தவித ஆணையையும் அவர்களால் செயல்படுத்த முடியவில்லை. செயல்படுத்த முடியாத ஓர் ஆணையம் தேவையா என்பதுதான் நிலை. அந்த நிலையை வலியுறுத்தித்தான் இன்றும் நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறோம். அந்த நிலையில், இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிற நிலையை ஏன் திரு. கருணாநிதி 1972-லிருந்து 1976 வரை எடுக்கவில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் என்னுடைய கேள்வி என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள், அப்படிப் பொருள்படப் பேசவில்லை என்று. 24-8-1968-ல் சட்டசபையில் திரு. கருணாநிதி, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு வரை செயல் திறனுடையாக இருக்கும் என்று கூறினார். அப்போது 1974-க்குப் பினனால் அந்த ஒப்பந்தம் செயல் திறனுடையதாக இல்லை என்று ஒத்துக்கொள்கிறீர்களா? அந்த ஒப்பந்தத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது? '1974 வரை ஒப்பந்தம், மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்' என்றுதான் ஒப்பந்தத்திலே இருக்கிறதேயொழிய, ஒப்பந்தம் எந்த நிலையிலும் காலாவதி ஆகவில்லை, ஆகாது என்பதுதான் அந்த ஒப்பந்தத்தில் இருக்கிற ஷரத்து என்பதனையும் நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுடைய ஜீவாதார உரிமையாக இன்றைய நிலையில் இருக்கிற இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையை அன்றைய தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் சரியான முறையில் அணுகாமல் தமிழகத்திற்கு மாபெரும் துரோகம் இழைத்தார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றே திரு. கருணாநிதி அவர்கள், மீண்டும், உத்தரவாதத்தின்படி நடக்கவில்லை என்பதை உணர்ந்து உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்க வேண்டும். அன்று தும்பை விட்டு விட்டு, வாலைப் பிடித்த கதையாக அதாவது அன்றே அவர்கள் அதைச் செய்திருந்தால் ஒரு நிரந்தரமான தீர்ப்பு அன்றைக்கே



பெறப்பட்டிருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்களே பல முறை சொல்லியிருக்கிறீர்கள். இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பற்றி அதிகமாக விவாதிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? நான் அவரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன், அதற்குள் என்ன உங்களுக்குக் கொள்ளை போகிறது? (குறுக்கீடு) திரு. துரைமுருகன், அதாவது, அமைச்சர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார், அந்தக் குற்றச்சாட்டை மறுப்பதற்கு உங்களுக்கு முழுமையான உரிமை இருக்கிறது. நான் அதை மறுக்கவில்லை. நீங்கள், அவர் சொன்னதற்கு ஏதாவது விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். மறுபடியும் இந்தப் பிரச்சினையைப் பெரிதாக்குகிற மாதிரிப் பேசாமல் விளக்கம் சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு 50 ஆண்டு காலத்திற்குப் பிறகு அரசியலில் நல்ல சம்பவங்கள் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது என்பதை இன்றைக்குப் பத்திரிகையின் வாயிலாக நான் பார்த்தேன். கல்விக்கும், தமிழ் மொழிக்கும் தமிழகத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்த குரலிலே குரல் கொடுத்து, அதனுடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுத்திருக்கிற நடவடிக்கையை இன்று பத்திரிகைகளெல்லாம் பாராட்டியிருக்கின்றன. ஆனால், தமிழகத்தினுடைய நதி நீர்ப் பிரச்சினையில் ஒரு பொறுப்பான ஆளும் கட்சியும், ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியும் ஒருவர்மீது ஒருவர் சேற்றை எடுத்து எறிந்து கொண்டு, பூசிக் கொண்டு இல்லாமல், இந்தப் பிரச்சினைக்கு ஒரு களங்கம் வராமல் பார்ப்பது உங்களுடைய மிகப் பெரிய கடமையாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதோடு மட்டுமல்ல, இன்று நாடாளுமன்றத்தில் இருக்கிற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்த குரலில் தமிழகத்தினுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்துள்ளது போன்று, இந்தக் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒத்த குரல் கொடுக்க இரு கட்சிகளும் ஒத்து வருவீர்களா என்பதுதான் எங்களுக்கு இருக்கிற ஏக்கம். நான் பேசுவதற்குக் காரணம்—அந்த மண்ணில் பிறந்தவன் என்ற

காரணத்தால்—நாம் இதை அரசியலாக்கக் கூடாது தமிழகத்தின் உயிர்நாடிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண, திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், சட்டமன்றத்தை அரசியல் மேடையாக்காமல் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்பதுதான் இது எங்களுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பணிவான வேண்டுகோள் என்பதை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களையும் ஒருங்கிணைத்து, இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று டெல்லிக்கு அனுப்பி வைத்தார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலிருந்து, நாங்கள் அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் இதில் ஒருங்கிணைத்து, மக்களை ஒருங்கிணைத்து நம்முடைய உரிமையைப் பெறவேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்கிறோம் என்பதனையும், ஆனால் காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி திரு. கருணாநிதி அவர்கள் தவறாக, பத்திரிகைகளின் வாயிலாகவும், மேடைப் பேச்சுக்கள் வாயிலாகவும் பல்வேறு தவறான தகவல்களைக் கொடுப்பதால்தான், நான் சட்டமன்றத்தில் இந்த விளக்கவுரையை ஆற்ற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்கு இதோடு (குறுக்கீடுகள்) எல்லா விளக்கங்களும் சொல்லிவிட்டோம். இதில் என்ன விளக்கம் சொல்லப் போகிறீர்கள்? அதுதான் 1972, 1974-ல் என்ன நடந்தது என்று சொல்லி ஆயிற்று. ஆகவே, நான் என்னுடைய துறையின்கீழ் சில அறிவிப்புகளை இந்தச் சபையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹேமாவதி அணை கட்டுவதை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்று



கேட்டார். அவருக்குத் தெரியாது. ஏற்கெனவே கர்நாடக அரசிலே பல அணைகளைக் கட்டினார்கள். நான் முதலிலேயே சொன்னேன். பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் காலத்திலேயிருந்து பல்வேறு கடிதங்கள் எழுதப்பட்டன. அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. கடிதங்களை எழுதினோம், அவர்கள் கண்டுகொள்ளவில்லை, மத்திய அரசும் கண்டுகொள்ளவில்லை என்பதுதான் அன்றைக்கு இருந்த நம்முடைய குற்றச்சாட்டு. ஆகையினால்தான் அவர்கள் பாட்டுக்குக் கட்டிக் கொண்டிருந்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தவறான தகவல். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறுகிற தகவல் தவறான தகவல். திரு. கருணாநிதி அவர்களே அன்றைய பாரதப் பிரதமர் அவர்களுக்கு ஓர் அஞ்சல் எழுதியிருக்கிறார். அதிலே தெரிவித்திருக்கிறார்—

"You may be aware that the Chief Minister of Mysore and I attended a Conference convened by Dr. K.L. Rao, the Union Minister for Irrigation and Power at New Delhi on 19th and 20th August of 1968 to discuss the Hemavathi Reservoir Project of Mysore. This is one of the major reservoir projects proposed by that Government on the Tributaries."—'Proposed by that Government' என்று பிரதம அமைச்சருக்கு எழுதிய அஞ்சலிலேயும் எழுதுகிறார். மைசூர் அரசாங்கம் proposed. தற்போது தவறான தகவல் தருகிறார். பக்தவத்சலம் ஆட்சிக் காலத்திலேயே அது கட்டப்பட்டிருந்தது என்று இந்த அஞ்சல் கடிதத்தில் எந்த இடத்திலும் நீங்கள் சொல்லவில்லை. அந்த உடன்பாட்டில்கூடக் கட்டுவதற்கு இசைவைத் தந்திருக்கிறீர்கள். சட்டப் பேரவையிலேயே சொல்லியிருக்கிறார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தெளிவாகச் சொன்னார். திரு. கருத்திருமன் அவர்கள் கேட்டபோது, சட்டப் பேரவையிலே, ஹேமாவதி அணை கட்டப்படக் கூடாது என்பது அரசினுடைய வாதமாக என்றுமே அல்ல; நாங்கள் அதற்கு சம்மதித்தோம் என்றுதான் சொல்லி இருக்கிறார். பிறகுதான், அப்போது கருத்திருமன் கூறுகிறார். (குறுக்கீடுகள்) இல்லை.

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும், சொல்லி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) No. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது திரு. கருத்திருமன் கூறுகிறார். அணையைக் கட்டிவிட்டு, தண்ணீர் தராவிட்டால் என்ன செய்வது? தருவேன் என்று சொல்வதெல்லாம் தாஜா பண்ணும் வேலையில்லையா? என்று அவர் கேட்கிறபோது, என்னுடைய உடன்பாட்டை ஒத்துக்கொள்கிறீர்களா, இல்லையா என்று ஒரு வினாவைத் தொடுக்கிறார். பிறகுதான், அவர்—திரு. கருத்திருமன் அவர்கள்—சுட்டிக்காட்டி, இப்படி அணையைக் கட்டி விட்டால் தண்ணீரே வராது என்று சொன்ன பிறகுதான், திரு. கருணாநிதி அவர்களுக்கு ஞானோதயம் வந்தது; புரிந்தது. பிறகு அவர்கள் தொடர்ந்து சொன்னார்கள். அவர்கள் சட்டமன்றத்திலே வீரேந்திர பாட்டீலே தெளிவாகச் சொன்னார். மைய அரசினுடைய ஆணையத்தினுடைய ஒப்புதல் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும், நாங்கள் தொடர்ந்து கட்டுவோம், எங்கள் பணி—We are going ahead with the project என்று. பிறகு 1971-லே சொல்கிறார்—போராட்டம் விவசாயிகள் நடத்துகிறார்கள். போராட்டம் வெடித்த காரணத்தினால்தான், தஞ்சையிலே வெடித்த காரணத்தால், எதிர்ப்புக் குரல் எழுந்த காரணத்தால், அச்சப்பட்டு, 1968-லே துரோகம் செய்துவிட்டோமே, அந்தத் துரோகத்திலிருந்து எப்படித் தப்பிப்பது என்பதற்காக, Tribunal-க்கு 1971-லே போகக்கூடிய ஒரு சூழ்நிலையை மேற்கொண்டார். 1968-லேயே, அவர்கள் பேச்சுவார்த்தைக்குக் கூப்பிட்டபோதே, அணை கட்டவேண்டுமென்று சொன்னபோதே, அந்த அணையைக் கட்டுவதற்கு உள்ள விதிகளாக, கீழே உள்ள Reservoir—அந்த K.R.S. அதாவது Krishna Raja Sagar Reservoir-ம் ஹேமாவதித் திட்டமும் single scheme-ஆகக் கொண்டு வந்து, Inflow guarantee ஆக தரவேண்டுமென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள்; தலைமைச் செயலாளர் சொல்கிறார். அதெல்லாம் அவருக்குப் புரியாத காரணத்தால், 'பிரதம அமைச்சர் சொல்லிவிட்டார், கே.எல். ராவ் இன்று சொல்லிவிட்டார்', என்ற காரணத்திற்காக, எடுத்த எடுப்பிலேயே, சிக்கல் என்ன, ஆபத்து என்ன, அணையைக் கட்டி விட்டால் தமிழ்நாடு வறண்டுவிடாதா என்ற ஞானோதயம், தீர்க்க சிந்தனை, தொலைநோக்குச் சிந்தனை இல்லாத காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) அன்று இசைவைத் தந்துவிட்டார். அப்படி 1968-லே புரியாத காரணத்தால், விவரம் புரியாத காரணத்தால், தமிழகத்திற்கு அவர் துரோகம் இழைத்து விட்டதை மறைப்பதற்காகத்தான், தொடர்ந்து, 1968-லிருந்து இன்று வரை தமிழகத்திற்கு அவர் தொடர்ந்து துரோகத்தை இழைத்து வருகிறார்.



செய்த தவறுகளை எல்லாம் மறைக்கின்ற வகையிலே எழுதி வருகிறார்; பேசி வருகிறார். இதுதான் நடைமுறையிலுள்ள உண்மை. காவிரிப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் நாடறிந்த உண்மை. கர்நாடக மாநிலத்தை .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் இது நாடறிந்த உண்மை. கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும், ஒன்று காங்கிரஸ் ஆளுகிற மாநிலம் அல்லது பி.ஜே.பி. ஆளுகிற மாநிலம். மைய அரசைப் பொறுத்தவரைக்கும்—இன்றைய நிலையில் மைய அரசைப் பொறுத்தவரைக்கும்—பேச்சுவார்த்தை என்ற முடிவுக்கு வருகிறபோது, political decision எடுக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அப்படி ஒரு political decision எடுக்கின்றபோது, அதிலே அவர்கள் வெற்றி பெறுகிறார்கள். தமிழகத்தினுடைய நலன் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதிலே, பாரதப் பிரதமர் சொன்னால் என்ன, யார் சொன்னால் என்ன, தமிழகத்தினுடைய நலன்தானே என் நலம் என்று அன்றே உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தால், பேச்சுவார்த்தை என்பது தீர்வு அல்ல, உச்ச நீதிமன்றத் தீர்ப்புதான் தமிழனைக் காக்கும், தமிழகத்தைக் காக்கும், தமிழகத்து விவசாயிகளைக் காக்கும் என்ற தமிழ் உணர்வு திரு. கருணாநிதி அவர்களுக்கு இருந்திருந்தால், 1968-லேயே உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருப்பார். 1971-லே போட்ட வழக்கை 1972-லே திரும்பப் பெற்றிருக்கமாட்டார். 1986-லே புரட்சித் தலைவர் உச்ச நீதிமன்றத்திலே வழக்கைத் தொடர்ந்து பெற்றுத் தந்த Tribunal மூலமாகக் கிடைத்த, தமிழகத்திற்குக் கிடைத்த பெருமையைத் தன்னுடைய பெருமை என்று, உண்மைக்கு மாறான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) உலகுக்குத் தெரிவித்து, தமிழக மக்களை ஏமாற்றிக் கொண்டு வருகிறார்; புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொன்னார், மைய அரசிடம் தெளிவாகச் சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும், (குறுக்கீடு) முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தெளிவாகச் சொன்னார். காவிரி ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், ஒரு பல்... (குறுக்கீடுகள்) இல்லை, முடித்துவிட்டேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடித்துவிடட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Only one minute. புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொன்னார், காவிரி ஆணையம் என்பதே, ஒரு பல் இல்லாத ஓர் அமைப்பாக இருக்கக்கூடாது என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார். ஆனால், உங்களைப் பொறுத்தவரைக்கும்—ஏன் புரட்சித் தலைவி அவர்கள், ஒரு பல் இல்லாத ஒரு அதிசயம் என்று சொன்ன பிறகும்கூட—நீங்கள் ஒரு Empowered Technical Committee வேண்டுமென்ற நடவடிக்கையை எடுக்காததன் காரணம், 1968-லே நீங்கள் செய்த துரோகம், பேச்சுவார்த்தை மூலம்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று நீங்கள் சொன்னது; சட்டப் பேரவையிலேயே மிகத் தெளிவாகச் சொன்னார் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செயல் திறனை இழந்து விட்டது என்று... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடட்டும், நிதியமைச்சர் முடித்துவிடட்டும்,

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும். நான், கருணாநிதி அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் முடித்துவிடட்டும். முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மன்னிக்க வேண்டும், 1924 ஆம் ஆண்டிலே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) துரைமுருகன், அவர் விளக்கம் சொல்லி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆவது ஆண்டு வரை செயல் திறன் உடையது என்று—சட்டப் பேரவையிலே—திரு. கருணாநிதி கூறியது சட்டப் பேரவையிலே ரெக்கார்டிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புத் தருகின்றேன் துரைமுருகன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) அவர் முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு வரைதான் செயல் திறன் உடையதாக இருக்கும் என்று (குறுக்கீடு) திரு. கருணாநிதி சட்டப் பேரவையிலே கூறினார். சட்டப் பேரவைக் குறிப்பிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த உண்மையை மறைக்க... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இந்த விவாதத்தை நிறுத்த வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இந்த உண்மையை மறைக்க..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்லி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன். திரு. துரைமுருகன், வாய்ப்புத் தருகின்றேன். (குறுக்கீடு) முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** 1974 ஆம் ஆண்டு, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செயல் திறன் அற்றதாகப் போய்விட்டது என்று சட்டப் பேரவையிலே 24-8-1968-ல் திரு. கருணாநிதி சொன்னதை மறைப்பதற்காக இப்படிப்பட்ட நாடகத்தை, தமிழகத்து மக்களை ஏமாற்றி (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதுதான் முக்கியம். சட்டப் பேரவையிலேயே கூறியிருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். வார்த்தைகளைக் கொட்டிவிட்டு— 'கருணாநிதி, துரோகம்' என்ற வார்த்தைகளைக் கொட்டிக்— கொண்டிருக்கிறார். இது எல்லாம் தவறான செய்தி. (குறுக்கீடுகள்) ஒன்றை நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பிரச்சினை ஒன்றுமில்லை. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகின்றேன். (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லிவிடுகின்றேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினையில் ஒன்றை, என்ன சாதித்தது (குறுக்கீடுகள்) அது அவர்களுடைய இஷ்டம். நான்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** என்ன சார், அவர்களே 3 பேர் பேசினால், பிறகு நாங்கள் எப்போது பேசுவது?

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் இப்போதுதான் பேசுகிறேன். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** சட்டமன்றத்திலே விவாதிக்க வேண்டாம். நிச்சயமாக காவிரி நீர்ப் பிரச்சினைக்கு இது தீங்கு விளைவிப்பதாகும். விவாதிக்கக் கூடாதென்று...

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார். (குறுக்கீடு) துரைமுருகன் அவர்கள் (குறுக்கீடு) ஜி.கே. மணி, உட்காருங்கள், சொல்கிறேன். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்த விளக்கத்தைச் சொல்வதற்கான காரணத்தைச் சொன்னார்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலேயே இருக்கிறது. 24-8-1968-ல்



சட்டசபையில் திரு. கருணாநிதி, 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் 1974 ஆவது ஆண்டு வரை செயல் திறன் உடையதாக இருக்கும் என்று கூறினார். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அதற்கு என்ன அர்த்தம்? அதாவது, 1974-க்குப் பிறகு அந்த ஒப்பந்தம் செயல் திறன் இழக்கும் என்று 1968-லேயே திரு. கருணாநிதி கூறிவிட்டார். அதை மறைப்பதற்காக திரு. துரைமுருகன் ஏதேதோ இங்கே பேசி, சத்தம் போட்டு, ஆளுங்கட்சியை அடக்கப் பார்க்கிறார். அது நடக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சத்தம் போடவில்லை. ஆளுங்கட்சியை அடக்கவில்லை. அந்தத் திறமையும் எனக்கில்லை. ஆகையால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று தெரிவிக்க விரும்புகின்றேன். நான் கேட்ட கேள்வி அவர்களுக்கு—இவர்கள் என்ன சாதித்தார்கள் என்று கேட்டார். (குறுக்கீடுகள்) அவர் முதலிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். இது ஒரு விவாதம் அல்ல. நான் சொல்வது (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகின்றேன். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டு இரண்டு. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நான் பாயின்ட், பாயின்ட்டாகச் சொல்லிவிடுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறேன். பாயின்ட், பாயின்டாகச் சொல்லக்கூடிய அளவுக்கு நேரமில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டுக்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம். அதில் தவறில்லை. நான் குற்றச்சாட்டு என்ன என்பதைச் சொல்லிவிடுகிறேன். ஒன்று, அந்த ஹேமாவதியிலே அணை கட்டுவதற்கு அரசாங்கம் ஒத்துக் கொண்டது. அன்றிருந்த முன்னாள் முதலமைச்சர் (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைச் சுருக்கிச் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** [2002 ஏப்ரல் 30 மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒவ்வொரு முறையும் மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள்—முன்பும் சுட்டிக்காட்டி இருக்கிறார். இன்றையதினமும் சுட்டிக்காட்டினார்கள். நடந்தது நடந்துவிட்டது. 1924-லே ஒப்பந்தம். 1974-லே நிச்சயமாக அது முடிவுறவில்லை. அதனுடைய செயல் திறன் அற்றுப் போய்விட்டது என்பது சரியல்ல. அது வேறு விஷயம். ஆனால், மீண்டும், மீண்டும் அதையே இந்த அவையிலே பேசி, தமிழ்நாட்டு நலனுக்குக் குந்தகம் வந்துவிடக் கூடாது என்பதிலே எல்லோரும் அக்கறையோடு இருக்கிறோம். அதனால்தான் பழனிசாமி அவர்கள், அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர் என்கிற முறையிலே கொஞ்சம் வேகமாகப் பேசிவிட்டுச் சென்றார்கள். எது நடந்திருந்தாலும், நடந்தவற்றை இரண்டு பேரும் பேசியாகிவிட்டது. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும். எனவே, இந்தப் பிரச்சினைக்கு இதோடு முடிவு கட்டி காவிரியிலே தொடர்ந்து நமக்கு வரவேண்டிய நம்முடைய உரிமையைப் பெறுவதற்கு, தண்ணீரைப் பெறுவதற்கு என்ன வழி என்று பார்க்க வேண்டுமே தவிர, 1968-லே யார் பேசினார், 1974-லே யார் பேசினார் என்று தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, தண்ணீர் பெறுவதற்கு...

முற்பகல் 11-25

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உரிமையைப் பெறுவதற்காக இந்த அரசு தொடர்ந்து முயற்சிகள் செய்து கொண்டுதான் இருக்கின்றது. தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றது. நேற்றுக்கூட கர்நாடக முதல்வர் திரு. கிருஷ்ணா அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீரைத் திறந்துவிடுங்கள், இங்குள்ள விவசாயிகளைக் காப்பாற்றுங்கள் என்று நேற்றுக்கூட கடிதம் எழுதியிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுதான் வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** நான் பலமுறை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறேன்.



2002 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நான் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் சொல்லிவிடுகின்றேன். என்னவென்று. ஏற்கெனவே பேச விட்டுத்தான் நீண்ட நேரம் பேசினீர்களே! (குறுக்கீடு) இப்போதும் உங்களைப் பேச அனுமதிக்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** உங்களை மதித்து நான் உட்காருகின்றேன். எனக்குப் பேச chance கொடுக்கவில்லையென்றால் எப்படி? அது ரொம்பத் தவறு. நான் என்ன சொல்கிறேன் என்றால்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன் :** Allow பண்ணுங்கள். மைக் கொடுத்தால்தானே இங்கே பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நிற்கிறார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

**திரு. துரைமுருகன்:** நான் பதில் சொல்லியாக வேண்டும். It is unfair, if you are going to deny my opportunity.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி என்ன சொல்ல வருகிறார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் நான் பேச விழைகின்றேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் இது சம்பந்தமாக ஏதாவது மீண்டும் கிளப்பினால், நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலைமையும் இங்கே ஏற்படும். (குறுக்கீடு) ஆகவே, நான் என்னுடைய அறிவிப்புகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, முதலமைச்சர் சொன்னதற்கு நான் பதில் சொல்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். நீங்கள் மைக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுக்கின்றேன். மைக் கொடுப்பதற்கு முன்பு ஒரு விளக்கத்தைச் சொல்லிவிடுகின்றேன். அதாவது. (குறுக்கீடு) இல்லை, ஒரு அராபிய இரவுக் கதை மாதிரி நீண்டுகொண்டு போக வேண்டியதில்லை. (குறுக்கீடு) இல்லை, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், அமைச்சர் சொன்ன குற்றச்சாட்டு இரண்டுக்கும் ஏற்கெனவே நீங்கள் பதில் சொன்னீர்கள். (குறுக்கீடு) இப்போதும் அதே குற்றச்சாட்டைத்தான் சொல்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாற்றி, மாற்றிச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அதே குற்றச்சாட்டைத்தான் சொல்கிறார். இதில் இரண்டு, ஒன்று, (குறுக்கீடு) துரைமுருகன், நான் சொல்லிவிடுகிறேன். ஹேமாவதியிலே அணையைக் கட்டுவதற்கு முன்னாள் முதலமைச்சர் ஒத்துக்கொண்டார் என்பது அமைச்சர் சொல்லக்கூடிய ஒரு குற்றச்சாட்டு. நீங்கள் சொல்கிறீர்கள். இது பக்தவத்சலம் காலத்திலேயே கட்ட ஆரம்பிக்கப்பட்டது என்று விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள். அதைப்போலவே, 1924-லே போட்ட ஒப்பந்தம் 1974 வரைக்கும்தான் செயல்படும் என்று சட்டமன்றத்திலே சொன்ன குறிப்பை முதலமைச்சர் அவர்களும் படித்துக் காட்டினார்கள். அதற்கு நீங்கள் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறீர்கள். இரண்டுக்கு மட்டும் பதில் சொல்வதாக இருந்தால், சொல்லுங்கள். இந்த உங்களுக்கு உள்ள உரிமையை நான் மறுக்கவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ இந்த அவையில் நாங்கள் வீண் வம்பு செய்வதைப் போல ஒரு சிலர் நினைக்கலாம். (குறுக்கீடு) நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த மாதிரி Inter-State விவகாரங்களில், ஆளும்கட்சியும், எதிர்க்கட்சியும் ஒரு நிலையில் இருக்க வேண்டும், இப்படிப் பேசுவதை நான் விரும்பவில்லை என்று பல முறை இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். முன்னாலேகூட மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவிரியில் என்ன ஸ்டேண்டோ அதுதான் என்னுடைய ஸ்டேண்ட் என்றுகூடத் தெரிவித்திருக்கிறார்கள். அதுதான் இதுவரையிலும் போய்க்கொண்டிருந்தது. அன்றைக்குக்கூட ஒரு நாள் கிளப்பி, அதற்குப் பதில் சொல்லி முடிந்து விட்டது. ஆனால், வேண்டுமென்றே, இன்றைக்குத் திட்டமிட்டு ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறபோது, அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லாமல்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, துரைமுருகன், தயவுசெய்து தாங்கள், திட்டமிட்டு என்று சொல்லக்கூடாது. அமைச்சர் ஒரு விளக்கம் சொன்னார். அதாவது, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இப்போது தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் மேலே, காவிரிப் பிரச்சினை குறித்து குற்றச்சாட்டைச் சுமத்தி எழுதுகிற காரணத்தால் பதில் சொல்கிறோம் என்று சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** இங்கே இருக்கின்ற, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற கட்சிகள்கூட யார் இதை ஆரம்பித்தார்கள் என்பதைக் குறித்து கண்டிக்காமல், ஏதோ நாங்களும் சேர்ந்து தவறு செய்வதைப் போல அவர்கள் சொல்லிவிட்டுப் போவது வருத்தத்திற்குரியது. இரண்டாவது...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நடந்த தவறுகளையெல்லாம் சரி செய்வதற்கு 1997 ஆம் ஆண்டில் ஒரு மகத்தான வாய்ப்பு தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது. அப்போது, சம்பந்தப்பட்ட party States-காவிரிப் பாசன மாநிலங்கள் எல்லாம் Supreme Court-ல் வழக்குத் தொடுத்ததன்பேரில், Constitution Bench அந்த வழக்கைக் கேட்டு, கடைசியாக 9-4-1997 அன்று, அன்றைய Attorney General, Supreme Court-ல் ஒரு statement தாக்கல் செய்தார். "The Union Government is agreeable to frame a scheme under Section 6(a) of the Inter-States Water Disputes Act for the effective implementation of the interim order of the Tribunal. The scheme will be sent within the next eight weeks to the party States for their comments and thereafter, will be finalised by the Union of India and placed before Parliament in accordance with law." என்ற ஓர் உத்தரவாதத்தை Attorney General உச்ச நீதிமன்றத்தில் கொடுத்தார்.

முற்பகல் 11-30

அதாவது, காவிரி நடுவர் மன்றம் கொடுத்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டம் மத்திய அரசால் வகுக்கப்படும்; அது, சம்பந்தப்பட்ட காவிரி நதி ஓடும் பாசன மாநிலங்களுக்கு அனுப்பப்படும். அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகு, இது செயல்படுத்தப்படும், notify செய்யப்படும் என்று அவர் அறிவித்தார். அதன்படி, ஒரு செயல் திட்டம் வகுக்கப்பட்டது.

30-5-1997 அன்று மத்திய அரசு, இந்த draft scheme-ஐ எல்லா காவிரி பேசின் மாநிலங்களுக்கும், அவர்களுடைய கருத்தை நாடி அனுப்பியது. அந்த draft scheme-ல் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்கான செயல் திட்டம் மிகவும் நல்ல முறையில் தெளிவாக, உறுதியாக வரையறுக்கப்பட்டிருந்தது. அந்த original draft scheme—1997-ல் வகுக்கப்பட்ட draft scheme-ல் என்ன கூறப்பட்டிருந்தது? காவிரி நடுவர் மன்றம் கொடுத்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கு ஒரு Empowered Technical Committee அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவில், அந்த ஆணையத்தில் தொழில்நுட்பம் தெரிந்த வல்லுநர்கள் இடம்பெற வேண்டும். அந்த ஆணையத்திற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். நடுவர் மன்றத்தில் குறிப்பிட்டவாறு, வாரா வாரம் கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்குத் திறந்துவிட வேண்டிய காவிரி நீரின் அளவை, அளந்து, அது சரியாகப் பாய்கிறதா, சரியாகத் திறந்து விடப்படுகிறதா என்று கண்காணிக்க அந்த ஆணையத்திற்கு அதிகாரம் கொடுத்து. அதற்குமேல் அந்த வரைவுத் திட்டத்தில் முக்கியமான ஷரத்து என்ன கூறப்பட்டிருந்தது என்று சொன்னால், கர்நாடக மாநிலம் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீரைத் திறந்துவிடத் தவறினால் அந்த ஆணையம் கர்நாடகத்திலுள்ள நீர்த்தேக்கங்களைத் தன்னுடைய ஆளுமையின்கீழ் எடுத்துக் கொள்ளலாம்.— They will have the power to take control of the reservoir—அந்த ஆணையமே தேவையான தண்ணீரை நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குத் திறந்து விடலாம் என்று ஷரத்து இருந்தது. அதை கர்நாடகம் ஏற்க மறுத்தது. அதன் பிறகு, 1998-ல் மீண்டும் ஒரு வரைவுத் திட்டம் கர்நாடகத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டது. அதில் இந்த Empowered Technical Committee என்ற அந்த புரவிஷனையே எடுத்துவிட்டார்கள். அதற்கு மாறாக, பிரதமர் தலைமையில் ஓர் ஆணையம் அமைக்கப்படும். அதில் இந்த சம்பந்தப்பட்ட நான்கு காவிரி பேசின் மாநிலங்களின் முதலமைச்சர்களும் இடம் பெறுவார்கள். எந்த அதிகாரமும் அந்த ஆணையத்திற்குக் கிடையாது; அந்தத் தண்ணீர் திறந்து விடப்படுகின்றதா என்பதைப் பார்ப்பதற்கு, வெறும் அதிகாரிகள் கொண்ட ஒரு Monitoring Committee—மேற்பார்வைக் குழு இருக்கும் என்று இருந்தது. 1997 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட வரைவுத் திட்டத்தில் தமிழகத்திற்கு நீதி கிடைக்கக்கூடிய நியாயம் கிடைக்கக்கூடிய ஒரு ஷரத்து இருந்தது. ஆனால், அதை கர்நாடகம் ஏற்க மறுத்ததால், மீண்டும் 1998-ல் மாற்றியமைக்கப்பட்டு, ஒரு வரைவுத் திட்டம் கொடுக்கப்பட்டது. அதில் தமிழ்நாட்டிற்கு எந்தவிதமான நீதியும் கிடைக்க



வழியே இல்லை. அப்போது மத்திய அரசில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்றிருந்தது. அந்த வரைவுத் திட்டம் என்னிடம் காண்பிக்கப்பட்டது, 1998 ஆம் ஆண்டு. அதை நான் ஏற்க மறுத்தேன். இது தமிழ்நாட்டிற்கு அநீதி இழைப்பதாக இருக்கிறது; இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது; 1997 ஆம் ஆண்டு, முதலில் கொடுத்த அந்த வரைவுத் திட்டத்தைத்தான் செயல்படுத்த வேண்டுமென்று நான் பிடிவாதமாக நின்றேன். அதனால் அன்றைய மத்திய அரசு என்னையே புறக்கணித்துவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் புறக்கணித்துவிட்டு, அன்றைக்கு மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த கழக அமைச்சர்களையும் புறக்கணித்துவிட்டு, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதியை அவசரம், அவசரமாக டெல்லிக்கு அழைத்து, அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுக்கு வேண்டியது நடந்துவிட்டது. திரு. கருணாநிதி அந்த 1998 ஆம் ஆண்டு போடப்பட்ட வரைவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இறுதியாக நமக்கு நீதி கிடைக்கக்கூடிய ஒரு மாபெரும் வாய்ப்பு வரப்பிரசாதமாகக் கிடைத்தபோது அதையும் கெடுத்து, தமிழ்நாட்டிற்குத் தீங்கு இழைத்தவர், துரோகம் இழைத்தவர் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிதான் என்பதை ஆணித்தரமாகக் கூறுகிறேன். அதை, திரு. துரைமுருகன் அவர்களால் மறுக்க முடியுமா? அன்றைக்கு திரு. கருணாநிதி இழைத்த துரோகத்தினால்தான் இன்றுவரை நாம் நீதிக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். நமக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால்தான் இந்த ஆணையத்தை ஒரு 'பல் இல்லாத அதிசயம்' என்று கூறுகிறோம். மொத்தம் மூன்று முறை—இந்த ஆணையம் அமைக்கப்பட்ட 4 ஆண்டுகளில் மூன்று முறைதான்—கூடியிருக்கிறது. ஆனால் இந்த ஆணையத்தினால் என்ன செய்ய முடிந்தது? ஆணையிட முடிந்ததா? தண்ணீரைத் திறந்துவிடச் சொல்ல முடிந்ததா? கர்நாடகம் அதை மதித்ததா? தண்ணீரைத் திறந்து விட்டதா? ஆகவே, இந்த நிலைமைக்கு யார் காரணம்? முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிதான் என்பதை நீங்கள் மறுக்கவே முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

**திரு. துரைமுருகன்:** முதலமைச்சர் அவர்கள் திசை மாறி வேறு ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள்

சொன்னதிலிருந்து நீங்கள் மாறுபட்டு இருக்கிறீர்கள். 1997 ஆம் ஆண்டு கொண்டுவந்த வரைவுத் திட்டத்தில், ஒரு மாநிலம் அந்த ஆணையத்தினுடைய உத்தரவை ஏற்காவிட்டால், நேராகப் போய் dam-ஐ இவர்களே கைப்பற்றுவது என்று இருந்தது. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் இதுபற்றிப் பேசுகிறபோது, இங்கேகூடச் சொன்னார்கள், இது நடைமுறைக்கு ஒத்து வராது. எந்தக் காலத்திலேயும், நாளைக்குப் போய் K.R. Sagar Dam-ஐ யாரும் எடுத்துவிட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், இல்லை, நீங்கள் சொல்வது பொது நலனுக்கே உகந்தது அல்ல. காவிரி நலனுக்கே உகந்தது அல்ல. (குறுக்கீடு) முடியாது என்று சொல்வது, இதையெல்லாம் கர்நாடகம்தான் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளும், இந்த மாதிரி வார்த்தைகளை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-ல் முதலில் கொண்டுவரப்பட்ட அந்த வரைவுத் திட்டத்தைப் போல மீண்டும் ஒரு திட்டம் வருகின்ற வாய்ப்பு இருக்குமேயானால், திரு. துரைமுருகன் அவர்கள் அதை வேண்டாம் என்கிறாரா? அது நடைபெறாது என்கிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அது உங்களுக்கே தெரியும். அது ஐ.கே. குஜ்ரால் இருக்கும்போதே ஏற்றுக்கொண்டது. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** விடுங்கள் சார் நீங்கள். இரண்டாவது, மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறார்கள். ஏதோ அந்த வரைவுத் திட்டத்தை ஏற்காததால்தான் இவர்கள் மத்திய அரசிலேயிருந்து வெளியே வந்தார்கள் என்று (குறுக்கீடுகள்) இல்லை. தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இது திசை மாற்றக்கூடிய வேலை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள் (குறுக்கீடு) இது ரொம்ப திசை திருப்புவது. வேண்டாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் திசை மாறி, வேறு எங்கேயோ போகிறீர்கள். வேறு எங்கேயோ போகிறீர்கள். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சிறைத் துறை பற்றி...(குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** அந்த ஆணையம்தான்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முக்கியமான அறிவிப்புகளை நான் இந்த மாமன்றத்தில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் வாய்ப்புக் கொடுத்தேன். எல்லா விளக்கமும் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) எல்லா விளக்கமும் சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு சிறைகளில் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது, திசை மாறி வேறு கருத்திற்கு அல்லவா போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சப்ஜெக்டை விட்டு வேறு எங்கேயோ அல்லவா போகிறார்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை விட்டு எங்கேயோ அல்லவா போகிறீர்கள்? (குறுக்கீடு) இரண்டு நிமிடத்திலே சொல்லி விடுங்கள். (குறுக்கீடு) சொல்லிவிடுங்கள், துரைமுருகன், இதுதான் இறுதி வாய்ப்பு. இப்போதே சொல்லிவிட்டேன். பேசி முடித்து விடுங்கள். அமைச்சர் விளக்கம் சொல்ல வேண்டும்.

**திரு. துரைமுருகன்:** இறுதி வாய்ப்பு என்றால், நாளைக்கு நான் செத்துப் போய்விடுவேனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. துரைமுருகன்:** பிறகு என்ன சார் அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைவு என்பதும், இறுதி என்பதும் அவ்வப்போது உள்ள நிலைமைகளைப் பொறுத்தது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்த ஆணையத்தால் என்ன நன்மை என்று கேட்டுவிட்டு, துரோகம் என்றெல்லாம் சொன்னார்கள். நான் ஒன்றைக் கேட்கிறேன். ஆதியிலேயிருந்து தெரிந்து

சொல்கிறார்களா, தெரியாமல் சொல்கிறார்களா, தெரியாது. ஆதியிலேயிருந்து—கர்நாடக அரசு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அவர்கள் பல வகைகளிலே மறுத்துக்கொண்டே வந்தார்கள். தமிழ்நாட்டிற்கு மைசூர் சர்க்கார் போட்டது, இது கர்நாடக அரசைக் கட்டுப்படுத்தாது என்று சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆனால், அதையெல்லாம் மீறிக்கூடத்தான் அவர்களோடு வாதிட்டுக் கொண்டே வந்தோம். ஆனால் ஒன்றை— இந்தக் காவிரியினுடைய நீண்ட வரலாறு தெரிந்தவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஒத்துக்கொள்ளவே இல்லை. ஆனால், இந்த ஆணையத்திலே வந்த் பிறகு, அதிலும் அங்கே திரு. கிருஷ்ணா அவர்கள் முதலமைச்சராக வந்து உட்கார்ந்த பிறகுதான், முதன்முதலாக இந்த ஒப்பந்தத்தையே நாங்கள் ஒத்துக்கொள்கிறோம், இந்த ஆணையத்தை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று கர்நாடக அரசை ஒத்துக்கொள்ள வைத்ததே இதனுடைய மகத்தான சாதனைகளிலே ஒன்று. (குறுக்கீடுகள்) மூன்றாவது, மாண்புமிகு முதலமைச்சர் சொன்னார்கள். நாங்கள் அந்த ஆணையத்தில் take over பண்ணுகிற அந்த ஷரத்தை உள்ளடக்கி இருந்தோம் என்று. முதலமைச்சருக்கு அந்தத் திறமையும், guts-ம் இருக்குமானால், இந்த ஆணையத்தைத் தூக்கியெறிந்துவிட்டு நீங்கள் புது ஆணையத்தைக் கொண்டு வருவீர்களேயானால், நான் என்ன வேண்டாம் என்றா சொல்லப் போகிறேன்? எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆகையினாலே, இங்கே தவறாக, எந்தவிதமான ஆதாரத்தையும் சொல்லாமல், இதைத் துரோகம் என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் ஒன்றைக் கேட்கிறேன். இதே அவையிலே யார், யார் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். சிறப்புச் சொற்பொழிவு ஆற்றக்கூடிய வாய்ப்பு இல்லை இது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். அமைச்சர் சொன்னதற்கு விளக்கம் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். அந்த வாய்ப்பு முடிந்துவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் சொன்னதற்கு நீங்கள் என்ன விளக்கம் சொல்ல வேண்டுமோ, எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) இதில் எல்லாவற்றையும் பேசவும், இவ்வளவு நீண்ட விளக்கம் எல்லாம் கொடுக்கவும் வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் உரையை அமைச்சர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) அமைச்சர் உரையை முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைச்சர் உரையைத் தொடருவார்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, துரைமுருகன், நீங்கள் சொல்ல வேண்டிய விளக்கம் எல்லாம் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டு விட்டது. அமைச்சர் உரையை முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) முடித்ததற்குப் பிறகு ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முடிந்ததற்குப் பிறகு சந்தேகம் இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இதை அனுமதிக்க முடியாது. அமைச்சர் அவர்கள் பதிலுரையைத் தொடருங்கள். (குறுக்கீடுகள்) வேண்டாம் (குறுக்கீடுகள்) வேண்டாம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டேயிருந்தனர்.)

முற்பகல் 11-40

**திரு. துரைமுருகன்:** சபாநாயகர் அவர்களே, நீதி வழங்குங்கள். சபாநாயகர் அவர்களே, நீதி வழங்குங்கள். சபாநாயகர் அவர்களே, நீதி வழங்குங்கள்.

(மற்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் இதே கோஷத்தை எழுப்பிக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சர் அவர்கள் உரையை முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) உரையை முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சரி. ஒரு நிமிடத்தில் பதில் சொல்லி முடிக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அந்த விளக்கத்தையெல்லாம் வாங்குவதற்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) நேரம் ஆகிறது அல்லவா? ஏனென்றால், இன்னும் ஒரு மானியக் கோரிக்கை இருக்கிறது. இல்லை, இல்லை. அவ்வளவு விளக்கம் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்க முடியாது. குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லலாமே தவிர, நீங்கள் ஒரு சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற நான் வாய்ப்புக் கொடுக்க முடியாது. (குறுக்கீடு) சரி. இரண்டு

மணித்துளிகளில் முடியுங்கள். (குறுக்கீடு) துரைமுருகன், குற்றச்சாட்டுக்குரிய பதில் சொல்வதற்கு உங்களுக்கு வாய்ப்பு தாராளமாக வழங்கப்பட்டது. நீங்கள் அதை வைத்துக்கொண்டு (குறுக்கீடு) ஏற்கெனவே கொடுத்தேன். நீங்கள் ஒரு நீண்ட உரையை ஆற்றினீர்கள். (குறுக்கீடு) நீண்ட உரையை ஆற்றினீர்கள். நான்கூட நல்ல வசனம் என்று சொன்னேன். (குறுக்கீடு) அதற்காகக் கோபப்பட்டீர்கள். நீண்ட உரையையே நீங்கள் ஆற்றினீர்கள். (குறுக்கீடு) நிதியமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்ன கருத்தைத்தான் விரிவுபடுத்திச் சொன்னார். வேறு ஒன்றும் புதிதாகச் சொல்லவில்லை. ஆகவே, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள். துரைமுருகன், உட்காருங்கள். நிற்காதீர்கள், உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நம்முடைய பேச்சு என்பது தூங்கிக் கொண்டிப்பவர்களைக்கூட எழுப்பச் செய்யக்கூடிய பேச்சு. கர்நாடகம் தூங்கிக் கொண்டிருக்கவில்லை, விழிப்போடு இருக்கிறது, எச்சரிக்கையாக இருக்கிறது. நம்முடைய மாமன்றத்திலே நாம் விவாதிக்கிறபோது, நாம் ஏற்கெனவே கர்நாடக அரசாங்கத்திற்கு விட்டுக்கொடுத்ததாக முறையிடக்கூடிய நேரத்திலே, நம்முடைய பங்களிப்பைச் செய்யாமல், கர்நாடக அரசுக்குச் சாதகமாக நாம் செய்துவிட்டபடியான காரியங்களை எல்லாம் இந்த மாமன்றத்திலே நாம் பேசிக் கொண்டிருப்போம் என்று சொன்னால், அவர்கள் அதையே சாதகமாக எடுத்துக்கொள்வார்கள். ஆகவே இப்படி அவர்கள் சாதகமாக எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டுக்கு, நமக்குப் பாதிப்பு ஏற்படும். இப்போது மேட்டூரில் தண்ணீர் இல்லை. 40 அடி தண்ணீர்தான் இருக்கிறது. அதைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, நாங்கள் இல்லை, நீங்கள் இல்லை என்று சொல்லி, பேசிக் கொள்வது நம்முடைய குற்றச்சாட்டை—நான் யாரையும் குறையாகச் சொல்லவில்லை—ஏதோ நம்மிடத்திலே குறை இருக்கிறது, கர்நாடக அரசு தப்பித்துக் கொண்டிருக்கிறது என்ற அந்தப் பேச்சுக்கள் இந்த மாமன்றத்திலே இனி நிச்சயமாக வரக்கூடாது. நாங்கள் சொல்லியிருக்கிறோம். எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்லியிருக்கின்றன. இதில் தமிழ்நாட்டினுடைய ஒட்டுமொத்தக் குரலாக, எல்லோரையும் அரவணைத்துச் செல்லக்கூடிய மிகப் பெரிய பொறுப்பு நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. நேற்றுக்கூட மானியக் கோரிக்கையிலே நாங்கள் சொல்லியிருக்கிறோம். எங்களுடைய உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒற்றுமையாக



இருந்து, அனைத்துக் கட்சியினரையும் ஒரே குரலின்கீழ் அழைத்துச் செல்ல வேண்டும், அப்படிப்பட்ட பொறுப்பைத் தாங்கி இருக்கிறீர்கள் என்று எல்லாம் சொல்லியிருக்கிறோம். அதை விட்டுவிட்டு, இப்படிப்பட்ட விவாதம் தொடரக்கூடாது, முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஆக்கபூர்வமான காரியங்களுக்கு வழிவகுக்க வேண்டும் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியினுடைய கோரிக்கையையும், எஸ்.ஆர்.பி.-யினுடைய கோரிக்கையையும் ஏற்று, உட்காருங்கள். அமைச்சர் பதில் உரையைச் சொல்லட்டும். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். பேசி முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன். பதில் உரையை முடிக்கட்டும். வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறை பற்றிய சில அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாநிலத்தில் உள்ள பல்வேறு சிறைகளில் 13,359 விசாரணை மற்றும் கா்வல் சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் உரையை முடித்ததற்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். துரைமுருகன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இவர்களை, கா[illegible] நீட்டிப்பு மற்றும் விசாரணையின் பொருட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதில் பெருமளவில் காவல் துறைப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுவதாலும், சிறைவாசிகளை காவல் துறை வாகனங்கள் மூலம் கொண்டு செல்வதாலும் அரசுக்குப் பெருத்த அளவில் செலவினம் ஏற்படுகிறது. முதற்கட்டமாக விசாரணை சிறைவாசிகளை நேரடியாக நீதிமன்றங்களிலே ஆஜர் செய்யாமலேயே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், தயவுசெய்து உட்காருங்கள். எப்போதுமே ஒரு பதில் உரையை அமைச்சர் முடித்ததற்குப் பிறகுதான் வாய்ப்புத் தருவது வழக்கம். நீங்கள் கேட்டுக் கொண்டீர்கள் என்பதற்காகத்தான் இடையில் இவ்வளவு வாய்ப்புத் தரப்பட்டது. ஆகவே கொஞ்சம் மதித்து, பேரவைத் தலைவரையும் மதித்து, நம்பி, உட்காருங்கள். இறுதியாக ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்களது விசாரணை மற்றும் விசாரணைக் கால காவல் நீட்டிப்புச் செய்யும் நோக்கத்துடனும், சென்னை மற்றும் புழல் மத்திய சிறைகளையும்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சென்னை நகரிலுள்ள 4 நீதிமன்ற வளாகங்களையும் இணைத்துத் தொலைக்காட்சி மூலம் நீதி வழங்கும் திட்டத்தினை (குறுக்கீடு) 72 இலட்சம் ரூபாய் செலவில் அறிமுகப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது கட்டமாக, மொத்தமுள்ள 348 நீதிமன்றங்களில்... (குறுக்கீடு)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார். கொஞ்சம் தயவுசெய்து உட்காருங்கள். பேசி முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இரண்டாவது கட்டமாக, மொத்தமுள்ள 348 நீதிமன்றங்களில் மேற்கண்ட முறையினை, 70 இடங்களில் அமைந்துள்ள மாவட்ட மற்றும் வட்டாரத் தலைமையிடங்களிலுள்ள 248 நீதிமன்றங்களுக்கும் மொத்தம் 8 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கம் செய்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சிறைகளில் இட நெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு, ஸ்ரீவைகுண்டம் கிளைச் சிறையை மாவட்டச் சிறையாக உயர்த்திட, ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கோவை மத்திய சிறையிலுள்ள வால்மேடு பகுதியில் அதிக இன்னல்கள் தரக்கூடிய சிறைவாசிகள் அடைக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும், சந்தேகத்திற்குரியவர்களின் நடவடிக்கைகளைச் சிறைக்குள்ளிருந்து கூர்ந்து கவனிக்கவும்...

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டேயிருந்தனர்.)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். நான் அவையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எப்போதுமே, அமைச்சர் பதிலுரையை முடித்ததற்குப் பிறகுதான் சந்தேகம் கேட்பதற்கு அழைப்பது வழக்கம்; அனுமதி கொடுப்பது வழக்கம். இந்தப் பிரச்சினையை உங்களுக்கு மிகவும் உணர்ச்சிபூர்வமான பிரச்சினையாக நீங்கள் கருதிய காரணத்தினால், நீங்கள் எழுந்து—பல முறை எழுந்து நீங்கள்—கேள்வி கேட்பதற்கும், பதில் சொல்வதற்கும், நீங்கள் குற்றச்சாட்டுக்களைச் சொல்வதற்கும், மறுப்பதற்கும் உரிய வாய்ப்புகளெல்லாம் கொடுக்கப்பட்டன. இந்தப் பிரச்சினைக்கு இத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிடுங்கள் என்றும், மாநிலத்தினுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய பிரச்சினை என்றும் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். மணி அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். பழனிசாமி அவர்கள் ஆத்திரத்திலே வெளிநடப்பே செய்துவிட்டார்கள். ஆகவே, தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, அமைச்சர் அவர்கள் எல்லாவற்றையும்—எல்லாவற்றுக்கும் பதிலுரையை— முடித்ததற்குப் பிறகு உங்களுக்கு ஏதாவது ஐயமிருந்தால் கேட்பதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். அதுவரைக்கும் நின்றுகொண்டே இருப்பது என்பதும், இத்தனை உறுப்பினர்கள் நிற்பது என்பதும், அவை மரபுக்கு உகந்ததல்ல; கண்ணியத்திற்கு உகந்ததல்ல. நான் அவையை நடத்திச் செல்ல வேண்டும். தயவுசெய்து—நீங்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தால் உங்களையெல்லாம் வெளியேற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) ஒரு மூத்த உறுப்பினர், பல ஆண்டு காலம் அமைச்சராக இருந்த பெருமகன், இந்த அவையினுடைய விதியை மதிக்காமல், மரபையும் மதிக்காமல் இப்படி நின்றுகொண்டிருப்பது பொருத்தமல்ல. அவை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக வேதனையோடு உங்களை நான் வெளியேற்றக் கட்டளையிடுகிறேன். காவலர்கள் வெளியேற்ற வேண்டுமென்று அவர்களுக்கு ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. துரைமுருகன், போய் வாருங்கள்.

(பேரவைக் காவலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த துணைத் தலைவர் மற்றும் சில உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றினர்.)

**திரு. கு. பிச்சாண்டி:** எங்களைச் சொல்லவில்லை, துணைத் தலைவரை மட்டும்தான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நின்று கொண்டிருக்கிற எல்லா உறுப்பினர்களையும்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) இதிலே ஒரு டெக்னிக்கல் பாயின்டா உங்களுக்கு? (குறுக்கீடு) சென்று வருக.

(பின்னர், பேரவைக் காவலர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களையும் அவையிலிருந்து வெளியேற்றினர்.)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலுரையைத் தொடரலாம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கோவை மத்திய சிறையிலுள்ள வால்மேடு பகுதியில் அதிக இன்னல் தரக்கூடிய சிறைவாசிகள் அடைக்கப்பட்டுள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும், சந்தேகத்திற்குரியவர்களின் நடவடிக்கைகளைச் சிறைக்குள்ளிருந்து கூர்ந்து கவனிக்கவும், 14 இலட்சம் ரூபாய் செலவில் 3 கண்காணிப்புக் கோபுரங்களை நிரந்தரமாகக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண் சிறைவாசிகளை நிர்வகிக்கும் பணியினைச் செம்மைப்படுத்திடவும், அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் தடுத்திடவும், இம்மாநிலத்திலுள்ள 10 கிளைச் சிறைகளை, பெண் பணியாளர்களாலேயே முழுவதுமாக நிர்வகிக்கப்படும் பெண் கிளைச் சிறைகளாக மாற்றியமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அறிவிப்புகள்:—
தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர் ஆகிய அலுவலகங்களுடன் மின்னணு முறையில் இணைக்கும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும். முதல் கட்டமாக, தலைமைச் செயலகம், 'டாஸ்மாக்' நிறுவனத்துடன் தொடர் அமைப்பு முறையில் இணைக்கப்படுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11 இலட்சம் ரூபாய் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் செயல்பாட்டினைப் படிப்படியாக நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 40 கிடங்குகளில், முதற்படியாக 10 கிடங்குகளில் மதுபானப் பொருள் இருப்பு நிர்வாகம், சரக்கு ஏற்றுதல் மற்றும் இறக்குதல் முதலியன நவீனப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும். இதற்காக 46 இலட்சம் ரூபாயினை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரும்பத்தகாத கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஏழை மக்களுக்கு, அவர்கள் திருந்தி நல்ல முறையில் வாழ மறுவாழ்வு அளிக்கும் முக்கிய நோக்கத்துடன் மறுவாழ்வு நிதி ஒன்று ஏற்படுத்தப்படும். இந்த நிதிக்கு நடப்பு ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் 50 இலட்சம் ரூபாய் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னார்வப் பெண்கள் நல அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் பிற தொண்டு அமைப்புகள் மூலமாக மக்களைக் குடிப்பழக்கக் கேடுகளிலிருந்து மீட்கவும், குறிப்பாக, கள்ளச்சாராயத்திலிருந்து மீட்கவும், கள்ளச்சாராயம் அருந்துவதால் ஏற்படும் கேடுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் பெரும் இயக்கம் ஒன்று தொடங்கப்படும். இதற்காக, மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு ஆண்டிற்கு 10 இலட்சம் ரூபாய் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையினுடைய அறிவிப்புகள்:—

மாநிலச் சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகளை, மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்திடவும் மற்றும் அவற்றிலுள்ள பழுதடைந்த, வலுவிழந்த பாலங்களைத் திரும்பக் கட்டிடவும் ஒரு சீரிய திட்ட அறிக்கை தயார் செய்து, தோராயமாக, சுமார் 5,000 கோடி ரூபாய் நிதியாதாரத்தை உருவாக்கி மற்றும் திட்டத்தின் செயல் வடிவம், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறை சிறப்புச் செயலரின் தலைமையில் ஒரு தனி அமைப்பை ஏற்படுத்தி, செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், இத்திட்டம், 'மாண்புமிகு முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டம்' என்ற பெயரில் செயல்படுத்தப்படும்.

500 முதல் 1000 வரை மக்கள் தொகையுள்ள கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி அளித்திடும் திட்டத்தை மாண்புமிகு அம்மா

அவர்களின் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. அனைத்து ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படும். இத்திட்டத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2002-2003 நிதிநிலை அறிக்கையில் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிட உப வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த உப வரியின் மூலம் கிடைக்கும் 100 கோடி ரூபாய் நிதியினை நிர்வகித்து, கண்காணித்து, உபயோகித்திட சாலை நிதி வாரியம்—Road Fund Board ஒன்றை ஏற்படுத்தி, சாலை மேம்பாட்டிற்குப் பயன்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பூர் வட்டச் சாலை இரண்டாம் கட்ட மேம்பாட்டுப் பணியினை, கட்டி, நிர்வகித்து மாற்றிடும் B.O.T. முறையில் தனியார் முதலீட்டுடன் செயல்படுத்திடும் இத்திட்டத்தை சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமும், அண்ணா பல்கலைக் கழகமும் ஒருங்கிணைந்து நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஒன்றினை நிறுவிட மாண்புமிகு அம்மா அவர்கள் 31 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை அடையார், மத்திய கைலாஷ் முதல் லாட்டிஸ் பாலம் வரை—லாட்டிஸ் பாலச் சந்திப்பு வரை உள்ள 3 கிலோ மீட்டர் நீளச் சாலையை— 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 வழி சிமெண்ட் கான்கிரீட் சாலையாக, தனியார் பங்கேற்பு மூலம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கி உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைக் கடற்கரை; சென்னை மெரினா கடற்கரையில், கலங்கரை விளக்கத்திற்கு அருகில் தனியார் ஈடுபாட்டுடன் கடல்சார் அருங்காட்சியகம் ஒன்று, 15 கோடி ரூபாய் மதிப்பில் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



தொழிற்சாலைகள் பெருகுவதற்கு தொழிற்சாலைப் பகுதிகளுக்கு அணுகு சாலைகள் அமைப்பது அவசியமாகிறது. இதனைக் கருத்திற் கொண்டு, திருமுல்லைவாயில் மற்றும் இரண்டு மகளிர் தொழில் முனைவோர் மையங்களுக்கு நெடுஞ்சாலைத் துறையால் சாலை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில், பெரிய கும்பேஸ்வரம் மற்றும் சாத்தம்பாக்கம் ஆகிய இரண்டு கிராமங்களை இணைத்திட, கும்பேஸ்வரம் சாலையில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில் மொரப்பூர்-மாரண்டஹள்ளி சாலையில் சனத்குமார் நதியின் குறுக்கே பாலம் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின்கீழ் அறிவிப்புகள்:—

பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பின்கீழ் தமிழகமெங்கும், சென்னை மற்றும் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள அரசுக் கட்டடங்களின் சிறப்புப் பராமரிப்புப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஹட்கோ நிதி உதவியுடன் 110 கோடி ரூபாய் அளவில் பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(1) நீர்வள ஆதார அமைப்பு:—

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தமிழகத்தில் விவசாயத்தை மேம்படுத்தும் நோக்குடன் 10 சிறு பாசனத் திட்டப் பணிகளை நபார்டு வங்கி உதவியுடன் நடைமுறைப்படுத்திட செயல் திட்டங்களை மேற்கொண்டு உள்ளது. அந்த அடிப்படையில்,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2002 ஏப்ரல் 30

(1) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், வைப்பாறு நதியின் குறுக்கே இருக்கன்குடி என்னுமிடத்தில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணியைத் தொடர்ந்து விரைவில் முடித்திடும் வகையில் 49 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் நிலையூரிலிருந்து கம்பிக்குடி, வலையங்குளம் தொடர் ஏரி, குளங்களுக்கு நீர் வழங்க புதிய கால்வாய் அமைக்கும் பணியைத் தொடர்ந்து விரைவில் முடித்திட 18 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத்தோப்பு கிராமத்தில், கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணியைத் தொடர்ந்து விரைவில் முடித்திட 26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தூத்துக்குடி மாவட்டம், திம்மராஜபுரம் கிராமத்தில் 23 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குளம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(5) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், பேய்க்குளம் கிராமத்தில் உப்போடையின் குறுக்கே 59 இலட்சம் ரூபாய் செலவில் புதிய குளம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(6) திருவைகுண்டம் வட்டத்தில் ஆளந்தா கிராமத்தில் 24 இலட்சம் ரூபாய் செலவில், புதிய குளம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(7) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தில் பெரிய புள்ளம்பட்டி கிராமத்தில் 69 இலட்சம் ரூபாய் செலவில், புதிய குளம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(8) சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திலுள்ள திருப்பத்தூர் பெரிய கண்மாய் வெளிநீர்ப் போக்கியின் குறுக்கே 15 இலட்சம் ரூபாய் செலவில் அணை கட்டி, மண்ணய ஏரிக்கு நீர் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



2002 ஏப்ரல் 30] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

(9) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டத்திலுள்ள நாட்டாறு குறுக்கே 51 இலட்சம் ரூபாய் செலவில் அணை கட்டி, கண்ணன்குண்டு ஏரிக்கு நீர் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(10) பொன்னேரி வட்டம், லட்சுமிபுரம் கிராமம், ஆரணியாறு குறுக்கே 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அணையைத் திரும்பக் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேற்கண்ட 10 திட்டங்களும் 101 கோடி ரூபாய் செலவில் 13,300 ஹெக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி பெறும் வகையில் மேற்கொள்ளப்பட உள்ளன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

***(2) தமிழ்நாட்டில் ஏரி, குளங்கள், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்து, மேம்படுத்துதல்:—***

நமது மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஏரி, குளங்களைச் சீர்படுத்தி, நீர்வள ஆதாரத்தைப் பெருக்கி, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயனளிக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு சிறப்பு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்துள்ளார்கள். அந்த அடிப்படையில், முதல் கட்டமாக, பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரி, குளங்களைச் சீரமைத்து, உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், 482 ஏரி, குளங்களை 54 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(3) கடல் அரிப்புத் தடுப்புப் பணிகள்:—*

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் பகுதிகளில் கடல் அருகில் வாழும் மக்கள் கடல் அரிப்பால் தொடர்ந்து பாதிக்கப்படுகிறார்கள். இதனால், கடல் அருகே பல கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் மற்றும் கட்டடங்கள் மூழ்குவது மட்டுமின்றி, மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். கடந்த காலத்தில், இப்பகுதியில் கடல் அரிப்புத் துயரத்திலிருந்து மக்களைக் காக்க, நிலையான, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, மக்களின் துயர் தீர்க்கப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் பல மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கடலரிப்பைத் தடுத்திட, 58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

**(4) வடசென்னைப் பகுதியில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள்:**

இதைப்போலவே, வடசென்னைப் பகுதியில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் கடல் அரிப்பினால், பல கோடி மதிப்புள்ள நிலம் மற்றும் கட்டடங்கள் கடலில் மூழ்கும் நிலையையும், அதனால் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படும் நிலையையும் சரி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள். வடசென்னையில், கடல் அரிப்புக்கு உள்ளாகும் 11.02 கிலோ மீட்டர் நீளத்தில் 4.4 கிலோ மீட்டருக்குக் கருங்கல் சுவர் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. 2.03 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கருங்கல் சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. சுமார் 2.21 கிலோ மீட்டர் தூரத்திற்கு, எண்ணூர் துரித நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதியைப் பாதுகாக்க, கருங்கல் சுவர் அமைக்க, தேசிய நெடுஞ்சாலை நிறுவனம் பணிகளை மேற்கொள்ள உள்ளது. மீதமுள்ள 2.38 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கடல் அரிப்பைத் தடுக்க, கருங்கல் சுவர் அமைக்கும் பணியை 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(5) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகள்:**

திருச்சி மாநகரத்தில், வெள்ளப் பெருக்கத்தினால் ஏற்படும் பாதிப்பினைத் துடைத்திட, கடந்த கால அரசு 1999-ல் 50 கோடி ரூபாய் மதிப்பில் அறிவித்த திட்டம் ஏட்டளவுத் திட்டமாகவே இருந்துவிட்டது. அரசாணை பிறப்பித்தும், நிதி ஒதுக்க எந்த



நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்கு ஏற்ற முக்கியத்துவம் கொடுத்து, திருச்சி மாநகரத்தில் ஓடும் குடமுருட்டி ஆறு மற்றும் காவிரி நதிகளிலுள்ள மண்மேடுகளை நீக்குதல், ஆரியாறு, கோரையாறு, கொடிங்கல் வடிகால் மற்றும் உய்யக்கொண்டான் ஆறு ஆகியவற்றை ஆழப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகளைச் செயல்படுத்த 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டத்தில், பூம்புகார் தொகுதியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரெட்டியூர் என்னும் இடத்தில் ஒரு தடுப்பணை கட்ட ஆய்வுப் பணிகள் உடனடியாக மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(6) கோவில் மலையாறு திட்டம்:**

இங்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள், என்னுடைய தொகுதியின் பெயர் அணைக்கட்டு என்றும், அணைக்கட்டு ஒன்றுகூட இல்லை என்றும் ஒரு குறையை இங்கு எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், அவருடைய அந்தத் தொகுதியில் அணைக்கட்டு இல்லை என்ற அந்த நிலையினை இன்றைய தினம் போக்கி, பூர்த்தி செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேலூர் மாவட்டத்தில், அணைக்கட்டு தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான, கோவில் மலையாற்றின் குறுக்கே, மேலரசம்பட்டு கிராமத்தின் அருகே 27 கோடி ரூபாய் செலவில் ஒரு அணை கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 27 கோடி ரூபாய் அவருக்குக் கிடைத்துவிட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இங்கு மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய 8 உறுப்பினர்கள், அவர்களுடைய கருத்துகள், கேள்விகளுக்கு நான் பதில்களை இங்கு கொண்டு வந்திருந்தாலும், அதனை இங்கு சொல்ல முடியாத...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழாவதாக ஒரு முக்கியமான அறிவிப்பு இருக்கிறது. பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு—அமைச்சர் பதில் சொல்லியாயிற்றா? சரி. (குறுக்கீடு) முதலிலேயே சொல்லிவிட்டீர்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பல சீரிய கருத்துகளைச் சொல்லியிருக்கிறீர்கள். அவற்றை அரசு ஆராய்ந்து, பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொண்டுவந்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், திரும்பப் பெற்றுக்கொண்டு, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை மற்றும் உள் துறை—சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) என்ன? வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறையிலே உங்களிடம் அனுமதியைப் பெற்றதற்கிணங்க இதைத் தெரிவிக்கிறேன். இந்தப் பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே விரிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. கேரள அரசு 7 டிஎம்சி. தண்ணீர் இருப்பதாகச் சொல்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்தினால் ஒரு வேளை அது கிடைக்கக்கூடும் என்பதுபோல ஒரு தோற்றம் இதிலே தெரிகின்றது. ஆனால் எனக்கு கேரள அரசு எழுதிய கடிதத்தை நான் உங்களிடத்திலே காட்டியிருக்கிறேன். அமைச்சர் அவர்களிடத்திலேயும் கொடுத்திருக்கிறேன். இப்போதும் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கடிதத்திலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மோயார் என்பது பவானி நதியினுடைய உப நதி. பவானி என்பது காவிரி நதியினுடைய உப நதி. எனவே, காவிரி நதி நீர்த் தாவா தீருகின்ற வரையில் பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று சொல்லப்பட்டிருப்பது மட்டுமல்லாமல், பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தை, மண் நீராக அளிக்க வாய்ப்பில்லை என்றாலும், உண் நீராக அளிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் எழுத்து மூலமாக ஒரு வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள். எனவே, அதை அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்துகொள்வதோடு, இந்தத் திட்டம் இப்படியே நிறைவேறும் என்று சொன்னால், இது ஒரு நீண்ட காலக் கோரிக்கை, வீணாகப் போய்விடும். அது என்ன கோரிக்கை என்று சொன்னால், பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தின் மூலமாக, வறண்ட பிரதேசங்களான அவினாசி, பல்லடம், திருப்பூர், மேட்டுப்பாளையம், கோவை போன்ற தாலுக்காக்கள் நீர்ப்பாசன வசதி பெற வேண்டும் என்பதுதான். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பார்த்தால், பாண்டியாறு—புன்னம்புழாத் தண்ணீரை மோயாரிலே இணைத்துவிட்டோம் என்று சொன்னால், மோயார் நேரடியாக பவானிசாகருக்குப் போய்விடும். பவானிசாகரில் இருக்கிற தண்ணீர் ஈரோடுக்குத்தான் போகுமேயொழிய, கோவைக்கு வராது. எனவே, இது மேல் பவானித் திட்டமாகக் கருதி, மேல் பவானியிலேயிருந்து 7 டிஎம்சி. தண்ணீரை, பல்லடம், அவினாசி தாலுக்காக்களுக்குக் கொடுப்பதாக இருந்தால்தான் அது இந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அவ்வாறு ஒரு திட்டத்தைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சுந்தரம்? (குறுக்கீடு) ரொம்ப நீண்ட நேரமாகக் கேட்கிறார்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, நீண்ட நேரமாக அதாவது அவையிலே தி.மு.க. உறுப்பினர்கள் இருந்தபோது வாய்ப்புக் கொடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும் பரவாயில்லை. அதை நான் ஒரு கிளாரிபிகேஷனாக உங்கள் மூலமாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், காவிரி நீர்ப் பிரச்சினையில் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு பேரும் ஒரே கருத்தாக, ஒன்றாகச் செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. தளவாய் சுந்தரம் அவர்களுடைய தலைமையிலே அனைத்துக் கட்சித் தலைவர்களையும் டெல்லிக்கு அனுப்பி, பாரதப் பிரதமரைச் சந்தித்து, இந்தக் காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையை எடுத்தார்கள். அப்படி அனைத்துக் கட்சிகள் சார்பாகத் தலைவர்கள் எல்லாம் அங்கே டெல்லிக்குச் சென்றார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அனுப்பப்பட்டவர் திருவாரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அசோகன் அவர்கள்.

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2002 ஏப்ரல் 30

இப்போது துரைமுருகன் இவ்வளவு ஆவேசமாகப் பேசுகின்றார், வீரவசனம் பசுகின்றார், வீராப்பாகப் பேசுகின்றார். உண்மையிலேயே தமிழக மக்கள்மீது அக்கறை இருந்திருக்குமேயானால், அவர்களுடைய கட்சியினுடைய தலைமை துரைமுருகனை அனுப்பியிருக்கலாம் அல்லது பேராசிரியர் அவர்களை அனுப்பியிருக்கலாம். இந்தக் கூட்டத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சுந்தரம், அவர்கள் எல்லாம் வரட்டும். அப்புறம் பேசிக்கொள்ளலாம். (சிரிப்பு) திரு. ஐ. கணேசன்.

***திரு. பி.ஆர். சுந்தரம்:** இதிலிருந்து மாண்புமிகு அம்மா அவர்கள் உண்மையிலே எவ்வளவு அக்கறையோடு இருந்தார்கள் என்பது தெரிகிறது.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலையைப் பற்றிப் பேசும்போது பல்வேறு பாலங்களைப் பற்றிப் பேசினார்கள். எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி பகுதியிலே இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று இந்த அவையிலே கிட்டத்தட்ட ஆறு ஆண்டு காலம் போராடி, சென்ற முறை முன்னாள் அரசு, அதற்கு எப்படியும் வரக்கூடிய காலங்களிலே, நிதியாண்டுகளிலே அது கட்டிக் கொடுக்கப்படும் என்று இந்த அவையிலே உறுதி அளித்திருந்தது. அது சென்ற அரசு என்றுகூட விட்டுவிடலாம். ஆனால், ஒரு நியாயத்தின் அடிபபடையிலே, தர்மத்தின் அடிப்படையிலே, நீதியின் அடிப்படையிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், நானும் அந்த மகுடஞ்சாவடி பாலத்திலே ரொம்ப அவஸ்தைப்பட்டவன். (சிரிப்பு) அது தேவையான ஒன்று.

**திரு. ஐ. கணேசன்:** உங்களுக்கு நியாயமாகத் தெரியும். இங்கே இருக்கிற அமைச்சர்களில் பாதிப் பேருக்கு மேல் தெரியும். 1,28,000 முறை—1 ஆண்டுக்கு 1,28,000 முறை அந்த இரயில்வே கேட்டை மூடித் திறக்கிறார்கள். இதனால், பல்வேறு பொதுமக்கள், பல்வேறு தாய்மார்கள், பிரசவ வேதனையிலே துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நியாயமாக நடக்கக்கூடிய அரசு, தமிழகத்திலே 1,28,000 முறை சாத்தக்கூடிய அந்த இரயில்வே மேம்பாலத்தைத்தான் முதலிலே அறிவித்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு ஆவேசம் வேண்டாம்.



2002 ஏப்ரல் 30] பிற்பகல் 12-10

**திரு. ஐ. கணேசன்:** இது துரோகம் அல்லவா? எதிர்க்கட்சிக்கு இழைக்கப்படும் அநீதி இல்லையா? நியாயமா? நீதியா? 1 இலட்சம் முறை அடைத்தாலே, இந்தியாவிலே மேம்பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லக்கூடிய பாரத அரசும், தமிழக அரசும், 1,28,000 முறை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பேசுவது கணேசனா. சிவாஜி கணேசனா என்றே சந்தேகமாக இருக்கிறது. (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** திசை திருப்ப வேண்டாம், தலைவரே. திசை திருப்ப வேண்டாம். நான் மாற மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஐ. கணேசன்:** ஆகையினாலே, முறையற்ற இந்த அறிவிப்பு என்று நான் சொல்லவில்லை. ஏன் விடுபட்டது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் ரொம்பக் கனிவாகக் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அரசு அதிகாரிகள் வேண்டுமென்றே எங்களுடைய பகுதியைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்பதைத்தான் நான் ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்கிறேன். உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எனக்கு நீதி வழங்கப்படுமா என்பதைத் தயவுசெய்து இந்த அவையிலே நீங்கள் அமைச்சர் மூலமாக அறிவிக்க வேண்டும். நியாயத்தின் அடிப்படையிலே கேட்கிறேன் என்பதை மட்டும் சொல்லி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏதாவது விளக்கம் இருந்தால் அமைச்சர் சொல்லவும். நானும்கூட அந்தக் கோரிக்கையைப் பரிந்துரை செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே உரிமைக் குரல் எழுப்பினார்கள். அவர்கள் எழுப்பிய உரிமைக் குரலின் அடிபபடையிலே, மாண்புமிகு அம்மாவின் அரசில் நிதிநிலைக்கு ஏற்ப ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



225162

**திரு. ஐ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய, என்னுடைய நியாயமான கோரிக்கையை, இந்த அரசு நியாயத்தைப் புறக்கணிக்கக்கூடிய வகையிலே, 'நிதிநிலைக்கு ஏற்ப' என்று சொல்லி அதை ஒதுக்கிவிடுவதாக...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில், முன்னுரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு.கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், பாலங்கள் சம்பந்தமாக, 12 பாலங்களுக்கு அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் ஆவேசத்தோடு கிளப்பிய அதே பிரச்சினைதான். இது நடைமுறையில் இருக்கிற விஷயம். ஏன் இப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தனித் தனிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. ஒன்றே ஒன்றுதான். சொல்லி முடித்துவிடுகிறேன். என்ன என்று கேட்டால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனித் தனிக் கோரிக்கைகளை தயவுசெய்து எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** தனிக் கோரிக்கை அல்ல. ஏற்றுக் கொள்ளப்பட்ட—அதாவது, நெடுஞ்சாலைத் துறையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட—இரண்டு திட்டப் பணிகள்; எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. அதை அமைச்சரிடம் தனியாகக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், பழனிசாமி.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 37 பாலங்களுக்கு, அதற்குண்டான திட்ட மதிப்பீடான 517 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு, இதனுடைய பணிகள் நின்று





கொண்டிருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், இதில் எந்தப் பாலத்தை முன்னுரிமையில் எடுக்க வேண்டும் என்று இல்லை. அதில் 12 பாலப் பணிகள்; அனைத்துப் பாலப் பணிகளும் கூடிய விரைவில் எடுப்பதற்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு கூடிய விரைவில் ஒப்பந்தம் கோரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் சொன்ன மகுடஞ்சாவடி மேம்பாலமும், திட்டம் தீட்டப்பட்டு, திட்ட மதிப்பீடு தயாரிக்கின்ற பணியில் இருக்கின்றது. கூடிய விரைவில் அந்தப் பாலப் பணிக்கும் ஒப்பந்தம் கோரப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஐ. கணேசன்:** அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு கருணாகரன் அவர்கள் கோரிய கோவை தெற்கு, கோயம்புத்தூர்—போத்தனூர் இரயில் நிலையங்களுக்கிடையில் வாலாங்குளம் புறவழிச் சாலை மற்றும் இருப்புப் பாதைக் கடவு; அதுவும் திட்ட மதிப்பீடு தயார் செய்கின்ற நிலையில் இருக்கிறது. அந்தப் பணியும் கூடிய விரைவில் முடிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. தனித் தனிக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் எழுதிக் கொடுத்துவிடுங்கள். மறுபடியும் ஒரு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையா? (குறுக்கீடுகள்) இத்தனை பேர் கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும்? பழனிசாமி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எழுத்துபூர்வமாகவும் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு மானியக் கோரிக்கை வேறு இருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டு வந்திருக்கிறேன். திருத்துறைப்பூண்டி தொகுதியிலே 6 இடங்களிலே பாலங்கள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. போக்குவரத்தும்

தடைப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பிலே வரவில்லை. இந்த ஆண்டு செய்யப்பட வேண்டும். ஏனென்றால், அவை துண்டிக்கப்பட்டிருக்கின்றன. அறிவிப்பிலே எதுவுமே இல்லை. கொள்கைக் குறிப்பிலேயும் வரவில்லை. பெரிய அளவில் அதனால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. 3 கிலோ மீட்டர் போகிறவர்கள் இன்றைக்கு 13, 14 கிலோ மீட்டர் சுற்றி வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) இத்தனை பேரை அனுமதிக்க முடியாது. மறுபடியும் இன்னொரு மானியக் கோரிக்கை நடத்த வேண்டும். (குறுக்கீடுகள்) அடுத்த மானியக் கோரிக்கை வேறு இருக்கிறது. (குறுக்கீடுகள்) இது சரியாக வராது. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகக் கேட்டு முடிவு செய்துகொள்ளலாம். எல்லோரும் உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) நேரில்தானே உட்கார்ந்திருக்கிறார்? கேட்டுக்கொள்ளுங்கள். இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திருமபப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.





**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை **எண் 38-ன்கீழ்** வருவாய்க் கணக்கில் ரூ. 514,52,25,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 389,93,27,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு



மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(ஆ) கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கை எண் 20-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 428,05,36,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 719,08,29,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(இ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. ப்பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை** மானியக் கோரிக்கை **எண் 36-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.** 25,44,82,000-க்கு மேற்படாத **தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்**" என்னும் மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 30

பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(ஈ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம் ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.



2002 ஏப்ரல் 30]

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை எண் 34-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 21,93,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. **(ஆம்)**

மறுப்போர் 'இல்லை' என்க. **(இல்லை)**

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

**(உ) கோரிக்கை எண் 23—உள் துறை—சிறைச்சாலைகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 23—உள் துறை—சிறைச் சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"உள் துறை—சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கை எண் 23-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 59,27,51,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 3,35,34,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 12-20

**(ஊ) கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி மானியக் கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை எண் 27-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 50,01,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 737, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மேற்கு வங்க அரசு சென்னையில் வைத்துள்ளதுபோலத் தங்கும் விடுதிகளை, தமிழக அரசு புதுடில்லி, சிம்லா, ஆக்ரா ஆகிய இடங்களில் ஏற்படுத்தி, தகவல் மையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7391, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4418, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. என். நன்மாறன்] [2002 ஏப்ரல் 30

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6576, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 26,45,96,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000/-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3925, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4083, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



2002 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1357, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8065, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1622, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெ[illegible]னத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1961, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5043, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7318, திரு. க. முருகவேல் ராஜன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5630, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3618, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாடு அரசின் செய்திகளை அரசு அலுவலகங்களுக்கும்', மக்கள் பிரதிநிதிகளுக்கும் வழங்கிட "தமிழ்நாடு அரசு செய்தி" என்னும்



புதிய தினசரி பத்திரிகையை அரசே ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 838, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1876, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7118, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 30

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7011 டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7786, திரு. ஜெக. வீரபாண்டியன் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3778, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6268, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேச பக்தி, நல்லொழுக்கம், மனித நேயம் ஆகியவற்றைத் தமிழக செய்தித் துறையின் மூலம் படம் எடுத்துச் செய்திப் படமாகத் திரையரங்குகளில் திரையிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5222, திரு. ப. அரசன்.



2002 ஏப்ரல் 30]

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வருவாய்க் கோட்ட அளவிலான பத்திரிகை நிருபர்களுக்கும் இலவச பேருந்து அனுமதிச் சீட்டுகள் வழங்குவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2325, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6677, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கவியரசு மற்றும் உமறுப் புலவருக்கு நினைவு மண்டபம் எட்டயபுரத்தில் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 50,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை எண் 27 தலைப்பின்கீழ் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென வேண்டுகிறேன். இந்த மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான அரிய கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, அவர்களுடைய கேள்விகளுக்கு இறுதியில் என்னுடைய பதிலையும், அரசு எடுக்கின்ற முடிவுகளையும் தெரிவிக்கின்றேன் என்று கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

பிற்பகல் 12-25

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியம், மிக முக்கியமான ஒரு மானியம். நம்முடைய ஜனநாயக நாட்டில் சட்டமன்றம், பாராளுமன்றம், நீதிமன்றங்கள் ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இந்தச் செய்திப் பத்திரிகைகள்தான் ஜனநாயகத்தை வளர்க்கக்கூடிய மிகச் சிறப்பான துறை என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தத் துறையைப் பற்றி இங்கே விளக்கமாகவும், விரிவாகவும் பேசுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும், நம்முடைய செய்திப் பத்திரிகைகள் இன்றைய அளவில் நாள்தோறும் வளர்ந்துகொண்டிருக்கிற நிலையில், அந்தச் செய்திப் பத்திரிகைகளில் வேலை செய்கின்றவர்களுடைய கோரிக்கைகளுக்காக இந்தச் சட்டமன்றத்திலேயே பலரும் பேசியிருக்கின்றார்கள். நாங்களும்கூட அந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசியிருக்கிறோம். அவற்றில் சில முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு, பழைய அரசாங்கம் 20 லட்சம் ரூபாய் மானியத்தோடு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து 69 இலட்சத்து

---

@ 299 முதல் 333 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



25 ஆயிரம் ரூபாய் இரண்டு தவணைகளில் செலுத்தி, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் அரசு வழங்கிய ரூ. 69,25,000-ஐ இரண்டு தவணைகளில் பத்திரிகையாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் வாரியத்திற்குச் செலுத்திவிட்டது. ஆனால், அரசு வழங்கிய மானியத் தொகை ரூ. 20 லட்சம் ஓர் ஆண்டு காலம் தாமதமாக வழங்கப்பட்டதன் காரணமாக இன்று அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ. 6,82,000 வட்டி செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதன் காரணமாக, இன்று நம்முடைய அரசு வீடு கட்டுவதற்கு 50 இலட்சம் ரூபாய் மானியம் கொடுத்தும்கூட அவர்கள் பத்திரம்கூடப் போடமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனை அவர்கள் செய்யாத ஒரு குற்றத்திற்குத் தண்டனை அனுபவிப்பதைப்போல இன்று அவர்கள் உணருகிறார்கள். ஆகவே, நம்முடைய அரசாங்கம் 20 இலட்சம் ரூபாய் மானியம் கொடுத்ததைப் போல, இந்த வட்டித் தொகையையும்—அரசு தாமதமாகச் செலுத்தியதன் காரணமாக ஏற்பட்ட இந்த வட்டித் தொகையை—உடனடியாகச் செலுத்தி, அவர்கள் பத்திரம் போட்டு வீடு கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று முதலில் நான் என்னுடைய கோரிக்கையை வைக்கின்றேன்.

அடுத்தபடியாக, இன்று சினிமாத் துறை என்பது மக்கள் மத்தியில் ஒரு மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொண்டிருக்கிறோம். சினிமாவில் ஆபாசம் மட்டுமல்லாமல், வன்முறையும் தலைதூக்கியுள்ளது. அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற மக்கள் மத்தியிலேகூட, வன்முறை தவறு இல்லை என்கின்ற உணர்வு ஏற்படுகின்ற வகையில் இன்று சினிமாக்கள் எடுக்கப்படுகின்றன. இதையெல்லாம் கண்டிக்கின்ற வகையில் நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எழுதி, மத்திய அரசிலிருந்து அதற்காகப் போடப்படுகின்ற கமிட்டிகளில், நியாயமான நேர்மையான, ஒழுக்கமான மனிதர்கள் அதிலே வந்து, இந்தத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால், இது வளர்ந்து, இதுதான் சரி என்ற சூழ்நிலைகூட ஏற்பட்டுவிடும்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எல்லாம் இப்போது இரவு நேரங்களில், நேரம் சென்ற காலங்களில் காட்டுகிறார்கள். நம்முடைய இளைஞர்கள் தவறான படங்களைப் பார்த்து, எவ்வளவு தூரம் அவர்கள் கெட்டுப் போகிறார்கள் என்ற சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதையெல்லாம் நாம் ஒழுங்காகப் பார்க்க வேண்டியது நம்முடைய அரசினுடைய கடமை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் இந்த மாதிரி ஒழுக்கக் கேடுகள் வரக்கூடாது என்பதற்காக, வேலூரில் உள்ள ஆக்சிலியம் பெண்கள் கல்லூரியில் மனித மாண்பு மேம்பாட்டு இயக்கம் ஒன்று கடந்த 7 ஆண்டுகளாக ஆபாசக் காட்சிகளை எதிர்த்து ஒரு விழிப்புணர்ச்சியை அதிகம் உருவாக்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல எல்லாப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மனித மாண்பு மேம்பாட்டு இயக்கம் அமைத்து, அதன் மூலம் மாணவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, ஓர் ஒழுக்கச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

நம்முடைய விளம்பரத்தைப் பொறுத்தவரை, சிறிய நடுத்தரப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது, மாவட்டங்கள்தோறும், சிறிய, சிறிய பத்திரிகைகள்—அந்த மாவட்டங்களிலேயே—வருகின்றன. அந்த மாவட்டப் பத்திரிகைகளில், blackmail என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்களையே மிரட்டுகின்ற மாதிரி ஒரு செய்தியைப் போட்டுவிட்டு, பிறகு அவர்களைப் பார்த்து, அந்தச் செய்தி தவறு என்று போடுகின்ற மாதிரி, blackmail வேலைகள் எல்லாம் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அதை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தைரியமாக, எந்தப் பத்திரிகை தவறு செய்கிறதோ, உடனடியாக அதன் licence-ஐ ரத்துச் செய்கின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிக முக்கியமான ஒன்றை, சென்ற சட்டமன்றத்திலேகூட நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மிக அழுத்தமாக இந்தச் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறேன். தூர்தர்ஷன் என்பது இன்றைக்கு



ஒவ்வொரு கிராமம், கிராமமாக நல்ல முறையில் போய்க் கொண்டிருக்கிறது. நம்முடைய நாட்டு மக்கள், தூர்தர்ஷனில் செய்தி பார்க்கிறார்கள். செய்தி பார்ப்பதோடு, அவர்களுக்கு ஒரே ஒரு நாள் மட்டும் ஒரு சினிமா கிடைக்கிறது. அவர்களுக்கு இந்த கேபிள் டி.வி. என்பது இன்னும் போய்ச் சேரவில்லை. இதற்குப் பதிலாக தூர்தர்ஷனிலேயே, 'பொதிகை' என்று ஓர் அருமையான நிகழ்ச்சியை மத்திய அரசு வெளியிடுகிறது. அதை இந்த கேபிள் டி.வி-யிலேதான் போடுகிறார்கள். அதையும் இந்த தூர்தர்ஷன் லைனிலேயே போட வேண்டுமென்று பல முறை இந்தச் சட்டமன்றத்திலேயும் பேசியிருக்கிறேன். டெல்லிக்குச் சென்று, அப்போது அதனுடைய அமைச்சராக இருந்த திரு. ஜாட்லி அவர்களிடம்கூட நான் எடுத்துச் சொன்னேன். ஆனால், என்ன காரணத்தினாலோ, இந்த 'பொதிகை'-யை தூர்தர்ஷனில் சேர்க்க மாட்டோம் என்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன சொல்லப்படுகிறது? இங்கே இருக்கிற தனியார் டி.வி. காரர்களுடைய தாக்குதலின் காரணமாக, அல்லது அவர்களுடைய influence காரணமாக, தூர்தர்ஷனில், 'பொதிகை' சேர்க்கப்படவில்லையோ என்கிற சந்தேகம் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. கேபிள் டி.வி.-யைப் பொறுத்தவரை, இன்று மிகப் பெரிய ஒரு மோசடியே நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லியாக வேண்டும். 100 ரூபாய் சில இடங்களில் கேட்கிறார்கள். சில இடங்களில் 150, 160, 200 ரூபாய்கூடக் கேட்கிற அளவிற்கு, ஒரு அளவே இல்லாமல் அது போய்க் கொண்டிருக்கிறது. இதற்கு நம்முடைய அரசு உடனடியாக, அந்த கேபிள் டி.வி.-யை ஒழுங்குபடுத்தி, சரியான முறையில் அவர்கள் பணம் வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

'மக்கள் சாசனம்' என்று இப்போதெல்லாம் ஒரு book கொடுத்திருக்கிறார்கள். மக்கள் சாசனத்திற்கும், உங்களுடைய கொள்கைக் குறிப்புக்கும் பெரிய வேறுபாடு கிடையாது. 'மக்கள் சாசனம்' என்பதை மக்கள் எப்படி எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கைகள், திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர்கின்ற வகையில், அந்த 'மக்கள் சாசனம்' அமைய வேண்டும். அதற்கு இன்னின்ன இடங்களில், இந்த, இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன; அதற்கு இந்த அதிகாரிகள் இருக்கிறார்கள்; அவர்கள் ஒரு வார காலத்திற்குள் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள் என்கிற முறையில் அந்தத் திட்டங்கள் போய்ச் சேரவேண்டுமே தவிர, 'மக்கள் சாசனம்' என்று இங்கே ஒரு புத்தகம்

அடித்து, கொள்கைக் குறிப்போடு சேர்த்துக் கொடுப்பது சரியல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு, பொருட்காட்சி. பொருட்காட்சியை சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலே நடத்துவதற்குப் பதிலாக, நமமுடைய அரசுத் திட்டங்களை நாட்டு மக்கள் உணருகின்ற வகையில், ஒவ்வொரு தலைநகரங்களிலேயும்— மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமல்லாமல் எல்லா நகரங்களிலேயும்—அந்தப் பொருட்காட்சியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

நம்முடைய காலத்தில் வாழ்ந்த நடிப்பிசைப் புலவர் சிவாஜி அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படவேண்டும்; அவருக்காகப் பெரிய விழா எடுக்கப்படவேண்டும்; சிவாஜியினுடைய பெயரால் பரிசுகள் வழங்கப்படவேண்டும்; சிவாஜிக்கு சிலை அமைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய கட்டபொம்மனுடைய விழா இங்கே நடந்தது, இரண்டாண்டுகளுக்கு முன்பு. அந்த விழாவில் நானும் கலந்து கொண்டேன்; அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார்கள்; நம்முடைய சிவாஜி அவர்களும் கலந்து கொண்டார்கள். அப்போது சிவாஜி அவர்கள் சொன்னார்கள், 'கலைஞர் அவர்களே, நான் இதுவரை கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தைக் கிரயம் வாங்கி, நானே சிலை அமைத்து, நானே பராமரித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இப்போது வயதாகி விட்டது. ஆகவே, அந்தப் பத்திரத்தை நான் உங்களிடம் தருகிறேன்; இனிமேல் அரசே எடுத்துச் செயல்படுத்துங்கள்' என்று அந்தப் பத்திரத்தையே கலைஞரிடம் கொடுத்தார்கள். அதைப் பற்றிய குறிப்பு உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே இல்லை. அங்கே அந்தப் பகுதிக்குப் போனபோது, கட்டபொம்மனுடைய சிலையும், அந்த இடமும் பாழ்பட்டுக் கிடப்பதை நான் நேரில் பார்த்தேன்.

ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு, இந்த நாட்டிற்காக, சுதந்திரத்திற்காக முதல் குரல் எழுப்பிய மாவீரன் கட்டபொம்மனுடைய இடத்தை சிவாஜியின் பெயரால் சிறப்பான முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அருமை அண்ணல் காந்திஜி பெயரால் ஒரு நல்ல தமிழ்ப் படம் எடுத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே எடுத்த படத்தைத் தமிழ்ப்படுத்தி இருக்கிறார்கள். அதேபோல, பாரதி



படம் ஒன்று வந்திருக்கிறது. இந்த 2 படங்களும் இந்த நாட்டு மக்களுக்கு தேசிய உணர்வை, நாட்டுணர்வை ஏற்படுத்தக்கூடிய மிக அருமையான படங்கள். அவற்றை நம்முடைய அரசு விலைக்கு வாங்கி, ஒவ்வொரு பள்ளியிலும், கல்லூரியிலும் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு தடவையாவது அந்தப் படங்களைப் போட்டுக் காண்பிப்பதற்கு நம்முடைய அரசு முயல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அருமைத் தலைவர் காமராசருடைய நூற்றாண்டு விழா வருகிறது. நான் ஏற்கெனவே ஒரு மானியக் கோரிக்கையில் விரிவாக அதைப் பற்றிப் பேசிவிட்டேன். ஆகவே, திரும்பத் திரும்ப அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ஆனால் நான் பேசி ஒரு வார காலமாகியும் கூட, இன்னும் நம்முடைய தலைவர் காமராசருடைய சிலைப் பகுதியில் குப்பைகள் அகற்றப்பட்டதாகத் தெரியவில்லை. என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை இப்போது நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேளை, நம்முடைய அரசு அருமைத் தலைவர் காமராசருடைய சிலை அமைத்து இருக்கின்ற இடத்தைத் தூய்மைப்படுத்தி, அழகுபடுத்தி, அண்ணாவின் சமாதி போல, எம்.ஜி.ஆருடைய சமாதி போல ஆக்கக்கூடிய மன நிலை உங்களுக்கு ஏற்படவில்லை என்றால், தயவுசெய்து தமிழ் மாநில காங்கிரசிடம் அதை ஒப்படைக்குமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எங்கள் சக்தியிலிருந்து, நூற்றாண்டு விழா வருகிற காரணத்தால் நம்முடைய தலைவர் காமராசருடைய சிலை இருக்கின்ற இடத்தை ஒரு புனிதத் தலமாக மாற்றுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நம்முடைய பத்திரிகையாளர்களுடைய கோரிக்கைகள், அதேபோல கேபிள் டிவி.-யை ஒழுங்குபடுத்துகின்ற சூழ்நிலைகள், இதையெல்லாம் சரி பண்ணுவதோடு, இந்த நாட்டுக்காக, சுதந்திரத்திற்காகப் போராடிய அரும்பெரும் தலைவர்களுடைய சிலைகள், நினைவுச் சின்னங்கள் எல்லாம் ஏராளமாக ஆங்காங்கே இருக்கின்றன; அந்த நினைவுச் சின்னங்களை எல்லாம் அழகுபடுத்தி, அதற்காகச் செலவு செய்து, சிறப்பான முறையில், இந்த நாட்டிற்குப் பாடுபட்டவர்களுடைய பெயரையும், புகழையும் நிலை நிறுத்துவதற்கு இந்தத் துறை பாடுபட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்; நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

[2002 ஏப்ரல் 30

***திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை தேனி ஒன்றிய இளைஞர் அணிச் செயலாளராக ஆக்கி, கழகத்தின் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆக்கி, சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த, தாயாய், தமிழாய், தமிழின ஒளியாய், ஒளியின் வடிவாய் இருக்கும், எங்களை எல்லாம் வாழ வைக்கும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த தேனி தொகுதி மக்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாத்தா என்றால் மகாத்மா காந்தி அவர்களையும், மாமா என்றால் பண்டித நேரு அவர்களையும், தந்தை என்றால் தந்தை பெரியார் அவர்களையும், அண்ணன் என்றால் பேரறிஞர் அண்ணா அவர்களையும், தலைவர் என்றால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும் இந்த ஊரும், உலகமும் எவ்வாறு ஏற்றுக்கொண்டதோ, அதேபோல அம்மா என்றால், ஆன்றோரும், சான்றோரும், பெரியவர்களும், சிறுவர்களும், தாய்மார்களும், ஊரும், உலகமும் ஏற்றுக்கொண்ட ஒப்பற்ற தலைவி எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

பிற்பகல் 12-40

வளர்ச்சிப் பணிகளில் மற்ற மாவட்டங்களோடு ஒப்பிடுகையில், 25 ஆண்டுகளுக்குப் பின்தங்கிய மாவட்டமான தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியினைத் தேர்வு செய்து, போட்டியிட்டு, மகத்தான வெற்றி பெற்று, தேனி மாவட்ட மக்களுக்குப் பெருமை சேர்த்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றியினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர், பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே' என்ற புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றன் வாக்கினிற்கேற்ப வாழும் என் தாயே! 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று ஏழைகளுக்காகக் கண்ணீர் சிந்தினான் பாரதி. எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள் அந்த ஏழைகளின் பசிக் கொடுமையைப் போக்க அன்னதானத் திட்டம் அளித்து கண்ணீரைத் துடைத்துள்ளீர்கள். வெறும் தாலாட்டுப் பாடும் அரசியல் கரிசனத் தாய்களிடையே, உண்மையான தாயுள்ளம் கொண்டு, விடை காணாத வினாவாக இருந்த விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் சுமையை, வட்டியில்லாமல்,



2002 ஏப்ரல் 30] [திரு. ஆர்.டி. கணேசன்]

அசலை மட்டும் ஒரே தவணையில் செலுத்தும் திட்டத்தினை அறிவித்து அவர்களை விடியலை நோக்கி அழைத்துச் சென்றீர்கள்.

காற்று இருக்கும் வரை நம் பெயர் காற்றென இருக்கட்டும். காலம் வரும்போது நம் பெயர் கல்வெட்டாக மாறட்டும். சரித்திரத்திலே, புறப்பட்டால் புயலெனப் புரிய வைத்த எங்கள் புறநானூற்றுத் தலைவியே! தமிழகத்தின் தலைவிதி தரணியில் தலை நிமிர, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினை அளித்துள்ளீர்கள்.

மக்கள் நலனையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவது செய்தி மற்றும் விளம்பரங்கள் ஆகும். செய்தி மற்றும் விளம்பரம் என்பது ஒரு மிகச் சிறந்த ஜனநாயகப் பணியாகும். இந்தப் பணியைத் தடையின்றி, சிறந்த முறையில் செயல்படுத்த ஆணிவேராக இருப்பவர்கள் பத்திரிகையாளர்கள். இந்தப் பத்திரிகையாளர்கள் நலமுடன் இருந்தால் மட்டுமே, இந்தத் துறை செம்மையாக விளங்கும். எனவே, பத்திரிகையாளர்களுக்குப் பலவிதமான சலுகைகளை அளித்து இந்த அரசு; அவர்களுக்கு அரசு அங்கீகாரம், செய்தியாளர் அட்டை, பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்; பத்திரிகையாளர் ஓய்வூதியம் மட்டுமல்லாமல், அவர்கள் குடும்பத்திற்கு ஓய்வூதியம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வரசு செய்தியாளர்களுக்கென அறிவித்த பல நல்ல திட்டங்களில் குடும்ப ஓய்வூதியம் ஒரு சிறந்த அங்கம் வகிக்கின்றது. இதனடிப்படையில், ஒரு பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்று வந்து, அவர் இயற்கை எய்திவிட்டால், அவரின் துணைவியாருக்குக் குடும்ப ஓய்வூதியமாக தலா ரூ.500 என்று அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பத்திரிகையாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, பத்திரிகையாளர்களின் குடும்ப ஓய்வூதியத்தை தலா ரூ.1500/-ஆக உயர்த்தி வழங்க எங்கள் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பத்திரிகையாளர்களின் குடும்ப நலனில் அக்கறை கொண்ட எங்கள் அரசு, பத்திரிகையாளர்களின் குடும்ப முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு சுலபத் தவணையில் அடுக்குமாடிக் குடியிருப்புகளோ அல்லது வீடுகளோ வாங்கிக்கொள்ள இவ்வரசு நல்ல பல திட்டங்களைப் பத்திரிகையாளர்களுக்கு அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிகையாளர்களும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது வீடுகள் வாங்குவதற்கு ஏதுவாக சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, இத்திட்டத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத மாநில

வங்கியும் இணைந்து செயல்படுத்த இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், இத்துறை மூலம் இயங்கி வரும் புகைப்படப் பிரிவு நவீனமயமாக்கப்பட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து, உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும், புகைப்படப் பிரிவின் பயன்பாட்டிற்காக இவ்வாண்டில் ஒரு புதிய டிஜிட்டல் கேமிரா வழங்கப்பட்டுள்ளது. இதனால், நாளிதழ்களுக்கு விரைவாக, தரமான வண்ணப் புகைப்படங்களை வழங்க வழிவகை செய்கிறது.

மேலும் ஒரு சிறப்பு அம்சமாக, செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு கணினி மற்றும் ஒளிநகல் இயந்திரம் 2001-2002 பகுதி-2 திட்டத்தின்கீழ் செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு நவீன துணைக் கருவிகளுடன் கூடிய ஒரு கணினியும், டிஜிட்டல் ஒளிநகல் இயந்திரமும் வாங்கி வழஙகப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆலோசனைக்கிணங்க, செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் பத்திரிகைகள், ஏனைய செய்தி நிறுவனங்கள் எளிதாகப் பெறும் வகையில் செய்தித் துறைக்கென தனி வலைதள ஒளிபரப்பு ரூ. 25 இலட்சம் செலவில் இந்நிதியாண்டிலே அமைக்கப்படும் என்று அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதனால் அரசின் முக்கிய நிகழ்ச்சிகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்திகளை உடனுக்குடன் ஒளிபரப்ப இயலும். இந்த வலைதளம் பத்திரிகையாளர்களுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக். கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. மேலும், கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன்,



தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளுக்குரியவர்கள் அரசினால் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இவ்வரசு இசைந்துள்ளது.

பிற்பகல் 12-45

மேலும், சண்டைக் காட்சிகளில் நடிக்கும்பொழுது, சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால், ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவையெல்லாம் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனைகளாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றித்தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி, அல்லிநகரம் வீரப்ப அய்யனார் கோவில் திட்டத்திற்கு பொதுப் பணித் துறையின் மூலம் மதிப்பீடு தயார் செய்து, ரூ.585 இலட்சத்தில், சென்னை, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திட்டத்தினை நிறைவேற்றி, அந்தப் பகுதி வாழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றித்தர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி சட்டமன்றத் தொகுதி, சின்னமனூர் ஒன்றியம், சின்ன ஓவுலாபுரம் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்புள்ள தரிசு நிலங்களை மேம்படுத்த, பொதுப் பணித் துறையினரால் சுமார் 2 கோடி மதிப்பீட்டில் தயார் செய்து, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பெரிய ஊத்துக்கண்மாய்த் திட்டத்தினை நிறைவேற்றித்தர மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் பொது மக்களின் அன்றாடப் பிரச்சினையாகிய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.3 கோடி மதிப்பீட்டில் பணி நடைபெற அனுமதி வழங்கி உள்ளீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பணிக்கு நடப்பாண்டிலேயே நிதி ஒதுக்கி, பணி நடைபெற மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி தொகுதி, சின்னமனூர் பகுதியில், சண்முகா நதி நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் பிரதானக் கால்வாய் செல்கின்றது. எரசக்க நாயக்கனூர் அருகே துணைக் கால்வாயினைப் பிரித்து, நாயக்கர் குளம், கருவேலன் குளம், பெருமாள் குளம் ஆகிய கண்மாய்களைப் பெருக்கி, அந்தப் பகுதி விவசாய மக்களின் குறை தீர்க்க, தேனி மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டு, மதிப்பீடும் தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பணியும் நடைபெற மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஓடைப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் மூர்த்தி நாயக்கன்பட்டி அருகே அமைந்துள்ள தாதமுத்தன் கண்மாய் பெருக, சண்முகா நதித் திட்டத்தின்கீழும் தண்ணீர் விட மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி, மாவட்டத்தின் தலைநகராக விளங்கி வருவதால் பேருந்து நிலையத்தில் மிகவும் நெரிசல் ஏற்பட்டு உள்ளது. அதனை விரிவுபடுத்த தேனி பைபாஸ் ரோட்டில் புதிய பேருந்து நிலையம் (மேசையைத் தட்டும் ஒலி) அமைக்க 9 ஏக்கர் நிலம் வனத் துறைக்குச் சொந்தமானதைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக வருசநாட்டுப் பகுதியில் 18 ஏக்கர் நிலம் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். தற்சமயம் வனத் துறையில் தாமதமாகி வருவதை மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்றித்தரப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில் தமிழக அரசின் கூட்டுறவுத் தொழில் நுட்பக் கல்லூரியும், கூட்டுறவு பட்டயப் பயிற்சிப் பள்ளியும் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து உதவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய மாணவ, மாணவியர்கள் பயிலுவதற்காக மருத்துவக் கல்லூரியும், அரசு கலைக் கல்லூரியும் செயல்பட தாங்கள் உதவிட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



தேனியில் அரசினர் ஆண்கள் தொழிற் பயிற்சிப் பள்ளி செயல்பட்டு வருகிறது. மகளிருக்கு முக்கியத்துவம் வழங்கும் மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்கள், பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் நடைபெற நடவடிக்கை எடுத்து உதவிடக் கேட்டுக்கொண்டு, பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் நடத்துவதற்கு உண்டான கட்டட இட வசதிகள் ஏற்கெனவே தயாராக உள்ளன என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

தேனி தொகுதி, ஓடைப்பட்டி பேரூராட்சியின் மக்கள் தொகை 18,000 ஆகும். பேரூராட்சிப் பகுதிக்கு ஓடைப்பட்டி, மூர்த்தி நாயக்கன்பட்டி, சுக்கான்பட்டி, வெள்ளையம்மாள்புரம் என 4 உட்கடை கிராமங்கள் உள்ளன. இங்கு வாழுகின்ற மக்கள், அடிப்படை வசதியான குடிதண்ணீர் இன்றி மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு மார்க்கயன் கோட்டை பெரியாற்றில் இருந்து புதிய கிணறு அமைத்து, குடிநீர் விநியோகம் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி தொகுதி மார்க்கயன் கோட்டை பேரூராட்சியில் சுமார் 6000 மக்கள் வசித்து வருகின்றனர். ஏற்கெனவே பெரியாற்றின் குறுக்கே ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, அதல் 15 H.P. submersible motor பொருத்தி, குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிதண்ணீர் உபயோகத்திற்குப் பயன்படாமல் உப்பு நீராகவும், அசுத்தம் கலந்ததாகவும் உள்ளது. அதனால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. ஆகவே 1 கிலோ மீட்டர் தொலைவில், பெரியாற்றில் ஒரு கிணறு மட்டும் அமைத்து, ஏற்கெனவே இருக்கின்ற பைப் லைனைப் பொருத்தினால், மார்க்கயன் கோட்டை பொது மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க உதவியாக இருக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேனி தொகுதியில், தேனி ஊராட்சி ஒன்றியத்தில் மாட்டுத் தீவனங்களும், கோழித் தீவனங்களும் தயார் செய்யும் பொருட்டு, அதிக விளைச்சல் தரும் மக்காச் சோளத்தை மூலதனமாகக் கொண்டு தொழில் தொடங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னமனூர் ஒன்றியப் பகுதியில் அதிக விளைச்சல் தரும் திராட்சை பதனிடும் தொழிற்சாலை அமைத்து உதவிட மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாயே, காருள்ள அளவும், கடல் நீருள்ள அளவும், வான் உள்ள அளவும், வானின் வான் கருணை உள்ள அளவும் தங்களது ஆட்சி நீடித்து, இத்தரணியில் நிலை பெற்று, தழைத்து ஓங்குவது உறுதி எனக் கூறி, தங்களது பொற்பாதங்களை வணங்கி, வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பூபதி மாரியப்பன்.

**திருமதி பூபதி மாரியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னலம்தனை மறந்து தாய் நாட்டிற்கு உழைத்து தன்பலம் காட்டுகின்ற தலைவரின் வாரிசே! வீரமகள் பெற்றெடுத்த வெற்றி மலரே! பொது மக்களின் பாராட்டைப் பெறும் புரட்சித் தலைவியே! மதவாதத்திற்கு எதிராக ஒரு வேஷமும், அரசாங்கத்திற்காக ஒரு வேஷமும் போடுபவர் மத்தியில், 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற அறிஞர் அண்ணாவின் வைர வரிகளைக் கடைப்பிடித்து, வேண்டாத சாதிகளை விரட்டியடித்த தூண்டா மணி விளக்கே! ஏழைகள் இதயங்களில் ஏற்றிவைத்த ஒளி விளக்கே! களங்கம் மறைந்த கலங்கரை விளக்கமே! பொன்னகை வெறுத்த புன்னகை அரசியே! சோதனையைச் சாதனையாக்கி, பகைவரை நண்பராக்கி, ஏற்றிவிட்ட ஏணிப்படிகளையும் எட்டி உதைத்தெறிந்த வஞ்சகரின் முகத்திரையைக் கிழித்தெறிந்த வீராங்கனையே! தமிழகத்தின் விடிவெள்ளியே! தங்கத் தலைவியே! தானைத் தலைவியே! காவல் தெய்வமே, காவிரித் தாயே, புரட்சித் தலைவியின் பொற்பாதங்களைத் தொட்டு, வணங்கி, என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த என்னை வலங்கைமான் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த இதயதெய்வம் அம்மா அவர்களின் பாதங்களை மீண்டும் ஒரு முறை தொட்டு வணங்குகிறேன்.

எனது வலங்கைமான் தொகுதி, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மிகவும் புறக்கணிக்கப்பட்டுப் பின்தங்கியுள்ளதால், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய அம்மா அவர்களைக் கருணை கூர்ந்து வேண்டுகிறேன்.



அடுப்படியில் அடைபட்டுக் கிடந்த பெண்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, 33 சதவீதம் இட ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் உருவாக்கிய பெருமை புரட்சித் தலைவி இதயதெய்வத்தைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

வலங்கைமான் தொகுதி, வலங்கைமான் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று அம்மா அவர்களைக் கருணை கூர்ந்து வேண்டுகிறேன்.

எனது வலங்கைமான் தொகுதி மிகவும் பின்தங்கி உள்ளதால், வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால், தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்று அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வலங்கைமான் தொகுதி, அரசு மருத்துவமனை, ஆலங்குடி அரசு மருத்துவமனை, இனாம் கிளியூர் அரசு மருத்துவமனை, அரித்துவார மங்கலம் அரசு மருத்துவமனை, அம்மாப்பேட்டை அரசு மருத்துவமனை, பூண்டி, மெலட்டூர் ஆகிய மருத்துவமனைகளில் கூடுதலாக டாக்டர்களும், செவிலியர்களும், துப்புரவுப் பணியாளர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்று அம்மா அவர்களைக் கருணை கூர்ந்து வேண்டுகிறேன்.

எனது வலங்கைமான் தொகுதியில், ஆலங்குடி கிராமத்தில் குருஸ்தலம் என்ற கோயில் உள்ளது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பல இலட்சம் பக்தர்கள் வந்து போகிறார்கள். போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் வரை அகலப் பாதையாக மாற்றி அமைத்துக் கொடுத்து பக்தர்கள் குறை தீர்க்க வேண்டும் அம்மா.

வலங்கைமான்-நீடாமங்கலம், பாபநாசம்-சாலியமங்கலம், வலங்கைமான்-பாபநாசம் ஆகிய நெடுஞ்சாலைகளிலும், என் தொகுதியில் உள்ள கிராமச் சாலைகளிலும் குடிநீர் வசதி, வீட்டு வசதி, மின்சார வசதி இத்தனையையும் செய்து கொடுக்க வேண்டுமென்று அம்மா அவர்களைக் கருணை கூர்ந்து வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு 11 கோடி ரூபாய் செலவில் 200 துணை சுகாதார நிலையங்கள் கட்டுவதாகவும், 8 கோடி ரூபாயில் 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம்

உயர்த்தப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எனது தொகுதியில் அரித்துவார மங்கலம், ஆலங்குடி, இனாம் கிளியூர், மெலட்டூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இத்தகைய வசதிகள் இல்லை. அதனால், இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்த வேண்டுமென்று அம்மா அவர்களைக் கருணை கூர்ந்து வேண்டுகிறேன்.

மேலும், 8 ஆயிரம் கைப்பம்புகள் சிறிய மோட்டார் பம்புகளாகக் கிராமங்களில் மாற்றப்படும் என்று அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். எனது தொகுதியில் தற்போது நெல் பயிருக்கு மாற்றுப் பயிராக, கரும்பு, பருத்தி போன்றவை பயிரிடப்படுவதாலும், காவிரிப் பாசனப் பகுதியில் தண்ணீர் இல்லாததாலும், நிலத்தடி நீர் மிகவும் இறங்கிவிட்டதாலும், எனது தொகுதியில் உள்ள கிட்டத்தட்ட 100-க்கு மேற்பட்ட கைப்பம்புகளை சிறிய மோட்டார் பம்புகளாக மாற்றியமைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது வலங்கைமான் தொகுதியில் உள்ள ஆலங்குடி, அரித்துவார மங்கலம், அம்மாப்பேட்டை ஒன்றியத்திலும், திருக்கருகாவூர், அம்மாப்பேட்டை, சாலியமங்கலம் ஆகிய கிராமங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் அமைப்பதற்கு அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி வலங்கைமான் ஒன்றியத்தில் 300 வீடுகளும், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் 300 வீடுகளும் கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலம் கட்டிக் கொடுக்க, கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

எனது வலங்கைமான் தொகுதியில் சந்திரசேகரபுரம், மருவத்தூர், அரித்துவார மங்கலம், அவளியநல்லூர் அம்மாப்பேட்டை வழியாகச் செல்லும் ஒரு பஸ்ஸும், வலங்கைமான், கும்பகோணம் வழியில் செல்லும் ஒரு பஸ்ஸும் ஏற்படுத்தித் தந்தால் எங்கள் தொகுதியில் உள்ள மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும்.

குழந்தைகளுக்கு மாற்றுக் கல்வித் திட்டம் கொடுக்கப்படும் திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. வலங்கைமான் மற்றும் அம்மாப்பேட்டை ஒன்றியங்களில் 10 மையங்கள் வீதம் 20 மையங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், இதயதெய்வம் அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, நாட்டு மக்களுக்கு நலத் திட்டங்களையும், அரசின் செயல்பாடுகளையும் மக்களுக்குக் கொண்டு செல்லும் மிகச் சிறந்த கருவியாக விளங்குபவர்கள் செய்தியாளர்கள். எனவே, அந்தச் செய்தியாளர்கள் நலனைக் கனிவுடன் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்கள் செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்துள்ளார்கள். செய்தியாளர்கள் தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்ய இலவசப் பயண அட்டை, இரயில் பயணத்தில் 50 சதவிகிதக் கட்டணச் சலுகை, அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகளை இவ்வரசு செய்து வருகிறது.

மாநிலத்திலே 30 சதவிகித மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள்; விவசாயக் கூலித் தொழிலை நம்பி வாழ்கிறார்கள். விவசாயம் மழையை நம்பி வாழ்கிறது. மழையாலும், வெள்ளத்தாலும், வறட்சியாலும், 5 மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அவர்களுடைய துன்பத்தையும், துயரத்தையும் துடைக்க வேண்டுமென்பதற்காக 48.1 கோடி ரூபாய் மானியமாக வழங்க அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இந்த ஆண்டு 10 மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்க அதற்கு அதிகார மன்றம் என்று அறிவித்துள்ளார்கள். 2006-க்குப் பிறகு, வறுமைக் கோட்டுக்குக் கீழே எந்தவொரு நபரும் இருக்கக் கூடாது என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இலட்சியமாகும்.

சொட்டு நீர்ப்பாசனத் திட்டம், தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், வீரிய ஒட்டு நெல் விதைத் திட்டம், தோட்டக்கலைப் பயிர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆராய்ச்சி, வீரிய ஒட்டு பருத்தி ரகங்கள் கண்டுபிடித்தல் போன்றவற்றின் மூலம் விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்பது இதய தெய்வம் அம்மா அவர்களின் இலட்சியமாகும். இதுவரை எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், நான் சார்ந்திருக்கிற பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையானது, ஓர் அரசினுடைய செயல் திட்டங்கள், ஓர் அரசினுடைய சாதனைகள், ஓர் அரசு எந்த நலத் திட்டங்களை மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதை ஊருக்கும், உலகுக்கும் அறிவிக்கிற ஒரு துறையாக இருக்கிற காரணத்தால், இந்தத் துறைக்கு—செய்தி மற்றும் விளம்பரம்--விளம்பரமும், பிரச்சாரமும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இந்தத் துறைக்கு, கடந்த காலத்திலே, 2000-2001-லே விளம்பரம், பிரச்சாரத்திற்கு 17 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. 2001-2002-லே இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால், நிதி நெருக்கடி இருக்கிறது என்று வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சில சம்பள உயர்வு, அலவன்ஸ் உயர்வெல்லாம் அறிவித்து-- 4 ஆயிரம் ரூபாய்க்கு அறிவித்து--அதையும் ஓராண்டு காலம் கழித்துப் பரிசீலிக்கிறோம் என்று சொல்லிவிட்ட நிலையிலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாலையில் சட்டமன்றம் நடைபெற்றால் சிற்றுண்டி வழங்கப்படும் என்று ஒவ்வொரு முறையும் பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்வார்கள். அப்படிச் சொல்கிறபோது, அந்தச் சிற்றுண்டியும் ஒரு இனிப்பு, ஒரு காரம், டீ, காபி என்று வழங்கப்பட்டு வந்த வேளையிலே அதிலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு. அதுதான் சிற்றுண்டி. (சிரிப்பு).

பிற்பகல் 1-00

**திரு. கி. பாரிமோகன்:** அதிலும் ஒரு இனிப்பை நிதி நெருக்கடி என்று கட் செய்து விட்ட பின்னால், இப்போது 2001-2002 நிதிநிலை அறிக்கையிலே விளம்பரத்திற்கும், பிரச்சாரத்திற்கும் 26 கோடியாக—9 கோடி அதிகம்--உயர்த்தப்பட்டது. அதற்குப் பின்னால், 2002-2003-லே 35 கோடியாக, ஏறக்குறைய இந்த இரண்டு ஆண்டுகளிலே 18 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டு இருப்பது, நிதி நெருக்கடி என்று சொல்கின்ற



நேரத்திலே இது எப்படி ஒரு நியாயமான, அவசியமான உயர்வாக இருக்கமுடியும் என்று இங்கே நான் உங்கள் முன்னால் என் கேள்வியை வைக்க விரும்புகிறேன். ஆகவே, தேவையற்ற செலவுகளை நிதி நெருக்கடி காரணமாகக் குறைக்கிறோம் என்று சொல்கின்றபோது, இதற்கும் சற்றுக் குறைவாகவே நீங்கள் நிதியை ஒதுக்கியிருந்தால் அது சரியாக இருந்திருக்கும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். விளம்பரமாகப் பத்திரிகைக்குப் போகின்ற பெரும் தொகை இதிலே அடங்கியிருக்கிறது. அதில் ஆளும்கட்சிப் பத்திரிகைகள் என்று இல்லாமல், அனைத்துப் பத்திரிகைகளுக்கும் அரசினுடைய விளம்பரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் சார்பிலே 'தமிழரசு' என்று ஒரு பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்தப் பத்திரிகை ஒரு வெள்ளை யானை. யானையைக் கட்டித் தீனி போடுகின்ற காரியமாக உள்ளது. இந்தப் பத்திரிகையை மக்கள் ஆர்வமாக யாரும் படிப்பதாகவும் தெரியவில்லை. இது மக்களிடம் போய்ச் சேருகின்ற ஒரு பத்திரிகையாக இருக்க வேண்டும். அந்த வகையிலே, இந்த மாத இதழை நிறுத்திவிட்டு, மக்கள் விரும்பிப் படிக்கின்ற ஒரு தினசரியாக தமிழக அரசு சார்பிலே ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் துறையின் சார்பாக-- பல்வேறு நினைவகங்கள், நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தத் துறைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அப்படி இந்த நினைவகங்கள், நினைவுச் சின்னங்களெல்லாம் ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும் நிலை இருக்கிறது. அதை மாற்றி, ஆண்டு முழுவதும் பராமரிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். எனக்கு முன்னாலே பேசிய, மாண்புமிகு மூத்த உறுப்பினராக இருக்கின்ற திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிட்டபோது சொன்னார்— காமராஜர் சிலையைச் சுற்றி குப்பைகள் கிடக்கின்றன என்று சொன்னார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு பெரிய தலைவருக்கு அந்தச் சூழ்நிலை இருக்கக்கூடாது. ஆண்டு முழுவதும் பராமரிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டாடப்பட்ட வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டத்தை இந்த அரசு ஏன் கைவிட்டிருக்கிறது? அந்த விழாவை மீண்டும் இந்த அரசு கொண்டாட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத்

துறையின் சார்பாகப் பல்வேறு நினைவகங்கள் பராமரிக்கப்படுகின்றன; புதியதாக உருவாக்கப்படுகின்றன. அந்த வகையிலே என்னுடைய தருமபுரி மாவட்டத்தினுடைய பெயருக்கும், புகழுக்கும் ஒரு நிலையான நிகழ்ச்சியாக இருந்து கொண்டிருப்பது அதியமான் என்ற மன்னன் வரலாறு. அதிக நாள் உயிர் வாழ்வதற்குத் தனக்குக் கிடைத்த ஓர் அரிய நெல்லிக்கனியை, தமிழ் வாழ வேண்டும், வளர வேண்டுமென்று சொல்லி, தமிழ் வளர்த்த புலவர் ஔவைக்குக் கொடுத்து, கடையேழு வள்ளல்களில் ஒருவராக ஒரு நிலையான அந்தப் புகழைப் பெற்றிருக்கிறார். அப்படிப்பட்ட அந்த அரிய நிகழ்ச்சி நிகழ்ந்த அந்த அதியமான் மன்னனுக்கு ஒரு நினைவுக் கோட்டம் கட்ட வேண்டுமென்று சொல்லி, கடந்த கால ஆட்சியிலே அதற்காக நிதியொதுக்கி, இடத்தைப் பார்க்கின்றபோது, ஒரு ஏரியிலே கட்டுவதற்காக—அந்த ஊரையடுத்து, ஒரு ஏரியிலே கட்டுவதற்கு—வேறு ஊரிலேயுள்ள ஒரு ஏரியில் கட்டச் சென்றார்கள். அந்தப் பகுதி மக்கள் அதை எதிர்த்துப் போராடினார்கள், சாலை மறியல் செய்தார்கள். அந்த நேரத்திலே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நானும், மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து, அதை வேறு இடத்திலே கட்ட வேண்டுமென்ற கோரிக்கை விடுத்து, அது அப்படியே நின்றுவிட்டது. ஆகவே, அந்த அதியமானுக்கு— தமிழ் வளர வேண்டும், வாழ வேண்டுமென்று நினைத்த அந்த அதியமானுக்கு—ஒரு நினைவுக் கோட்டத்தை அதியமான் கோட்டையிலே கட்ட வேண்டுமென்று, தருமபுரி மாவட்டத்து மக்களுடைய வேண்டுகோளை நான் அமைச்சர் முன்னால வைக்கின்றேன்.

தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே 11 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பட்ட சென்றாயப் பெருமாள் கோயிலும் அந்த அதியமான் கோட்டையிலே இருக்கிறது; அதன் பக்கத்தில் பாளையம்புதூர் என்ற ஊரிலேயும் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பெருமாள் கோயில் இருக்கிறது. இவையெல்லாம் மத்தியத் தொல்லியல் துறையின் பாதுகாப்பிலே இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் மேம்படுத்துவதற்குரிய ஒரு வாய்ப்பை தமிழக அரசினுடைய இந்தத் துறை செய்யுமேயானால், அங்கெல்லாம், தருமபுரியிலே, அதைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் அங்கு வருவதற்கும், போவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இந்தப் பகுதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய மாவட்டத்திலேயிருந்து முதன்முதலாக தமிழ்நாட்டிற்கு ஒரு முதலமைச்சர் வந்தார். அவர்தான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள். நம்முடைய முதலமைச்சரும் கடந்த ஆட்சிக் காலத்திலே தருமபுரி மாவட்டத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான். அந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு ஓசூரிலே தொரப்பள்ளி என்ற அவர் பிறந்த அந்தக் குக்கிராமத்திலே, அவர் பிறந்த இல்லத்தை ஒரு நினைவு இல்லமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் அவருடைய இலட்சியங்கள், அவர் அரசியலிலே கடந்து வந்த பாதை, அவர் வகித்த பதவிகள்—சாதாரண குக்கிராமத்திலே பிறந்த அவர் இந்தியாவினுடைய கவர்னர்-ஜெனரலாக, தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்து மிகப் பெரிய பதவிகளில் எல்லாம், மிகச் சிறந்த முறையிலே பணியாற்றியிருக்கிறார். ஆகவே, —அவருடைய அந்தச் சிறப்புக்களையெல்லாம் இந்த மாவட்டம் முழுவதும் வாழ்கின்ற மக்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர்களுக்குத் தெரியவேண்டுமென்றால், இந்த மாவட்டத்திலே அவருக்காக ஒரு நினைவு மண்டபத்தை ஏற்படுத்தி, அந்த வாய்ப்பை மக்களும், மாணவர்களும், இளைஞர்களும் பெறுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, எங்களுடைய மாவட்டத்திலே சுதந்திரத்திற்காகத் தன்னுடைய இன்னுயிரை அளித்து, தன்னுடைய உடல், பொருள், ஆவி அத்தனையும் அளித்து, இறுதியிலே ஒரு தொழு நோயாளியாக தருமபுரி மாவட்டத்திற்கு வந்து, தருமபுரியிலே பெண்ணாகரம் தொகுதியிலே பாப்பாரப்பட்டி என்ற பகுதியிலே இந்திய-பாரத மாதாவிற்காக ஒரு கோயிலைக் கட்ட வேண்டும் என்று சொல்லி, ஒரு 5 ஏக்கர் நிலத்தை அங்கே நன்கொடையாகப் பெற்று, சுப்பிரமணிய சிவா என்ற அந்தத் தியாகி, அங்கே தன்னுடைய வாழ்க்கையினுடைய இறுதியிலே வாழ்ந்தார். இன்றைக்கு அவர் நினைத்த அந்த பாரத மாதா கோயிலையும் கட்ட இயலவில்லை, அவர் நினைவுக்காக அங்கே ஒரு மணிமண்டபமும் எழுப்ப முடியாத சூழ்நிலை நிலவிக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிற சிலர் தனிப்பட்ட முறையிலே அந்த முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ஒரு மிகப் பெரிய சுதந்திரப் போராட்டத் தியாகி, தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்தத் தியாகியினுடைய இலட்சியத்தையும், எண்ணத்தையும் நிறைவேற்றுகிற வகையிலே, அங்கே அவர் நினைத்த அந்த பாரத மாதா கோயிலையும், அவருக்கு ஒரு நினைவு

மண்டபத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே அரசுக்கு ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன்.

பிற்பகல் 1-05

திரைப்படங்கள் என்பவை தமிழகத்திலே மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தின. தமிழகத்திலே சமூகக் கருத்துகள் மூலம் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும், சமுதாயத்திலே வாழ்கின்ற இளைஞர்கள் அல்லது தவறு செய்பவர்களைத் திருத்தவேண்டும் என்று கடந்த காலத்திலே திரைப்படத்தைப் பயன்படுத்தினார்கள். பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் திரைப்படத்தின் மூலமாகப் பல கருத்துகளைச் சொல்லி, பல கதை, வசனங்களை எழுதி, திரைப்படமாக எடுத்து, நடித்து, பாடல்களை இயற்றி, அவற்றின் மூலமாக மக்களின் செல்வாக்கைப் பெற்று, தமிழகத்தினுடைய முதலமைச்சராக ஆனார்கள் என்பது தமிழகத்தினுடைய வரலாறு ஆகும். ஆக, அப்படிப்பட்ட அந்தத் திரைப்படத் துறையை இன்றைக்குப் பார்க்கின்றபோது, அந்தத் துறை இன்றைக்கு சமுதாயத்தைச் சீரழித்து வருகின்ற காரியங்கள், சமுதாயத்தைச் சீரழித்து வருகின்ற கதைகள், வசனங்கள், பாடல்கள் ஆகியவற்றை எல்லாம் இயற்றுகிற ஒரு இடமாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்குச் சின்னத் திரையாக இருந்தாலும், வண்ணத் திரையாக இருந்தாலும், அல்லது பெரிய திரையாக இருந்தாலும் அங்கே சமூகக் கருத்துகள், சமூகத்தை நல்வழிப்படுத்துகின்ற நிலை, சமூகத்தை மேம்படுத்துகின்ற வகையிலே எடுக்கப்படுகின்றதா என்றால் கிடையாது.

இன்றைக்கு இருக்கின்ற நிலையில் தமிழகத்தைச் சாராமல் இருக்கின்றவர்கள் வெளியூர்களிலிருந்து வந்து நடித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்கள் இங்கே அதிகமாக திரைப்பட நடிகைகளாக வரமுடியாத சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் இப்போது கலாச்சாரச் சீரழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சமீபத்திலேகூட ஒரு நடிகை, மோனல் என்று சொல்லப்படுகிற அந்த நடிகை இறந்தபோது, அவர் ஏதோ குடும்பப் பிரச்சினைக்காக, அவருடைய தாயாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாகத் தற்கொலை செய்துகொண்டு இறக்கின்றபோது, எங்கோ ஓர் இளைஞன் தன்னுடைய உயிரை அழித்துக்கொள்கின்றான். அவன் தன்னுடைய உயிரை அழித்துக்கொள்கின்றான் என்கிற சூழ்நிலையிலே, அவனுடைய



நண்பர்கள் இரண்டு பேர் தங்களுடைய உயிரை அழித்துக் கொண்டார்கள் என்ற மிகவும் வருந்தத்தக்க செய்திகள் நடைபெறுகின்றன. அந்த மோனலினுடைய அக்காவாக இருக்கிற சிம்ரன் கனடாவிலே ஷூட்டிங்கிலே இருக்கின்றார், அவர் தன் தங்கை இறந்ததைப்பற்றிக் கவலைப்படவில்லை. 'சினிமா வேண்டாம் என்று சொன்னேன், சினிமாவிற்கு அவர் வந்தார். இறந்துவிட்டார்' என்று சாதாரணமாக எடுத்துக்கொண்டு அங்கே ஷூட்டிங்கிலே நடித்துக் கொண்டிருக்கிற காட்சி. ஆனால், இங்கே இந்தச் சினிமாவைப் பார்க்கிற நம்முடைய கிராமத்து இளைஞர்கள் தங்களுடைய இன்னுயிரை இழந்திருக்கிறார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சமுதாயச் சீரழிவை இன்றைக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தினுடைய கலாச்சாரம், தமிழகத்தினுடைய பண்பாடு காப்பாற்றப்படவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். ஆக, தமிழகத்தினுடைய பண்பாடு, கலாச்சாரத்தைப் புறக்கணிக்கின்ற எவராக இருந்தாலும், அதைத் தமிழர்கள் வருங்காலத்திலே புறக்கணிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, திரையரங்குகளிலே—இன்றைக்கு அதிகமான திரையரங்குகளுக்குச் செல்கிறவர்களுக்கு வசதிகள் குறைவாக இருக்கின்றன. அந்த வசதிகளை எல்லாம்—அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற அதிகாரிகள் மூலமாக, திரையரங்குகளுக்கு வருகின்ற அந்தப் பொது மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இன்றைக்குத் தமிழக அரசு ஒரு நல்ல நோக்கத்தோடு, பான்பராக், மாணிக்சந்த் போன்ற போதை வஸ்துகளைத் தடை செய்திருக்கிறது. ஆனால், தமிழகத்திலே தடை செய்யப்பட்டபோதிலும், தொலைக்காட்சியிலும், கேபிள் தொலைக்காட்சியிலும் விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இதற்கு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்தத் துறையின் மூலமாகப் பல்வேறு சலுகைகளைப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கி வந்து கொண்டிருக்கிறீர்கள். பத்திரிகையாளர்கள் பலர் சொந்த வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசுக் குடியிருப்புகளில் முன்பெல்லாம் வாடகை வீடுகள் ஒதுக்கப்பட்டு வந்தன. அது முறையாகப் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, பத்திரிகையாளர்களுக்கு அனைத்து வீட்டு

வசதி வாரியக் குடியிருப்புகளிலும் வாடகை வீடுகள் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் தவணை முறை வீடு திட்டத்திலும் பத்திரிகையாளர்களுக்கு, தவணை விதிகளைத் தளர்த்தி, வீடுகளை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளிலே 3%, பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்தது. அது இப்போது ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். மீண்டும் அந்த 3% ஒதுக்கீட்டைப் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

சட்டமன்றம் கூடும் நாட்களிலே அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் T.A.; D.A வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல Press Academy, தமிழகத்திலும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களும் வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு, ஏழைகளுக்கும், பாட்டாளிகளுக்கும் கல்விக் கண் கொடுத்த காமராஜர் அவர்களுடைய நூற்றாண்டு விழா வர இருக்கிறது. இந்த நூற்றாண்டு விழாவை, பெருமை சேர்க்கின்ற வகையில் சிறப்பாக நடத்த வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொண்டு, பத்திரிகையாளர்கள், சென்னை, கொட்டிவாக்கத்திலே கூட்டுறவு வங்கி மூலம் கடன் பெற்றுக் கட்டிய வீட்டிற்கு, கடனைத் திருப்பிச் செலுத்த இயலாத நிலையிலே உள்ளனர். எனவே, அவர்கள் பெற்ற கடனுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகக் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளால் திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்தைச் சேர்ந்த கள்ளிக்குடி என்னும் கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்திலே பிறந்த, கழகத்தின் சாதாரணத் தொண்டனான எனக்கு, எனது ஊர் கிளைக்



கழகத்தினுடைய செயலாளர், மணிகண்டம் ஒன்றியத்தினுடைய பெருந்தலைவர், திருச்சி புறநகர் மாவட்டக் கழகத்தினுடைய இணைச் செயலாளர், மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் என்ற பொறுப்புகளையெல்லாம் தந்து, பக்தி மணம் கமழும் உலகப் புகழ்பெற்ற ஸ்ரீரங்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, இன்றைக்கு தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராகவும் பதவி தந்து, உண்மைத் தொண்டர்களை உயர்த்தி அழகு பார்க்கும், எங்கள் அறிவின் ஊற்று, ஆற்றலின் திருவுருவம், எங்கள் குல தெய்வம், எந்தத் திருப்பெயரை உச்சரித்தால், உச்சரித்த உள்ளம் உறுதிப்படுமோ, எந்தத் திருவுருவத்தைப் பார்த்தால் விரக்தியுற்ற நெஞ்சம்கூட வீரத்தால் விம்மிதம் அடையுமோ, எந்தக் குரலைக் கேட்டால் இலட்சோபலட்சம் தொண்டர்களின் நெஞ்சம் ஆனந்தம் கொள்ளுமோ, அந்தத் திருப்பெயரை வேதம் என்று ஓதுகிறேன். அந்தத் திருவுருவத்தை அம்மா என்று வணங்கி ஆராதிக்கிறேன். அந்த எங்கள் பொன்மனத் தாயின் பொற்பாதம் தொட்டு, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நான் சமர்ப்பிக்கும் முதல் மானியக் கோரிக்கை இது. இது தாய் தந்த வரம். ஒரு காலத்தில் மிட்டா மிராசுகள் அமைச்சர்களாக இருந்தார்கள். ஒரு காலத்தில் செல்வந்தர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். ஒரு காலத்தில் பிரபலங்களும், பிரமுகர்களும் அமைச்சர்களாக இருந்தார்கள். ஆனால், என்னைப் போன்ற சாமானியர்கள்கூட அமைச்சர்கள் ஆகலாம் என்கிற சரித்திரம் உருவாக்கப்பட்டிருப்பது இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் என்பதை இந்த நேரத்திலே இந்த அவைக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்; (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கித் தந்திருப்பவர் எங்கள் இதயதெய்வம் அம்மா அவர்கள்தான். கடைக்கோடித் தொண்டர்களை அமைச்சர்களாக்கி, யாரும் இதுவரை செய்திராத ஜனநாயகப் புரட்சியைப் படைத்தவர், எங்கள் ஆராதனைக்குரிய அம்மா அவர்கள்தான் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்வது கடமை என்று கருதுகின்றேன். அடித்தளத்துத் தொண்டர்களை அமைச்சர்களாக்கி, ஆட்சிக் கோபுரத்தின் உச்சியிலே அமர வைத்து, அகம் மகிழ்கின்ற அருமை அம்மாவிற்கு நன்றி சொல்வது எப்படி என்ற நெகிழ்ச்சியோடு இங்கு நான் நின்றுகொண்டிருக்கிறேன். அன்றைக்கு ஆண்டாள் பாடியது போல, அம்மா அவர்களை நோக்கி நான் சொல்லத் துடிப்பது இதுதான்:—

'எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோ
டுற்றோமே யாவோம்உனக்கேநா மாட்செய்வோம்'

என்று கூறி, உள்ளத்தில் மலர்கின்ற ஒரு கோடி மலர்களைக் காலடியில் காணிக்கையாக்கி, எனது வாழ்வின் பெரும் பாக்கியமான இந்த மகத்தான பெருமையை எனக்கு வழங்கிய மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியை, ஸ்ரீரங்கம் தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்து வணங்கி, மானியக் கோரிக்கை மீதான என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

'மக்களுக்காக, மக்களால், மக்களே ஆளும் ஆட்சி மக்களாட்சி' என அமெரிக்க நாட்டின் அரசியல் அறிஞன், அடிமை விலங்கொடித்த அண்ணல் ஆப்ரகாம் லிங்கன் கூறினார். அந்த மக்களாட்சி என்னும் மாளிகையின் காவல் தூண்களில் ஒன்று பத்திரிகை உலகம்; செய்தித் தொடர்பாகும். மக்களாட்சி என்னும் சொல்லைப் பிரித்தால், மக்கள் பிளஸ் ஆட்சி என்றாகும். மக்களுக்கும், ஆட்சிக்கும் இடைவெளி இல்லாமல் பார்த்துக்கொள்வது செய்தி—மக்கள் தொடர்புத் துறைக்கே உரிய கடமையாகும், அது ஒரு கலையும்கூட.

பிற்பகல் 1-15

மக்களின் நல்வாழ்விற்காக, தான் ஆற்றிடும் பணிகளைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்வது என்பது அரசின் கடமையும்கூட என்பதை இன்றைக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், அரசின் கண்களாகவும், காதுகளாகவும் விளங்குவதுதான் செய்தி மற்றும் விளம்பரத் துறை ஆகும். எந்த மக்களுக்காகத் திட்டங்கள் பல தீட்டப்பட்டு, அதனடிப்படையில் நலப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ, அந்த மக்களுக்கு அந்தத் திட்டங்கள் மற்றும் பணிகள் பற்றிய செய்திகளும், விளக்கங்களும் சென்றடையுமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு ஒரு ஜனநாயக அரசுக்கு இருக்கிறது என்பதை இன்றைக்கு ஜனநாயகத்திற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்த ஜனநாயக ஆட்சி முறையைத் தற்போது நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், அவர்கள் தருகின்ற மேலான அறிவுரைகளின் அடிப்படையிலும், இத்துறை தற்போது பல்வேறு கள விளம்பரப் பணிகளை மிகுந்த முனைப்புடன் ஆற்றி வருகிறது. இவ்வாறு ஆக்கப்



பணிகளை, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களினுடைய அரசு அதிவேகத்தில் நிறைவேற்றி வரும் இந்த வேளையில், எதிர்க்கட்சியைச் சார்ந்த ஒரு சிலர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஒரு நல்ல பெயர் வந்துவிடக்கூடாது என்று செயல்பட்டு, மரபு, மரபு என்று மரபைப் பற்றி இங்கே மனம் போனபடி பேசுகிறார்களே, அதுபற்றி ஒரு வார்த்தையை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரபைக் காப்பதே நாங்கள்தான் என்று மார்தட்டிக் கொண்டிருக்கின்ற மகான்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் எந்த மரபைக் காத்தார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றம் அறியாதா? மாநிலம்தான் அறியாதா? ஒரு புகைப்படத்தைக் காட்டி, அதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவுடன் இருப்பவர் தனுதான் என்று, உண்மைக்குப் புறம்பான செய்தியை இட்டுக் கட்டியதுடன், அதை உருவாக்கியவர்கள் இங்குத் தானே இருக்கின்றார்கள்?

விவசாயிகளின் வாழ்வுரிமை மாநாடு நடத்துபவர்கள், "நபார்டு வங்கியில் அம்மா அவர்கள் கையெழுத்து இட்டுவிட்டார்கள்; விவசாயிகள் நலம் பெறும் வகையில் வட்டி மற்றும் அபராத வட்டியைக்கூட எங்களால் தள்ளுபடி செய்ய முடியவில்லை என்று சொல்லி, அன்றைய கூட்டணிக் கட்சியிலே இருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னபோதுகூட, ஓர் உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார்களே, அதை இந்த நாடு மறந்துவிடவில்லை. பொழுது விடிந்தால் போதும், சட்டசபையில் முந்தைய ஆட்சியாளர்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்பற்றி ஒரு அவதூறாவது சொல்லிவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்த அந்த அரிச்சந்திரர்கள் யார்? இவர்கள்தானே? இந்த மாமன்றத்திலே உண்மைக்குப் புறம்பானவைகளைப் பதிவு செய்து, மரபை மீறுவதையே மரபாகக் கொண்டிருந்த மாயாஜாலக்காரர்களா மரபைப் பற்றிப் பேசுவது? காழ்ப்புணர்ச்சியின் வடிவமாகவே விளங்கியவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் என்ன மரபைப் பின்பற்றினார்கள்? அழிக்க நினைப்பவர்கள் அழிந்து போவார்கள்! இது யதார்த்த உண்மை. இதை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்த உன்னத தெய்வம், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை, நடந்து முடிந்த தேர்தல்கள் அத்தனையும் நமக்கு இங்கே எடுத்துக்காட்டுகின்றன. மக்கள் சக்தியை ஒன்று திரட்டி, மாற்றாரை மண்டியிடச் செய்த மாசற்ற தெய்வத்தின் தீர்க்கதரிசனமான, துணிகரமான, துரிதமான நடவடிக்கைகளால்

தமிழகத்தைக் கவ்வியிருக்கும் நிதி நெருக்கடி என்னும் இருள் இப்போது படிப்படியாக--புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையால் அவர்களுடை நிலைப்பாடு எடுத்துக் கொண்டிருக்கிற இந்த நிலையில் படிப்படியாக--மறையத் தொடங்குகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வது கடமையென்று கருதுகிறேன்.

இவ்வேளையில், தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத் துறையில் கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சில முக்கியப் பணிகளை, பேரவைக்குத் தொட்டுக் காட்ட விரும்புகிறேன். ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்கும் மூன்று பிரிவுகளாக நீதித் துறை, சட்டப் பேரவை, நிருவாகத் துறை ஆகியவை விளங்குகின்றன. பத்திரிகைத் துறை, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்குகிறது என்பதை வலியுறுத்தும்விதத்தில், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் செய்தியாளர் நலனுக்காகவும், இத்துறையின் மேம்பாட்டிற்காகவும் அதிக அக்கறை செலுத்திச் செயல்பட்டு வருகிறார்கள். மக்களுக்கும், அரசுக்கும் இடையே பாலமாக இருந்து நற்பணியாற்றும் பத்திரிகையாளர்கள்மீது மிகுந்த பரிவு கொண்டு, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் கழகத் தேர்தல் அறிக்கையில் பல சலுகைகள் அறிவித்ததை அனைவரும் அறிவோம். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் உள்ளம் பொன்னுள்ளம், புனித உள்ளம், பத்திரிகையாளர்கள் அல்லும் பகலும் அயராது ஆற்றும் உழைப்பை மதித்து, அரசுக்கு வரலாறு காணாத கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டபோதிலும், பத்திரிகையாளர்களின் குடும்ப நலனில் அதிக அக்கறை கொண்டுள்ள காரணத்தால், பத்திரிகையில் தொடர்ந்து 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய ஆசிரியர்கள், தலைமை நிருபர்கள் பணிபுரியும் காலத்தில் இயற்கையாக மரணம் அடைந்தால் பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு முந்தைய ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த நிதியுதவித் தொகை ரூபாய் ஐம்பதாயிரம் என்று இருந்ததை, நான்கு மடங்கு அதிகம் உயர்த்தி ரூ. 2 இலட்சம் என வழங்கிட எங்கள் பொன்மனத் தாய் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 1-20

அதேபோல, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்தபோது, 1986-ல் அறிமுகப்படுத்திய பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியம் ரூபாய் இரண்டாயிரம் என்பதை ரூபாய் மூவாயிரமாக உயர்த்தி, மூத்த



பத்திரிகையாளர்களைப் போற்றிப் பாதுகாப்பவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். அத்துடன், ஓய்வூதியம் பெற்று வந்த பத்திரிகையாளர்கள் இயற்கை எய்தினால், அவர்களது மனைவிமார்களுக்கு முந்தைய ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூபாய் 500 எனபதை, ரூபாய் 1500 என்று உயர்த்தி பத்திரிகையாளர்களின் குடும்பப் பாதுகாவலராகவும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் திகழ்கிறார்கள் என்பதை இப்பேரவைக்குப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகத்திலுள்ள அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர் அனைவருக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது வீடுகள் வாங்குவதற்கு ஏற்ப, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும், பாரத மாநில வங்கியும் இணைந்து செயல்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்று மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1991-96 காலகட்டத்தில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி தமிழகத்தை அணி செய்த காலத்தில், மாணிக்க மனிதர்களின் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள், சிலைகள், நினைவகங்கள் பல, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

மாவீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலே அவரது கம்பீரம் நிறைந்த திருவுருவச் சிலை, சென்னை, எழும்பூரில் 15-3-1996 அன்று மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் பொற்கரத்தினால் திறந்துவைக்கப்பட்டது. அந்த மாவீரன் அழகுமுத்துக் கோன் அவர்களின் புகழையும், பெருமைகளையும், மேலும் போற்றும் வகையில், அவருக்குத் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கட்டாரம்குளத்தில், ரூபாய் 35 இலட்சம் செலவில் அழகிய மணிமண்டபம் ஒன்று அமைக்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆணைப்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, கப்பல் வாணிபம் நடத்திய சுதந்திரப் போராட்ட மாவீரன், கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களின் புகழையும், பெருமையையும் போற்றி, திருநெல்வேலியில் ரூபாய் 75 இலட்சம் செலவில் அழகிய வடிவில்

மணிமண்டபம் ஒன்று அமைக்க மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வது கடமை என்று கருதுகிறேன்.

இஸ்லாமிய சமுதாயத்தின் இணையற்ற தலைவராய் விளங்கிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் புகழையும், பெருமையையும் போற்றி, ரூபாய் 50 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கும் பணிகள் சென்னையிலுள்ள காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வருகின்றன. இஸ்லாமிய சமுதாய மக்களின் விருப்பத்தினை ஏற்று, இம் மணிமண்டபத்தின் முகப்பினை இஸ்லாமியக் கலாச்சாரத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்திட, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆவன செய்து வருகின்றார்கள் என்பதையும் இப்பேரவையில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழி மேன்மைக்காகவும், தங்கள் வாழ்நாளெல்லாம் பாடுபட்ட தலைவர்களையும், அறிஞர்களையும் போற்றிடச் செய்யும் வகையில், அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் இத்துறையால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில், வாழ்ந்து மறைந்த தமிழக மாமனிதர்களைப் போற்றும் வரிசையில், முதல் சுதந்திரப் போராட்ட வீரன், வீரன் அழகுமுத்துக் கோன் பிறந்த நாள் விழா முதன்முதலாக திருநெல்வேலி மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அதன்பிறகு, முந்தைய ஆட்சியில் வீரன் அழகுமுத்துக் கோன் அவர்களுக்குப் பிறந்த நாள் விழாவே கொண்டாடப்படவில்லை. தற்போது மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, நல்லாட்சி மீண்டும் அமைந்த பிறகுதான், 13-8-2001 அன்று, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, மீண்டும் வீரன் அழகுமுத்துக் கோன் பிறந்த நாள் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அத்துடன், தொடர்ந்து மார்ச் மாதங்களில் வீரன் அழகுமுத்துக் கோன் பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்று இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்



என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்.

அதேபோல், ஆங்கில, வெள்ளையர் ஏகாதிபத்தியத்திற்கு சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்த ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் பிறந்த நாளினையும், மாண்புமிகு அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டிலேயே இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டாடச் செய்தார்கள். அதன்பிறகு முந்தைய ஆட்சியில் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடப்படவில்லை.

பிற்பகல் 1-25

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அரியணை ஏறிய பின்பு ஆண்டுதோறும் மார்ச் திங்கள் அந்த நிகழ்ச்சிகளைக் கொண்டாட வேண்டுமென்று சொல்லி, ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களுக்கு விழா எடுத்துப் பெருமைப்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சீறிடும் சிங்கங்களாய் சிவகங்கைச் சீமையை ஆண்டு, அந்நிய ஆட்சியில் தூக்கிலிடப்பட்டு மடிந்த தியாக மறவர்களாம் மருதுபாண்டியர்களின் 200 ஆவது ஆண்டு விழா—நினைவு நாள் விழா 24-10-2001 அன்று திருப்பத்தூரிலே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பதையும் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வார்த்தைகளுக்கு வலிமையுண்டு என்றாலும், காட்சிகளின் மாட்சிக்கு இணையாகாது. திரைப்படத்தின் ஆற்றல் தேச அளவில் மட்டும் அல்ல, உலக அளவிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. அந்தக் கலையுலகம் தந்த கற்பகமாம் இதயதெய்வம் அம்மா, அந்தக் கலையுலகுக்குத் தந்த கொடைகள் பல. கலையுலகமே வியக்கும் வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு திரைப்பட நகரை உருவாக்கினார்கள், அந்தத் திரைப்பட நகரில்—மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் பெயரிலே அமைந்த அந்தத் திரைப்பட நகரின் பெயரை மாற்றி, அடுத்து வந்த ஆட்சியில் இருந்தவர்கள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நகர் என்று பெயர் வைத்தார்கள். முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்கள் என்பதற்காக மாற்றுகிறார்கள் என்று ஓலம் இடுகிறார்களே, அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தையும், அம்மா அவர்களையும்

ஒழித்துவிடலாம் என்னும் நப்பாசையில் என்னென்ன செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பெயரை மாற்றிய அந்தப் பெரிய மனிதர்கள் ஆண்ட ஐந்தாண்டு காலத்தில், அந்தத் திரைப்பட நகரை கலை உலகமே போற்றும் நகரமாக மாற்றியிருக்கவேண்டுமே. செய்தார்களா? என்ன செய்தார்கள் தெரியுமா? எழில் கொஞ்சும் அந்த நகரை, கவனிப்பாரற்று, முட்புதர் மண்டிய காடாகச் சீரழித்தார்கள். அதுமட்டுமல்ல, அந்தத் திரைப்பட நகர் முட்புதராக, காடாக வளர்ந்து, அங்கே ஒரு குறிப்பிட்ட 25 சதவிகித இடத்தில் மட்டும். அங்கே முள் காடாக இருந்த இடத்தை விட்டுவிட்டு, அங்கே சுற்றிலும் கோடீஸ்வரர்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். இன்று திரைப்பட நகரம் அந்தச் சீரழிவிலிருந்து—மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்படி அந்தச் சீரழிவிலிருந்து-- படிப்படியாக மீண்டு, அம்மா அவர்களால் சீர்பட்டு வருகிறது என்பதை இங்கே இந்த அவைக்குத் தெரியப்படுத்துவது கடமை என்று கருதுகிறேன்.

2000 ஆம் ஆண்டில் வெளிவந்த படங்களிலிருந்து சிறந்த திரைப்படம், சிறந்த நடிக, நடிகைகள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அறிக்கை வழங்கிய பிறகு, திரைப்பட விருதுகள் வழங்கும் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. மற்றும் சமுதாய நோக்குடன்கூடிய தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், மானியம் மற்றும் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு, ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, இதற்கென வரப்பெற்ற படங்களைச் சீராயும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

சங்க இலக்கியங்களில் ஒன்று புறநானூறு. அதில் அரசனின் வீரத்தைப் புகழ்ந்து பாடும் புலவன் ஒருவன் கூறுகின்றான்:—

"அரசே, நீ சினந்து நோக்கிய இடம் சீரழியும்;

நீ உவந்து நோக்கிய இடம் பொன் கொழித்துச் செழிக்கும்" என்று.

அதைப்போல, ஏழைகளின் இதயதெய்வம், எங்களின் கருணைத் தாய் மகிழ்ந்து நோக்கிடும் இடங்கள் எல்லாம் முன்னேறுகின்றன, வளம் அடைகின்றன. பார்க்கிறோம். அதேபோல, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் கருணையால் செய்தி-விளம்பரத்



துறையின் பணிகளும் சீரும் சிறப்பும் அடைந்து வருகின்றன. இதற்குச் சான்றாக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியைத் துணையாகக் கொண்டு சில அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

*அறிவிப்பு 1:* தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்த வேண்டுமென மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் உறுதி கொண்டுள்ளார்கள். அதற்கு வழிவகுக்கும் வகையில், தமிழகக் காவல் தெய்வம் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் உருவாக்கியுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க 15 அம்சத் திட்டத்தை மக்கள் புரிந்துகொண்டு பின்பற்றுவதற்கு வசதியாக, தகுந்த முறையில் விரிவான விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுரைகளின்படி, வீடியோ திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு தமிழகம் முழுவதும் திரையிடப்படும். அத்துடன், மாண்புமிகு அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டம் குறித்துப் பொம்மலாட்டம், வில்லுப்பாட்டு போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மூலமும், இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களை அனைவரும் நன்கறிய வழிவகை செய்யப்படும். நலிந்த கிராமியக் கலைஞர்கள் பலர் பயன்பெறவும், அவர்களின் வாழ்வு வளம்பெறவும் இந்த நிகழ்ச்சிகள் பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*அறிவிப்பு 2:* மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை மழையில் தமிழகத் திரைப்படத் துறையும் தற்போது நவீனம் அடைந்து வருகிறது. வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பத்திற்கு ஏற்ப, தமிழ்நாடு அரசின் திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு கிராஃபிக்ஸ், அனிமேஷன் போன்ற நவீனத் தொழில்நுட்ப உத்திகளில் சிறப்பாகப் பயிற்சி அளிப்பதற்காக, தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 11 இலட்சம் ரூபாய் செலவில் கணினி மையம் அமைத்திடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** [2002 ஏப்ரல் 30

அறிவிப்பு 3: அரசின் செய்திகளைப் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் மேம்படுத்தப்பட்ட முறையில் உடனுக்குடன் அனுப்புவதற்கு வசதியாக இணைய தள வெளியீட்டு முறை உருவாக்கப்படும். இத்துடன், முக்கியமான செய்திக் குறிப்புகளைப் பாதுகாத்து, பட்டியலிட்டு, வேண்டும்போது மீண்டும் பெற்று, நகல்கள் எடுக்க வசதியாக மின்னணு ஆவணப் பாதுகாப்பு முறையும் நடைமுறைப்படுத்தப்படும். இப்பணிக்காக 17 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் நவீனத் தொழில்நுட்பக் கருவிகள் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசியுடன் இங்கே நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்பு 4: தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் இளைஞர்கள் பலர் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்கள் பயிற்சிக் காலத்தில் தயாரிக்கும் குறும்படங்கள் உலக அளவிலும், தேசிய அளவிலும் நடைபெறக்கூடிய திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டால், தமிழக இளைஞர்களின் ஆற்றல் உலக அரங்கில் புகழ்பெற வாய்ப்புகள் உள்ளன. தமிழக இளைஞர்களின் கலைத் தொழில்நுட்பம் உலகில் சிறகடித்துப் பறக்க வேண்டுமென்று கருணைக்கடல் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தின் அடிப்படையில், பயிற்சி மாணவர்கள் தயாரிக்கும் படங்களில் ஆண்டுதோறும் குறும்படங்களைத் தேர்வு செய்து, அவற்றை உலக, தேசிய திரைப்பட விழாக்களில் திரையிடச் செய்வதற்காக 5 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 5: தமிழ்நாடு அரசின் செய்தித் துறையில் களப் பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப உத்திகளில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் இந்த அறிவுரைப்படி, அண்ணா மேலாண்மைக் கழகத்தின் மூலம் 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்தித் துறை அலுவலர்களுக்கான முதல் கட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.



அறிவிப்பு 6: தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு தயாரிக்கும் செய்தி மலர்களைத் தரம் குன்றாமல் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புச் செய்வதற்கு வசதியாக, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டிஜிட்டல் பீட்டா ரெக்கார்டர், பீட்டா எடிட் வி.சி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) போன்ற டிஜிட்டல் எடிட் செட்-அப் கருவிகள் வாங்குவதற்கு வகை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிவிப்பு 7: மாவட்டங்களில் செயல்பட்டு வரும் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகப் பயன்பாட்டிற்காக 14 விளம்பர ஊர்திகளும், 2 வீடியோ ஊர்திகளும் 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்குவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்பு 8: தமிழகக் கல்விக் கண் திறந்த கர்மவீரர் எனப் போற்றப்படுபவர் பெருந்தலைவர் காமராசர். அவரது நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"அவர் தொடாத துறைகள் இல்லை; தொட்ட துறையை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்னும் வாசகம் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கே முற்றும் பொருந்தும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, ஒற்றைத் துறையல்ல, தமிழக அரசின் ஒட்டுமொத்தத் துறைகளும் உன்னதமான துறைகளாக விளங்க வேண்டுமென்பதுதான் இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆசையாகும்.

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக, முதன்மை மாநிலமாகத் தமிழகத்தை ஆக்குவதற்கு, துறைதோறும் சாதனை படைக்க வேண்டும். அந்த வரிசையிலே செய்தி—விளம்பரத் துறையை புதுமைகளின் வார்ப்படமாக தமது பொற்கரங்களால் படைத்துக்கொண்டிருக்கிறார் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள்.

வளர்ந்து வரும் விஞ்ஞான வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வேகத்தோடு செய்தி—விளம்பரத் துறையை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் வளர்த்து வருகிறார்கள் என்பதற்கு இதுவரை நான் குறிப்பிட்ட செய்திகள் சான்றுகளாகும்.

அன்றைக்கு கீதையைச் சொன்ன பரந்தாமன், 'வேதங்களில் நான் சாம வேதமாய் இருக்கிறேன்; தேவர்களில் நான் இந்திரனாயிருக்கிறேன்; மாதங்களில் நான் மார்கழியாய் இருக்கிறேன்; பருவங்களில் நான் வசந்த காலமாய் இருக்கிறேன்' என்று பகவத் கீதையின் பத்தாவது அத்தியாயத்தில் பகர்ந்தார். அந்தப் பார்த்தசாரதி, அந்தப் பரந்தாமன் இன்றைக்கு இருந்திருந்தால், முதலமைச்சர்களில் நான் புரட்சித் தலைவியாக இருக்கிறேன் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்றும் கூறியிருப்பார் என்று நான் நம்புகிறேன்.

ஒரு மாநிலத்தின் தலைசிறந்த முதலமைச்சராய் சாதனைச் சரித்திரம் படைத்ததோடு, மற்ற மாநில முதலமைச்சர்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராகவும், வழிகாட்டியாகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாமறிவோம். இதை நாளிதழ்கள் செய்தியாக நாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இது இன்றைய நிலைமை.

நாளை, அகில இந்தியாவுக்கும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் தலைமை தாங்குகிற நாளாக மலரப் போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தாயகத்தின் தலைமைக்குத் தமிழகத்தின் நன்கொடையாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகின்ற திருநாள் வெகுதூரத்தில் இல்லை. அத்தகைய அம்மா அவர்களை வணங்கி, அனைவருக்கும் நன்றி கூறி, இத்தகைய பெரும்பேற்றை எனக்களித்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் இந்த மாநிலத்தை இன்றும், என்றும் ஆள்வார் என்று தெரிவித்து, மீண்டும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

பிற்பகல் 1-35

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் பாலகிருஷ்ணன் அவர்கள், பத்திரிகையாளர் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்யவேண்டும், அவர்களுக்கு உதவிகரமாக இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை,



சம்பந்தப்பட்ட துறைகளுடன் கலந்து ஆலோசித்து, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நிதிநிலைக்கேற்ப தீர்வு காணும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டபொம்மன் சிலை அமைப்பதற்கு—முந்தைய அரசு—வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுப் பூங்கா அமைப்பதற்காக கயத்தாறில் 30-7-2000 அன்று ஆணை வழங்கி, அந்த ஆணை நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தினால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதை நிச்சயமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் பாரிமோகன் அவர்கள், தருமபுரியில் அதியமான் கோட்டம் அமைக்கும் வகையில், இங்கே ஒரு கோரிக்கை வைத்து, அது நிறைவேற்றப்படுமா என்ற ஒரு கேள்வியை வைத்திருக்கிறார்கள். தருமபுரி மாவட்டம், தருமபுரியில், விழுப்பாச்சிபுரம் கிராமத்தில் புல எண் 308-ல் 40.5 ஏக்கர் நிலத்தை அங்கே ஆர்ஜிதப்படுத்தி, அது ஏரிப் புறம்போக்கு என்ற காரணத்தினால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் வேறு இடங்கள் தேர்வு செய்து அனுப்ப வேண்டும் என்று சொன்னபோது, அங்கே கோயில் நிலத்தைத் தேர்வுசெய்து, இந்து அறநிலையத் துறை அனுமதிக்காகக் காத்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இருந்தும், மீண்டும் அவர்களுக்கு வேறு இடங்களைத் தேர்வு செய்து அனுப்ப இந்தத் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். மற்றும் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் வைத்திருக்கிற அத்தனை கோரிக்கைகளையும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரத் துறையைப் பொறுத்தவரையில், 83 வெட்டுப் பிரேரணைகள் வரப்பெற்றன. அவற்றில் 21 பிரேரணைகள் கொள்கை விளக்கத்தைப் பற்றியும், 5 பிரேரணைகள் செய்தி வெளியீட்டுப் பிரிவு பற்றியும், விழாக்கள் மற்றும் நினைவகங்கள் பற்றி 5 பிரேரணைகளும், திரைப்படத்

தயாரிப்பு, திரைப்பட விருதுகள், மானியம் வழங்குதல் தொடர்பாக 36 பிரேரணைகளும், திரையரங்குகள் மற்றும் கேபிள் டி.வி. தொடர்பான 5 பிரேரணைகளும் வந்துள்ளன.

அரசுக்கும், மக்களுக்கும் இடையே பாலமாக இருந்து செயல்பட்டு வரும் செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் பணிகள் இன்னும் சிறக்கவும், மேம்பாடு அடையவும், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் எடுத்துக் கூறிய நல்ல ஆலோசனைகளை ஏற்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைகளின் அடிப்படையில், இந்த அரசு படிப்படியாக அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள், கோரிக்கைகள் குறித்து எனது பதிலுரையில் விளக்கங்கள் இடம் பெற்றிருப்பதால், எனது பதிலுரையை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்புடன் கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன ஞானசேகரன்?

பிற்பகல் 1-40

**திரு. எச்.எம். ராஜு*:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கர்மவீரர் காமராஜர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அரசே நடத்த முன் வந்ததற்காக நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். வீரன் அழகுமுத்துக் கோன் பிறந்த நாள் விழாவை அரசு நடத்த இருப்பதாகவும், மணிமண்டபம் அமைப்பதைப் பற்றியும் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீரன் சின்னமலை அவர்களுக்கும் ஏற்கெனவே சிலையெல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது. அவருக்கும் பிறந்த நாள் விழா நடத்துவதற்கும், அவருக்கு மணிமண்டபம் அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கோரிக்கையின்மீது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாவை அரசே ஏற்றுச் சிறப்பாக நடத்தவேண்டுமென்று சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் எங்களுடைய கோரிக்கையை உறுப்பினர் வைத்தார். அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் (குறுக்கீடு) ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பெருந்தலைவர் காமராஜர் (குறுக்கீடு) திரு. மணி,...

**திரு. ஜி.கே. மணி:** எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெருந்தலைவர் காமராஜர் பாட்டாளி மக்கள் கட்சிக்கு மட்டுமோ, த.மா.கா.வுக்கு மட்டுமோ உரியவர் அல்ல. தாமோதரன் நன்றி சொல்லப் போகிறார். விருதுநகருக்கு மட்டும் உரியவரும் அல்ல. ஆகவே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை அரசு விழாவாகக் கொண்டாட முடிவு செய்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் (மேசையைத் தட்டும் ஒலி) பேரவையின் அனைத்து உறுப்பினர்களுடைய சார்பாக, பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய நன்றியையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. எச்.எம். ராஜு*:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு அரசு சார்பில் நூற்றாண்டு விழா நடத்துவது குறித்து அறிவித்தமைக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, ஒரேயொரு கோரிக்கை; தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரசு அதிகாரம் பெற்ற புகைப்படக்காரர் இல்லை, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இது செய்தி—விளம்பரத் துறையைச் சார்ந்தது. அதற்கும், ஒரு இருட்டறையை அமைத்துத் தருவதற்கும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கையை எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடு) தாமோதரன் நன்றி சொல்லவில்லையென்றால், விருதுநகருக்குப் போனவுடன் கேட்பார்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** கல்விக் கண் கொடுத்தவர், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தின விழா, நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எங்களது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதுபோல, விருதுநகரிலும் அவருடைய புகழ் சிறக்க மணிமண்டபம் ஒன்று கட்டியும், Information Technology Park ஒன்று அமைத்தும் அமைத்தும், ஆர்ச்சகன் கொடுக்கும்படி இந்த அரசைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(ஊ) கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 27—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.



2002 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. பரிமோகன்.

**திரு. இ. பரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. பரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கை எண் 27-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 26,45,96,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 50,01,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-43 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (எ) கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி மானியக் கோரிக்கை எண் 45—தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 45-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 49,45,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 626, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் தொகுதி, சத்துவாச்சாரி, ரங்காபுரம் ராமர் கோயில் பழுதடைந்துள்ளதைச் சரி செய்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 490, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 962, திரு. என். நன்மாறன்.



**திரு. என். நன்மாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2668, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 177, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 198, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 947, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இடைப்பாடி நகரிலுள்ள பெரிய மாரியம்மன் கோயிலுக்கு நீண்ட காலமாகக் குடமுழுக்குச் செய்யாததால், அக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1373, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1846, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, ஆற்காடுகுப்பம், 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோளீஸ்வரன் கோயில் மற்றும் அதன் கோபுரங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும்



மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1978, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1120, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2599, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3322, திரு. இ. பாரிமோகன்.

**திரு. இ. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3535, திரு. அ. இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1171, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1858, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1065, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3036, திரு. வி.கே. லட்சுமணன்.



***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இந்து அறநிலையத் துறையின் மூலம் பெரிய நகரங்களில் மின் மயானம் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3689, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1134, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2365, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் தொகுதி, சுவாமிமலை, சுவாமிநாத சுவாமி ஆலயத்தில் பக்தர்கள் தங்கும் பழுதடைந்துள்ள விடுதிகளை இடித்து விட்டு புதிதாக விடுதிகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3281, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஏலகிரி மலையிலுள்ள ஸ்ரீமுருகப்பெருமான் திருக்கோயிலுக்கு ஒரு திருத்தேர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ். நடராஜன்] [2002 ஏப்ரல் 30

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3533, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, குழித்துறையில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான சிவன் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1931, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள கோயில்கள் அனைத்திலும் ஆதிதிராவிட மக்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1047, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2319, திரு. டி.கே. இராஜா.



2002 ஏப்ரல் 30]

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 49,45,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3724, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கோருகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4-35*

**(ஏ) கோரிக்கை எண் 25—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

@. 334 முதல் 365 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 25-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 181,97,16,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 726, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வீட்டு வசதி வாரியம் நட்டத்தில் இயங்குவதால், வீட்டு வசதி வாரியம் இனி புதிதாக வீடு கட்டி விற்கும் பணியைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4778, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4426, திரு. என். நன்மாறன்.





**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7953, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6571, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3923, திரு. எச்.எம். ராஜு**.

***திரு. எச்.எம். ராஜு**:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4093, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8051, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி பேரூராட்சிப் பகுதியில் அரசு சார்பில் வாடகைக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5104, திரு. கே. ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1959, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5032, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6812, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[2002 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6734, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7117, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5921, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குடிசை மாற்று வாரியம் தவணையை வசூலிக்கும்பொழுது முழு உண்மையையும், வரைமுறை மற்றும் நிபந்தனைகளையும் முன்கூட்டியே எழுத்துமூலமாக ஏழை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3781, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாபநாசம் சட்டமன்றத் தொகுதி, பாபநாசம் பேரூராட்சிப் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்



2002 ஏப்ரல் 30] [திரு. எம். ராம்குமார்]

ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் வந்தாச்சா? ரொம்ப ட்ரிம் பண்ணி வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. (சிரிப்பு) வெட்டுத் தீர்மானம் எண் 6897, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவட்டாரில் உள்ள அரசு ஊழியர்களுக்காக வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5957, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8145, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5744, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதி, நாட்றாம்பள்ளி பேரூராட்சிப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு அலுவலர் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8181, திரு. ஏ.எஸ். கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 368, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6453, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீடு கட்டித் தருவதுபோல் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4623, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் வீட்டு வசதித் துறையால் உருவாக்கப்பட்ட ஆர்.எம். காலனியில் குடிநீர் வசதி செய்து தர வேண்டியது பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 181,97,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில்



உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. இரா. திருமாவளவன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன். இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் பேசலாம். மொத்தம் 9 உறுப்பினர்களுக்குமேல் பேசவிருக்கிறார்கள். ஆளுக்கு 10 மணித் துளிகள் என்று எடுத்துக்கொள்ளுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு வீட்டு வசதி மானியத்திற்கான ஒதுக்கீட்டை நகர்ப்புற வளர்ச்சிக்கென்று தனியாகவும், வீட்டு வசதி வாரியத்திற்கு என்று தனியாகவும் அளிக்காமல், இரண்டும் ஒன்றாக இணைத்து அளிக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொன்றிற்கும் எவ்வளவு ஒதுக்கீடு என்று தெரிவதற்கு வாய்ப்பில்லாது போனாலும்கூட, சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 183 கோடி ரூபாய் இதற்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வழக்கமாக, இந்தியா கிராமங்களில் வாழ்கிறது என்று சொல்வார்கள். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டிலும், தமிழ்நாடு நகரங்களில்தான் வாழ்கிறது. 43.86 சதவிகித மக்கள் , இங்கே நகரங்களிலேதான் வாழ்கிறார்கள். அந்த 43 சதவிகிதத்திலேகூட, 25 சதவிகிதம் சென்னையிலே வாழ்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், தமிழகத்தினுடைய மொத்த மக்கள் தொகையிலே, 10 சதவிகிதம் மக்கள் சென்னையிலே வாழ்கிறார்கள் என்றுதான் நாம் சொல்ல வேண்டும். இன்று சென்னை நகரமானது, நாள்தோறும் ஜன நெரிசலினால் பல்வேறு சுகாதார வசதிகளை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாகி வருகின்றது.

---

@ 366 முதல் 421 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பிற்பகல் 4-40

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த சென்னை நகரத்திலே இருக்கக்கூடிய மிகப் பெரிய அலுவலகங்களைப் புறநகருக்கு மாற்ற முடியுமா என்ற ஒரு சிந்தனை ஒரு காலத்திலே இருந்தது. சொல்லப்போனால், இந்தச் சட்டமன்றத்தையே திருச்சிக்கு மாற்றி விடலாமா என்று ஒரு காலத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், தலைநகரையே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தலைநகரை . . .

**திரு. வி.கே. லட்சுமணன்:** புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள். இன்றைக்கு அதை நடைமுறைப் படுத்த முடியாவிட்டாலும்கூட, நகரத்திலே இருக்கிற பல தலைமை அலுவலகங்களை இன்றைக்குப் புறநகருக்கு மாற்ற முடியும். இந்து சமய அறநிலையத் துறையினுடைய தலைமை அலுவலகம் சென்னையிலே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல, கைத்தறித் துறைக்கான தலைமை அலுவலகம் சென்னையில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதேபோன்று, பெரிய வங்கிகளுடைய அலுவலகங்களைக்கூட புறநகர்ப் பகுதிகளுக்கு நாம் மாற்றுவது நல்லது. இந்த சி.எம்.டி.ஏ. என்பது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமமானது, மறைமலை நகர் வரை நீண்டிருக்கிறது. ஆனால், அந்தப் பகுதிகளெல்லாம் நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பெரிய வளர்ச்சியை அடையவில்லை. அப்படி அடையாததற்குக் காரணம், அங்கே மக்கள் சென்று குடியேறி அந்தப் பகுதியை வளப்படுத்தவில்லை. ஆகையினால்தான் இன்றைக்கு இந்தப் பெருநகரக் குழுமம் என்பது மிகப் பெரிய அளவிலே பரந்திருந்தாலும்கூட, எல்லா இடத்திலும் ஒரே மாதிரியான அமைப்பு இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு, பெருநகரக் குழுமத்தினுடைய எல்லைக்குள்ளே ஏறத்தாழ 6 இலட்சம் வீடுகள் இருக்கின்றன. இந்த 6 இலட்சம் வீடுகளிலே 3 இலட்சம் வீடுகள் விதிகளை மீறிக் கட்டப்பட்டவை—**deviations**—அதிலேகூட, வீட்டுமனையாகக் கட்டி, அதை அரசு அலுவலகத்திற்கு வாடகைக்கு விட்டிருந்தால், அதுகூட ஒரு விதி மீறல்தான். அதையும் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்த்தோம் என்று சொன்னால், மூன்று இலட்சத்திற்கு மேலேகூட இருக்கும். இதையெல்லாம் வரைமுறைப்படுத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்து, படிப்படியாக நான்கு முறை,



4 திட்டங்களை அறிவித்து, பல சலுகைகளை அறிவித்தும்கூட, இன்றைக்கும் அது நிறைவேறாமல் இருக்கிறது. இந்தச் சலுகைகளை அறிவித்ததன் பயனாக, அரசுக்கு இன்று வரை ஏறத்தாழ 120 கோடி ரூபாய் பணம் கிடைத்திருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக வந்திருக்க வேண்டிய தொகை 500 கோடி ரூபாயாகும். இதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், ஒரு கட்டடம் கட்டப்பட்டு, அது விதிமுறைகளுக்கு முரணாக இருக்கும் என்று சொன்னால், மூன்று ஆண்டுகளுக்குள்ளாக அதற்கு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பவில்லையென்று சொன்னால், அதை நாம் இடிக்க முடியாது. அந்தக் காரணத்தினால் இன்றைக்குப் பல பேர் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டடத்தை இடிக்க முடியவில்லை என்பதை நாம் இன்றைக்கு உணர்ந்தாக வேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தமட்டிலே, இன்றைக்கு உயர் வருவாய் வகுப்பினருக்கு, மத்திய வருவாய் வகுப்பினருக்கு, இவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுப்பது மட்டுமல்லாமல் குறைந்த வருவாய் வகுப்பினருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இன்றைக்கு அந்த உயர்ந்த வருவாய்ப் பிரிவிற்கு நாம் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்று சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அது அவசியம் இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். காரணம், அவர்களுக்கு அந்த நிலத்தை மட்டும் கொடுத்தால், அவர்களுக்கு நியாயமான விலையிலே வீடு கட்டும் கட்டுமானப் பொருட்கள் கிடைக்கும் என்று சொன்னால், அவர்களே அதைக் கட்டிக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, நாம் எதற்காக அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம், National Housing Policy-யிலேகூட, அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால்,— "The Government has to create a facilitating environment for growth of housing activity rather than itself taking on the task of building" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, நாமாகக் கட்டிக் கொடுப்பதைவிட அவர்கள் கட்டிக்கொள்வதற்கு உதவியாக இருப்பதுதான் சிறந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதனாலே, வீட்டு வசதி வாரியத்திற்கு ஓரளவிற்கு நல்ல பெயர் வந்திருப்பதாக என்னால் சொல்ல முடியவில்லை. உதாரணமாக சிங்காநல்லூரிலே, உப்பிலிப்பாளையத்திலே வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் இருக்கின்றன. அவர்கள் முழுத் தொகையையும்

செலுத்திவிட்டார்கள். இருந்தாலும்கூட, வீடு அவர்களுக்குக் கிரயம் செய்து கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்த வீட்டிற்குரிய நிலத்தை அரசு . . .

பிற்பகல் 4-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கையிலே வைத்திருக்கின்ற போட்டோக்களை சபாநாயகரிடம் காட்டினீர்களா? (குறுக்கீடு) இப்பொழுது என்னிடம் காண்பித்து என்ன செய்வது? பேசுவதற்கு முன்னாலே காட்ட வேண்டும்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அவையிலே காட்டவில்லை. கையிலேதான் வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அந்த வீடுகள் எல்லாம் பழுதடைந்து இன்றைக்கு அவர்கள் முழுத் தொகையையும் கட்டியிருந்தாலும்கூட, அதனைக் கையகப்படுத்தியபொழுது இருந்த கிரயத்தைக் காட்டிலும், அந்த நில உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்று, அதிகத் தொகை கோரி, அந்த வழக்கிலே வெற்றி பெற்ற காரணத்தினாலே, அந்தத் தொகையையும் நீங்கள்தான் கட்டவேண்டுமென்று 15 ஆண்டு காலம் கழித்து அவர்கள் கேட்கிறார்கள். அந்த மக்கள் அந்தத் தொகையைச் செலுத்த முடியாத நிலையிலே இருக்கிறார்கள். இதற்கு மேலாக, பழுதுபட்டுப் போன அந்த வீடுகளை யார் பழுது பார்ப்பது என்ற பிரச்சினை வ[illegible]போது, அவர்கள், சரி, நாங்கள் பாதிப் பணம் கொடுக்கிறோ[illegible] [illegible] பாதிப் பணம் கொடுங்கள் என்று சொல்லி, அப்படி ஒரு [illegible]கம் ஏற்படுத்திக்கொண்டு—ஒப்பந்தம் என்றால், உண்மையாகவ[illegible] [illegible]யெழுத்துப் போட்ட ஒப்பந்தம் (குறுக்கீடு) வாரியத்தோடு அ[illegible]டி ஒப்பந்தம் போட்டுக்கொண்டு—அந்த வீடுகளைப் பழுதுபார்த்த பின்பும்கூட வாரியமானது, நீங்கள் அந்தத் தொகைக்கு வட்டி கட்டவில்லையென்று இன்றைக்கு அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பிக் கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம் வீட்டு வசதி வாரியத்திலே கட்டப்பட்ட வீடுகளிலே வாழ்கின்றவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிறார்கள் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்றுதான் குடிசை மாற்று வாரியத்திலேயும். குடிசை மாற்று வாரியத்திலே முழுத் தொகையைக் கட்டிவிட்ட பின்னாலேயும்கூட,



திரும்ப revised cost என்று சொல்லி, கூடுதலாகப் பணம் கட்டச் சொல்கிறார்கள். அந்த வீட்டு உரிமையாளர்கள் அந்தத் தொகையைக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். கோவையிலே அம்மன்குளத்திலே இதுபோன்று ஏராளமான வீடுகள் இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் அந்தத் தொகையைக் கட்ட முடியாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகி வருகிறார்கள்.

நம்முடைய வீட்டு வசதி வாரியத்திலே, இன்றைக்கு நாம் வீடு வாங்கினால் விலை குறைவு. ஆனால் கட்டப்பட்ட பல வீடுகளை யாரும் வாங்காமல் இருக்கிற காரணத்தினால், அந்த வீட்டின் விலை மிகவும் குறைவு. மிகவும் குறைவு என்றால், ஒரு இலட்சம் ரூபாய் அளவிற்குக் குறைவு. ஆக, இதற்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகளுக்கு, அங்கே குடியிருக்கின்றவர்கள் கட்டியிருக்கிற தொகையைப் பார்த்தால், இப்பொழுது இருக்கிற விலையைக் காட்டிலும் அதிகமான விலை கொடுத்திருக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த மானியத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். அதிலே, எம்.எல்.ஏ.க்களுக்கு ஒதுக்கியிருக்கின்ற தொகையிலேயிருந்துகூடப் பழுதுபார்ப்பதற்காகப் பணம் கொடுக்கலாம் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகளை இந்த ஆண்டு பழுதுபார்ப்பதற்காக 30,514 வீடுகளுக்கு, 8 கோடியே 93 இலட்சம் ரூபாய் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்ட உதவியோடு செய்ய இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம், குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு சாலை, மின் விளக்கு, குடிநீர் வழங்குகிற திட்டம், இவற்றிற்கெல்லாம் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவழிக்க முன்வந்திருப்பதையும், 38,382 குடும்பங்களுக்கு, ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு, 49 கோடியே 96 இலட்சம் ரூபாய், அவர்கள் பயன்பெற, செலவழிக்க இருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலக் குடிசைப் பகுதியிலே மகளிருக்கிடையிலே-- மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மகளிருக்கு உதவி செய்ய அரசு முன்வந்திருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நகர்ப்புற அபிவிருத்திக்காக, புவியமைப்புத் தகவல் முறையின் மூலமாக அதைத் தெரிந்துகொள்வதற்கு அதாவது— Geographical Information System (GIS) என்ற முறையின் மூலமாக, அதைத் தெரிந்துகொள்வதற்கு ஒரு புதிய முறையைக் கையாள்வது என்பது பாராட்டுக்குரிய ஒரு செயலாகும். அதையும் நான் இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைக்கு நகரத்திலே இருப்பது . . .

பிற்பகல் 4-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: முடித்து விடுங்கள். 12 நிமிடங்கள் ஆயிற்று. (குறுக்கீடு) சரி, உரையை முடித்து விடுங்கள். இன்னும் 10 பேர் இருக்கிறார்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இன்றைக்குத் தமிழகம் முழுவதும் இருப்பது, இந்த அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகள் பிரச்சினை. அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளிலே அவர்கள் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தவில்லையென்ற காரணத்தினாலே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் கொடுத்தாலும்கூட, அதை ஏற்றுக்கொள்ள மாநகராட்சி தயாராக இல்லை. குறைந்தபட்சம் 50 சதவிகிதம் வளர்ச்சிக் கட்டணம் கட்டியிருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைக்கு அந்த வளர்ச்சிக் கட்டணம்கூடக் குறிப்பிட்ட தேதிக்குள் கட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். பல பேர் அந்தத் தேதிக்குள்ளே கட்டணத்தைக் கட்ட இயலாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகையினாலே, அந்தத் தேதியை ஒரு கெடுவாக வைக்காமல், வளர்ச்சிக் கட்டணத்தை 50 சதவிகிதம் கட்டியிருந்தால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கே அடிப்படை வசதி செய்து கொடுக்கலாம் என்று நாம் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், reserved site பிரச்சினை. அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டிலே 10 சதவிகிதம் ஒதுக்கப்பட்ட இடம் இருக்க வேண்டும்.



ஆனால், அந்த நிலத்தை விற்றவர்கள், அதையும் சேர்த்து விற்றிருப்பார்கள். அவர்களிடத்திலே அந்த 10 சதவிகிதம் நிலம் இருக்காது. நாம் இன்றைக்கு என்ன சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், அந்த 10 சதவிகிதத்திற்குப் பதிலாக, இன்றைக்கு இருக்கின்ற வழிகாட்டு விலை என்ன இருக்கிறதோ, அந்த விலையைக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு போட்டு இருக்கிறோம். அது இன்றைக்கு ரொம்ப அதிகமாகியிருக்கிறது. கோவை போன்ற நகரங்களிலே ஒரு சென்ட் விலை, குறைந்தது 2 இலட்சம் ரூபாய் இருக்கும். ஒரு 10 சென்ட் என்று சொன்னால், 20 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும். அது இயலாத காரியம். ஆகையினாலே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், அந்த மனைக்கட்டை உருவாக்குகின்றபோது Guideline Value என்ன இருந்ததோ, அதைப் பெற்றுக் கொண்டு, அந்த reserved site-ஐ நீங்கள் regularise செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்குப் பல்வேறு முக்கியமான காரியங்களை, Build, Operate and Transfer என்ற முறையின் மூலமாகச் செய்து வருகிறோம். பாலம் கட்டுவதாகயிருந்தாலும் சரி அல்லது சாலை போடுவதாகயிருந்தாலும் சரி, அப்படிச் செய்துகொண்டு வருகின்ற இந்த நேரத்திலே, வீடு கட்டுவதிலும் அப்படிச் செய்தால் என்ன என்பதை அமைச்சர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கர்நாடக மாநிலத்திலே அப்படிப்பட்ட முறையிலே கட்டப்பட்டு வருகின்றது என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நகரம் பெருகப் பெருக, சில சட்டங்கள் தேவைப்படுகின்றன. நம்முடைய சென்னையைப் பொறுத்தமட்டிலே சி.எம்.டி.ஏ. இருக்கிறது. ஆனால், சி.எம்.டி.ஏ.வில்கூட சில விதிகள் எல்லோருக்கும் தெரிகின்ற அளவிற்கு transparent-ஆக இல்லை Tamil Nadu Town and Country Planning Act-லேகூட, சட்டம் இருக்கிறது. ஆனால், விதிகள் யாருக்குமே தெரியவில்லை. விதிகள் புத்தகமாக வரவில்லை. நான் பல முறை கேட்டுப் பார்த்தேன், அந்தச் சட்டப் புத்தகம் கிடைக்கும் கடையிலே. ஆனால் விதிதான் எங்கேயும் கிடைக்காது. அதை ரகசியமாக வைத்திராமல், வெளியிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். Apartment ownership Act என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டம் இருப்பதே பல பேருக்குத் தெரியாது. அதை நாம் முறையாக அமல்படுத்தவில்லை. Lift Act என்று ஒரு Act இருக்கிறது. மின் தூக்கிக்காக ஒரு Act இருக்கிறது. இப்பொழுது நான் சொன்ன பிறகுதான், பல பேருக்குத்

தெரியும் என்று நினைக்கிறேன், அப்படி ஒரு Act இருப்பதாக அது யாருக்குமே தெரியாது. நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது. இந்த Apartment Ownership Act— என்று இருக்கிறது. Ownership Flat Act என்று ஒன்று இருக்கிறது. அது எல்லா மாநிலங்களிலும் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேதான் இல்லை. இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து-- (மணியடிக்கபெற்றது) 5 நிமிடங்களில் முடித்து விடுகின்றேன்.--இந்த இரண்டையும் இணைத்து ஒரு Comprehensive Act--Apartment Ownership Act, Ownership Flat Act, இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து ஒரு Comprehensive Act--கொண்டு வந்தோம் என்று சொன்னால், அது எல்லோருக்கும் பயன் உள்ளதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 4-55

சென்ற ஆட்சிக் காலத்தில், கடைசியாக அரசாணை எண் 150 என்று ஓர் ஆணை பிறப்பித்தார்கள். அந்த ஆணை என்ன சொல்கிறது என்று சொன்னால், அங்கீகரிக்கப்படாத மனைக்கட்டுகளில் யாரும் மனைகள் வாங்கக்கூடாது, அப்படி வாங்கினால் அதைப் பதிவாளர் பதிவு செய்யமாட்டார் என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் என்ன பிரச்சினை என்றால், கொஞ்ச நாள் கழித்து, சி.எம்.டி.ஏ.-வுக்கு உட்பட்ட நகராட்சி, ஊராட்சி, இவை தவிர, மற்ற இடங்களிலே ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்திவிட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளலாம் என்று ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் சி.எம்.டி.ஏ. எல்லைக்கு உள்ளே இருக்கிற எந்த ஊராட்சியிலும், எந்த நகராட்சியிலும் யாரும் அந்தக் கட்டணத்தைச் செலுத்தி அங்கீகாரத்தைப் பெறமுடியாத நிலைதான் இருக்கிறது. ஆகவே, அதை சி.எம்.டி.ஏ.-க்கும் பொருந்துமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆட்சியிலே, மாநகராட்சி எல்லைக்குள்ளே இருக்கிற, 10 ஆண்டுகளுக்குமேல் குடியிருந்தவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று இதே இடத்தில் சொல்லப்பட்டது. ஆனால், யாருக்கும் இதுவரைக்கும் பட்டா வழங்கப்படவில்லை. நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், வசதி படைத்தவர்களுக்கு இல்லாவிட்டாலும்கூட,



தாழ்த்தப்பட்ட மக்களுக்காவது, அதிலும் நத்தம் புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்காவது பட்டா வழங்க முன்வர வேண்டும்.

சி.எம்.டி.ஏ.வைப் பொறுத்தவரையில் பல முறை முயற்சி செய்தும், அந்த வரன்முறைப்படுத்தும் கட்டணம் நாம் எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காமல் போனதற்கு என்ன காரணம் என்று சிந்தனை செய்து பார்க்கவேண்டும். நான்கு முறை முயற்சி செய்தோம். சி.எம்.டி.ஏ. எதிர்பார்த்த அளவுக்கு 500 கோடி ரூபாய் பணம் நமக்கு வரவில்லை. ஆனால், ஆந்திரப்பிரதேசத்தில் சதுர மீட்டர் அடிப்படையில் இதை வசூலிக்கிறார்கள். நாமும் அதேபோலச் செய்தோம் என்று சொன்னால், ஒரு வேளை அந்தத் தொகை கிடைக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் ஆகப்போகின்றன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அந்தச் சட்டத்தை இங்கே அமலாக்கி அரசுக்குத் தேவையான வருமானத்தைப் பெற வேண்டும் என்று மட்டும் கூறி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வி.கே. லட்சுமணன் அவர்கள் சொல்கிறபோது, அந்த அரசாணை 150-ஐப் பற்றிச் சொன்னார்கள். அந்த அரசாணை எண் 150-ஐ எதிர்த்து 28 பேர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார்கள். ரிட் பெட்டிஷன் நம்பர் 17203 என்று ஆரம்பித்து, அதன் பிறகு 28 நம்பர்களில் வழக்குப் போட்டு அதன் பேரில் 30-10-2001 அன்று 64 பக்கங்கள் கொண்ட தீர்ப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் தீர்ப்பில் 'தடையின்மைச் சான்றிதழ்' --N.O.C.--வழங்கினால் அவற்றையெல்லாம், அதாவது வீட்டுமனைகளை எல்லாம் approve செய்யலாம் என்ற விதிமுறைகளைச் சொல்லி, அதிலே விளக்கமாக டிஸ்கஸ் செய்திருக்கிறார்கள். ஆனால், தடையின்மைச் சான்றிதழ்--கிராமத் தலைவர்கள் மட்டும் கொடுக்கிறார்களேயொழிய, பேரூராட்சிகளின் நிர்வாக அதிகாரிகளோ,

நகராட்சிகளின் ஆணையர்களோ, மாநகராட்சியின் ஆணையரோ யாருமே இதுவரை கொடுப்பதில்லை. அந்தச் சான்றிதழைக் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அரசு இதுவரை வகுக்கவும் இல்லை. ஆகவே, அந்தச் சான்றிதழ் இல்லாத காரணத்தாலே தமிழ்நாடு முழுவதும் கிராமங்களைத் தவிர, மற்றப் பகுதிகளில் எங்குமே வீட்டுமனைகளை அங்கீகாரம் செய்யக்கூடிய வேலைகள் என்பது கடந்த ஓராண்டுகாலமாக நடக்கவேயில்லை.

அந்த அரசாணை எண் 150-ஐத் திரும்பப்பெற வேண்டுமென்று நான் பல முறை இந்த மன்றத்திலே கோரிக்கை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அதைப் பரிசீலிப்பதாகவும், மேலும் ஆளுநர் உரையிலும், ரியல் எஸ்டேட் வியாபாரத்துக்குப் புத்துயிர் கொடுக்கப்படும் என்றும், பணப்புழக்கம் ஏற்படுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்கூட இந்த அவையில் அறிவித்தார்கள். ஆனால் நான் பல முறை சொன்னதுபோல, இந்தத் துறையானது பல அமைச்சர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறது. பதிவுத் துறை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடம் இருக்கிறது. (குறுக்கீடு) மனைகள், வீட்டு வசதித் துறை அமைச்சரிடம் இருக்கிறது. பகுதிகள் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கையில் இருக்கிறது. இப்படி மூன்று அமைச்சர்களின் கையில் இது மாட்டிக்கொண்டிருக்கிற காரணத்தால், இதில் ஒருங்கிணைப்பு வராமல், இந்தத் திட்டம் அப்படியே கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

ஆகவே, அரசாணை எண் 150-ஐ வாபஸ் வாங்கவேண்டும். போன ஆட்சியில் சி.எம்.டி.ஏ. எந்த ஏரியாவிலும் மனைக்கு அங்கீகாரம் பண்ணுவதற்கு வழியே சொல்லாமல் விட்டுவிட்டார்கள். 1,177 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு இருக்கக்கூடிய இந்தப் பெரிய சென்னை மாநகரத்தில் சி.எம்.டி.ஏ. ஏரியாவுக்குள் ஒரு மனையைக்கூட அங்கீகாரம் செய்யக்கூடிய வழிமுறைகளைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். இது ஒரு பெரிய ஏமாற்றத்தை, ரியல் எஸ்டேட்காரர்களுக்கு மட்டுமல்ல, ஒருவர் தன் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க, செலவுக்குத் தன் சொந்த நிலத்தைக்கூட விற்க முடியாத நிலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத்



தலைவர் அவர்களே, அந்த அரசாணை எண் 150-ஐ வாபஸ் வாங்கி, அரசாங்கத்தில் அதுபற்றிய கொள்கை முடிவை எடுத்துவிட்டால் அந்த ஜட்ஜ்மெண்ட் நம்மை நிச்சயமாகக் கட்டுப்படுத்தாது. ஆகவே, அந்த வகையில் இந்த அமைச்சரவை ஒன்றாகக் கூடி, அமைச்சரவையில் நீங்கள் முடிவெடுத்து, இந்த G.O. 150-ஐ வாபஸ் வாங்கி, மனைகளை இந்த C.M.D.A. area—விலேகூட ஒரு square meter-க்கு 10 ரூபாய் வசூல் செய்யலாம்; இல்லையென்றால் 2 ரூபாய் வசூல் செய்யலாம் என்று போட்டு, நீங்கள் development charges வாங்கி, அங்கீகரிப்பதற்கு அரசு ஆவன செய்தால்தான், இதற்கு ஒரு விடிவுகாலம் பிறக்கும் என்பதை நான் உங்களுக்கு ஒரு கருத்தாகச் சொல்லி, இதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த G.O. 150-ஐப் பற்றித் தெளிவாக, அவர் வழக்கறிஞர் என்ற முறையிலே, அந்தத் தீர்ப்பை நன்றாகப் படிக்க வேண்டும். அந்தத் தீர்ப்பிலே, தெளிவாக நீதிபதி அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, தீர்ப்புக் கூறிய பிறகு, அதற்கு மேல்முறையீடு செய்து, இப்போது உயர் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது. நீங்கள் தயவுசெய்து நீதிபதி ஜெகதீசனுடைய தீர்ப்பை, கடைசிப் பக்கத்திற்கு முந்தைய பக்கத்தை நன்றாகப் படியுங்கள். தெளிவான முறையிலே விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். எதற்காக இந்த G.O. போடப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்திலே போடப்பட்ட G.O. Panchayat President 'No Objection Certificate' கொடுப்பதற்கு, அவர்களுக்கு guidelines இல்லை என்று அதிலே பின்னாலே ஒரு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். ஆக, இந்த G.O.-வை மாற்றியமைக்க வேண்டுமென்றால், வழக்கு உயர் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது; போடப்பட்ட வழக்குகளை அவர்கள் withdraw செய்தால்தான் இந்த G.O.—வை எங்களால் மாற்றியமைக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெருமாள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு கருத்து. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, என்னை நன்றாகப் படிக்கச சொன்னார்கள். Judgement-ஐ என்னுடைய கையிலேயே வைத்திருக்கிறேன். "Hence it is made clear that.."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரும் படித்துக்கொள்ளுங்கள். நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.கே. பெருமாள் அவர்கள. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** முக்கியமான ... (குறுக்கீடு) இல்லை. முக்கியமான issue அது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** அந்த judgement-லே, கடைசிப் பக்கத்திற்கு முந்தைய பக்கத்திலே, 8-வது பாராவைப் படியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. அதற்குத்தான் நான் வருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பெருமாள், பேசுங்கள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதிக்குத் துணை நின்ற சகுனியை... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Important issue...

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பெருமாள், கொஞ்சம் இருங்கள். திரு. ஞானசேகரன் சீக்கிரம் ஒரே நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதைப் படிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே 56-வது பாராவிலே, "Hence it is made clear that the impugned Government order is applicable only for the transfer of the house sites by the land owner or promoter of the unapproved layout for the first time and the G.O. will





have prospective operation" என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே retrospective effect கொடுக்கவில்லை; N.O.C. கொடுக்கப்படவில்லை என்பதை, கிட்டத்தட்ட 7 பாராக்களிலே, உயர் நீதிமன்ற நீதிபதி மிக விளக்கமாகச் சொல்லியிருக்கிறார். N.O.C. கொடுப்பது எப்படி? அது Government Policy. அதற்கான விளக்கம்—இதுவரைக்கும் N.O.C. கொடுப்பது பற்றியே நீங்கள் வாய் திறவாமல் இருக்கிற காரணத்தினாலே, இன்னும் பல வீட்டுமனைகள் அங்கீகரிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, நிச்சயமாக, 'மனம் உண்டானால் மார்க்கம் உண்டு'; அரசு, தன்னுடைய கொள்கையை நீங்கள் மாற்றிக் கொள்வீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக இந்த judgement நம்மைக் கட்டுப்படுத்தாது. நாம் போட்ட G.O.-வுக்குதான் அவர்களுடைய judgement வருகிறது. நாம் G.O.-வை withdraw செய்தால்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் வைத்த கோரிக்கையை, அதை மாற்றியமைப்பதற்கு அரசு முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பெருமாள் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், இந்த G.O.-வைப் பற்றிய விவரங்களை எழுத்துமூலமாகக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பெருமாள் அவர்கள்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதிக்குத் துணை நின்ற சகுனியை வீழ்த்தி நீதிக்குத் தலை வணங்கிய எங்கள் குல விளக்கே! நெருப்பாற்றில் நீந்தி, சதிக்குச் சாவு மணி அடித்த அக்கினிப் பறவையே! அகிலம் போற்றும் ஆருயிர் அன்னையே! உங்களுக்காகக் கழகத் தொண்டர்கள் என்பதைவிட, உங்களால்தான் கழகத் தொண்டர்கள். காட்சி, ஆட்சி, மாட்சி என்னும் மாண்பு கண்ட எங்கள் மாதாவே! மாண்புமிகு

தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் ஆசியால், அருளால், விளாத்திக்குளம் தொகுதியில், முன்னேற்ற மலர்கள் மலர, மணம் பரப்ப, தங்களின் பொற்பாதங்களில், சொற்பதங்கள் பதித்து, வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

எனக்கு சாதியில்லை என்று உரைத்து, விளாத்தை தொகுதியின் சங்கரலிங்கபுரத்தில் சமத்துவ மலர்களை மலரச் செய்தமைக்கு முதலில் தொகுதி மக்களின் சார்பாக தங்களின் திருவடிகளுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன் அம்மா.

எளிய விழா எடுத்து, சமூக ஒற்றுமைக்கு வலிமை சேர்த்த, சமூக நீதி காத்த வீராங்கனையாம் அம்மா அவர்களைப் பாராட்டி, அனைத்து சமுதாய இதயங்களும் வாழ்த்து மழை பொழிந்து கொண்டிருக்கின்றன. சங்கரலிங்கபுரத்தில், தலித் மற்றும் தலித் அல்லாத மக்களையும், பாதுகாப்பு வளையத்தையும் மீறி, மக்களோடு மக்களாக நின்று, அவர்தம் கண்ணீரைத் துடைத்த காட்சியில் தமிழகமே நெகிழ்ச்சி அடைந்து நிற்கிறது அம்மா. இக்காட்சியே, அனைத்துச் சமுதாய மக்களையும் அரவணைத்துச் செல்லும் அற்புதமான அரசு இது என்பதற்கு சாட்சியாக உள்ளதம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)

பிறபகல் 5-05

கலவரத்தில் இறந்த காவலர் முருகனின் மகனுக்குப் படிப்புச் செலவிற்காக ரூ. 1.50 இலட்சத்தை வழங்கியதற்கும் மற்றும் சங்கரலிங்கபுரத்தில் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு ரூ 13 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை வழங்கியதற்கும் உளப்பூர்வமான நன்றிகள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்' என்ற வள்ளுவரின் குறளுக்குச் செயல் வடிவம் தந்து, பட்ஜெட்டில் வேளாண்மைத் துறையில் புதிய பசுமைப் புரட்சிக்கு வித்திட்டுள்ளீர்கள் அம்மா.

பள்ளிகள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலை மாறி, தொழிற்சாலைகள் இல்லாத கிராமங்களே இல்லை என்னும் இலக்கை அடைந்திட, முதலில் 385 ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற்சாலைகள் அமைத்திடும் தங்களின் தொலைநோக்குத் திட்டம், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அண்ணாவின் கனவினை நனவாக்கிட



அடித்தளம் அமைத்ததன் மூலம், உண்மையான திராவிட இயக்கத்தின் ஒரே ஒப்பற்ற தலைவி, ஒரே வாரிசு நீங்கள்தான் என்பதனை நிரூபித்துள்ளீர்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே விவசாயிகள் கடனுக்காக வட்டி, கடந்த ஆண்டில் ரூ. 310 கோடியைத் தள்ளுபடி செய்ததன் மூலம் விவசாயிகளின் முகத்தில் மகிழ்ச்சி மற்றும் மலர்ச்சி ரேகைகள் மலர்ந்துள்ளன அம்மா.

ஆகஸ்ட் 15, இந்திய வரலாற்றின் திறவுகோல் எனில், அம்மாவின் 15 அம்சத் திட்டம் தமிழகப் பொற்கால வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாக அமைந்து பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக அமையும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், மழை நீர் சேகரிப்புத் திட்டம், ரூ. 11 கோடி செலவில் 200 துணை தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், சுகாதார நிலையங்கள் கட்டிடும் திட்டம் என்று, கடும் நிதி நெருக்கடியிலும் அம்மாவின் மதிநுட்பத்தால் பூத்திட்ட இத்திட்டங்கள், தமிழகம் மறுமலர்ச்சியடைய தாங்கள் வழங்கிய அருட்கொடைகள் அம்மா.

'காட்' ஒப்பந்தப்படி ஆங்கில மருந்துகள் விலை ஏறும் என்பதனை அறிந்து, சித்தா போன்ற இந்திய மருத்துவ முறைகளை ஊக்கப்படுத்தி வளர்ச்சியடையச் செய்திடத் தீட்டப்பட்ட திட்டங்கள், பட்டை தீட்டிய வைரக் கற்கள் அம்மா.

பொது விநியோகத் திட்டத்தில் கூப்பன் முறையால், உரியவர்க்கு உரிய பங்கை, குறிப்பாக ஏழைகள் அடைந்திட, வரும் ஜூலைத் திங்கள் முதல் அமல்படுத்தப்பட இருப்பது இத்துறை சீரமைக்கப்பட்டு, ஏழைகளின் நலனைப் பாதுகாக்கின்ற நல்ல நடவடிக்கையாக அமையும் அம்மா. ஆண்டிப்பட்டியில் அம்மா அவர்கள் கூறியதைப்போல், ரேஷன் அரிசி விலையை உயர்த்தாமல், தொய்வின்றித் தொடர்ந்து ரூ. 3.50-க்கு வழங்கிடத் தாங்கள் ஆணையிட்டுள்ளதன் மூலம் ஏழை, எளிய மக்களின் வயிற்றில் பால் வார்த்துள்ளீர்கள் அம்மா.

அண்ணாவின் பூமியில் ஆயுதக் கலாச்சாரத்தை அழித்து, வன்முறையைத் தவிர்த்து, நன்முறை தழைத்திட அயராது பாடுபடும் அம்மாவைத் தமிழகமும், பாரதமும் வியந்து பாராட்டுகின்றது அம்மா.

இந்திய தேசத்தின் இளம் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்குக் காரணமாக இருந்த புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்திட, சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய தாயே! இந்தியாவின் எந்த முதல்வரும் செய்யத் துணியாத இமாலயச் சாதனை அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

குடிசை எல்லாம் வீடாகும் நேரத்திலே, நாங்கள் தெருவோரம் குடியேறத் தேவையில்லை என்று அன்று அம்மா அவர்கள் கூறியதைப்போல், அன்று சென்னையில் குடிசைகளின் நிலை உயர்ந்திட ரூ. 25 கோடி வழங்கியதைப் போல், வள்ளலின் வாரிசான தாங்கள் வறண்ட விளாத்திக்குளம் தொகுதியில் வாழும் குடிசைகளின் நிலை உயர அதிக நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும் அம்மா.

தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன் காத்திட சிறப்பான சலுகைகளை வழங்கி உள்ள அம்மா அவர்கள், அனைத்துத் துறைகளையும் கம்ப்யூட்டர்மயமாக்கும் அற்புதமான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியுள்ளீர்கள் அம்மா.

தங்களின் திறமைக்கு—கிராம வறுமையை நீக்கி வளம் கண்டிடவும், இந்தியாவிலேயே முத்தான முதல் மாநிலமாகத் தமிழகம் திகழும் வரலாற்றுச் சம்பவம் தமிழக வரலாற்றில் பொறிக்கப்படவும்—தமிழக மக்கள் என்றும் துணை நிற்பார்கள் அம்மா.

மாண்புமிகு அம்மாவின் ஆணையால் 1995-ல் 27 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட சிவலப்பேரி-விளாத்திக்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தி.மு.க. ஆட்சியில் சரியாக நிறைவேற்றப்படாததால், சிவலப்பேரி, பாறைக்குட்டம் உட்பட ஆறு இடங்களில் பெரிய உடைப்புகள் ஏற்பட்டு, இதுவரை குடிநீர் விநியோகம் சரியாக இல்லை. இத்திட்டத்தால் 115 கிராமங்கள் பயன்பெறுகின்றன. மீதியுள்ள 171 கிராமங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்திட தங்களிடம் சமர்ப்பித்த வேண்டுகோளின் அடிப்படையில், 7-12-2001-ல் சிவலப்பேரி-விளாத்திக்குளம், இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகளுக்குத் தாங்கள் ஆணையிட்டுள்ளீர்கள்; அதற்கு நன்றிகளைத் தங்கள் பாதங்களில் சமர்பிக்கின்றேன் அம்மா. தங்கள் திருவருளால் ஆணையிடப்பட்ட இத்திட்டம், திட்டமிட்டபடி வெற்றி கண்டிட இத்திட்டப் பணிகளை விரைவுபடுத்திட அம்மாவின் பொற்பாதங்களில் எனது வேண்டுகோளைச் சமர்ப்பிக்கிறேன் அம்மா.


பிற்பகல் 5-10

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு இதைச் சொல்கிறேன். கோவில்பட்டி-இராமேஸ்வரம் சாலையில், விளாத்திக்குளம், வைப்பாற்றின் குறுக்கே உள்ள தாம்போகி-ஆங்கிலேயர்கள் காலத்திலே கட்டப்பட்டது. 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்தக் குறுகிய தாழ்வான பாலம் [illegible]பாலமாக அமைக்கப்பட வேண்டுமென்ற விளாத்திக்குளம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவித்து வைப்பாற்றின் குறுக்கே மூன்று தடுப்பு அணைகள் அமைத்திட ஆய்வுப் பணிக்கு அம்மா அவர்கள் 28-11-2001-ல் ஆணையிட்டமைக்குத் தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியை அம்மா அவர்களின் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கின்றேன். மேலும் இத்திட்டப் பணிகளை விரைவில் தொடங்க வேண்டும் என்பதனை அம்மா அவர்களிடம் பணிவன்புடன் சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மிகவும் மோசமான நிலையிலுள்ள விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பழுது நீக்கித் தர அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தொல்லம்பரம்பு-முள்ளூர் சாலை, ஆற்றங்கரை-வேடப்பட்டி சாலை, ஆகிய இந்த இரண்டு சாலைகளையும் அமைத்துத் தருவதன் மூலம், பிற நகரங்களுக்கு விளாத்திக்குளத்திலிருந்து செல்லும் பயணத் தூரம் 20 கிலோ மீட்டர் குறைக்கப்படும். சுமார் 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் சாலை வசதியும் பெறும். எனவே, அம்மா அவர்கள் இந்த இரு சாலைகளையும் அமைத்துத்தர பணிவுடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, மிகவும் வறண்ட விளாத்திக்குளம் தொகுதிக்கு, ஏழையெளிய மக்களின் குழந்தைகள், குறிப்பாக, பெண்கள் பயன்பெறுகின்ற வகையில், அரசு பெண்கள் பொறியியல் கல்லூரி அல்லது அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத்தர வேண்டும் என்ற எனது பணிவான கோரிக்கையை அம்மாவின் மேலான பார்வைக்குப் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

நடப்பு நிதியாண்டில் அரசு வாங்கவுள்ள 2,275 பேருந்துகளில் 27 பேருந்துகளை, மிகவும் மோசமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கும்

விளாத்திக்குளம் பணிமனைக்குச் சொந்தமான பேருந்துகளுக்காக மாற்றித் தரவும், புதிய வழித்தடங்களுக்கு அனுமதி வழங்கிடவும் அம்மா அவர்களிடம எனது நெஞ்சார்ந்த வேண்டுகோளைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

விளாத்திக்குளம் தொகுதியில் ஏற்படும் மின் அழுத்தக் குறைவை நிவர்த்தி செய்திட 110 கே.வி. மின் மாற்றி அமைத்திட ஆணையிடுமாறு அம்மா அவர்களைப் பணிந்து வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, விளாத்திக்குளம் தொகுதியிலுள்ள ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சார்ந்த 15 பஞ்சாயத்துக்களையும், கோவில்பட்டி யூனியன், எட்டயபுரம் தாலுக்காவிற்குட்பட்ட பஞ்சாயத்துக்களையும் இணைத்து, புதிய பஞ்சாயத்து யூனியன் அமைத்துத்தர வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் வேண்டுகோளை அம்மாவின் மேலான பார்வைக்குப் பணிந்து, வணங்கிச் சமர்ப்பிக்கின்றேன்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திலுள்ள மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறுகின்ற கோவில்பட்டி அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி உத்தரவிட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களே, பாரதி கண்ட நதி நீர் இணைப்பை நடைமுறைப்படுத்திட மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி வரும் அம்மா அவர்கள், பம்பா-அச்சன்குளம்-வைப்பாறு நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றிட அம்மாவின் பொற்பாதங்களில் எனது பணிவான கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன். பம்பா-அச்சன்குளம்-வைப்பாறு நதிகளை இணைப்பதன் மூலம் தூத்துக்குடி, விருதுநகர், நெல்லை ஆகிய மாவட்டங்களிலுள்ள 2 இலட்சத்து 25 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயன்பெறும். மேலும் 110 கோடி யூனிட் நீர் மின்சாரமும் தயாரிக்க இயலும் என்பதால், அம்மா அவர்கள் இத்திட்டத்தைக் குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு எனது வேண்டுகோளைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் நல்லாசியுடன், விளாத்திக்குளத்தில் குளிர்பதன வசதி கொண்ட சேமிப்புக் கிடங்கு அமைத்திட ஆணையிட்ட அம்மா அவர்களுக்கு விளாத்திக்குளத்தில் தொகுதி விவசாயிகளின் சார்பாக எனது நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.



கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதிக்காக சிறப்பான திட்டங்கள் அம்மாவின் அரசால் அயராது திட்டமிடப்பட்டு செயலாக்கம் பெற்று வருகின்றன. குறிப்பாக, மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் ரூ. 30 இலட்சம், 2001-2002-ல் அரசு மானியமாக அளித்துள்ளது. குடிசைகளில் வாழும் 80 சதவிகித ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள பணிகள், வீட்டுவசதி வாரியக் குடியிருப்பில் மழை நீர் சேகரிப்பு மற்றும் சூரிய சக்தியைப் பயன்படுத்திடும் திட்டம் போன்றவை அம்மா அவர்களின் தொலைநோக்கு முன்னேற்றத் திட்டமாக இத்துறையில் அமைந்து இருக்கிறது.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, விளாத்திக்குளத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தேரைப் பழுது நீக்கிடவும். இக்கோயிலுக்குச் சொந்தமான முக்கியச் சாலையிலுள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் கட்டித் தரவும் அம்மா அவர்களின் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் அழகுமுத்துக் கோன், வீரன் சுந்தரலிங்கம், வ.உ. சிதம்பரனார், பாட்டுக் குயில் பாரதி என்று வரலாற்று நாயகர்களுக்கு சிறப்புச் செய்து வரும் அம்மா அவர்கள், சிந்துகவி பாடி தமிழர்களின் சிந்தைகளிலே நீங்காது இடம் பெற்ற அண்ணாமலைக் கவிராயருக்கு அரசு விழா எடுத்திடவும், நினைவு மண்டபம் அமைத்திடவும் ஆவன செய்யுமாறு அம்மா அவர்களுடைய பாதம் தொட்டுப் பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதி தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எனக்கு வாய்ப்புத் தந்து, இந்த மாபெரும் அவையில் பேச வாய்ப்பளித்த இதயதெய்வம், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தை நன்றியோடு சொல்லி விடைபெறுகிறேன்.

நன்றி, நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எஸ். உலகரட்சகன்.

***திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் வளர்ச்சி மற்றும் அறநிலையத் துறை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்புத் தந்தமைக்காக எனது நன்றியையும், மாலை வணக்கத்தையும் மலைபோல் தெரிவித்துக்கொண்டு, எனக்கு இங்கே இரண்டாவது முறையாகப் பேச வாய்ப்புத் தந்த எங்களது நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது வெற்றிக்காகப் பாடுபட்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், எனது தொகுதி மக்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், அறநிலையத்தில் இங்கே பார்க்கின்றபோது, கோயில் இடங்களில் எல்லாம் பெருவாரியான வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்த வீடுகளினுடைய மதிப்பு எல்லாம், 10 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் வரைகூட இருக்கிறது. 1 கோடி ரூபாய் வரைகூட இருக்கிறது. நாம் வசூலிக்கும் வாடகை, நிலவரி மட்டும் 10 ரூபாய் இருக்கிறது. இந்த நிலை போய்க்கொண்டே இருக்குமேயானால், அவர்களுக்குத்தான் லாபம் கிட்டுமே தவிர, அரசுக்கு எந்தவிதத்திலும் லாபம் கிட்டாது. அவர்களை அங்கு இருந்து நாம் அகற்றவும் முடியாது. காரணம், அவர்கள் கட்டி இருக்கின்ற வீடுகளை எல்லாம் பார்த்தால், சாதாரண மனிதர்கள்கூடக் கட்ட முடியாது. அவ்வளவு பெரிய வகையிலே கட்டி இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, அண்ணா நகரிலேகூட இருக்கிறது. நமது அரசு அவர்களிடம் பேசி, அரசாங்கத்தினுடைய விலையை நிர்ணயம் செய்து, நாம் அவர்களுக்கு விற்றுவிடுவோமேயானால் நமக்குக் கோடிக்கணக்கிலே பணம் வர வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். வாடகையை நாம் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்றுவதைவிட, வருடத்திற்கு ஒரு முறை ஏற்றினால், அவர்கள் வாடகை கட்டுவதற்கு வசதியாக இருக்கும்.

அதைப்போல, கோயில் திருப்பணிக்காக நாம் இங்கே ஒதுக்கி இருக்கும்—கொடுக்கப்படும் தொகை ரூ. 25,000/-ஆக இருக்கிறது. அந்தத் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. காரணம், ஒரு வீடு கட்டுவதற்கு



ஆகக்கூடிய செலவைவிட, கோயில் கட்டுவதற்காக என்றாலே, பல மடங்கு செலவாகிறது. இப்போது எல்லாம், சிற்பம் செய்பவர்கள் படிக்காதவர்களாக இருந்தாலும்கூட, ஒரு சிலையை வடிப்பதற்கே 2,500 ரூபாய் கேட்கிறார்கள். ஒரு சிறு கோயிலில் திருப்பணி செய்ய வேண்டுமானால்கூட மினிமம் 1 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அந்த முறையிலே, 25,000 ரூபாய் என்பதை 50,000 ரூபாயாக நமது அரசு உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எனது செய்யாறு தொகுதியிலே திருவொற்றீஸ்வரர் என்ற பெரிய புகழ் வாய்ந்த கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலிலே ஆண் பனை மரம், திருஞானசம்பந்தர் அவர்களால் பாடப்பட்டு, காய்க்காத மரம் பெண் பனையாக மாறிய வரலாறு உண்டு. இன்றும் அந்த மரம் அங்கே இருந்து கொண்டு இருக்கிறது. புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் எல்லாம், அங்கே சென்று தரிசிக்கிறார்கள். அதேபோல, வெளிநாடுகளிலே இருந்துகூட நிறையப்பேர் அங்கே வந்துகொண்டு இருகிறார்கள். ஆனால், அந்தக் கோயிலைப் பார்த்தால் மிகப் பெரியதாக இருக்கிறது. ஆனால் உருவத்தைப் பார்த்தால் அதனுடைய கம்பீரத்திலே கம்மியாக இருக்கிறது. அந்த ஊர் மக்கள் அதற்கு ஒரு திருப்பணி செய்து, கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாகச் செய்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்து, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல அங்குக் கோயிலின் உள்ளேயே ஒரு நல்ல குளம் இருக்கிறது, பெரிய குளம். அந்தக் குளத்தையும் தூர் எடுக்கவேண்டும். அது எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய 15 அம்சத் திட்டத்திலே வருகிறது. மழை நீர் சேகரிப்பு. அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அந்தக் குளத்தைத் தூர் வாரி, அந்த ஒரு திருப்பணியைச் செய்து கொடுப்பார் என்று எதிர்பார்த்து, இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் வாழைப்பந்தல் என்கிற ஒரு கிராமத்தில் புகழ்மிக்க பச்சையம்மன் ஆலயம் ஒன்று இருக்கிறது. எனக்குக் குறைவாகத்தான் தெரியும். நான் தற்சமயம்தான், இரண்டாண்டு காலமாகத்தான் அந்தத் தொகுதிக்குச் சட்டமன்ற உறுப்பினர். ஆனால் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் இந்தக் கோயிலைப் பற்றி மிக, மிக நன்றாகத் தெரியும். மிகப் புகழ்பெற்ற கோயில், பச்சையம்மன் கோயில். வெளிநாடுகளில் இருந்துகூட இங்கு வந்து தங்கி காணிக்கை செலுத்துகிறார்கள். ஆனால், அவர்கள் தங்குவதற்கு அங்கே குடில்கள் இல்லை. குளிப்பதற்கு அறைகள்

இல்லை. இந்தக் கோயிலில் அவர்கள் தங்குவதற்கும், குளிப்பதற்கும் வசதிகள் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நேரத்திலே உதவி புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கால பூஜைக்கு ரூபாய் 25,000/- நாம் வைப்பு நிதியாக வைத்திருக்கிறோம். இந்த 25 ஆயிரம் ரூபாயிலிருந்து இன்று நமக்கு மாதம் கிடைக்கக்கூடிய தொகை என்னவென்று பார்த்தால், 200 ரூபாய்கூட இருக்காது. அவர்கள் ஒரு கால பூஜைக்கு வாழைப்பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு வாங்குவதற்குக்கூட இந்தப் பணம் போதாது. ஆகையினால், இந்தத் தொகையை மேலும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 5-20

குடும்ப நல நிதி, 75 ஆயிரம் ரூபாய் என்று இருப்பதை 1 இலட்சம் ரூபாயாக மாற்றிக் கொடுக்க வேண்டும். இதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் திருராமேஸ்வரம் என்ற கோயில் இருக்கிறது—மிகப் பழமை வாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று இருக்கிறது. இந்த ஆலயம் பழுதுபட்டுவிட்ட காரணத்தால், அங்கு யாரும் செல்வதற்குப் பயப்படுகிறார்கள். இந்தக் கோயிலைப் புதுப்பித்து, குளத்தைத் தூர் எடுக்கவும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்டத்திலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களது சொந்த ஊரான திருக்கச்சூரிலே அருள்மிகு தியாகராசர் திருக்கோயிலுக்குத் திருத்தேர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை சீக்கிரம் முடித்ததற்கு ரொம்ப நன்றி. உரையை முடித்து விட்டீர்களல்லவா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் ஒரு மானியத்திலே பாதி முடித்திருக்கிறேன். (சிரிப்பு) இன்னும் அடுத்த மானியம் இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பாரம்பரியம் மிக்க சிறப்பு வாய்ந்த கட்டடக் கலை, வீட்டு வசதி பற்றிப் பேசுவது பற்றி மிகவும் பெருமைப்பட்டு, 'ஒரு குடும்பத்திற்கு



ஒரு வீடு எங்கள் குறிக்கோள்' என்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். அதே நேரத்திலே, வீடு என்பது ஒரு குடும்பத்திற்கு மட்டும் பயன்படுவதில்லை. அதற்கு மேல், வேலைவாய்ப்பு என்பது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வு, வயிற்றுப் பிரச்சினை. 400-க்கும் மேற்பட்ட கட்டடம் சார்ந்த தொழிற்சாலைகள்—Steel, Cement, Paint, கண்ணாடி, Electrical, Electronics—ஆக, பலவித hardware சாமான்களுக்கும் இந்த ஒரு தொழில்தான் முக்கியமாக இருக்கிறது. எந்த ஒரு நாட்டில் கட்டுமானம் மற்றும் Real Estate சிறப்பாக உள்ளதோ, அந்த நாட்டு மக்களின் பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும் என்பது பொருளாதார மேதைகள் சொல்கின்ற ஒரு கருத்தாகும். கடந்த 5 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் விற்பனைத் தேக்கம் என்பதால் அரசுக்கும் சரி, தனியார் துறைக்கும் சரி, கடுமையான பாதிப்பு ஏற்பட்டது என்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தி ரு. பி.ஆர். சுந்தரம், தலைமை)*

இதன் விளைவு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கட்டி முடித்து, விற்பனையாகாமல் 32,357 வீடுகள்; ரூ. 514 கோடி நிதித்தேக்கம். இதற்கான வட்டி ரூ. 134 கோடி ரூபாய் என்று இங்கே குறிப்பிடப்பட்டு, பணியாளர்களின் சம்பளத் தொகை 41.55 கோடி ரூபாய், இதற்காக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், தனியார் கட்டுகின்ற flat-களே இன்று விற்காத நிலை இருக்கிறது. காரணம், மக்களுக்குத் தேவையானதை எவ்வளவுதான் பூர்த்தி செய்தாலும், Housing Board வீடு என்றாலே, மக்கள் மனதிலே ஓர் அதிருப்தி இருக்கிறது. மேலும், மேலும் நீங்கள் பணத்தைப் போட்டு, flat கட்டி விற்பது என்ற நிலையை மாற்றி, தனியாருடன் அதற்கு ஒரு கூட்டு முயற்சியிலே நீங்கள் ஈடுபடலாம்.

அடுத்தபடியாக, ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று குடியிருப்பு. ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இது என்னவாயிற்று என்று நமக்கு இன்னும் முடிவாகத் தெரியவில்லை. குடும்பத்திற்கு ஒரு வீடு இல்லாவிட்டாலும், தயவுசெய்து அவர்களுக்கு, குடும்பத்திற்கு ஒரு வீட்டுமனைப் பட்டாவாவது கிடைக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த அரசு, கண்டிப்பாக, நிச்சயம் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். சொந்த வீடு இல்லாதவர்கள் எத்தனையோ

பேர் தலைமுறை, தலைமுறையாக சிறிய கூரை வீடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிலை எப்போது மாறுகிறதோ, அன்றுதான் நாம் சுதந்திரம் பெற்றதற்கு ஒரு சரித்திரம் படைக்கக்கூடும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

Census கணக்கெடுப்புப்படி, மக்கள் தொகையிலே திருச்சியில் 21 சதவீதமும், சேலம், மதுரையில் 20 சதவீதமும் குடிசைப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குடிசைப் பகுதிகளை மாற்றவும், சீரமைக்கவும் குடிசை மாற்று வாரியத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். கடந்த 40 ஆண்டு காலமாக இந்த வாரியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. கோடி, கோடியாகப் பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்தாலும், குடிசையிலே வாழ்பவர்கள் இன்னும் குடிசையிலேதான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். 4 பேருக்கு ஒருவர் இன்னும் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நிலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். சென்னை உட்பட பெருநகரங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த நகரங்களுக்கு அருகிலேயே துணை நகரங்கள் அமைக்கும் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். சென்னை நகருக்கு அருகில் பல நகரசபைப் பகுதிகள் இருக்கின்றன. சென்னை நகருக்கு உள்ளேயும் வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்களுக்கு எல்லாம் அடுக்குமாடி வீடுகளை, பல்லாவரம், தாம்பரம், ஆவடி, அம்பத்தூர், பட்டாபிராம், திருமுல்லைவாயில் போன்ற இடங்களிலே கட்டலாம். அவற்றைப் புறநகர்ப் பகுதிகளிலே அமைக்கலாம் இன்னும் கேளம்பாக்கம் போன்ற ஊர்களிலேயும் கட்ட வேண்டும்.

பிற்பகல் 5-25

அடுத்தபடியாக, சென்னை நகரில் (மணியடிக்கப்பெற்றது) பத்திரிகையாளர்களுக்கு என்று ஒரு காலனி கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது அது. வட்டி அதிகமாக இருப்பதன் காரணமாக அவர்களுடைய பணத்தைத் திருப்பிச் செலுத்த முடியாமல் கடனாளியாக இன்னும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே ஏற்படுகிற பழுதுபார்ப்பதற்கான செலவுகளையும் அவர்களே கட்டிக்கொண்டு இருக்கிற காரணத்தால், நாம் ஏன் இந்த ஃப்ளாட்டை வாங்கினோம்? வாடகை வீட்டிலேயே இருந்தால்கூட நிம்மதியாக இருந்திருக்கலாமே என்றெல்லாம்கூடச் சொல்கிறார்கள். அதற்காக ஆன



மெயின்டனன்ஸ் செலவை இந்த அரசு ஏற்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் இந்த அரசு பணிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** தொகுதிக்கு வாருங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் இரண்டு, மூன்று தலைமுறைகளாக சிறிய குடிசை வீடுகளில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், அவர்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளெல்லாம் அந்த வீட்டுக்குள்ளேயே படுத்துக் கொண்டிருக்கிற நிலைமை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது.

ரியல் எஸ்டேட் மிகவும் பின் தள்ளப்பட்டதற்குக் காரணம், அதிலே சில மாற்றங்களை மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆகையினால், முதலிலே இந்த சி.எம்.டி.ஏ. எனப்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உண்மையிலேயே எந்தப் பணியையும் சிறப்பாகச் செய்வதே கிடையாது. அவர்களைப் பார்ப்பதற்கு காலையிலே டைம் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், மதியம் ஒரு மணிக்குச் சென்றால், அங்கே அவர்கள் இருப்பதில்லை. ஒரு மணிக்கு மேலே அந்த சி.எம்.டி.ஏ.விலே பணி செய்வதில்லை. உள்ளே யாரையுமே அனுமதிப்பது கிடையாது. ஒரு மணிக்கு மேலே அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று யாருக்குமே தெரியாது. ஒரு பிளானை சப்மிட் செய்து, அதற்கு இன்ஸ்பெக்ஷன் செய்ய எடுத்துக்கொள்வதற்கே டைம் கிட்டத்தட்ட ஆறு மாத காலம் ஆகிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரு சாங்க்ஷன்ட் பிளான் வெளியே வருவதற்கு ஒரு வருடம் ஆகிவிடுகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** ஆந்திராவிலே எப்படி என்று கேட்டால்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** உரையை முடியுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** பிளானை சப்மிட் செய்தால்......

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** அத்தோடு உரையை முடியுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** காலையிலே பிளானை சப்மிட் செய்தால், ஆந்திராவிலே மாலையில் அதற்கான சாங்க்ஷனைக் கொடுத்துவிடுகிறார்கள். அதற்குக் காரணம், அவர்கள் போடுகின்ற square feet எவ்வளவு ஏரியா, அதற்கு எவ்வளவு பணம் கட்டுவது என்பதை அவர்கள் நிர்ணயம் செய்து, அதைக் கட்டிவிடுகிறார்கள். அதேபோல் தமிழகத்திலும், பணத்தைக் கட்டிய பிறகு இன்ஸ்பெக்ஷன் செய்து கொள்ளுங்கள். அதற்கு மீதமுள்ள தொகையை நீங்கள் கலெக்ட் செய்து கொள்ளுங்கள். அது முறை. ஆனால் பிளானை சப்மிட் செய்துவிட்டு, அதை ஆய்வு செய்வதற்கே ஆறு மாதங்கள், தேர்வு செய்து சாங்க்ஷன் செய்துகொடுப்பதற்கு 12 மாதங்கள் என்று எடுத்துக்கொண்டால், உங்களுக்கு வரவேண்டிய தொகையும் நின்றுவிடுகிறது. எங்களுக்கும் அதிலே பெரிய, பெரிய நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதை நீங்கள் கவனத்தில் கொண்டு, இதை—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன். (குறுக்கீடு) முன்பே தொகுதியைப் பற்றி நான் பேசச் சொன்னேன். (குறுக்கீடு) இல்லை, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன். (குறுக்கீடு)

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** ஜீ.ஓ. அந்த மக்களுக்கு வரவில்லை. அந்த ஜீ.ஓ. கிடைக்காததால் அந்த வீடுகளைத் தவறாகக் கட்டிவிட்டவர்களெல்லாம் எந்த முறையில் ஃபைன் செலுத்துவார்கள்? எப்படிப் பணத்தைக் கட்டுவார்கள்? எப்படிச் செலுத்துவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜீ.ஓ. கிடைப்பதற்கு நீங்கள்.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** அந்த ஜீ.ஓ. பற்றி அமைச்சரிடம் எழுதிக் கொடுத்து விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன். (குறுக்கீடு) அமைச்சர் கையில் கொடுத்துவிடுங்கள். திரு. போளூர் வரதன், நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) எழுதிக் கொடுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** நீங்கள் எழுதிக் கொடுத்துவிடுங்கள். 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** தொகுதி பற்றிச் சொல்லி விடுகிறேன். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் ஒரு கரும்பாலை சிறப்புமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஆலை இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த ஆலையும் அந்த மாதிரி இயங்கவில்லை. அதற்கு வருகின்ற கரும்பை வாலாஜாபாத்தில் இயங்குகின்ற ஒரு சர்க்கரை ஆலைக்கு, ஒரு ஒன்றியத்தினுடைய கரும்பு திரும்புவதாகப் பேசிக்கொள்வதால், விவசாயிகளிடையே பெரிய பதற்றம் ஏற்பட்டு, போராட்டத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ஒரு சூழ்நிலை உருவாகுமானால், அது விவசாயிகளுக்கு இந்த அரசு செய்கின்ற ஒரு நன்மையாகாது. ஆகவே, அதைத் தவிர்க்கும்படி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் இன்று இல்லாத நேரத்திலே எனது தொகுதிக்கு சிப்காட் சாங்க்ஷன் செய்து இருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு நிமிடம். 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளாக பிரம்மதேசத்தில் ஒரு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்படவில்லை. இது என்னைவிட மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு மிக, மிக நன்றாகத் தெரியும். ஆரணி சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும். ஆற்காடு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும். அந்தப் பாலத்தினுடைய செலவு ஆறு கோடி ரூபாய். உலக வங்கியிலே sanction ஆன அந்தப் பணத்தை வேறு எதற்கோ மாற்றிவிட்டார்கள் சென்ற காலத்திலே. இந்த அரசு கண்டிப்பாக நிச்சயமாக அதைச் செய்தால் அவர்கள் செல்லும் தூரம் 30 கிலோ மீட்டர் குறைகிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டிப்பாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு....

பிற்பகல் 5-30 [2002 ஏப்ரல் 30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பீ.ஆர். சுந்தரம்):** உரையை
முடித்துவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன்
அவர்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர்
அவர்களே, தமிழ் வளர்ச்சி—அறநிலையத் துறை, வீட்டு வசதித் துறை
மானியங்களின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத்
தெரிவித்துக்கொள்கிறேன். முன்னுரையிலேயே, 'ஆலயம் தொழுவது
சாலவும் நன்று' என்ற வாசகம் இங்கே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது
என்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது.
கடந்த கால ஆலயம் என்று வருகின்றபோது, தமிழகத்தினுடைய
பழமை வாய்ந்த, சரித்திரம், கலாச்சார மரபுகள், சிற்பக் கலை,
கட்டடக் கலை, ஓவியக் கலை போன்ற எல்லாவிதமான அம்சங்களைக்
கொண்ட துறையாகக் கோயில்கள் ஒரு காலத்திலே திகழ்ந்தன.
மன்னர்கள் ஆண்டபோது, அவர்களுடைய ஆட்சியினுடைய
வரலாறுகளை, ஆலயங்கள் கட்டி, அந்த ஆலயத்திலே சிற்பங்களாக,
எழுத்து வடிவத்திலே பொறித்திருக்கிறார்கள் என்பதை நாம்
பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஓர் ஆலயம் கட்டப்படுகின்றபோது, அந்த
மன்னர்கள், பிற்காலத்திலே அதனை நிர்வாகம் செய்வதற்காக
விலையுயர்ந்த நகைகள், வைரம், வைடூரியம், மாணிக்கம் போன்ற
நகைகள், அணிகலன்கள், நிலம், கட்டடங்கள் என எல்லாச்
சொத்துகளையும் அந்த இறைவனுக்கு எழுதி வைத்து ஆலயங்களைக்
கட்டினார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட ஆலயங்கள் இன்றைக்கு
தமிழகத்திலே பொலிவோடு காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன.
அப்படிக் காட்சியளிக்கின்ற ஆண்டவன், கடந்த காலங்களிலே அடிக்கடி
காணாமல் போய்க் கொண்டிருக்கிறான். எப்படி அந்த ஆண்டவன்
காணாமல் போகிறான் என்பது எனக்குத் தெரியவில்லை; மாற்றுத்
தலைவருக்குத் தெரிந்தால் சொன்னால்கூடப் பரவாயில்லை.
ஆண்டவனே காணவில்லை என்கிறபோது—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பீ.ஆர். சுந்தரம்):** உங்களுக்குத்
தெரிந்ததை இந்த அவையில் நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** இருந்தாலும், தமிழகத்திலே கிட்டத்தட்ட
36,355 கோயில்கள் இருக்கின்றன என்று நீங்கள் கணக்குக்





கொடுத்திருக்கிறீர்கள். பெரிய, பெரிய மன்னர்கள் கட்டிய கோயில்களிலே விக்கிரகம் காணவில்லை; சிலை காணவில்லை; நகைகள் காணவில்லை, உண்டியல் காணவில்லை; நிலமும் காணவில்லை; கட்டிய வீடுகளும் காணவில்லை என்று சொன்னால், அதுதான் நான் யோசித்துப் பார்க்கிறேன். பழைய காலத்தில் மன்னர்கள், வேண்டுமென்று சேர்த்து வைத்தார்கள். நவீன காலத்திலே, இப்போது Computerised யுகத்திற்குப் போய்விட்டோம் நாம். அதனால்தான் திடீர், திடீரென்று ஆண்டவன் நாம் computerise பண்ணும்போது மறைந்து போகிற மாதிரி ஆண்டவனே கோயிலிலே மறைந்து விடுகிறானோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இந்து அறநிலையத் துறை அமைச்சர் திறமையானவர், இவற்றை கண்டுபிடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதைச் சொல்வதற்கு ஒரு சின்னக் குறிப்பை மட்டும் நான் சொல்கிறேன்.

*பிற்பகல் 5-35*

1996-லே தமிழகத்திலே கோயிலிலே திருட்டு, சிலைத் திருட்டு, நகைத் திருட்டு, உண்டியல் உடைப்பு மட்டும் 121 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1997-லே 90 வழக்குகள்; 1998-லே ,53 வழக்குகள்; 1999-லே 99 வழக்குகள்; 2000-லே 96 வழக்குகள்; 2001-லே, அந்த ஆட்சி இருக்கிற வரைக்கும் 23 வழக்குகள்; இந்த அரசு வந்த பின்னாலே 2001-2002-லே 72 வழக்குகள். இப்படி ஒரு ஆறு, ஏழு வருஷமாகப் பார்த்துக்கொண்டு வந்தால், கோயிலிலே இருக்கிற ஆண்டவனைக் காணோம், நகையையும் காணோம், நிலத்தையும் காணோம், வீடும் காணோம், வாசலையும் காணோம், ஒன்றையும் காணோம். என்னைப் போன்ற ஆளுக்கு ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால், ஒன்றும் இல்லை. அது எங்கே போயிற்று? ஒன்றும் இல்லீங்க. கபாலீஸ்வர் கோயில் மெட்ராசிலே பிரசித்திபெற்ற ஒரு கோயில். அந்த கபாலீஸ்வரர் கோயிலுக்கு நிறைய வீடுகள் இருக்கின்றன. நிலம் இருக்கிறது. எல்லோருக்கும் தெரியும். இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னாலே, ஒரு நாள் அந்தப் பக்கம் காரிலே போய்க்கொண்டிருந்தபோது, போலீஸ்காரர்கள் லத்தி சார்ஜ் பண்ணிக்கொண்டிருந்தார்கள். பக்கத்திலே தாலுக்கா ஆபிஸ் இருக்கிறது. அந்தத் தெருவே மந்திரிகள் வீடுகள் உள்ள கிரீன்வேஸ் ரோடு. ஏன் அங்கு இந்த மாதிரி நடக்கிறார்களே என்று நான் காரை தூரத்தில் விட்டுவிட்டு நின்று கேட்டால், சொன்னார்கள். கோயில் நிலம் அங்கே ஒரு 80 சென்ட் இருக்கிறது. அதைச் சிலர் பிடித்துக் கொண்டு பில்டிங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். யாரோ ஒரு பெட்டிஷன்

போட்டுவிட்டார்களாம். இங்கே இருக்கிற ஒரு டி.சி. வந்து கேட்டதற்கு டி.சி.-ஐப் போட்டு அடித்துவிட்டார்கள். Deputy Commissioner of Police-ஐயே அடித்துவிட்டார்கள். அதனாலே, காவல் துறை, அபிராமபுரம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர் வந்து கேட்டார். அவர் சட்டையைக் கிழித்துவிட்டார்கள். பின்பு யாரய்யா இதைப் பண்ணுகிறார்கள் என்றால், அதுதான் தெரியாது என்று சொல்கிறார்கள். இன்றைய வரை பல மாடிக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1991-96-லே இந்த வழக்கு வந்தது. ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீஸர் தலைமையிலே ஒரு குழு அமைத்து விசாரிக்கச் சொன்னார்கள். விசாரித்தவர், ஆட்சி மாற்றத்திற்குப் பின்னாலே அந்த நிலங்கள் எப்படிப் போகின்றன என்றுகூட ஒரு தீர்ப்புச் சொல்லாமல் போய்விட்டார்கள்.

இந்த நிலையைப் பார்க்கின்றபோது, பணம் படைத்தவர்கள், அதிகாரம் படைத்தவர்கள் இன்றைக்கும் ஆக்கிரமிப்புப் பண்ணியிருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அது மட்டும் அல்ல. திருவல்லிக்கேணியிலே திருவட்டீஸ்வரன் கோயில் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஸ்டார் தியேட்டருக்குப் பக்கத்திலே இருக்கிறது. அந்தப் பக்கத்திலே இருக்கிற கோயிலுக்கு, ஆற்காடு நவாப், ஒரு முஸ்லீம்—நவாப் என்று சொல்லும்போதே முஸ்லீம் என்று எல்லோருக்கும் தெரியும். ஆற்காடு நவாப். அவர் வீடு அமீர் மஹாலுக்குப் பின்னாலே; 222 கிரவுண்டு நிலத்தை எழுதி நகைநட்டோடு—போட்டுக்கொடுத்தார், சாமிக்கு என்று, திருவட்டீஸ்வரனுக்கு. அந்த திருவட்டீஸ்வரன் கோயில் நிலம் சினிமாத் தியேட்டராக ஆகியிருக்கிறது. சினிமா ஓடுகிறது இப்போது. அந்த ஆட்சியிலே 2000 கோடி ரூபாய் —Sorry— 200 கோடி ரூபாய், கோயில் சொத்துகளான 200 கோடி ரூபாய் இந்த அரசு எடுத்தது என்று விளம்பரப்படுத்தினார்கள். 2 ரூபாய் எடுத்தார்களா என்று கேட்டால், இல்லை. 222 கிரவுண்டு நிலத்தையும் இன்றைக்குப் பலர், வருமான வரி கட்டக்கூடியவர்கள், வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள், மில் அதிபர்கள், தொழில் , அதிபர்கள் ஆகியோரிடமுள்ளது. --சினிமாத் தியேட்டரும் இருக்கிறது இப்போது அதிலே. கோயில் நிலத்திலே சி.எம்.டி.ஏ. எப்படி இதற்கு அனுமதி கொடுத்தார்கள்? ஒரு சினிமா தியேட்டர் ஆரம்பிக்க வேண்டும் என்றால், அரசாங்கத்தில் பல விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் அனுமதி எந்த நிலத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், கோயில்



நிலத்திற்கு. அப்படிக் கொடுத்திருப்பார்களேயானால், எப்படி நீங்கள் அதை அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள்? யார் அந்தப் பெரிய மனிதர்? எண்ணிப் பாருங்கள். அது மட்டுமல்ல.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பல நேரங்களிலே, தமிழகம் முழுவதும் இருக்கிற—வேறு ஒன்றைச் சொல்ல வேண்டும். தாம்பரத்திற்குப் பக்கத்திலே மாடம்பாக்கம் என்று ஓர் ஊர் இருக்கிறது. இங்கிருக்கிற பல அமைச்சர்கள்கூட அந்தக் கோயிலுக்குப் போய் இருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். தேனுபுரீஸ்வரர் என்று அந்தக் கோயிலின் பெயர். தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மக்களுடைய இதயக்கனியாக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலம் இல்லாத நேரத்திலே அமெரிக்காவிற்குப் போய் இருந்தார். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அம்மாகூட அந்த தேனுபுரீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று, காலை முதல் மாலை வரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல்நலம் பெற வேண்டும் என்று அர்ச்சனை செய்தார்கள். பிரசித்திபெற்ற ஒரு கோயில். சோழர் காலத்திலே கட்டப்பட்டது. அந்தக் கோயில் உள்ளே உள்ள அந்தக் கோபுரம் இடிந்திருந்தது. கடந்த கால ஆட்சியிலே; 1998-லே; என்ன, எப்படித் தகவல் என்று எனக்குத் தெரியாது. அமைச்சர் கண்டுபிடிக்க வேண்டும். அரசாங்கம் கண்டுபிடிக்க வேண்டும் இதை. அந்தக் கோயில் கோபுரத்தின் மேலே போய் ஒரு கடப்பாரையை வைத்து ஆட்டியிருக்கிறார்கள். கடப்பாரை கோபுரத்திற்கு உள்ளே போய்விட்டது. என்ன இந்தக் கடப்பாரை உள்ளே போகிறது என்று சொல்லி அதன் உள்ளே ஒரு ஆளை இறக்கிப் பார்த்தார்கள். கோபுரத்திற்கு மேலே. ஆள் உள்ளே போய் நடந்து போகிறான். நடந்து அந்தக் கோயிலுக்குள்ளே கீழே போனவுடன், வெளியே போனால் ஒரு குளம் இருக்கிறது, ஒரு சைடில். இன்னொரு சைடில் ஒரு வழி இருக்கிறது என்று நுழைந்து பார்த்தால், முருகன் கோயில் வருகிறது. இரண்டு சுரங்கப் பாதைகள் உள்ளே இருந்து இருக்கின்றன. ராஜாவும், ராணியும், விரோதிகளால் ஆபத்து ஏற்படுகின்ற நேரங்களிலே கோபுரத்தின் மேலே ஏறிப் பார்க்கிறபோது அந்தச் சொத்தையும், அந்த நாட்டையும் காப்பதற்கு எடுக்கின்ற முடிவுகளை கோயிலுக்கு உள்ளே இருக்கின்ற அந்தச் சுரங்கப் பாதை வழியாகச் சென்று மக்களுக்குச் சொல்கிற ஓர் இடமாக அதை வைத்திருக்கிறார்கள். அதிலே, அந்த

எண்ணுகிறார்களே, ஏன்? கடவுள் இல்லையென்று சொல்கிறீர்கள், ஆனால் உண்டியல் இருக்கிறதே, நகை இருக்கிறதே, அது வேண்டுமென்று வருகிறீர்கள். இது என்ன Policy? புரியவில்லை. அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலே கடந்த காலங்களிலே நாகப்பட்டினம் மாவட்டத்திலே மயிலாடுதுறை எல்லோருக்கும் தெரியும். அங்கே சிவராமபுரம் என்ற ஊரிலே அருள்மிகு இராமசாமிப் பெருமாள் திருக்கோயில் இருக்கிறது. ஐந்து விக்கிரகங்கள் 5-5-1997-ல் களவாடப்பட்டன. இதுவரையில் அவை கண்டுபிடிக்கப்பட்டனவா என்றால், இல்லை. நம்முடைய பேரவைத் தலைவர் இருந்தால், அவரிடம் நான் கேட்க வேண்டுமென்று நினைத்தேன். அவர் இல்லையென்றாலும் நான் கேட்கிறேன். மதுரை மாவட்டத்திலே பேரையூர் தாலுக்காவிலே ஈஸ்வரபேரி என்ற கிராமத்தில் அருள்மிகு அக்கினீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அங்கு எட்டு உற்சவ மூர்த்தி சிலைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன 7-8-1997-ல். கண்டுபிடிக்கப்பட்டதா என்றால், இல்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் மாணிக்க விநாயகர் திருக்கோயிலில் 6-1-1998-ல் இரண்டு உற்சவ சிலைகள் திருடு போனது. இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

சிவகங்கை மாவட்டம் நிறைய வீரர்கள் பிறந்த மண். நிறையக் கோயில்கள் கட்டியிருக்கிறார்கள். தர்ம சிந்தனை உள்ளவர்கள் வாழ்ந்த மண் என்று இன்றைக்கும் போற்றுகிறோம். ஆனால், இளையான்குடி தாலுக்காவிலே அருள்மிகு சந்திரசேகரசுவாமி திருக்கோயிலிலே 10 உற்சவ மூர்த்தி சிலைகள் களவாடப்பட்டிருக்கின்றன 2-8-1999-ல். இதுவரைக்கும் கண்டுபிடிக்கப்பட்டதா என்றால், இல்லை.

பிற்பகல் 5-45

திருவள்ளூர் மாவட்டத்திலே, பொன்னேரி தாலுக்காவில் திருமணந்தீஸ்வரர் ஆலயம். மூன்று பழைய விக்கிரகங்கள், பொன்னால் செய்யப்பட்டவை என்று சொல்கிறார்கள். 4-1-1999-ல் திருடு போனது இன்று வரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. அது மாதிரி திண்டிவனத்தில் அர்த்தநாரீசுவரர் கோயில். நிரந்தரமாக உண்டியல் இருந்தது;. நிரந்தரமான உண்டியலையே தூக்கிக் கொண்டுபோய் இருக்கிறார்கள், இரவிலே, 3-4-2001-ல். உண்டியலைக் காணோம். இப்படி திருவாரூர் மாவட்டத்தில், மன்னார்குடியில் புண்ணியபுரம், அருள்மிகு அர்த்தநாரீசுவரர் கோயிலில் 11-3-2001 அன்று விக்கிரகம், தங்கம், சாமியினுடைய தாலி, வைரக் கிரீடம் எல்லாவற்றையுமே தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள். இதுவரைக்கும் கண்டுபிடித்தார்களா



என்று சொன்னால், இல்லை, அது மாதிரி சேலம் மாவட்டத்தில். தமிழ்நாடு முழுக்க இப்படி சொல்லிக்கொண்டே போகமுடியும்.

இப்படி ஆண்டவனுடைய சொத்துகளைக் கொள்ளையடிப்பதற்கு என்று ஆட்சியை நடத்தக் கூடாது. ஆண்டவன் பெயரால் முதல் வரியை நான் எழுந்திருக்கும்பொழுதே படித்தேன். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று சொன்னேன். ஆலயத்தைக் கொள்ளையடிப்பதுதான் என்று சாலவும் நன்று என்று ஆட்சிகள் மாறிக் கொண்டு இருக்கும்பொழுது, அந்தக் காட்சிகளை அம்மாவினுடைய அரசு மாற்றியமைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. இன்றைக்கு இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் 63 ஆலயங்களில் மதிய நேரத்திலே, அங்கே வருகின்ற, கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுக்கு உணவு வழங்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாராட்டுக்குரிய ஒரு திட்டம். ஏன் இதை நான் சொல்கிறேன் என்று சொன்னால், அந்தக் கோயிலுக்கு வருகின்றவர்கள் எல்லாம் ஏழைகள் இல்லை. கோயிலுக்கு வருகின்றவர்கள் எல்லாம் கோயிலிலே சோறு வாங்கி சாப்பிட்டு விட்டுப் போகவேண்டுமென்று வரவில்லை. ஆண்டவனைத் தொழுகின்றபோது, சுத்தமான மனதோடு வருகின்றவர்களுக்கு அங்கு உணவு அருந்திவிட்டுச் செல்லுகின்றபோது அந்த ஆண்டவன்மீது ஈடுபாட்டை அவர்கள் நினைத்துப் பார்ப்பார்கள். அந்தக் கோயிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்கின்ற உணர்வு அவர்களுக்கு வரும். நல்ல பாதையில் செல்வதற்கு இந்த மதிய உணவு—ஒரு பாதையை மாற்றியமைப்பதற்கு—உதவும். அந்த நல்ல திட்டத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எப்படி சத்துணவு திட்டம் கொண்டு வந்தாரோ—அந்தத் திட்டத்தை இன்றைக்கு ஒழிக்க முடியாது.—அதேபோன்று வருங்காலத்தில் இந்தக் கோயில்களில் கொடுக்கின்ற இந்த உணவு, ஒரு புதிய திட்டமாக வளரவேண்டும். அதற்கு இந்த அரசு நல்ல முடிவுகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாதிரி, என்னுடைய தொகுதிக்குப் போகிறேன். என்னுடைய தொகுதியில் 600 வருடங்களுக்கு முன்னர், மதுரையை ஆண்ட மன்னருடைய தளபதி, சாளுக்கியர்களோடு அங்கு வந்து சண்டை போட்டிருக்கிறார், செங்கத்தில். சண்டை போட்டு, வெற்றி பெற்ற பின்னாலே அங்கு ஒரு பெருமாள் கோயிலைக் கட்டி, 300 ஏக்கர் நிலம், எல்லா நகைகளையும் கொடுத்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார். இன்றைக்கு 3 ஏக்கர் நிலம் மட்டும்தான் அந்தப் பெருமாள் கோயிலுக்கு

இருக்கிறது. 150 மீட்டர் நீளம், 100 மீட்டர் அகலம் உள்ள ஒரு பெரிய கோயில். இராமாயணத்தில் வருகின்ற சிற்பங்கள் அங்கே பொறிக்கப்பட்டு இருக்கின்றன. வெறும் 3 ஏக்கர் நிலம்தான் இருக்கிறது இன்றைக்கு. பிரசித்திபெற்ற ஒரு கோயில். அந்தக் கோயிலிலே கும்பாபிஷேகம் செய்து, போன அந்த 300 ஏக்கர் நிலத்தை மீட்டுத் தந்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு சாமியை வணங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். இருக்கிற சிலை போவதற்கு வாய்ப்பாக இருக்காது. சிலைகள் எல்லாம் இருக்கிறதா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. E.O. இருக்கிறார். என்ன பண்ணுகிறார் என்று தெரியாது. அது மாதிரி அண்ணாமலையார் கோயில். பிரசித்திபெற்ற கோயில் திருவண்ணாமலையிலே. கிரிவலம் வருவதற்கு இலட்சக்கணக்கிலே மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள், இரவு, பகலாக அந்த மலையைச் சுற்றி வருகின்றபோது, தாய்மார்கள் செல்லுகின்றபோது அவர்களுக்குக் கழிப்பிடங்கள் இல்லை. ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அங்கே உடனடியாகக் கழிப்பிடங்களை நீங்கள் அமைத்துத் தர வேண்டும். அதுமட்டுமல்லாமல், இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றபோது, அந்த நகரத்திலே தங்குவதற்கு சரியான இட வசதிகள் இல்லை. சில தனியார்கள் வைத்திருக்கின்ற லாட்ஜுகளில் நிறைய வசூல் பண்ணி பொது மக்களிடத்திலே பணத்தைச் சுரண்டுகிறார்கள். சாதாரண மக்கள் வருகின்றபோது தங்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அங்கே நிறைய இடம் இருக்கிறது, கோயிலைச் சுற்றி. காலியிடங்கள், கோயிலுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடங்களைப் பயன்படுத்தி நீங்கள் அங்கே சரியான லாட்ஜுகளைக் கட்டினால் அங்கு வந்துபோகின்ற அந்த பக்தர்களுக்கு அது வாய்ப்பாக இருக்கும். அதுமட்டுமல்ல, கிரிவலம் வருகின்றபோது சமூக விரோதிகள் மாலை 7 மணிக்குப் பின்னர் மலையைச் சுற்றி வருகின்ற பகுதிகளிலே கள்ளச் சாராயத்தை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். ஒரு புனிதமான இடத்திலே —இலட்சக்கணக்கான மக்கள் கிரிவலம் வருகின்றார்கள். வருகின்றபோது இப்படித் தவறான செயல் நடக்கிறது. நீங்கள் அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான் Housing Minister-க்கு இரண்டு requests சொல்லப் போகிறேன். வேறு ஒன்றுமில்லை.. B & C மில் கடந்த கால அம்மா ஆட்சி இருக்கின்றபோது அந்த் ஊழியர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று முயற்சித்தார்கள். தி.மு.க. அரசு வந்தவுடன் அந்த மில்லை மூடியதால் கிட்டத்தட்ட ஒரு 3,000 குடும்பங்கள்



பாதிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் துறையாக மாற்றியவுடன் அவர்கள் VRS-லே நிறையப் பேரை வெளியே அனுப்பிவிட்டு, பணமும் கொடுக்கவில்லை. 1¼ இலட்சம் ரூபாய் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டு, அதையும் கொடுக்கவில்லை. நிறைய வீடுகள் இருக்கின்றன. ரொம்பப் பேர் செத்தே போய்விட்டார்கள், அங்கே வேலை பார்த்தவர்கள். ஆட்களே இல்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்துகொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அந்த இடங்களையும், அந்த வீடுகளையும் எடுத்து, இந்த மாதிரி ஏழைகளுக்கு, கடைசியாக அங்கே யார் குடியிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கொடுக்கலாமே. அந்த வீட்டை. அந்த இடத்தை அரசாங்கம் தனியாருக்கு விற்கிறது. (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

பிற்பகல் 5-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன.

**திரு. போளூர் வரதன்:** கிட்டத்தட்ட 10,000 பேர் பற்றிய பிரச்சினை இது. அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிப்புக்குள்ளான அந்தத் தொழிலாளர்களுக்கு, அந்த வீடுகளை நீங்கள் ஆர்ஜிதம் செய்து, நீங்கள் ஏற்கெனவே அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்தை இதிலேயிருந்து சரி பண்ணி, அந்த வீடுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிறைய வீடுகள் கட்டி, நிறைய ஸ்கீம்கள் எல்லாம் சொல்கிறார்கள், நம்முடைய வீட்டு வசதி வாரியத்திலே. வீடுகள் வாங்கவில்லை, வாங்கவில்லை என்று விளம்பரம் பண்ணுகிறீர்கள். தரமில்லாத வீடுகளைக் கட்டுகிறார்கள். அந்த வீடுகள் தரமில்லாத வீடுகள். நீங்கள் என்னதான் சீட்டுப் போட்டு அதிகாரிகளுக்கு அந்த வீட்டைக் கொடுத்தாலும், நான் என்ன சொல்கிறேன் என்றால், கடந்த கால ஆட்சியிலே கட்டிய வீடுகள்தான், இன்றைக்கும் அந்த வீடுகள் விலை போகவில்லை என்பதுதான். இப்போதுதான் வீடுகளே கட்டவில்லையே! உங்களிடம்தான் காசே இல்லையே? காசு வந்தபிறகுதான் நீங்கள் கட்டப் போகிறீர்கள். கட்டிய வீடுகள் விற்பனை ஆகவில்லை. காரணம், தரம் இல்லாமல் கட்டியிருக்கிறார்கள். மக்களுடைய எண்ணங்களைப் புரிந்துகொள்ளாமல் கட்டியிருக்கிறார்கள். போக்குவரத்து வசதி இல்லாத இடத்திலே போய்க் கட்டியிருக்கிறார்கள்.

[திரு. போளூர் வரதன்] [2002 ஏப்ரல் 30

தண்ணீர் வசதி கிடையாது; சாலை வசதி கிடையாது. எந்த வசதியும் இல்லாத இடத்திலே காட்டிலே போய்க் கட்டினால், யார் வாங்குவார்கள்? இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அப்படிப்பட்ட வீடுகளை நீங்கள் எந்த விலை வந்தாலும் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறீர்கள். ஆனால், வாங்குவதற்கு ஆட்கள் இல்லாத நிலை இருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கு, அப்படி யார் தவறு பண்ணியிருந்தாலும், அந்தத் தவறு செய்த அதிகாரிகள்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசாங்கப் பணம் இன்றைக்கு விரயமாகிக் கொண்டிருக்கின்றது; விரயம் ஆக்கப்பட்டிருக்கிறது. அவற்றை மீண்டும் அரசாங்கத்தினுடைய கஜானாவிற்குக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கூறி, வாய்ப்புத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு point of order. 5-41-க்கு திடீரென்று ஒரு மின் வெட்டு ஏற்பட்டு, நம்முடைய அவையே கொஞ்சம் இருளில் வந்து, திரும்ப வெளிச்சம் வந்திருக்கிறது. மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்குவாரா? ஏன் இப்படி மின் வெட்டு, அவை நடக்கிறபோதே வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது, மின்னலைப் போல வந்தது மின் வெட்டு. வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை மின் வெட்டாகக் கருத முடியாது. நொடிப்பொழுதிலே மீண்டும் வந்துவிட்டது. இரண்டு தினங்களுக்கு முன்பு பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். பாராளுமன்றத்திலே அரை மணி நேரம் மின்சாரம்—கரெண்ட்—இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலும், தமிழகத்திலும், இறை வழிபாடு, ஆன்மீக உணர்வு, இவை எல்லாமே தனி மனித உரிமைகளைச் சார்ந்தவை. இத்தகைய உணர்வுகளுக்குக் குறுக்கே நிற்பதையும், இத்தகைய உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய விதமாக நடந்துகொள்வதையும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கவில்லை. அதே சமயத்தில், இத்தகைய உணர்வுகளோடு அரசியலைக் கலக்கக்கூடிய அரசியல் நிகழ்வுகளை நாங்கள் ஏற்கவில்லை. ஆன்மீக உணர்வோடு நாத்திக உணர்வும் கலந்ததுதான் இந்தியாவும், தமிழகமும். பல்வேறு கடவுளினுடைய கோயிலுக்குச் செல்லக்கூடிய பக்தர்கள் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய சிலைக்கும் மாலை அணிவிப்பது தமிழகத்திலே சர்வ சாதாரண நிகழ்வு. ஆகவே, இப்படிப்பட்ட, கருத்துகளுக்குள் முரண்பாடு இல்லாமல், மோதல் இல்லாமல் ஆன்மீக இறை வழிபாடு, மத உணர்வுகளில் அரசியல் தலையீடு இல்லாமல் கொண்டு செல்லவேண்டிய ஒரு கடமை என்பது அறநிலையத் துறைக்கு இருக்கிறது என்று நாங்கள் பார்க்கின்றோம்.

அதேபோன்றுதான், கடந்த சில ஆண்டு காலமாகப் பிள்ளையார் சதுர்த்தி என்றாலே பிரச்சினைக்குரிய சதுர்த்தியாக மாறிவிட்டது என்பதை மன்றத்தினுடைய உறுப்பினர்கள், நாம் நன்றாக அறிவோம். பிள்ளையார் என்னவோ பி.ஜே.பி.யினுடைய தலைவராக இன்றைக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறாரோ என்ற சந்தேகம், எங்களுக்கு மட்டுமல்ல, மக்களுக்கும் எழுந்திருக்கிறது. ஆகவே, இந்தப் பிள்ளையார் கோயில்கள் எல்லாம் பிள்ளையார்பட்டியிலே மட்டும் இருப்பது இல்லை. வங்கிக்கு முன்னால் 'செல்வ விநாயகர்'. மருத்துவமனைக்கு முன்னால் வினை தீர்க்கும் விநாயகர்'. நீதிமன்றத்திற்கு முன்னால் நீதி தரும் விநாயகர்' என்று—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைக்கு முன்னால் இருக்கும் விநாயகர், 'வினை தீர்க்கும் விநாயகர்' என்பதைவிட 'பிணி தீர்க்கும் விநாயகர்' என்று இருந்தால் நன்றாக இருக்கும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி. மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள்.

பிற்பகல் 5-55

**செல்வி க. பாலபாரதி:** இப்படிப்பட்ட பிள்ளையார்கள் வழியை மறித்துக்கொண்டு, 'வழிவிடும் பிள்ளையார்' என்ற பெயரோடு திடீர், திடீர் என்று தோன்றுகிறார்கள். ஆகவே, இந்தப் பிள்ளையார் சதுர்த்தி அரசியல் சதுர்த்தியாக மாற்றப்படுவதை அரசு கூர்மையாகக் கவனித்து, எங்கே எல்லாம் பிள்ளையார் இருக்கிறாரோ, அந்தப் பிள்ளையார்களுக்கு வருமானம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அறநிலையத் துறைக்குக் கீழே கொண்டு வந்து, அனைவரும் அமைதியாக வழிபடக்கூடிய விழாவாக, மத நல்லிணக்க விழாவாக மாற்ற வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில், இதுபோன்ற கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வதற்கு இன்றைக்கும் அனுமதி கிடைக்கவில்லை. பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் பதவி ஏற்பும், ராஜிநாமாவும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது. அதேபோன்றுதான் கிராமப்புறக் கோயில்களில் இன்றைக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் செல்வது ஒரு மிகப் பெரிய கடினமான காரியமாக இருக்கிறது. இதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். அதேபோன்று...

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சூழ்நிலை—இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் எங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. அப்படி எந்தப் பகுதிகளில்—பாப்பாப்பட்டி, கீரிப்பட்டியில் நடக்கிறதா அல்லது திண்டுக்கல்லில் நடக்கிறதா என்பதைச் சொன்னால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உங்கள் மூலமாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த வினா, மிக நல்ல வரவேற்பு அளிக்கக்கூடிய ஒரு வினா. இளங்குன்னி என்ற கிராமத்தை உதாரணமாகச் சொல்ல முடியும். திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்-சத்திரத்தில் பல கிராமங்களில் நாங்கள் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் நான் நேரடியாக உங்களைச் சந்தித்து, விவரங்களைக் கொடுக்கிறேன். அதில் உறுதியான நடவடிக்கையை, மக்களுக்குள் மோதல் இல்லாமல், தாழ்த்தப்பட்டவர்களுடைய உரிமையையும் நிலைநாட்டக்கூடிய விதமாக அரசினுடைய தலையீடு இருந்தால் மிகவும் நல்லது என்று நாங்கள் கருதுகிறோம்.



அதேபோன்று கிராமப்புற, நகர்ப்புறக் கோயில்களில் பணியாற்றும் கோயில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அவர்களது ஊதியம் உயர்த்தித் தரப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பெண்கள், இப்பணிகளில் பயன்படுத்தப்பட வேண்டும். கோயில்களில் நாதஸ்வரம், மத்தளம், தாளம் போன்ற இசை நிகழ்ச்சிகள் நடத்தக்கூடிய இசைக் கலைஞர்கள் பூஜையின்போது பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு தந்தை இறந்த சூழ்நிலையில் பணி என்பது வழங்கப்படுவது இல்லை. இந்த ஆலயப் பணியாளர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அறங்காவலர் குழுக்களில் யார் எல்லாம் இடம் பெறுகிறார்கள் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

பழனி மலையில் பாதயாத்திரையாக இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். வரக்கூடிய வழிகளில் மண்டபங்கள் கட்டி, குளிப்பதற்கான குளியல் அறைகளோடு ஏற்பாடுகள் செய்துதர வேண்டும். குறிப்பாக, காரைக்குடி, புதுக்கோட்டை, தேவக்கோட்டை போன்ற பகுதிகளில் இருந்து வருகிறார்கள். பழனி மலையில் இலவச மொட்டைக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அந்த முடியைக் கொண்டு wig தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அதேபோல திருச்செந்தூரிலும் கடைப்பிடிக்கலாம்.

அதேமாதிரி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தேவிகுமாரி பெண்கள் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயில் பல வருடங்களாகவே பழுதடைந்து இருக்கிறது. அந்தப் பழுதைச் சீரமைக்க, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

மதுரை, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அழகிய தெப்பக் குளமும், மைய மண்டபமும் இருக்கின்றன. மைய மண்டபத்தைச் சீரமைக்க வேண்டும், பராமரிக்க வேண்டும். அங்கப் பிரதட்சணம் செய்கிற நேரத்தில், அவர்கள் உருண்டு வரக்கூடிய இடங்களில் கூரை வசதிகள், நிழல் ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[செல்வி க. பாலபாரதி] [2002 ஏப்ரல் 30

அதேபோன்று, வீட்டு வசதித் துறையில் மதுரை எல்லிஸ் நகர்—மத்தியத் தொகுதிப் பகுதியில், மேற்குப் பகுதியில், கிழக்குப் பகுதியில், திண்டுக்கல்-அண்ணாநகர்ப் பகுதி கோவை போன்ற மாவட்டங்களில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் அரசு முதலில் கேட்ட தொகையைச் செலுத்திய பிறகும், இதுவரையில் வீட்டுப் பத்திரம் கிடைக்கவில்லை. வீடு ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புடையது. 50 ஆயிரம் ரூபாயை முன்பாகச் செலுத்தி இருக்கிறார்கள். மீதம் 50 ஆயிரம் ரூபாயைச் செலுத்திப் பத்திரம் பெற வேண்டும். ஆனால், இப்போது அரசாங்கம் 3 இலட்சம் ரூபாய் என்று சொல்லுகிறபோது, நடுத்தர மக்கள் மிகச் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை நேடியாக அறிந்து, ஏற்கெனவே ஒத்துக்கொண்ட தொகையை வசூலித்துப் பத்திரங்களைச் சேர்ப்பதற்கு நமது வீட்டு வசதித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று. அரசின் சார்பில் புதிய, புதிய கோரிக்கைகள், நிபந்தனைகள் முன்வைக்கப்படுவது, சம்பந்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களை நாடுவது, மத்திய தர மக்கள் மத்தியில் ஒரு முரண்பாட்டை உருவாக்கி வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு இந்தத் துறை தீர்வு காண வேண்டும்.

பிற்பகல் 6-00

அதேபோன்று, திண்டுக்கல் நகரிலுள்ள வீட்டு வசதி வாரியத்தால் அரசு ஊழியர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளில் குடிநீர் வசதி, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. அவை செய்து தரப்பட வேண்டும். திண்டுக்கல்லில் 3 மதங்களைச் சேர்ந்த தொழிலாளிகள் தோல் ஷாப்புகளிலே பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு மாடிக் குடியிருப்புத் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டும். மேலும் கோவை மாவட்டம் சிங்காநல்லூர் தொகுதியிலுள்ள, வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனிக் குடியிருப்புகள் உள்ள உப்பிலிப்பாளையம், பீளமேடு, விளாங்குறிச்சி, வெள்ளக்கிணறு, எஸ்.ஐ.எச்.எஸ். காலனி ஆகிய பகுதிகளில், வீடுகளை உரிமையாளர்களுக்குப் பத்திரப் பதிவு செய்து, உடன் ஒப்படைக்கச் செய்ய வேண்டும். பத்திரப் பதிவு செய்து கொடுக்க, வாரியம் கூடுதல் தொகையைக் கேட்டு நிர்ப்பந்தம் செய்ய வேண்டாம். அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பொறுப்பை வீட்டு வசதி வாரியமே நிறைவேற்ற வேண்டும் அல்லது உள்ளாட்சி மன்ற அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்.



2002 ஏப்ரல் 30] [செல்வி க. பாலபாரதி]

அதேபோன்று, சிங்காநல்லூர் தொகுதி, சரவணம்பட்டி அரசு ஊழியர் குடியிருப்புகளில் 36 வீடுகள் சுமார் 4 ஆண்டு காலமாக ஒதுக்கீடு செய்யப்படாமலுள்ளன. உடனடியாக ஒதுக்கீடு செய்து ஒப்படைக்க வேண்டும்.

கோவை, டெக்ஸ்டூல் தொழிலாளிகள் 106 பேர் ஓர் அமைப்பை ஏற்படுத்தி, அதன் பேரில் குடியிருப்புக் காலி மனைகளை வீட்டு வசதி வாரியத்திடமிருந்து 1987-ல் விலைக்கு வாங்கினார்கள். இம்மனைகளின் அபிவிருத்திக் கட்டணமாக இரண்டு இலட்சம் ரூபாய் நிர்ணயித்து, அடுத்த 5 ஆண்டுகளில் ரூபாய் 50 இலட்சம் கட்டணமாகச் செலுத்த வாரியம் கேட்கிறது. இது நிலத்தின் விலையைவிடக் கூடுதலாக உள்ளது. இதை ரத்துச் செய்து, மனைகளை ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி, நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் க. பதினெட்டாம்படியான்.

**திரு. க. பதினெட்டாம்படியான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் எனக்கு இந்த மன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1½ கோடி கழகத் தொண்டர்களின் இதயதெய்வமாகவும், 6½ கோடி தமிழ் மக்களின் காவல் தெய்வமாகவும், எனக்கும், என் குடும்பத்தாருக்கும் குல தெய்வமாகவும் இருக்கின்ற தமிழக முதல்வர், சிங்க நிகர் சிறப்புகளுடன், அஞ்சாத நெஞ்சுரம் கொண்ட அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வார்கள், "மாண்புமிகு அம்மா அவர்கள் எருக்கஞ்செடிக்கு நீர் வார்த்தாலும் அது ரோஜாப் பூவைத்தான் பூக்கும்" என்று. (மேசையைத் தட்டும் ஒலி). அதுபோல, ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை, அரசியலிலே படிப்படியாக உயர்த்தி, இந்த மாமன்றத்தில் இன்று நடக்கின்ற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வைத்திருக்கிறார்கள் என்றால், அது அந்த எருக்கஞ்செடியில் முளைத்த ரோஜாவாக ஆக்கியிருக்கிறார்கள் என்றால், அந்தப் புரட்சித் தலைவி

[திரு. க. பதினெட்டாம்படியான்] [2002 ஏப்ரல் 30

அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு அன்னை அவர்களே, இந்திய வரலாற்றிலேயும் சரி, தமிழகத்தின் வரலாற்றிலேயும் சரி, மன்னர்கள் எந்த மதத்தைச் சார்ந்திருக்கிறார்களோ, அந்த மதத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் முழு ஆதரவும், அரசியலிலே முன்னேற்றுவதற்கான சலுகைகளும் காட்டி வளர்த்து வந்தார்கள் என்பதே, வரலாறு படித்த அனைவரும் அறிந்த உண்மை. அதுபோலவே, தமிழகத்தை ஆண்ட காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆட்சிக் காலத்திலும் சரி, தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி ஆட்சிக் காலத்திலும் சரி, தமிழகத்திலுள்ள ஏதாவதொரு சாராருக்கு மட்டுமே அரசு சலுகைகளை அமோகமாக ஆதரவு காட்டி, ஒவ்வாத, சமத்துவமில்லாத சமூக நீதி வழங்கி ஆட்சி ஆண்ட வரலாற்றை நாம் மறக்க முடியாது. ஆனால்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஒப்பாக, பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழித்தோன்றலாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களோ, தமிழகத்தில் உள்ள அனைத்து மதத்தவர்களையும், இனத்தவர்களையும் சமமாக அரவணைத்து ஆதரவு காட்டி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தைப் பொருளாதாரத்திலும், சமூக அந்தஸ்திலும் உயர்த்துவதற்கு உன்னதமான, உயர்ந்த கருணை உள்ளத்தோடு, ஆண், பெண் என்ற பாகுபாடு இல்லாமல் சமூக நீதி வழங்கி, தமிழகத்தை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முதல் மாநிலமாக ஆக்குவேன் என்ற உயர்ந்த லட்சியப் பயணத்துடன் ஆட்சி நடத்தும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் புகழ் இந்த பூமி உள்ளவரை என்றென்றும் நிலைத்திருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

தேசிய நற்குணமும், தெய்வீகக் குணமும் ஒருங்கே அமையப்பெற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி, தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டுதலாக அமைந்துள்ளது என்பதை அனைத்து அண்டை மாநிலங்களும் உணரத் தொடங்கிய இந்த நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமை மைய அரசிற்குத்



2002 ஏப்ரல் 30] [திரு. க. பதினெட்டாம்படியான்]

தேவைப்படும் காலம் அதிவிரைவிலே வரும் என்பதையும் கூறி, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத புகழ் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின் புகழே என்று சங்கே முழங்கு' என்று கூறி இந்து சமய அறநிலையத் துறையில் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறுவார்கள். இந்தக் கருத்தை மனதில் கொண்டு, தமிழகத்தை ஆண்ட மன்னர்களும், நம் மூதாதையர்களும் எல்லா ஊர்களிலும் இறை வழிபாட்டிற்காகத் திருக்கோயில்களைக் கட்டி சிறப்பு மிக்க தெய்வ நம்பிக்கையோடு வாழ்ந்தார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து, ஆஸ்திகம் நாஸ்திகம் என்ற பாகுபாடுகள் இருந்துதான் வருகின்றன. ஆனால், நல்லது, கெட்டது என்ற சொல்லுக்கு என்ன பொருளோ அதுவேதான் நாஸ்திகனுக்கும் ஆஸ்திகனுக்கும் முறையே வழங்கும் என்பது பொருள் ஆகும். ஆஸ்திகன், அதாவது இறை நம்பிக்கை உள்ளவன், எப்படியும் மனசாட்சிக்கு விரோதமான பெரும் பழிச் செயல்களைச் செய்ய அஞ்சுவான். ஆனால், நாஸ்திகன், இறை நம்பிக்கை இல்லாதவன், மனசாட்சி என்று ஒன்று உள்ளதா என்ற முறையில், எந்தப் பாவ பழிக்கும் அஞ்சாமல், பஞ்சமா பாதகங்களையும் செய்யத் துணிவான். உலகில் உள்ள எல்லா மதங்களும், சமயங்களும் இறை வழிபாட்டை வலியுறுத்துகின்றன. ஆகவே, மனித சமுதாயம் இறை நம்பிக்கையுடன் வாழ்ந்தால் நாட்டில் நடக்கும் குற்றங்களும் குறையும்; மனித நேயமும் வளரும்.

தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் 63 திருக்கோயில்களைத் தேர்வு செய்து, அங்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். இந்தத் திட்டம் இதுவரை ஆண்ட எந்த முதல்வர்களுக்கும் மனதில் உதிக்காத ஒரு திட்டம். மனம் இருந்தால்தானே அது தோன்றப் போகிறது என்ற அளவிற்கு ஆண்டார்கள்.

தானங்களில் பல தானங்கள் உள்ளன. அதாவது, கன்னிகாதானம், கோதானம், பூதானம், சொர்ணதானம், வஸ்திரதானம், அன்னதானம். இந்த தானங்களிலே அன்னதானத்தைத் தவிர எந்த தானத்தை வழங்கினாலும், மனிதன் போதும் என்று சொல்ல மாட்டான். அவனுடைய மனம் நிறைவு பெறுவதில்லை. ஆனால், அன்னதானத்தை மட்டும் அவனுடைய வயிறு நிறைந்தவுடன், மேற்கொண்டு அன்னமிட

நாம் முற்படும்போது, போதும், போதும் என்று மன நிறைவோடு கையை அசைத்துச் சொல்லிவிடுவான்.

ஆகவே, பசித்த மனிதனின் பசியைப் போக்கி, பக்தர்களின் மனம் மகிழ வைத்திருப்பவர் தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். இப்பேர்ப்பட்ட அன்னதானத் திட்டத்தைக் குறை கூறும் அறிவு ஜீவிகளும், அறிவுக் களஞ்சியங்களும், பகுத்தறிவுப் பாசறைகளும் நம் நாட்டில் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் தினந்தோறும் பத்திரிகைகளின் மூலமாகவும், டி.வி.க்களின் மூலமாகவும் குறை கூறிக்கொண்டேதான் இருக்கிறார்கள். இதை நினைக்கும்போது, எனக்கு ஒரு புலவன் பாடிய ஒரு சில வரிகள், அந்தப் பாட்டின் வரிகள் ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது,

'ஈவாரை ஈய ஒட்டான், இவனும் ஈய மாட்டான்; எழு பிறப்பிலும்
கடைப் பிறப்பு இவன் பிறப்பே'

என்பதுதான் அந்தப் பாட்டு. இதன் பொருளையும் சுருக்கமாய்ச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அதாவது, தர்மம் செய்பவரையும், தர்மம் செய்ய விட மாட்டான். அவனும் தர்மம் செய்ய மாட்டான். அப்பேர்ப்பட்ட மனிதன் தன்னுடைய ஏழு பிறப்பிலும் பஞ்ச கல்யாணியாகத்தான் பிறப்பான் என்பது ஐதீகம். பஞ்ச கல்யாணி உவர் மண்ணைத்தான் சுமக்கும்.

பிற்பகல் 6-10

அடுத்தபடியாக, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்து என்னுடைய ஒரு சில கருத்துகளைச் சொல்லி, அதன்பின் என்னுடைய தொகுதி குறித்துப் பேச இருக்கிறேன்.

மனித சமுதாயம் வாழ்வதற்கு வீடு என்னும் ஓர் உறைவிடம் மிக, மிக அவசியமானதாகக் கருதப்படும் ஒன்று. ஆகவேதான், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிக முக்கியத்துவம் கொடுத்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி என்ற திட்டங்களுக்கு, மிக உன்னிப்போடு செயலாக்கத் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

பல்வேறு அரசு அலுவலர்களின் வீட்டு வசதித் தேவைகளுக்கு ஏற்பவும், அவர்களுடைய பொருளாதாரம், அரசு ஊதியத்திற்குப் பொருத்தமான அளவிலேயும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை உருவாக்கி, அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையிலே திட்டங்கள்



தீட்டப்பட்டுள்ளன. மேலும், நகர்ப்புறங்களில் வாழக்கூடிய நலிந்த பிரிவினருக்கு 'வால்மீகி-அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா' (வாம்பே) என்னும் திட்டத்தினை மைய அரசு மூலமாகச் செயல்படுத்த நமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மிக—இந்தத் திட்டத்திற்கு அரசின் பங்கானது, மைய அரசு 50 பங்கு என்றால், தமிழக அரசு, தாட்கோ மூலமாக 40 பங்கு, நுகர்வோர்கள் 10 பங்கு, இப்படியாக அந்தத் திட்டத்தினை— சிறப்பாகச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, நான் என்னுடைய தொகுதியின் மேம்பாட்டிற்கான ஒரு சில முக்கியக் கோரிக்கைகளை முன்வைக்க விழைகிறேன். ஏற்கெனவே நான் சொன்ன, எழுதிக் கொடுத்த காரியங்களோடு, தற்போது சொல்ல இருப்பதையும் சேர்த்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

வைகை ஆற்றிலிருந்து குன்றாற்றிற்கு வரும், வெள்ளப் போக்கியாக வெட்டப்பட்டுள்ள பார்த்திபனூர் வழியாக வரும் கால்வாயை, முழுமையாக மீதமுள்ள இடத்தையும் கால்வாயாக வெட்டி, குன்றாற்றில் சேர்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலிருந்து வரும் கிருதுமால் நதியை முழுமையாகத் தூர் வார வேண்டுகிறேன்.

கமுதியில் மழைக் காலங்களில் வரும் தண்ணீரானது மலட்டாற்றிலே வீணாகப் போய்விடுகிறது. அதற்குக் காரணம், அங்கேயுள்ள ஷட்டர்கள் பழுதடைந்திருக்கிற காரணத்தால், கடந்த ஆண்டுகூட குறைந்த மழையில் வந்த தண்ணீர் எல்லாம் கடலுக்கு வீணாக மலட்டாற்றிலே சென்று விட்டது. அங்கு பழுதடைந்த ஷட்டர்களைச் சரி செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சரி செய்தால்தான், மழைக் காலங்களில் வருகின்ற நீர் கண்மாய்களுக்கு வந்து சேரக்கூடிய அளவிற்கு, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் முதுகுளத்தூரில், எல்லா ஊர்களிலும் ஏதாவது ஓர் ஊரணியை குடிநீர் ஊரணியாக ஆக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று காலையிலே அறிவித்த அறிவிப்பிலேகூட, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஏறக்குறைய 482 ஏரி, குளங்கள் வெட்டி, பழுதுபார்க்கப்படும் என்ற அறிவிப்பினை,

54 கோடி ரூபாய் செலவிலே அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தின் மக்கள் சார்பாகவும், என் தொகுதியான முதுகுளத்தூர் சார்பாகவும் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-15

முதுகுளத்தூரிலுள்ள தீயணைப்புப் படை தனியார் கட்டடத்தில் உள்ளது. இதற்கு அரசுக் கட்டடம் கட்டித்தர வேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். முதுகுளத்தூரிலும், கமுதியிலும், சாயல்குடியிலும் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி கூடுதலாக வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தலித் இன மக்களுக்கு வழங்கும் தொகுப்பு வீடுகளைட்போலவே, என் தொகுதியில் அதிகமாக வாழ்கின்ற பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர் மரபினர்களுக்கும் தொகுப்பு வீடுகள் வழங்க ஆண்டுதோறும் நிதி வழங்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் காலம், காலமாக கூரைக் குடிசைகளில் வாழ்ந்து, மழைக் காலங்களில் மிகப் பாவமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதால், ஆண்டுதோறும் மற்றவர்களைப் போலவே, இவர்களுக்கும் வீட்டு வசதி செய்து தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கமுதி-மண்டலமாணிக்கம் ரோட்டிலும், மண்டல மாணிக்கத்திலிருந்து வீரசோழம் செல்லும் சாலையிலும் ஒரு பாலம் கட்டித் தரும்படி வேண்டிக்கொள்கிறேன். கமுதி அருகே உள்ள கமுத்தறுவான் ஓடையின் நடுவே தடுப்புச் சுவர் கட்டி, பல கண்மாய்களுக்குப் பாசன வசதி பெறுகின்ற வகையில் வகை செய்யவேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தெய்வீகப் புத்துணர்வு என்பது பகுத்தறிவைவிட மிக உயர்ந்தது. ஆனால், அது பகுத்தறிவிற்கு முரணானதாக இருக்கக்கூடாது என்று வீரத் துறவி விவேகானந்தர் சொன்னார். ஆனால், இராமகோபாலன் அதை வேறுவிதமாக மாற்றிச் சொல்கிறார். அவர் வீரத் துறவி அல்ல. ஆனால், அவருடைய



கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள், அதைத் திருத்திக் கூறுவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற இந்த நேரத்தில் நாடாளுமன்றத்தில் மிக முக்கியமான பிரச்சினை விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே நடைபெறுகிற அந்த விவாதத்தினுடைய கருப் பொருளே கோயிலைப் பற்றியதாக வந்து, அதுவே மதக் கலவரமாக மாறி, ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்டதற்குப் பின்னாலே, அந்த நிகழ்வுகளைக் குறித்து—குஜராத் சம்பவத்தைக் குறித்து— நாடாளுமன்றத்திலே விவாதிக்கப்பட்டு, நம்பிக்கை ஓட்டெடுப்பு நடத்துகிற நிலை வரையிலேயும் இன்றைக்கு வந்திருக்கிறது. இதற்கு மதவாதம்தான் அடிப்படையான காரணமாக அமைந்துவிட்டது.

அன்றையதினம் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மத வெறி என்பது எந்த அளவிற்குப் போய் நிற்கிறது என்பதற்கான உதாரணங்களை எல்லாம் சொன்னார்கள். ஆனால், ஆன்மீகவாதிகள் சொல்லுகிற கருத்துகள், அமைதி, அடக்கம், எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுகிற மனப்பக்குவம், சகிப்புத் தன்மை, இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறபொழுது—ஆனால், அந்தப் போர்வையிலே இருக்கிறவர்கள் அவற்றையெல்லாம் தூண்டிவிட்டு—வெளியிலே சொல்லுகிறபொழுது அந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். உள்ளே அதைத் தூண்டிவிட்டு மதவாதக் கருத்தாக மாற்றி பல கொலைகளைச் செய்வதற்குரிய முயற்சியாக மாற்றப்படுகிறதே என்பதுதான் இன்றைக்கு இருக்கிற வேதனையான செய்தி. அதற்கு அடிப்படையாக இருக்கிற நிலைமைகளுக்குரிய காரணம்; இந்த நாட்டைப் பல்வேறு கட்சிகள் ஆண்டிருக்கின்றன. பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் இப்படிப்பட்ட நிலைகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் எனக்குப் பிறகு பேச இருக்கிற காரணத்தினாலே விளக்குவார்கள். அவர் சொல்வதற்கு ஏற்ப திரும்பவும் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டால் நானும் அதற்கு விளக்கம் சொல்வேன். ஆனால் இப்பொழுது—நம்முடைய அறநிலையத் துறையிலே பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டன. கிட்டத்தட்ட தமிழகத்திலே—தொன்மை வாய்ந்த கோயில்கள், கலாச்சாரச் சின்னங்கள், மிக அழகிய வேலைப்பாட்டுடன்கூடிய வழிபாட்டுத் தலங்கள் எல்லாம் மிகச் சிறப்பாக இருக்கிற பெருமைக்குரிய தமிழகம் இது.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2002 ஏப்ரல் 30

கிட்டத்தட்ட 36,355 கோயில்கள் இருக்கின்றன. இவ்வளவு கோயில்கள் இருக்கின்ற ஒரு மாநிலம் நம்முடைய மாநிலமாகத்தான் இருக்கமுடியும். அப்படிச் சிறப்புக்குரிய வகையிலே, அந்தச் செயல்பாடுகள் வந்திருக்கின்றன என்று சொன்னாலும், எல்லா வழிகளையும் சிந்தித்து சிறப்பாகச் செயல்படுவதற்குரிய ஒரு அமைதி இடமாக செயல்படுவதற்கான முயற்சியை எடுக்கவேண்டிய இடத்தில், இப்போது இந்தியாவில் வேறுவிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6-20

அதே வீரத் துறவி விவேகானந்தர் சொன்னார்: 'நிர்மாணம் செய்வதுதான் நான் பணிபுரியும் வழி, இடித்துத் தள்ளுவது என்பது அந்த வழியல்ல, அது சரியல்ல' என்று சொல்லியிருக்கிறார். நிர்மாணம் செய்வதற்கான வழி என்னுடைய வழி என்று விவேகானந்தர் சொன்னார். அயோத்தியிலே பாபர் மசூதி நிர்மாணிக்கப்பட்டு 400 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அதை இடித்துத் தள்ளுவதுதான் எங்களுடைய பணி என்று இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சியும், அதனுடைய துணை அமைப்புகளும் சேர்ந்து செய்ததனுடைய விளைவு, இன்றைக்கு நாடே அல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, வீரத் துறவி விவேகானந்தருடைய கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சி அதற்கு எதிராக ஏன் செயல்படுகிறது என்பதுதான் இன்றைக்கு இருக்கிற நிலை. அவர் இன்னொரு இடத்தில் சொல்கிறார்; 'வெறி, இரத்தம் சிந்துதல், வன்முறை, இவை ஒழியாவிட்டால் எந்த நாகரீகமும் முன்னேற முடியாது' என்று அழுத்தந்திருத்தமாகவே சொல்லியிருக்கிறார். ஆக, வெறி, இரத்தம் சிந்துதல், வன்முறை, இவை ஒழியாவிட்டால் எந்த நாகரீகமும் முன்னேற முடியாது என்று தெளிவாகச் சொன்னார். ஆனால், சொன்னதற்கு எதிராக, வெறியும், இரத்தம் சிந்துதலும், வன்முறையும், கொலை வெறியாட்டங்களும்தான் கொள்கையாகக் கொண்டு இந்த நாட்டிலே கோலோச்சுகின்ற பாரதிய ஜனதா கட்சி வந்ததற்குப் பின்னாலே, அமைதி என்பதே இல்லாமல் போய்விட்டதே என்பதுதான் இன்றைக்கு இருக்கிற வேதனையான நிலை. இருந்தாலும், நாம் இவற்றையெல்லாம் தவிர்த்து முன்னேறுவதற்கான முயற்சியினை எடுக்கவேண்டிய, விழிப்படைய வேண்டிய காலமாக இருக்கிறது.

குறிப்பாக, நம்முடைய கோயில் நிலங்களைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். நான் இடையிடையே சில செய்திகளைப் பல சந்தர்ப்பங்களிலே இங்கே பேசியிருக்கிறேன். குறிப்பாக, அறநிலையத்



2002 ஏப்ரல் 30] [திரு. வை. சிவபுண்ணியம்]

துறையின்கீழ், கிட்டத்தட்ட 4,21,021 ஏக்கர் நிலங்கள் தமிழகம் முழுமையிலும் இருக்கின்றன. பல்வேறு கோயில்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்கள், அறக்கட்டளைகள், இவற்றின் பெயராலே இந்த நிலங்கள் இருக்கின்றன. இவற்றைச் சாகுபடி செய்வதிலிருந்து, அதிலே இருக்கிற பிரச்சினைகளைப் பற்றி நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். இங்கே நண்பர்கள் பல கருத்துகளைச் சொன்னார்கள். இதைச் சொல்கிறபோது, ஆன்மீகவாதிகளுக்கு, பக்தர்களுக்கு அது ஒரு சிரமமான காரியமாக இருக்கிறது என்று ஒரு கருத்து இருக்கிறது. நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், முதியோர்கள் அல்லது முன்னோர்கள் எல்லாம் எந்தக் காரியத்திற்காக இந்த நிலங்களையெல்லாம் எழுதி வைத்தார்களோ, அந்த முன்னோர்களுடைய விருப்பத்திற்கேற்ப இந்தக் காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று ஒரு கருத்து இருக்கிறது. எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. எனக்கு தெய்வ வழிபாடு இல்லை என்று சொன்னாலும், நிந்தனை செய்வது என்னுடைய பழக்கம் இல்லை. ஆனால் சொல்ல வேண்டியதைச் சொல்லித்தான் ஆகவேண்டும். காரணம், பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறவன் என்ற முறையிலே நான் சொல்லிக் கொண்டிருப்பேன். ஆனால், இந்த நிலையை நான் சொல்கிறபோது, அந்த முன்னோர்கள் செய்து வைத்த அந்தக் காரியம் சிறப்பாக நடைபெறவில்லை. வழிபாட்டுத் தலங்களுக்கு, அந்தக் கோயில்களுக்கு எல்லாக் காரியங்களும் நடைபெறவேண்டும் என்பதற்காக நிலங்கள் எழுதி வைக்கப்பட்டன என்பதுதான் உண்மை. ஆகவே, ஆறு கால பூஜை நடைபெறவேண்டும், மூன்று கால பூஜை நடைபெறவேண்டும், ஒரு கால பூஜை என்ற அடிப்படையில் பல கோயில்கள் இருக்கின்றன. அந்தக் கோயில்களுக்கு எல்லாம் பூஜை நடத்துவதிலே பிரச்சினை இருக்கிறது. காரணம், அடிப்படையான பிரச்சினை என்பது நிதியாதாரம்தான். ஆகவே, நிதியில்லாத காரணத்தினால், ** ஆக ** அந்தச் சாமிகளுக்கு மூன்று கால பூஜை, ஆறு கால பூஜையை நடத்தலாம் என்பதற்கான யோசனையைத்தான் நான் சொல்கிறேன். ஆகவே, முன்னோர்கள் எழுதிவைத்த,—எந்த நோக்கத்திற்காக இந்த நிலங்களையெல்லாம் எழுதி வைத்தார்களோ, அந்த—நோக்கம் முறையாக, சரியாகத் திறம்பட நடத்தப்பட வேண்டுமானால், இப்போது இருக்கிற இந்த நிலைமைகளிலே ஒரு மாறுதல் காணவேண்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற வாக்கியம் வேண்டியதில்லை. ** என்று சொல்கிறீர்களே; (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ** என்பதுதான் உண்மை. ஆகவே, நீங்கள் சொன்னதை அப்படி வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** காலம் போய், சாமியின் சார்பாக அன்னதானம் வழங்குகின்ற காலம் இது என்பதை உங்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சிவபுண்ணியம் அவர்கள் பேசவேண்டும். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒன்றும் இல்லை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம் இயற்றுகின்ற மகத்தான மாமன்றமாகிய தமிழ்நாடு சட்டமன்றத்தை ஒரு சன்னிதானமாகக் கருதி, எங்களைப் போன்றவர்களுக்கு இதுபோன்று காலை, மாலை நேரங்களில் ஒட்டுமொத்தமாக நடக்கும் காலங்களிலாவது, அன்னதானம் வழங்குவீர்களா என்று கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்..

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காகத்தான் பழனியாண்டவர் ஆலயத்திலிருந்து உங்களுக்குப் பஞ்சாமிர்தமும், லட்டும், சந்தனமும் கொண்டு வரப்பட்டிருக்கிறது, கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் வாங்கிச் செல்லுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** திருநெல்வேலி விஷயம் மாதிரி கொடுக்காமல் இருந்தால் சரி.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. எச். ராஜா:** அதையும் அவர்கள் பயபக்தியோடு வாங்கிச் செல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6-25*

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு திருநெல்வேலி அல்வா கொடுப்பது இந்த அரசு அல்ல என்பதை மட்டும் நான் இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முக்கியமான செய்தியைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது வேறு செய்திக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த நிலப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், நான் 1996 ஆம் ஆண்டு முதலே இந்தச் சட்டமன்றத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ஆட்சியில் மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்து நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். 1999 ஆம் ஆண்டு, 2000 ஆம் ஆண்டிலேகூட இந்தக் கருத்தை நான் வலியுறுத்திச் சொன்னபோது, சென்ற ஆட்சியிலே முன்னாள் முதலமைச்சர் அவர்களேகூட இந்தக் கருத்தை உரிய முறையிலே பரிசீலிப்பதாக ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே, குறிப்பாக இந்த நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறபோது, குத்தகை வரவில்லை; பிரச்சினை இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்பட்டது. விவசாயிகள் எப்படி, இயற்கைச் சீற்றத்தாலே பாதிக்கப்படுகிறார்களோ—ஒரு ஆண்டு வெள்ளம் வருகிறது, மறு ஆண்டு புயல் வருகிறது, இன்னொரு ஆண்டு, இரண்டும் இல்லாதபோது வறட்சி வந்துவிடுகிறது. ஆகவே, மாறி, மாறி இயற்கைச் சீற்றத்திற்கு உள்ளாக்கப்படுகிற விவசாயிகளாலே—எப்படி கூட்டுறவுக் கடனைச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டதோ, அதேபோல, இந்தக் குத்தகையும் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இந்த ஆண்டுகூட மிகப் பெரிய வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டபோது, நம்முடைய அரசு 49 கோடி ரூபாயை நிவாரணமாக அளித்தது; விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால், அதே நேரத்திலே, அதோடு இணைந்து பாதிக்கப்பட்டிருக்கிற இந்தக் கோயிலினுடைய குத்தகைதாரர்களுக்குத் தள்ளுபடி செய்ய

வேண்டுமா, இல்லையா? அவர்களாலே எப்படிக் குத்தகை செலுத்த முடியும்? இந்த வெள்ளத்தாலே அழிவு ஏற்பட்டு விட்டது என்பதை அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலே, அரசே, இந்த ஆண்டு, நீங்கள் குத்தகை செலுத்தவில்லையென்று சொன்னால், நாங்கள்....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விகள், ** பெரும்பான்மையானவர்கள் உழுது கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு ஏக்கருக்கு, 75 சதவிகிதம் உழுபவர்களுக்கு; 25 சதவிகிதம் குத்தகையாக அந்த ஆலயத்திற்கும் கொடுக்க வேண்டும் என்ற விதி இருக்கிறது. 620 ஏக்கர் நிலத்திற்கு 40 ஆண்டுகளாக நான்கு மணிகள்கூடக் கொடுக்கவில்லை என்பதை அவர்கள் புரிந்து இருக்கிறார்கள். மூன்று முறையாக சட்டமன்றத்திலே அவர்கள் இதைப் பேசியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் அப்படி என்பதல்ல. இவர்கள் 40 ஆண்டுகளாகவே கொடுக்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையிலே ஒரு செய்தியைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இரண்டு, மூன்று தடவை கேள்விகள் வருகிறபொழுதுகூட இந்தச் செய்தியைச் சொல்லிவிட்டார். நானும், சரி, பரவாயில்லை என்று விட்டுவிட்டேன். நான் இப்போது இதைக் கேட்கிறேன். இந்தக் குத்தகை அளக்காதவர்கள் ** என்பதை மட்டுமே இவர் சொல்கிறார் என்று சொன்னால், வேறு கட்சிகளே இல்லையா? இப்போது எடுத்துக் கொண்டால், நான் சொல்கிறேன். இந்தக் குத்தகை அளக்காதவர்களுடைய எண்ணிக்கையிலே ** ஏராளமாக இருக்கிறார்கள். வேண்டுமானால், பட்டியல் இட்டுச் சொல்வோம்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்று நான் குற்றச்சாட்டுகளுக்காகச் சொல்லவில்லை. இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



ஆலயத்திற்குச் சொந்தமான இடம், திருத்துறைப்பூண்டியிலே இருக்கிறது. 621 ஏக்கர் நிலம். ** என்று புள்ளிவிவரத்தோடு சொல்லியதன் காரணமாகச் சொல்கிறேனே தவிர, உங்கள்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் சொல்லவில்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அந்தக் குத்தகைப் பாக்கி வைத்திருப்பவர்கள் ** என்று மாண்புமிகு உறுப்பினர்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் ** என்று சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னார். (குறுக்கீடுகள்) ஆதாரம் இருந்தால் கொடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இந்த அவையிலே தொடர்ந்து இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஒரு கட்சியின்மீது சொல்கிறபோது, ஆதாரத்தோடு சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த விஷயத்தை அவர்கள் சொல்கிறபொழுது, உண்மையிலேயே பெருந்தன்மையாக, இதைப் பற்றி வேறுவிதமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த அவையிலேகூட பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், நாங்கள் இதை எழுத்து பூர்வமாகக் கொடுக்க வேண்டாம் என்று விட்டு விட்டோம். திரும்பவும் அப்படித்தான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதைப் பற்றி எழுத்துபூர்வமாக எடுத்து, விவாதித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. இப்போதுகூட நான் அதை வலியுறுத்தவில்லை. ஆனாலும் சொல்கிறேன்; பட்டியல் தேவையென்று சொன்னால், ** இப்படி எல்லாக் கட்சிகளின் சார்பிலும் விவசாயிகள் இருக்கிறார்கள். ஒரு கட்சியை மட்டும் ஏன் குறிப்பிட்டு.... .

பிற்பகல் 6-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரு சார்பிலும் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து, இரண்டு பேரும் சொன்ன குற்றச்சாட்டுகளை நீக்குகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1 இலட்சத்து 6 ஆயிரத்து 807 குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவத்சலமேகூட, இந்தச் செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். சென்னை அருகிலே மீஞ்சூரிலே இருக்கிற கோயிலினுடைய பரம்பரை அறங்காவலர் அவர். அவர் ஒரு கருத்தை இந்தச் சபையிலேமட்டுமல்லாது வெளியிலே இருக்கிற விவசாயிகள் மாநாட்டிலே எல்லாம் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். கோயில்களுடைய நிலங்கள் இப்படிப் பாழ்பட்டிருக்கின்றன. இப்படிப் பிரச்சினையாக இருக்கிறது. கோயில்களிலேயிருக்கிற நகைகள், சொத்துகள் பராமரிக்கப்படுவதிலே பிரச்சினை இருக்கிறது; கொள்ளையடிக்கப்படுகிறது. இவற்றையெல்லாம் தடுப்பதற்குரிய முயற்சிகள் வேண்டும். அதிலே நான் ஒன்றைச் சொல்கிறேன். குறிப்பாக, இந்த விவசாய நிலங்களை உழுது கொண்டிருக்கின்ற விவசாயிகளிடத்திலே கொடுத்துவிட்டு, அதைப் பணமாகப் பெற்று, அதை வங்கியிலே டெபாசிட் செய்து, அதிலே வருகிற வட்டியைக் கொண்டு இந்தக் கோயிலினுடைய நல்ல காரியங்களை எல்லாம் செய்யலாம் என்று முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலமே சொல்லியிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது) நான் சொன்னால்கூட உங்களுக்கு வருத்தம் இருக்கும். அவர்—ஒரு ஆன்மீகவாதியே—சொன்னார் என்பதைத்தான் இதிலே உறுதி செய்ய விரும்புகிறேன். ஆகவே, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலித்து, முடிவு எடுக்க வேண்டும். நான் இதைச் சொல்கிறபோது, நான் சொன்னவுடன் அமைச்சர் உடனடியாகப் பதில் சொல்லி, தீர்வு கண்டுவிடுவார் என்பதற்காகச் சொல்லவில்லை. சிரமம் இருக்கிறது உங்களுக்கு. நான் புரிந்துகொள்கிறேன். ஆகவே, இந்த அரசு இதை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும். இதற்குரிய முயற்சிகளை எல்லா வகையிலும் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தி, வீட்டுமனைகளுக்குரிய நியாய வாடகை நிர்ணயம் பற்றிய ஒரு செய்தி. நான் இங்கே பேசினேன். நம்முடைய



அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, இந்தச் சபையிலேயே இந்த விஷயத்தை நான் அழுத்தமாகப் பேசி, அதிலே, முன்னாள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், எனக்கும் கடுமையான வாக்குவாதம் இங்கே. அதிலே முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, நான் சொன்ன கோரிக்கை நியாயம் என்பதை ஏற்றுக்கொண்டு, இந்த நியாய வாடகை என்பது உயர்த்தப்பட்டிருப்பது பல மடங்காக இருக்கிறது, ஆகவே, இந்த உத்தரவை இப்போது நான் நிறுத்தி வைக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த நிறுத்தி வைக்கப்பட்ட உத்தரவைத் திரும்பவும் இந்த ஆட்சி பரிசீலனை செய்து, அதற்கு ஏற்றாற்போல, தேவையான வாடகையை உயர்த்தியிருக்கலாம். அதை அப்படியே அமல்படுத்துவது என்று, சாதாரணமாக இருக்கக்கூடிய, ஏழையெளியவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தக் குடிசைகளுக்குப் பல மடங்கு வாடகை உயர்த்தப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அவர்கள் 10 ரூபாய், 20 ரூபாய், 50 ரூபாய் கட்டிக் கொண்டு இருந்தார்கள். இப்போது சொல்கிற அடிப்படையிலே இந்த விஷயத்தைப் பார்த்தால், கிட்டத்தட்ட 1,600 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படியென்று சொன்னால், இந்த வாடகை, நியாய வாடகை, மனைக்கு மட்டுமான இந்த வாடகையுடன் அவர்களுடைய நில வரி, வீட்டு வரி, இதையெல்லாம் சேர்த்து, மொத்தமாக ஒரு மாதத்திற்கு என்ன வாடகை வருகிறது என்று கணக்கிட்டுப் பார்த்தால், 6,600 ரூபாய் வருகிறது. அப்படியென்றால், ஒரு மனைக்கு 6,600 ரூபாய் வாடகையைக் கொடுத்து, ஒரு ஏழை குடியிருக்க வேண்டுமென்றால், அதே ஏழை வெறும் 1,000 ரூபாய்க்கு எங்கேயாவது வாடகைக்கே இருந்துவிட்டுப் போய்விடலாம். இதிலே, இவ்வளவு பெரிய சுமை வருகிறது. 150 முதல் 300 மடங்கு இந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே எனக்கு இருக்கின்ற வருத்தம் என்ன என்றால், இந்தச் சட்டத்தை, அரசாணையை நிறுத்தி வைக்கவேண்டுமென்ற அவசியம் அன்றைக்கு வந்தது. அதைத் தி.மு.க. ஆட்சியிலே நிறுத்தி வைத்ததற்காக, இன்றைக்கு நாம் அமல்படுத்துகிறோம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. தயவுசெய்து, நல்லதைச் செய்வதிலே பிடிவாதமாக இருக்கலாம். கெடுதலைச் செய்வதிலே நாம் போட்டிபோட வேண்டியதில்லை. நல்லதைச் செய்வதிலே நாம் போட்டி போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தீமை செய்வதிலே நாம் போட்டிபோட வேண்டியதில்லை. ஒரு நல்ல காரியத்திற்காக நிறுத்தி வைக்கப்பட்ட அரசாணை அது. தயவுசெய்து, நம்முடைய அரசு பரிசீலிக்க வேண்டும். இதிலே எனக்கு இருக்கின்ற வருத்தமான செய்தி, அறநிலையத் துறையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் தவறான செய்திகளை அமைச்சர்களுக்குச் சொல்லுகிற பழக்கம் இருக்கிறது. சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அதே நிலை நீடித்தது. இப்பொழுதும் அது நீடிப்பதாக நான் உணர்கிறேன். ஆகவே, இதையெல்லாம் சொல்வதன் மூலமாக பல சிரமங்களை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இதனை ஆழமாகப் பரிசீலித்து, இந்த நியாய வாடகை நிர்ணயம்; பெயரே நியாய வாடகை நிர்ணயம்; ஆனால், அநியாயமாக வாடகையை நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆகவே, அரசு மறுபரிசிலனை செய்து, இந்த வாடகையை ரத்துச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, சென்னையிலே இருக்கிற (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். பாடியிலே திருவள்ளீஸ்வரர் திருக்கோயில் இருக்கிறது. இந்தப் பிரச்சினையையும் நான் சென்ற முறை சொல்லியிருக்கிறேன்.

அங்கே இந்த மாதிரியான வாடகை போடப்பட்டிருக்கிறது. இதிலே வர்த்தக நிலையங்கள், கடைகள், வேறுவிதமாக இருக்கக்கூடியவற்றில் நீங்கள் தேவையான வாடகையை நிர்ணயிப்பதிலே எனக்கு ஆட்சேபணை கிடையாது. அதிலே பல பேர் இன்னும் குறைபாட்டோடு, இன்னும் குறைந்த வாடகையிலே இருக்கிறார்கள் என்பது உண்மை. அவற்றைக் கண்டறிந்து அதற்குரிய வாடகையை நீங்கள் நிர்ணயம் செய்யலாமே தவிர, ஏழையெளிய மக்கள் பாதிக்காத வண்ணம் இந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இவற்றையெல்லாம் நான் சொல்கிறபோது, இதை ஏதோ தெய்வத்திற்கு எதிரான செய்தியாகக்கொள்ளக்கூடாது. நான் இதை உணர்ந்து பாதிப்பாக இருக்கிற பிரச்சினைகளைச் சொல்கிறேன். நம்முடைய விவேகானந்தர் சொன்ன மாதிரி, யார் ஏழைகளிடத்தில், பலவீனர்களிடத்தில், நோயுற்றவர்களிடத்தில் சிவபெருமானைக் காண்கிறார்களோ, அவர்களே உண்மையில் சிவ வழிபாடு செய்பவர்கள் என்ற அடிப்படையிலேதான் சிவபுண்ணியம் பேசிக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து, அமைச்சர் அவர்களும், அரசும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக, குளங்களைப் புதுப்பிப்பது சம்பந்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மன்னார்குடியிலே பிரசித்தி பெற்ற தெப்பக்குளம் இருக்கிறது. அந்தத் தெப்பக்குளம், கிட்டத்தட்ட 40 ஏக்கர் இருக்கிறது. அது மிகவும் பழமையான தெப்பக்குளம்; மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. கிட்டத்தட்ட அதைத் தூர்வாரி, படித்துறைகளைக் கட்டி, சுற்றுச்சுவர்களைக் கட்டுவதற்காக 85, 90 இலட்சம் ரூபாய் அளவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அரசு அதற்கான முயற்சியை எடுத்து, நிதி ஒதுக்கீட்டினை இந்த ஆண்டிலேயே ஒதுக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-35

மீனாட்சி அம்மன் கோயில் என்ற ஒரு பிரசித்திபெற்ற கோயில் இருக்கிறது. நான் இதைச் சொல்கின்றபோது, இவற்றையெல்லாம் பேசுகின்றேன். இந்தச் செய்தி எப்படி வந்தது என்று சொன்னால், இவற்றையும் இவன் பேசுவான் என்ற நம்பிக்கையிலே என்னுடைய தொகுதி மக்கள் என்னிடத்திலே கொடுத்து, இதைச் சொல்லச் சொல்லி இருக்கிறார்கள். பல முறை இதைப் பேசி, சில கோரிக்கைகளை நான் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, அந்தக் கோயிலினுடைய குடமுழுக்கிற்கும், அந்தத் திருமண மண்டபத்தைச் சரி செய்வதற்கும் முயற்சியைச் செய்ய வேண்டும். அதேபோல, இங்கே நண்பர் சொன்னதுபோல, திருராமேஸ்வரம் கோயிலினுடைய குடமுழுக்கு விழாவிற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதற்கு நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குரிய துரிதமான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அறங்காவலர்கள் நியமனம் செய்வதிலே பிரச்சினை இருக்கிறது. ஆகவே, அறங்காவலர்கள் நியமனம் செய்வதிலே சில முறைகேடுகள் தொடர்ந்து பல ஆட்சியிலே இருக்கின்றன. எந்த ஆட்சிகள் வந்தாலும், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களைப் போடுகின்ற முறைகள் இருக்கின்றன. அதிலே, உணர்வுபூர்வமாக இருக்கின்றவர்களைப்

போடவேண்டும் என்பதுதான் எச். ராஜா அவர்களுடைய கோரிக்கை. அவருடைய கோரிக்கையையும் நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மூலமாக ஒரே ஒரு செய்தி. ஹட்கோ நிதி உதவித் திட்டத்திலே நலிவுற்ற பிரிவினருக்குப் புதியதாக வீடுகள் கட்டக் கடன் வழங்கும் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதைப் பற்றிப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஆதிதிராவிடர்களுக்குக் கட்டக்கூடிய வீடுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அரசு வாடகை வீடுகளிலே, பழுதடைந்து இருக்கின்ற வீடுகளிலெல்லாம் பழுது நீக்கம் செய்ய வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்குச் சொந்தம் ஆக்குவதற்கான முயற்சி எடுக்க வேண்டும். அதேபோல, குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் இருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். கடைசியாக ஒன்று, நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலமாக மன்னார்குடி, கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எச். ராஜா. (குறுக்கீடு) உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நகர்ப்புற வளர்ச்சித் துறையின் மூலமாக எடுத்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்து சமயப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பறைசாற்றும் பெட்டகமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. திருக்கோயில்களின் சொத்துகளைக் காத்து, சரிவரப் பராமரித்து, ஆகம விதிகளின்படியும், பழக்க வழக்கங்களின்படியும் கால வழிபாடுகளை நடத்தவும், திருக்கோயில்களை நாடி வரும் பக்தப் பெருமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதிலும் இந்தத் துறை ஈடுபட்டு வருகின்றது எனக் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதிலே, துவக்கத்திலேயே அன்னதானத்தைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக இந்த



அன்னதானத் திட்டத்தை ஏற்கெனவே வெளியிலேயும், உள்ளேயும் வரவேற்று இருப்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் வரவேற்கிறேன். ஆனால், இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்ட உடனேயே, இது ஓர் அடிப்படையான பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறது. காங்கிரஸ் கட்சியினுடைய மாநிலத் தலைவர் அவர்களும், பல்வேறு நாத்திக அமைப்புகளுடைய தலைவர்களும், அரசாங்கம் ஒரு மதச் சார்பான செயலிலே ஈடுபட்டு இருப்பதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்த இந்து சமய அறநிலையத் துறை, 1925-ல் அறநிலையக் கொடைகள் வாரியமாக நிறுவப்பட்டு, இந்து சமய நிறுவனங்கள், மடங்கள் முதலியன கண்காணிக்கப்பட்டன. ஆனால், 1951-ல்தான் முதன்முதலாக இந்து சமய அறநிலையத் துறை என்பது, ஓர் அரசு அமைப்பாக மாறியது. அந்தச் சமயத்திலேயே சட்டமன்றத்திலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் உண்டு. அதற்குக் காரணமும், இப்பொழுது பேசப்படுகின்ற வாதமும் ஒன்றுதான். ஏனென்றால், ஒரு மதச் சார்பற்ற அரசாங்கம், மதத்தினுடைய வழிபாட்டுத் தலத்தை நிர்வகிக்க வேண்டாம் என அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பேசியிருக்கிறார்கள்.

1951-லே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், திரு. கே. பாஷ்யம் மற்றும் திரு. ஏ. வைத்தியநாத ஐயர் போன்றவர்கள் இந்தச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தும் பேசியிருக்கிறார்கள். ஆனால், எப்பொழுது ஓர் அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, ஒரு மதத்தினுடைய வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்கின்ற பொறுப்பை எடுக்கிறதோ, அப்பொழுது அதனுடைய முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளைக் கவனிக்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த காங்கிரஸ் கட்சியினரே இப்பொழுது அன்னதானத்தை எதிர்க்கலாமா? அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள், 1951 சட்டத்தின் மூலமாக. அதேபோல, 1959-லே இதற்குத் திருத்தம் வரும்போதுகூட ஜஸ்டிஸ் பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்; 'It was not the duty of a secular State to run temples' என்று. ஆனால் அப்போதெல்லாம் நாம் அரசாங்கம் இந்துக் கோயில்களை எடுத்துக்கொள்ள வேண்டும்; அவை அறநிலையத் துறையின் மூலமாக நிர்வகிக்கப்படுமென்று முடிவு எடுத்து. அதற்குப் பிற்பாடும்கூட, 1991 மற்றும் 1996-களிலே இந்தச் சட்டமானது திருத்தப்பட்டு, இப்பொழுது 1996-னுடைய சட்டமானது நடவடிக்கையிலே இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 6-40

இங்கு இந்த அறநிலையத் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது, நம்முடைய மாண்புமிகு கம்யூனிச உறுப்பினர்கள், பிள்ளையாரிலே ஆரம்பித்து மன்னார்குடி வரை வந்திருக்கிறார்கள்.

பிள்ளையார் சதுர்த்தி விழா என்பது மகாராஷ்டிர மாநிலத்திலே திலகர் பெருமானால் துவக்கப்பட்டது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, நமது நாட்டிலே இருக்கின்ற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட விழா, விநாயகர் சதுர்த்தி விழா. அது பொது விழாவாகத் தொடங்கப்பட்டது திலகர் பெருமானால். அதேபோல, தமிழகத்திலே ஆங்காங்கு ஜாதி மோதல்கள் காரணமாக, இந்து சமுதாயம் பிளவுபட்டிருப்பதை மாற்றி அனைத்துச் சமுதாய மக்களும் வீதியிலே வந்து விநாயகர் சதுர்த்தியை ஒன்றாகச் சேர்ந்து கொண்டாடுவதன் மூலமாக, நாம் இங்கே சமூக ஒற்றுமையை இந்து மத மக்களிடையே உருவாக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் விநாயகர் சதுர்த்தி விழாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை பாரதீய ஜனதா கட்சி விழா என்று சொல்வானேன்? கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வந்து அதில் கலந்துகொள்ளட்டுமே? மற்றக் கட்சி அன்பர்கள் வந்து கலந்து கொள்ளட்டுமே? அதை அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து நடத்தவேண்டியதுதானே? இதிலே யார் ஆட்சேபித்திருக்கிறார்கள்? கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் விநாயகர் சதுர்த்தி விழாவில் வந்து கலந்துகொள்ளக்கூடாது என்று யாரும் ஆட்சேபித்தது கிடையாது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** (Point of order) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இங்கே சொல்கிறபோது, பிள்ளையார் சதுர்த்தி விழாவில் எல்லோரும் வந்து கலந்துகொள்ளவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் ரம்ஜான் விழாவையும், அதேபோல கிருஸ்துமஸ் விழாவையும் சேர்ந்து கொண்டாடுவதற்குத் தயாரா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. எச். ராஜா:** அதாவது, இந்துக்கள், விநாயகர் சதுர்த்தி விழாக் கொண்டாடினால், ரம்ஜான் விழாவையும் கொண்டாடுவாயா என்று எப்படிக் கேட்பது? அதை பாரதீய ஜனதா கட்சி கொண்டாடவில்லை;



இந்து அமைப்புகள் கொண்டாடுகின்றன; இந்து முன்னணி அதைக் கொண்டாடுகிறது. ஆகவே, இந்தக் கேள்வியே, it is misplaced; தேவையில்லாதது. விஷயத்தைப் புரிந்துகொள்ளாமல் கேட்ட கேள்வி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேலும் (குறுக்கீடு) I am not yielding. (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், உட்காருங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

**திரு. எச். ராஜா:** இங்கே பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, வன்முறை வந்ததாகச் சொன்னார்கள். கடந்த நான்காண்டுகளாக நம் நாட்டிலே மத மோதல்கள் குறைவு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலும் எனக்கு ஆச்சரியம் என்ன என்று சொன்னால், Class War-ம் dictatorship of the proletariat என்று வன்முறையையே அடிப்படைச் சித்தாந்தமாகக் கொண்டு, அவர்களுடைய தீவிரவாதிகள், P.W.G-ஐப் போல இருந்துகொண்டு, நாடு முழுவதும் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள், திடீரென்று இங்கே பாரதீய ஜனதா கட்சியைக் குற்றம் சாட்டியது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

திருக்கோயில்களுடைய சொத்துகளைக் காத்து, சரிவரப் பராமரிக்கின்ற இந்த இந்து அறநிலையத் துறை, சட்டத்தினுடைய நோக்கங்களை நாம் இப்போது நிறைவேற்றி இருக்கிறோமா அல்லது அதை எய்தி இருக்கிறோமா என்று பார்க்க வேண்டிய காலகட்டம் இது. ஏனென்றால், கடந்த 51 ஆண்டு காலமாக இந்தச் சட்டமானது இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்த 51 ஆண்டுகளில் இந்துக் கோயில்கள் நலிவடைந்து போகக்கூடிய பல்வேறு சம்பவங்கள் பல்வேறு சட்டங்கள் மூலமாகவும், நடவடிக்கைகள் மூலமாகவும் நிகழ்ந்திருக்கின்றன. அதாவது, பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்களின் மூலமாகக் கோயில்களின் வருமானம் படிப்படியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை, நான் மாண்புமிகு மன்றத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். Cultivating Tenants Protection Act, 1955 மூலமாகக் கோயில்களுக்கு 60 சதவீதம் பங்கு இருந்தது. 1961-ல் இதுவே 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, 1972-ல் மேலும்

அது 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. மேலும் 1972-லிருந்து 1992 வரை 20 ஆண்டுகளில் இந்தக் குத்தகை வருமானம், கோயில்களுக்கு அளிக்கப்படாமல் 17 ஆண்டுக் குத்தகை பாக்கியானது தள்ளுபடி செய்யப்பட்டது.

கோயில்களின் நிலைமை எவ்வளவு மோசமானது என்று சொல்ல வேண்டுமானால், 1983 அக்டோபர் 20-ல் ஆண்டுக்கு 80,000 மூட்டை நெல் வருமானம் வரக்கூடிய தஞ்சை, பெரிய கோயிலிலே நைவேத்தியம் செய்வதற்குக்கூட ஒரு படி அரிசி இல்லாத காரணத்தாலே, ஆலயத்தை மூடுகின்ற அளவுக்கு வந்தது. அப்போது இருந்த முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள், இரண்டு லோடு அரிசியை உடனடியாக அனுப்பி வைத்து, அங்கே நைவேத்தியம் செய்வதற்காக உதவி செய்தார்கள் என்பதை நான் இந்த இடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அந்த அளவுக்குக் கோயில்களினுடைய சொத்துகள் கொஞ்சம், கொஞ்சமாக வருமானம் நின்றுபோய், நலிந்துகொண்டிருக்கின்றன என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அதோடுகூட, கோயில்களினுடைய வருமானம் 25 சதவீதம் வந்தால், அதிலே 67 சதவீதம் நிர்வாகச் செலவுகளுக்காக நாம் செலவிட வேண்டி வருகிறது. 40 சதவீதம் சம்பளம் மற்றும் கோயில் செலவுகள்; 11 சதவீதம் அரசு நிர்வாகச் செலவு: 7 சதவீதம் வரிகள்; 4 சதவீதம் ஆடிட் கட்டணம்; 50 சதவீதம் miscellaneous expenditure. ஆகவே, மீதி 30 சதவீதம்கூட, கோயில்களைப் பராமரிப்பதற்காக நமக்கு இருப்பது இல்லை. ஆகவே இப்போது stock taking--க்கான காலகட்டமாகக்கூட நாம் எடுத்துக்கொள்ள முடியும். எனவே, மேலும் அரசு தனது கொள்கை விளக்கக் குறிப்பிலே, நிலக் குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும், தனித் துணை ஆட்சியர் தலைமையில் 6 வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன என்றும், 3 இடங்களில் வருவாய் அமர்வு நீதிமன்றங்கள் இயங்கி வருவதாகவும் கூறப்படடு இருக்கிறது. இந்த வருவாய் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளின் குத்தகை பாக்கி ரூ.38.01 கோடியில், இதுவரை ரூ.1.09 கோடி மாத்திரமே வசூலிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 6-45

மேலும், அரசாங்கமே, ஏற்கெனவே 1994-95-ல் அறிவித்தபடி, மொத்தக் குத்தகை பாக்கி 81 கோடி ரூபாய்க்கு இருக்கிறது. தமிழகம்



முழுவதும் சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக இங்கே 4,79,021 ஏக்கர் நிலம் இருக்கிறது. 20,046 கட்டடங்கள், 33,627 மனைப் பகுதிகள். ஆகவே, இதிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 1,06,807 குத்தகைதாரர்களும் இருக்கிறார்கள். ஆனால், கோயில்களுக்கான வருமானம் மாத்திரம் குறைந்து கொண்டே வருகிறது. எனவே, இந்த நிலை மாற வேண்டும். இந்த நிலை மாற வேண்டுமானால், அரசாங்கம் ஏற்கெனவே, 1989-லே, மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், நீதியரசர் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும் அடங்கிய ஒரு கமிஷனை நிறுவி இருந்தது. அதனுடைய பரிந்துரைகள் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய பரிந்துரைகளிலே முக்கியமான பல விஷயங்களை நாம் கடுமையாகச் செயல்படுத்துவோமானால், இந்துக் கோயில்கள் நல்ல முறையிலே பராமரிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை உருவாகும். கோயில் நிலங்களுக்கு, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்கின்ற பரிந்துரையை அரசாங்கம் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் அலுவலர்களுக்கு arbitration power அளிக்கப்பட்டு, குத்தகை பாக்கியினை வசூலிக்க வேண்டும். 1949 ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்குப் பின், தஸ்திக் கட்டணமானது வசூலிக்கப்படுகிறது. அது, 1949, 1950, 1951 ஆம் ஆண்டுகளில் நிலவிய நெல் விலையினை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கப்பட்டது. உதாரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்திலே, 96 பட்டணம் படி கொண்ட ஒரு களம் நெல்லுக்கு, வெறும் 17 ரூபாய் என்று அப்போது விலை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இது கடந்த 50 ஆண்டுகளாக மாற்றப்படாமல் உள்ளது. ஆனால், கோயில்களின் பராமரிப்புச் செலவு பல மடங்கு உயர்ந்துள்ளது. உதாரணமாக, இராமநாதபுரம் சமஸ்தானத்திற்குட்பட்ட தேவஸ்தான நிர்வாகத்தில் இருக்கிற கோயில்கள், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களிலே இருக்கின்றன. அதற்கான தஸ்திக் கட்டணம் 3 இலட்சத்து 87 ஆயிரம் கோடி ரூபாயாகும். ஆனால், அந்தத் திருக்கோயில்களை-இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானத்திற்குட்பட்ட திருக்கோயில்களை—நிர்வகிக்கின்ற செலவுகள் மாத்திரம் 60,66,540 கோடி ரூபாய் ஆகிறது. ஏனென்றால், அந்த சமஸ்தானத்தில் 867 கிராமங்கள் அப்போது இருந்தன. ஆகவே, இதனால் கோயில்களைப் பராமரிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களிலே இருக்கின்ற கோயில்கள் பலவும், புராதனமான

[திரு. எச். ராஜா] [2002 ஏப்ரல் 30

பாடல் பெற்ற ஸ்தலங்கள்; மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலங்கள்; அவை பழுதடைந்து இருக்கின்றன. எனவே, இன்றைய தேதியின் அடிப்படையில், தஸ்திக் கட்டணத்தைப் புனர் நிர்ணயம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில் சொத்துகளிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்றப்பட்டு, வேலி அமைக்கப்பட்டு, உரிமைப் பலகையானது அங்கே வைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயத்திலுள்ள விக்கிரகங்களை ஒரே இடத்தில் வைக்கின்ற பழக்கம் கூடாது. எல்லாவற்றையும் திருவாரூரிலே கொண்டு போய் வைக்கின்ற ஒரு முறையானது இருக்கிறது. அது ஆகம விதிமுறைகளுக்குப் புறம்பானது ஆகும். அந்தந்தக் கோயில்களிலே இருக்கின்ற விக்கிரகங்கள், அந்தந்தக் கோயில்களிலேயே வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும்.

நிலக் குத்தகை மற்றும் வாடகை பாக்கியினை வசூலிக்க, Special Tribunals அமைத்து, உடனடியாக அவை வசூலிக்கப்பட வேண்டும் என நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களின் நிர்வாகத்தைக் கண்காணிக்க, ஆலய ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டும். கோயில் நகைகள் போன்ற அசையும் சொத்துகள் சரியாக உள்ளனவா என்பதை மேற்படி குழுக்கள் கண்காணிக்க வழிவகை செய்யப்பட வேண்டும். கோயில் வருமானம், எவ்வித மதச் சார்பற்ற காரணங்களுக்கும் செலவிடப்படக் கூடாது என்பதையும் இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

1996-லே, சென்னையிலே நடந்த கிராமக் கோயில் பூசாரிகளுடைய இரண்டாவது மாநாட்டிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு, 2001-இல் நடந்த மாநாட்டிலே முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கலந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு, 2000-2001-இல் ஓய்வூதியம் பெறும் தகுதி வாய்ந்த கிராமக் கோயில் பூசாரிகளின் எண்ணிக்கை 1500 ஆக அப்போது அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 15-3-2001 அன்று, அரசாணை எண் 71 மூலம், இது நான்காயிரமாக உயர்த்தப்பட்டது. ஆனால், 2001-2002-இல் மேலும் ஆயிரம் நபர்களுக்கு மாத்திரம் இது அதிகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இவ்வாண்டு ஓய்வூதியம் பெறத் தகுதி உள்ளவர்களின் எண்ணிக்கையை நான்காயிரமாக உயர்த்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 30] [திரு. எச். ராஜா]

கிராமக் கோயில் பூசாரிகளுக்கான தனி நல வாரியம் ஒன்று, 15-3-2001, அரசாணை நிலை எண் 72 மூலம் அறிவிக்கப்பட்டது. மேற்படி நல வாரியத்தின் முதல் கூட்டமானது, 24-3-2001-ல் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் வாரியத்தின் விதிமுறைகள் வகுக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. வறுமையில் வாடும் ஏழையெளிய பூசாரிகள் சமீபத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களையேகூட, கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை சார்பாக சந்தித்திருக்கிறார்கள் என்பதையும் நான் கவனப்படுத்த விரும்புகிறேன்; வறுமையில் வாடும் ஏழையெளிய பூசாரிகளின் வாழ்வு வளம் பெற இத்திட்டம் பெரிதும் பயன்படும்; எனவே, உடனடியாக அமல்படுத்த வேண்டுகிறேன். கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஆலய வழிபாட்டுக்கான பயிற்சியானது ஏற்பாடு செய்யப்பட வேண்டியிருக்கிறது. இதுவரை, கிராமக் கோயில் பூசாரிகளினுடைய பேரவை, 10 ஆண்டுகளில் 21 பயிற்சி முகாம்கள் நடத்தியுள்ளது. அவற்றில் 1555 பூசாரிகள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அரசே முக்கியமான கோயில்களிலே இம்மாதிரியான பயிற்சி அளிப்பதற்கான பொறுப்பை மேற்கொள்ளுமானால், ஆண்டுக்கு 2 ஆயிரம் பூசாரிகளுக்குப் பயிற்சி அளிக்க முடியும். எனவே, அதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-50

கிராமக் கோயில்களுக்கு நிபந்தனையின்றி இலவசமாக மின்சாரம் வழங்கப்பட வேண்டும். தற்போது வர்த்தக நிறுவனங்களுக்கு உள்ள கட்டண விகிதப்படி கோயில்களுக்கும் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, கோயில்களுக்கு எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் இலவசமாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே, அரசினுடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தன்கீழ் வரும் திருக்கோயில் திருக்குளங்களில் முறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சமயத்தில் சென்னை, வடபழனி வெங்கீஸ்வரர் கோயில் திருக்குளத்தை மூடுகின்ற, அங்கே கமர்ஷியல் காம்ப்ளக்ஸ் கட்டுகின்ற ஒரு செயலை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வடபழனி, வெங்கீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நகர சர்வே எண் 34, பழைய சர்வே

[திரு. எச். ராஜா] [2002 ஏப்ரல் 30

எண் 37/7-இல் உள்ள திருக்கோயில் குளத்தில் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுள்ளதைத் தடுக்க, குளத்தைச் சுற்றிலும் இரும்புக் கம்பி வேலியிட்டுப் பாதுகாக்க திருக்கோயில் பரம்பரை அறங்காவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்று அரசால் அறிவுறுத்தப்பட்ட பிறகும், தற்போது அங்கு கட்டடம் கட்டப்பட்டு, மதுக் கடையே வைக்கப்பட்டு இருக்கிறது. இன்றுகூட அங்கு மண் அடித்து, அந்தக் குளத்தை மூடுகின்ற, குளத்தைத் தூர்த்துவதற்கான வேலை நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு அதை நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையிலே இரண்டு முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன. 1990 ஆம் ஆண்டு சென்னை, கொட்டிவாக்கத்தில் பத்திரிகையாளர்களுக்கு 5½ ஏக்கர் நிலம் 99 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் விலையில் வழங்கப்பட்டது. இதற்கான பணத்தில் 20 இலட்சம் ரூபாய் அரசு மானியமாக வழங்குவதாக அறிவித்தது. மீதிப் பணத்தைத் தவணையில் உடனடியாக சென்னை, பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமானது கட்டிவிட்டது. மானியத் தொகையை அரசு ஓராண்டு காலம் தாமதமாக வீட்டு வசதி வாரியத்திற்கு வழங்கியது. இதற்கு ரூ. 6 இலட்சத்து 82 ஆயிரம் வட்டியைச் சங்கம் கட்ட வேண்டுமெனக் கூறி, 10 ஆண்டு காலமாகக் கிரயப் பத்திரம் செய்யப்படாமல் உள்ளது. இதுபற்றிக் காலையிலே செய்தித் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது, சம்பந்தப்பட்ட துறையுடன் கலந்து பேசி முடிவு எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள், செய்யாத குற்றத்திற்குத் தண்டிப்பதுபோல், அரசு தாமதமாக மானியத் தொகை வழங்கியதற்கு, பத்திரிகையாளர் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் பொறுப்பாக இருக்க முடியாது. எனவே அரசே பொறுப்பு ஏற்று, 10 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கிரயப் பத்திரத்தைத் தாமதமின்றிக் கொடுப்பதற்கு வீட்டு வசதித் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தலைமைச் செயலகப் பணியாளர்கள் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தில் ஏற்கெனவே 56.9 ஏக்கர் நிலமானது வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்காக நியமிக்கப்பட்டு இருக்கின்ற கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் மர்மமாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்றும், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிதிகள் சரியான முறையிலே கையாளப்படவில்லை என்றும் தகவல்கள் வந்தன. இது



2002 ஏப்ரல் 30] [திரு. எச். ராஜா]

அதிர்ச்சி அளிக்கத்தக்கதாக இருக்கிறது. சங்க நிர்வாகச் சீர்கேடுகள், முறைகேடுகள் குறித்து ஆய்வு செய்திட ஒரு பூர்வாங்க விசாரணைக்குக் கடந்த அக்டோபர் மாதம் 2001-ல் அரசு உத்தரவிட்டதன் அடிப்படையில், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை அலுவலகத்தில் இருந்து, இணைப் பதிவாளர், ஆய்வுக் குழு அவர்களால் 31-10-2001 மற்றும் 1-11-2001 ஆகிய நாட்களில் ஆய்வு நடத்தப்பட்டு, நிர்வாகச் சீர்கேடுகளும், முறைகேடுகளும் மற்றும் நிர்வாகக் குற்றங்களும் கண்டறியப்பட்டு, தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் இயங்கி வரும் சங்க வங்கிக் கணக்கு எண் 9644 உடனடியாக முடக்கப்பட்டது. சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல், நாளது தேதி வரை ஒரே ஒரு முறைதான் பேரவைக் கூட்டம் நடத்தப்பட்டு இருக்கிறது; அதாவது 30-3-2002-ல். இதில் நான்கு கூட்டுறவு ஆண்டுகளுக்கான நடவடிக்கைகள் ஒரே மூச்சில் அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளன. ஓவ்வோர் ஆண்டு அறிக்கையிலும், முதல் பேரவை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கம் தொடங்கப்பட்ட நாள் முதல், நாளது தேதி வரை வரவு-செலவுக் கணக்குகள் தணிக்கை செய்யப்படவும் இல்லை; தணிக்கைச் சான்றிதழ் பெறப்படவும் இல்லை. ஆனால், தணிக்கைக் கட்டணம் மட்டும் அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, 10-4-2002 'தினமலர்' நாளிதழில் சங்கத் தலைவராகப் பிரகடனப்படுத்திக் கொண்டவரால் தரப்பட்ட அறிக்கையில், 56.9 ஏக்கர் நிலப் பரப்பு ஆக்கிரமிப்புகள் அகற்றப் பட்ட பின்பு, சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்நிலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக, 1999-2000 கூட்டுறவு ஆண்டில் ரூ.12 ஆயிரமும், 2000-2001 கூட்டுறவு ஆண்டில் 10 இலட்சத்து 15 ஆயிரத்து 738 ரூபாய் 62 பைசாவும் செலவிடப்பட்டதாக வரவு-செலவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 6-55

ஆக்கிரமிப்புகளை அகற்றுவது அரசு, அரசு சார்ந்த அதிகாரிகளின் பணியும், பொறுப்புமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், முள் வேலி அமைக்கச் செலவழித்ததாகச் சொல்லப்படுகின்ற செலவினத் தொகை 4 இலட்சம் போன்ற பெரிய செலவினங்கள் எதுவும் பதிவாளரின் முன் அனுமதியின்றி செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்து இருக்கிறது. கடந்த அக்டோபர் 2001-ல் நடத்தப்பட்ட பூர்வாங்க ஆய்வு விசாரணையில் சங்க நிதிகள் முறையாகப் பேணப்படவில்லை; நிர்வாகச் சீர்கேடுகள் நடந்துள்ளன என்று

[திரு. எச். ராஜா] [2002 ஏப்ரல் 30

கண்டறியப்பட்ட நிலையில், 27-4-2002 அன்று மனை ஒதுக்கீட்டுக் குலுக்கலையும் நடத்தி முடித்து இருக்கிறார்கள். இதில் முறைகேடுகள் நடந்துள்ளது ஊர்ஜிதம் ஆகியுள்ளதால், மனை ஒதுக்கீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கோரிய சங்க நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்க மறுத்து, இந்நிகழ்ச்சியில் அரசின் சார்பாக அதிகாரிகளோ, அமைச்சர்களோ கலந்துகொள்ளவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரவும், செலவும், அதீதமான நிர்வாக நடைமுறைகளும், செயலிழந்த ஒரு நிர்வாகக் குழுவால், தலைமைச் செயலக எல்லைக்குள்ளேயே நடந்து முடிந்திருக்கிறது. எனவே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாநிலத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு நிர்வாகக் குழுக்களும் கடந்த மே மாதம் 2001-ல் கலைக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, தற்போது மேலும் பணி நீட்டிப்பு வழங்க சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தலைமைச் செயலகப் பணியாளர்கள் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்க முறைகேடுகளுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, தமிழக முதலமைச்சர் அவர்கள், அவரது நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் தலைமைச் செயலகத்திலேயே இம்மாதிரியான ஒரு முறைகேடு இனிமேலும் நடக்காமல் இருப்பதற்காக, ஒரு தனி அலுவலரை நியமனம் செய்து கூட்டுறவுச் சங்கச் சட்டம், 1981-ன்கீழ் நடவடிக்கை எடுத்து, தலைமைச் செயலக ஊழியர்களுக்கு நியாயம் கிடைத்திட, இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டி.வி.ஏ.சி. விசாரணைக்கும் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேற்படி இந்து அறநிலையத் துறை மற்றும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** சில விமர்சனங்கள் பண்ணியிருக்கிறார். அதற்குப் பதில் சொல்ல வேண்டும், விளக்கம் சொல்ல வேண்டும். ஒரேயொரு நிமிடம் கொடுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பேசுகிறபோது, கம்யூனிஸ்டுகளை விமர்சித்து சில விஷயங்களைச் சொன்னார். அதிலே சுருக்கமாக ஒன்று. இந்த விநாயக சதுர்த்தி விழா சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி, சிவபுண்ணியம்



2002 ஏப்ரல் 30] [திரு. கே.சி. கருணாகரன்]

ஆகியோர் பேசியதற்குப் பதில் சொல்கிறபோது, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, மக்கள் ஒற்றுமைக்காக அறிமுகப்படுத்தப்பட்ட விழா, திலகரால் அறிமுகப்படுத்தப்பட்ட விழா என்று அவர் சொன்னார். அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் அந்த விழா, அண்மைக் காலங்களில் மதக் கிலேசங்களையும், மதத் துவேஷங்களையும் தூண்டுவதற்குப் பயன்படுத்தப்படுகிற விழாவாக மாற்றப்பட்டதும், அரசியல் வர்ணம் பூசப்பட்டதும், விநாயகர் சதுர்த்தி இந்துக்களின் மொத்த விழா என்பதற்குப் பதிலாக, ஒரு சில அரசியல் கட்சிகளின் விழாவாக மாற்றப்பட்டதுமான நடவடிக்கை வருகிறபோதுதான் கலகங்கள் வந்தன. திலகரால் தொடங்கப்பட்டபோது, மசூதிகளும், முஸ்லீம்களும் தாக்கப்படவில்லை. இப்போது நடந்து கொண்டிருக்கிற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. போதும், அதோடு விடுங்கள். பிரச்சினையைக் கிளறாதீர்கள். ஏற்கெனவே நாடு சீர்குலைந்து போய் இருக்கிறது. இதிலே நீங்கள் வேறு. உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி சான்ட்ரா டான் க்ரவல், ஆரம்பியுங்கள். (குறுக்கீடு) ராஜா, அவர் கருத்தைச் சொல்லிவிட்டார், உட்காருங்கள். திருமதி சான்ட்ரா டான் க்ரவல்.

***Tmt. SANDRA DAWN GREWAL:** Honourable Speaker Sir, I open my speech thanking you for this opportunity given to me. The Government has set for itself the goal of providing "A House for each family" and has formulated several schemes to achieve this goal and for this, I thank the Government.

While the Tamil Nadu Housing Board caters to the housing needs of economically weaker sections, lower and middle income groups, it is my humble opinion that the thrust should be more on the slum tenements and common shelters, because, poor people without shelter are high in number. It is commendable that 8600 plots for the economically weaker sections are available for allotment, out of which a majority comes under the Tamil Nadu Urban Development Project. While this intention is noble, I request that it should be ensured that the plots are situated in little more developed areas and not in remote places with little facilities of water, electricity and transport.

The statement that there is a proposal to help Housing Board allottees get loans from financial institutions is a step in the right

direction. At the same time, the Board may need to take all steps to clear the backlog and make arrangements to advertise and promote their constructed flats by offering suitable incentive.

I am very happy to note that the Board reserved 18% and 1% of the flats constructed, for the Scheduled Castes and Scheduled Tribes respectively. I would urge the Government to provide all amenities in the areas where the slum dwellers have been rehabilitated. I also request that in all housing schemes of the Government, a particular number of houses may please be earmarked for those Anglo-Indians who are below the poverty line.

Honourable Speaker Sir, the Policy Note points out that the Government of India have recently announced the 'Valmiki Ambedkar Housing Scheme'-(VAMBAY) which envisages construction of shelters for urban slum people with 50% Central grant. I would only request that the Government might consider whether a small percentage of the houses so constructed could be earmarked for the poor people belonging to the Anglo-Indian community. In this connection, may I also request that rented accommodation be considered by the Government to destitute Anglo-Indian women. Here, I would like to draw your kind attention to the plight of a lot of poor people living on the streets, not only in Chennai but also in other towns. These people are often displaced due to encroachment removal drive and natural calamities like fire and flood or even joblessness. It takes about a month for them to find some sort of alternative accommodation during which time they have to bear natural and man-made calamities. I am therefore to request the Government to evolve a scheme to construct shelters with basic amenities for these people who are displaced as well as street children in which they may be permitted to take shelters till they get suitable accommodation.

பிற்பகல் 7-00

With increasing job opportunities and modes of travel, the movement of people from the villages to the towns and cities have increased manifold, and as a result, the cities are stretched to the limit in providing basic amenities to the residents. Even though city planning



is done to arrest the problem, much more needs to be done. There needs to be long term strategic planning both at the Centre and State levels to provide for basic needs of electricity, water, public transport, sanitation and education.

Legislative measures in the field of housing have to be enforced strictly to prevent Chennai becoming another Mumbai or Kolkata, with high density population, old buildings and over burdened transport system. The growth of the city must be lateral and not vertical with better roads and transport facilities for quick travel.

With the permission of the Chair, I would like to use this opportunity to put forth a few other points. The Anglo-Indian Community is in a bad economic state and I would request the Government to please allow for just one seat reserved for them in Medical College, also good steps be considered for giving them reservations in the Police Force and Fire Service so that their standard of living improves due to higher employment opportunities.

Sir, at present, there are several norms governing the deployment of funds under the Constituency Development Scheme and certain priority areas have been earmarked. As a nominated member, covering only urban areas of major cities, I wish to use the funds in providing digital copy printers for Government-aided needy Anglo-Indian Schools as also one time repairs in one particular school. In this case, I would like to bring to your notice the St. George's Higher Secondary Anglo-Indian School in Aminjikarai, which is a Government-aided school and grossly in need of major repairs to one of its buildings, as their permanent higher secondary recognition is delayed due to this. This school caters to 75% of the low middle class group from all communities, besides having an orphanage. Because of this, they are unable to raise their fees. They get a deficit grant, as their fees can't meet the salaries of the staff. As per the amendment of G.O.No.41 of School Education, it is stated, these infrastructure facilities have been taken up through M.L.As./M.Ps. Constituency Improvement Scheme. Therefore, I request this to be considered as an exceptional case.

[Thirumathi Sandra Dawn Grewal] [2002 ஏப்ரல் 30

Another area in which the Government could direct its benevolent attention is the plight of the hospital patients from economically weaker sections who are in need of blood transfusions, Kidney transplants, cardiac surgery and other critical medical care. Will the Government kindly consider setting up sufficient number of blood banks and speciality facilities in State Government hospitals to take care of these needs?

With these words, Sir, I resume my seat, thanking you very much.

**HON. SPEAKER:** Well done, Mrs. Sandra. மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, மூவேழு வள்ளல்களைக் கண்ட நாடு; அழியாப் பெருமை கொண்ட நாடு. அவர்கள் வாரிசுகளாய், புரட்சித் தலைவரையும், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், வ்ாரி வழங்கும் வள்ளல்களாகப் பெற்ற பெருமையும் இந்தத் தமிழ்நாட்டிற்கு உண்டு.

நானோ, வள்ளலார் மாவட்டத்தைச் சேர்ந்தவன். அருட்பெரும் ஜோதியாய், தனிப் பெரும் கருணையாய், 'அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்! ஆருயிர்க்கு எல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்' என வேண்டிக் கொண்டவர் அந்த அருட்பிரகாச வள்ளலார். 'வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம் வாடினேன்' என்று ஊனுருக, உளமுருக, உயிருருகப் பாடிய வள்ளலார் மாவட்டத்தில் உள்ள இலட்சோப இலட்சம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களில் ஒருவனான என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, பின் என்னை அமைச்சராக்கிய அருள் மனம் கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்கி, சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நின்று, எனது துறையின் மானியக் கோரிக்கை மீதான உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 7-05

பாடுபடுகிற ப்பாட்டாளிகளுக்கு வீடுகள் இல்லை, கோடுகள் உண்டு. அவை ஏழ்மைக் கோடுகள்; வறுமைக் கோடுகள். அந்தக் கோடுகளை அழித்து, குடும்பத்திற்கு ஒரு வீடு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திற்கே



2002 ஏப்ரல் 30] [திரு. எம்.சி. சம்பத்]

எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கும் முதல் முதல்வர் என்ற பெருமைக்குரியவர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஆளுக்கொரு வீடு கட்டுவோம்-அதில்
ஆய கலைகளைச் சீராகப் பயில்வோம்'

என்று புரட்சித் தலைவர் அன்று பாடியதற்கு இன்றுதான் அர்த்தம் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பதைக் கொள்கையாகக் கொண்டு, வசதியைப் பெருக்க வேண்டுமென்று எங்களுக்கு ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், வீட்டு வசதி வாரியம், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மற்றும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

'கட்டிய பின் விற்றல்' என்ற நடைமுறையை வாரியம் இதுவரை கையாண்டாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களின் அக்கறையின்மை மற்றும் நிர்வாகத் திறமையின்மையினாலும், 2001 ஆம் ஆண்டு ஜுன் துவக்கம் வரை வீட்டு வசதி வாரியத்தில் சுமார் 688 கோடி ரூபாய் மதிப்பிலான வீடுகள் விற்கப்படாமல் இருந்தன. மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றபின், பல்வேறு விற்பனை யுக்திகளைக் கையாண்டு, சுமார் 126 கோடியே 36 இலட்சம் மதிப்பிலான வீடுகள், அடுக்குமாடி வீடுகள் மற்றும் மனைகள் விற்கப்பட்டுள்ளன.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்களின் நிர்வாகச் சீர்கேட்டால், வாரியம் பிற நிதி நிறுவனங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.843 கோடி. இதில் சுமார் ரூ.400 கோடிக்கான வட்டி—14 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலான அதிக வட்டிக் கடன்களாகும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றபின், நிர்வாகச் சீர்கேட்டைச் சரி செய்தும், குறைந்த வட்டியில், அதாவது 11 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதத்திற்கான வட்டியில், ரூ.205 கோடி கடன் பெற்று, அதிக வட்டிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தியுள்ளது. இதனால் வாரியத்திற்கு ரூ.13 கோடி வட்டிச் சுமை குறைவதோடு, மொத்தக் கடன் ரூபாயில் 100 கோடி வட்டிச் சுமையைக் குறைத்தது மட்டுமல்லாமல், ரூ.50 கோடி கையிருப்பாக வைத்திருந்த பெருமை, மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், அவல நிலையில் இருந்த அரசு வாடகைக் குடியிருப்புகளில் ரூ.13 கோடியே 18 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. குடிசை மாற்று வாரியத்தில் கடந்த ஓராண்டில் 3240 வீடுகள், ரூபாய் 17 கோடியே 28 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மட்டும், 6300 குடும்பங்களுக்கு ரூபாய் 9 கோடியே 52 இலட்சம் செலவில் தீப்பிடிக்காத கல்நார் வேய்ந்த கூரைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

நகர குடிசைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, 17,250 குடிசைகளில் வாழும் குடும்பங்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற, கடந்த நிதி ஆண்டில் ரூபாய் 3 கோடியே 45 இலட்சம் செலவிட்டுள்ளது.

குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு குடியிருப்புகளில் ரூபாய் 45 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதியில் இருக்கின்ற குடும்பங்கள், தண்ணீர் வசதியில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற நிலைமையைப் போக்க, சென்ற ஆண்டு ரூபாய் 76 இலட்சம் செலவில் 100 ஆழ்குழாய்க் கிணறுகள அமைத்துக் கொடுத்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்புத் திட்டத்தின்கீழ், 1375 குழந்தைகள் பயன்பெறும்வகையில் சென்ற ஆண்டு ரூபாய் 26 இலட்சத்து 87 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதிகளில் வாழும் பெண்களின் முன்னேற்றத்திற்காக, சென்ற ஆண்டு 7389 மகளிருக்குப் பயிற்சி அளிக்க ரூபாய் 29 இலட்சத்து 47 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், குடிசை மாற்று வாரியத்தின் பல்வேறு திட்டங்கள் மூலமாக சுமார் 38,940 குடிசைப் பகுதியில் வாழும் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் 31 கோடியே 25 இலட்சம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றபின் செலவிடப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 7-10

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலமாக, சென்ற நிதியாண்டில் 12,736 பயனாளிகளுக்கு ரூபாய் 268 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் கடன் பெறுவோர், ஏழை, எளிய மக்கள் என்பதால், அவர்கள் துயர் துடைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கடனுக்கு வசூலிக்கப்படும் வட்டியை 16.5% லிருந்து 14% ஆகக் குறைத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுச் சங்கங்கள் முனைப்புடன் செயல்பட்டு, சென்ற ஆண்டு ரூபாய் 90 கோடி, முந்தைய ஆண்டைவிடக் கூடுதலாக வசூல் செய்துள்ளது என்பதை இந்த அவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேசிய கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் மூலம், 1995ஆம் ஆண்டு சிறப்பாகச் செயல்படும் சங்கங்களுக்கு, தேசிய அளவிலும், பிரதம சங்கங்கள் அளவிலும் ஒரு பரிசுக் கேடயம் வழங்கும் திட்டம் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரால் உருவாக்கப்பட்டது. இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. இதன் மூலம், மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக, சூது மதி படைத்தவர்கள், எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களின் பெயரை நீக்கி, பெயர் மாற்றம் செய்தார்கள். வரலாற்றுச் சிறப்பு அம்சம் வாய்ந்த மாண்புமிகு அம்மா அவர்களின் பெயர், தமிழகத்திலுள்ள ஏழை, எளிய மக்கள் மனதிலும், இலட்சோப இலட்சம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் நெஞ்சங்களிலும் (மேசையைத் தட்டும் ஒலி) அழியாப் புகழுடன் நிலைத்து நிற்கும். அவர்களின் பெயரை இந்த ஒரு திட்டத்தின் மூலம் அழிக்க நினைத்த திராவிட முன்னேற்றக் கழகம்தான் இன்று அழிந்து, தமிழக மக்களால் தூக்கி எறியப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களது இதயதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரால் இந்தப் பரிசுத் திட்டப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தேசிய அளவில் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு இப்பரிசு வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கிறேன். பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை, எளியவர்களுக்கான ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கடன் பெற்றவர்கள், 31-3-2001 வரையில் நிலுவையில் உள்ள அசல் தொகையை 31-3-2002-க்குள் முழுமையாகத் திருப்பிச் செலுத்தி, அதன் பயனாக 39,059 தவணை கடந்த உறுப்பினர்கள், ரூபாய் 32 கோடி அளவிலான தவணை கடந்த வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுப் பயனடைந்துள்ளார்கள் என்பதை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்குத் திட்டங்களைத் திட்டத் தெரியும். மக்கள் பயன்பெறும் வகையில் நல்ல திட்டங்களைச் செயல்படுத்த முடியும். கடந்த ஆட்சியாளர்கள் போல் மக்கள் வரிப் பணத்தை ஆடம்பரத் திட்டங்களுக்கு ஊதாரித்தனமாகச் செலவு செய்ய எங்களுக்குத் தெரியாது. ஏழை, எளிய மக்களுக்குப் பயன்படும் கூட்டுறவு வீட்டு வசதித் துறை மூலமாக கடந்த ஆட்சியாளர்கள் நடத்திய முறைகேடுகள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து இங்கே தெரிவிப்பது எனது கடமையாகும்.

சென்னை மாநகரத்தின் புறத்தே அமைந்துள்ள இன்றைய ஆலந்தூர் நகரசபைத் தலைவர், வழக்கறிஞர் மற்றும் நங்கநல்லூர் கூட்டுறவுக் கட்டடச் சங்க முன்னாள் தலைவர், கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சுபம் நகர் 3-ல் சங்கத்திற்கு மனைப் பிரிவு வாங்கியதில் சுமார் ரூ. 46 இலட்சம் சங்கத்திற்கு நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதைத் தக்க ஆதாரத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் நங்கநல்லூர் கூட்டுறவுக் கட்டடச் சங்கத் தலைவராக 31-10-1996 முதல் 25-5-2001 வரை இருந்தபோது இந்த முறைகேடு நடந்தது. இச்சங்கம், 'சுபம் என்டர்பிரைசஸ்' என்ற நிறுவனத்தால் ஜமீன் பல்லாவரத்தில் ஏற்படுத்தப்பட்ட சுபம் நகர்-3 என்ற மனைப் பிரிவில் 2,17,301 சதுர அடி கொண்ட 114 மனை இடங்களை வாங்கியுள்ளது. மேற்கண்ட நிலத்தை சதுர அடி, 82 ரூபாய் வீதம் வாங்குவதற்கு 22-12-1999-ல் 'சுபம் என்டர்பிரைசஸ்' என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து, அந்த நிறுவனத்திற்கு சுமார் ரூபாய் ஒரு கோடியே 78 இலட்சம் வழங்கப்பட்டது. மேற்கண்ட நிலத்திற்கு, சதுர அடி 82 ரூபாய் என்று முன்னாள் சங்கத் தலைவர் எவ்வாறு நிர்ணயம் செய்தார் என்று தெரியவில்லை. இந்த விலை நிர்ணயத்திற்கு எந்தவிதமான அரசு வழிகாட்டி விலை மதிப்பின்படி இல்லாமலோ



அல்லது வருவாய்த் துறை சான்றிதழைப் பெறாமலோ தான் சுயலாபம் அடையும் வகையில், அவராகவே ஒரு விலையை நிர்ணயம் செய்து, மேற்கண்ட நிலத்திற்குப் பெரும் தொகையை வழங்கி சங்கத்திற்கு, ரூபாய் 46 இலட்சம், பெருத்த நட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

பிற்பகல் 7-15

ஆனால், இது சம்பந்தப்பட்ட கோப்பில், தாம்பரம், வருவாய் துணை வட்டாட்சியரிடமிருந்து சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. சுபம் நகர் மனைப் பிரிவிற்கு, தாம்பரம், துணை வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டது போலிச் சான்று என்ற புகார் வந்ததன் பேரில், அந்தச் சான்றிதழைச் சரிபார்த்தபோது, 25-9-1999-ல் வழங்கப்பட்ட சான்றிதழ், தாம்பரம், தலைமையிட துணை வட்டாட்சியரால் வழங்கப்படவில்லை என்று தாம்பரம், வட்டாட்சியர் ஓ.மு.எண்.3299/2002/அ2-ல், 11-3-2002 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதை நோக்கும்போது, அவர் இதுபோல் எத்தனை குற்றங்களைச் செய்திருக்க கூடும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மேற்கண்ட சங்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள், இலஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணையில் உள்ளன என்பதை நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில்தான் அடுக்குமாடி வீடு கட்டி விற்பது வழக்கம். ஆனால், சேலம் மாவட்டத்திலே மிகச் சிறிய நகரமான ஆத்தூரில், அறிஞர் அண்ணா கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலம் எட்டு கோடி ரூபாய் செலவில் 124 அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு, அது டெண்டர் கோராமல் 'quotation' முறையில் கொடுக்கப்பட்டு சங்கப் பணம் முறைகேடாகச் சூறையாடப்பட்டுள்ளது. இதில் கொள்ளையடித்த கும்பல் யார் என்பது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் மூலம் வெளிச்சத்துக்கு வரும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, பெரம்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் என்ற அமைப்புக்கு 31-8-1998 முதல் 25-5-2001 வரை தலைவராக இருந்தார். அவர் தலைவராக இருந்த காலத்தில், இந்த நிறுவனத்தைத் தன் சொந்தக் கம்பெனி போல் நடத்தி, எவ்வளவு ஆடம்பரம் மற்றும் ஊதாரித்தனமாக மக்கள் சங்கப் பணம் செலவு செய்யப்பட்டுள்ளது

என்பதை, மிக மன வேதனையுடன், வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இணையத்தின் பேரவைக் கூட்டம் ஒவ்வோர் ஆண்டும் ஒரு நாள் நடத்தப்படுவது வழக்கம். அதன்படி, 1997-1998 ஆம் ஆண்டுக்கான பேரவைக் கூட்டம், 30-9-1999-ல் நடைபெற்றது. அதற்கான செலவு, ரூபாய் பதினோரு இலட்சமாகும். 1998-99 ஆம் ஆண்டுக்கான கூட்டம் 30-3-2000-ல் நடைபெற்றது. அதற்கான செலவு ரூபாய் பத்தொன்பது இலட்சமாகும். அதேபோல, 1999-2000 ஆண்டுக்கான கூட்டம் 24-1-2001-ல் நடைபெற்றது. அதற்கான செலவு ரூபாய் பத்தொன்பது இலட்சமாகும். ஆக மொத்தம், இந்த மூன்று நாட்களுக்கும் கூட்டத்தின் மொத்தச் செலவு, ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சமாகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் நியமிக்கப்பட்ட தனி அதிகாரியால் 2002-ல் நடத்தப் பெற்ற பேரவைக் கூட்டத்தின் செலவு வெறும் தொன்னூற்று ஆறாயிரம் ரூபாய் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேரவைக் கூட்டம் நடத்த ஒரு நாள் செலவு மட்டும் ரூபாய் பத்தொன்பது இலட்சமாகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பேரவைக் கூட்டம் நடத்த ஒரு நாள் செலவு வெறும் ரூபாய் 96 ஆயிரம் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் எவ்வளவு ஊதாரித்தனமாக மற்றும் முறைகேடாகச் செலவு செய்தார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்படி மாண்புமிகு உறுப்பினர்களை நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சங்க உறுப்பினர்கள் யார் ஊதாரித்தனமாக, ஆடம்பரமாகச் செலவு செய்தார்கள் என்பதற்கு இதுவே ஓர் அடையாளமாகும். இந்த இணையத்தில் முன்னாள் நிர்வாகக் குழுவினர் சால்வை மட்டுமே ரூபாய் 2,70,000-க்கு வாங்கியுள்ளார்கள். வெகுமதிப் பொருட்கள் மட்டும் ரூபாய் 3,11,000-க்கு வாங்கப்பட்டுள்ளன. விருந்தினருக்கு உணவு படைக்கும் வகையில் வழங்கப்பட்டதன் மூலம் ரூ.8,50,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த இணையத்திற்குப் போதிய அளவு ஊழியர்கள் இருந்தும்கூட, தினக்கூலி அடிப்படையில், வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் செலவு செய்யப்பட்டது ரூபாய் 15,50,000. இந்த நிர்வாகச் சீர்கேட்டினால் கிட்டத்தட்ட 75 இலட்சத்திற்கு மேல் முறைகேடாகச் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவற்றுக்கெல்லாம் மாண்புமிகு



சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதிச் சங்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சுமார் 60 கோடி அளவில் ஊழலும், முறைகேடுகளும் செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் 49 சங்கங்களும், 82-இன்கீழ் 160 சங்கங்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதில் 12 சங்கங்களில் விசாரணை முடிக்கப்பட்டு அறிக்கையும், 112 சங்கங்களில் ஆய்வு அறிக்கையும் பெறப்பட்டு, ரூபாய் 2 கோடியே 45 இலட்சம் தண்டத் தீர்வை வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதில் 39 சங்கங்களில் சுமார் 2 கோடிக்கு மேல் முறைகேடு செய்ததாக 152 நபர்கள்மீது குற்ற வழக்குகள் அனுமதிக்கப்பட்டு, காவல் துறை குற்றப் புலனாய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 7-20

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களில் பதவியில் இருந்த முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் செய்துள்ள முறைகேடுகள் சம்பந்தமாக விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ள இலஞ்ச ஒழிப்புத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்துகின்ற செயல் திட்டங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

சென்னை நகரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, கனரக வாகனங்கள் சென்னை நகருக்குள் வராமல் இருக்க ஒரு வெளி வட்டச் சாலை அமைத்தல் அவசியம் எனக் கருதி, அதற்காக 25-5-1993 மற்றும் 27-11-1995 நாளிட்ட இரண்டு ஆணைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது வெளியிட்டார்கள். இச்சாலையானது, தெற்கே வண்டலூரிலிருந்து வடக்கே மீஞ்சூரை இணைக்கும் வகையில் சுமார் 62 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகத் திட்டமிடப்பட்டு இருந்தது. இத்திட்டம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் அளித்த திட்டம் என்ற ஒரே காரணத்திற்காக, கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதனைக் கேட்பாரற்றுக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். மீண்டும்

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன் முதற்கட்டப் பணிக்கான நில ஆர்ஜித வேலைகள் வேகமாக நடைபெற்று, நிலம் கையகப்படுத்தும் பணி ஜூன் திங்கள் 2002-ல் முடியும் தருவாயில் இருக்கிறது. ஒரு தொலைநோக்குப் பார்வையுடன், சென்னை மாநகரின் நெரிசலைக் குறைப்பதற்காகப் போடப்பட்ட திட்டத்தைக் கடந்த ஆட்சியாளர்கள் செயல்படுத்தியிருந்தால், இன்று கனரக வாகனங்கள் சென்னை மாநகருக்குள் வராமல், போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திருக்கலாம். இன்று எதிர்க்கட்சியாக இருக்கும் அன்றைய ஆட்சியாளர்களுக்குத் தானாக ஒரு தொலைநோக்குத் திட்டம் போடத் தெரியாது. எங்களுடைய மாண்புமிகு அம்மா அவர்கள் போட்டுக் கொடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) திட்டத்தையும் செயல்படுத்தத் தெரியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்குப் பல்வேறு திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் மழை நீர் சேகரிக்கும் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தைத் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்துள்ளார்கள். குறிப்பாக, சென்னை நகரில் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட பகுதிகளில் மழை நீர் சேகரிக்கும் திட்டத்தைக் கட்டாயமாக அமல்படுத்த வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி சென்னை மாநகராட்சியிடமோ அல்லது பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமோ கட்டடம் கட்ட அனுமதி கோரும் திட்ட வரைபடத்திலேயே, மழை நீர் சேகரிப்புக்கு வரைபடம் இருந்தால் தான் அனுமதி வழங்க வேண்டும் என்று 14-9-2001 நாளிட்ட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த மழை நீர் சேகரிக்கும் திட்டம் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன், இதுவரை எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத ஓர் அரிய திட்டமாகும். இதனால் நிலத்தடி நீர் பெருகி, அடுக்குக் குடியிருப்பில் வசிக்கின்ற மக்கள் குடிநீருக்காக அலைய வேண்டிய அவசியம் இருக்காது என்பது தெளிவாகும். மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை நீங்கள் பாராட்டவில்லை. ஆனால், சென்னை மாநகரில் இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று அறிந்த உத்தராஞ்சல் மாநில முதல்வர் அதுபற்றித் தெரிந்துகொள்வதற்காக, புதுடெல்லியில் உள்ள நமது Resident Commissioner திரு. பவன் ரைனா அவர்களைக் கேட்டு அறிந்துள்ளார்கள். இதுபற்றி புதுடெல்லியிலிருந்து வெளியாகும் 'Times of India' பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியுடன் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். "I am faxing herewith the 'Times of India' report concerning measures such as water harvesting measure in Chennai. The Chief Minister of Uttaranchal is very keen to learn details of water harvesting as is being implemented in Chennai. I would request your assistance in acquiring the relevant details" என்பதை மிகவும் பெருமையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய தானைத் தலைவி புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் போடுகின்ற திட்டங்கள் அனைத்துமே மக்களுக்குப் பயனுள்ள வகையிலானவை. மக்கள் மனதில் அவர் புகழ் என்றுமே இருக்கின்ற வகையில் ஒரு தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவேன் என்று சூளுரைத்து முதல்வராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களைத் தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு மிகப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 7-25

அடுத்து, புதிய அறிவிப்புகள். மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவின்படி இங்கே சில புதிய அறிவிப்புகளை அறிவிக்கின்றேன்:

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 2002-2003-ல் 567 வீடுகள் மற்றும் அடுக்குமாடி வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4630 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கூறிய திட்டப் பணிகள் அனைத்தும் இந்த நிதியாண்டில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி வாரியம், வீடுகளைக் 'கட்டிய பின் விற்பது' என்ற கொள்கைக்குப் பதிலாக 'விற்றபின் கட்டுவது' என்ற புதிய கொள்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

வீட்டு வசதி வாரியம், தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து கூட்டு முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி, சோழிங்கநல்லூரில் சுமார் 50 ஏக்கர் மேம்படுத்தப்பட்ட

[திரு. எம்.சி. சம்பத்] [2002 ஏப்ரல் 30

நிலத்தைத் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து, வீடுகள் மற்றும் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தரும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் பின்னர் பிற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னைப் பெருநகர் எல்லைக்குள் சமீப காலத்தில் செயல்படுத்தப்படும் எல்லா வீட்டு வசதித் திட்டங்களிலும் மழை நீர் சேகரிப்பு என்ற அமைப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட உள்ளன. இதுபோன்று தமிழகத்தின் பிற பகுதிகளில் அரசுக் குடியிருப்பு வீட்டு வசதித் திட்டங்களில் சுமார் 50 இலட்சம் செலவில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் சென்னை நகரில் டும்பிட்கோ கடனுதவியுடன் குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு 576 குடியிருப்புகள் ரூபாய் 7 கோடியே 8 இலட்சம் செலவில் இந்த நிதியாண்டில் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் 15,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 3 கோடி செலவில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிசை மாற்று வாரியத்தால் வெள்ளச் சேதக் குறைப்புப் பணித் திட்டத்தின்கீழ் 392 வீடுகள், ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் செலவில் 2002-2003-க்குள் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிசை மாற்று வாரியம், மைய அரசின் 11-வது நிதிக் குழுவிடமிருந்து பெற்றுள்ள சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு, அடுத்த மூன்று ஆண்டுகளில் சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூபாய் 49 கோடி மொத்தச் செலவில் 4,652 குடியிருப்புகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின்கீழ் சென்னை நகரில் நடப்பு நிதியாண்டில் 1,620 வீடுகள் ரூபாய் 19 கோடியே 44 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வருடம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் இத்திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டும் பணிகள் தொடங்கப்படும்.



2002 ஏப்ரல் 30] [திரு. எம்.சி. சம்பத்]

மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், நகர குடிசைப் பகுதிகளில் 1000 வீடுகள் ரூபாய் 4 கோடி செலவில் இந்த நிதியாண்டில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் நிதியாண்டில் நகர குடிசைப் பகுதிகளில் கூடுதலாக 6,250 வீடுகள் ரூபாய் 25 கோடி செலவில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ள 30,514 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 8 கோடியே 93 இலட்சம் செலவில் அத்தியாவசியப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சென்னை நகர சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நிதியுதவியினைக் கொண்டு, ரூபாய் ஒரு கோடியே 45 இலட்சம் செலவில் சென்னையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நகர குடிசைப் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் தீ விபத்துகளைத் தடுக்கும் பொருட்டு, 2,724 குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்கு ரூபாய் 4 கோடியே 25 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரைகள் அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகரில் கட்டப்பட்டுள்ள பல்வேறு குடிசை மாற்று வாரிய அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் மற்றும் மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான குடியிருப்புப் பகுதிகளில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் மழை நீர் சேகரிக்கும் அமைப்புகள் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு வீட்டு வசதித் துறை:- நடப்பு நிதியாண்டில் கூட்டுறவு வீட்டு வசதித் துறையின் மூலமாக சுமார் ரூபாய் 200 கோடி கடனாக வழங்கப்பட உள்ளது.

கூட்டுறவுச் சங்க இணையத்தின் மூலமாக வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா, அதாவது, "வாம்பே" திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற குடிசைப் பகுதிகளில் 2,250 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு

[திரு. எம்.சி. சம்பத்] [2002 ஏப்ரல் 30

வீட்டிற்கு மொத்தச் செலவினம் சென்னை மாநகரத்தைப் பொறுத்தமட்டில் ரூ.60,000/-என்றும் ஏனைய நகரங்களில் ரூபாய் 40,000/-என்றும் நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் 50 சதவிகிதம் மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. 40 சதவிகிதம் கடனாக வழங்கப்படும். 10 சதவிகிதம் பயனாளிகள் தன் சொந்த நிதியை உபயோகப்படுத்தி வீடு கட்ட வேண்டும். ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட கடன் தொகை ரூபாய் 18 கோடியே 84 இலட்சம் மற்றும் பயனாளிகளின் 10 சதவீதப் பங்குத் தொகையான ரூ.1 கோடியே 88 இலட்சமும் சேர்த்து ரூ.20 கோடியே 72 இலட்சம், அதற்கு சம பங்காக மத்திய அரசிடமிருந்து மானியமாக ரூ.20 கோடியே 72 இலட்சம் பெற்று, ஆக மொத்தத் தொகையான ரூ.41 கோடியே 44 இலட்சத்திற்கு 9000 வீடுகள் "வாம்பே" வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 7-30

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்:- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் வெளிவட்டச் சாலையை, சென்னைப் பெருநகரப் பரப்பின் எல்லையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எல்லையைச் சுற்றியுள்ள பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படும். முதல் கட்டப் பணியாக, சென்னை—திருச்சி சாலையில் இருந்து சென்னை-திருவள்ளூர் சாலையை இணைக்கும் 29.2 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணி தொடங்கப்படவுள்ளது. கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் காய்கறிக் கழிவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் புதிய திட்டம் ஒன்றை, ரூ.5 கோடி செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் 75 சதவிகிதம் மைய அரசு மானியமாகப் பெற்று, மீதமுள்ள 25 சதவிகிதத்தினைக் குழுமம் ஏற்கப் பரிசீலிக்கப்பட்டு, இந்தியாவிலேயே இத்திட்டம் முதலாவதாகச் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தப்படவுள்ளது. சென்னை நகரில் கோயம்பேட்டில் ரூ.89 கோடி செலவில் புறநகர்ப் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும். துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின், இரண்டாம் கட்டமாக, திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான இரயில் போக்குவரத்து டிசம்பர் 2002-ல் தொடங்கப்படவுள்ளது.

சூரிய சக்தியை வியாபார ரீதியாகப் பயன்படுத்தி புதிதாகக் கட்டப்படும் தங்கும் விடுதிகள், விருந்தினர் மாளிகைகள்,



2002 ஏப்ரல் 30] [திரு. எம்.சி. சம்பத்]

மருத்துவமனைகள் மற்றும் திருமண மண்டபங்களில் சூரிய சக்தியால் நீர் சூடாக்கும் முறைகளுக்கான உபகரணங்களைப் பொருத்தி எரிசக்தி சேமிப்பதற்கான நிபந்தனைகளை வளர்ச்சித் திட்ட விதிகளில் கொண்டு வர சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முன் அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கட்டடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைப் பிரிவுகள் ஆகியவற்றை வரன்முறைப்படுத்தும் திட்டத்தை மேலும் சீரும், சிறப்புமாகச் செயல்படுத்த வேண்டுமென்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்கள் மாற்றுத் திட்டத்தை அறிமுகம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, அனுமதியின்றிக் கட்டப்பட்ட மற்றும் விதிகளை மீறிக் கட்டப்பட்ட கட்டடங்களை வரன்முறைப்படுத்த, இறுதி வாய்ப்பாக கட்டண விதிகளைத் தளர்த்தி, ஏற்கெனவே இருந்த தொகையில் 50 விழுக்காடுகள் குறைத்து நியாயமான முறையில் மாற்றம் செய்து அறிவித்துள்ளார்கள். இப்புதிய மாற்றம் செய்யப்பட்ட திட்டம் பொது மக்களிடம் நல்ல வரவேற்பினைப் பெறும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. என்.கே. பெருமாள், திரு. வி.கே. லட்சுமணன், திரு. பி.எஸ். உலகரட்சகன், திரு. பதினெட்டாம்படியான், திரு. போளூர் வரதன், செல்வி க. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம், திருமதி சான்ட்ரா டான் க்ரவல், திரு. எச். ராஜா ஆகியோர் வீட்டு வசதித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையைப் பற்றிப் பல்வேறு கோரிக்கைகளை அரசின் பரிசீலனைக்கு முன்வைத்துள்ளார்கள். அத்தனையும் ஏற்றுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், ரியல் எஸ்டேட் வியாபாரத்தை விரிவுபடுத்த வேண்டுமென்றும், பல்வேறு நல்ல கருத்துகள் அவரிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அத்தனை கருத்துகளையும் கோப்புகள் மூலமாகக் கொடுத்தால் நம் அரசு பரிசீலனை செய்யும் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். அவர்களின் கருத்துகளையெல்லாம் மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அவர்கள் தாய் உள்ளத்தோடு கவனித்துக்கொள்வார்கள்; தாயுள்ளத்தோடு பரிசீலிப்பார்கள். எல்லாப் புகழும் இறைவனுக்கே என்பது போல், எல்லாப் புகழும் எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா

அவர்களுக்கே உரித்தாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதிலுரையே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்திகரமாக இருக்கும் என நம்புகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி வேண்டிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாவற்றையும் பரிசீலிப்போம் என்று சொல்லிவிட்டாரே?

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை. ஒரே ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு கோரிக்கையா?

**திரு. டி. சுதர்சனம்:** கோரிக்கை இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் 1975 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அப்போது ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு, ஒரு குறுகிய காலத்திற்குள்ளாக அந்த மாஸ்டர் பிளான் செல்லுபடியாகும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இரண்டாவது மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. இதுவரை அந்த இரண்டாவது மாஸ்டர் பிளான் செயல்படுத்தப்படவில்லை. அது எப்போது செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, இப்போது தானாகவே முன்வந்து கட்டடங்களை வரன்முறைப்படுத்துகின்ற சட்டம் 30-6-2001 வரை நீட்டிக்கப்படும் என்பதையும், 50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது என்பதையும் பொதுமக்கள் வரவேற்பார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால், அதேநேரத்திலே, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டால்தான் அரசுக்கு நிறைய வருமானம் வரும் ஏற்கெனவே சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேகூட நான் இதுபற்றி விரிவாகப் பேசியிருக்கிறேன், சென்ற



ஆட்சிக் காலத்திலே. நீங்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக-- இதிலே நிறையத் தொல்லைகள் இருக்கின்றன....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், எழுதிக் கொடுத்துவிடுங்கள். ரொம்ப நீளமாக இருக்கிறது.

**திரு. டி. சுதர்சனம்:** அந்தத் தொல்லைகளையெல்லாம் தீர்த்து, அந்தத் திட்டம் எளிமையாக்கப்பட்டால்தான் மக்கள் பயன் அடைவார்களே தவிர, எளிமையாக்கப்படாவிட்டால் பயன் அடையமாட்டார்கள் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே பேசியிருக்கிறேன். இப்போதும் சொல்கிறேன். அந்தச் சட்டம் நல்லமுறையில் நடைபெற்று 500 கோடி ரூபாய் அரசுக்கு வரவேண்டும் என்று சொன்னால், அது எளிமையாக்கப்பட வேண்டும். எளிமையாக்கப்பட்டு, மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் அது மக்களுக்குப் பயன் கொடுக்கும். ஆதலாலே, அந்தச் சட்டம் வெகு விரைவிலே எளிமையாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள், வரன்முறைப்படுத்தும் திட்டம் எளிதாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துள்ளார்கள். இதற்கு எல்லா விதிகளையும் தளர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் 50 சதவீதம் குறைத்துவிட்டார்கள். இதற்கு மேலும் குறைக்க வாய்ப்பு இல்லை. ஹைதராபாத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள். ஹைதராபாத்தும், செகந்திராபாத்தும் சேர்ந்தால்கூட சென்னை மாநகராட்சியை ஒப்பிடும்போது, நான்கில் ஒரு பங்குகூட இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டம் தலைசிறந்த திட்டம். சென்னை நகர கட்டட வாழ் மக்கள் அனைவருக்கும் ஏற்புடைய திட்டம் என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இது விவாதம் இல்லை. நீங்கள் ஏதாவது பிரச்சினை இருந்தால் எழுதிக்கொடுங்கள். மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடு) எல்லோரும் ஊருக்குப் போகவேண்டும். (குறுக்கீடு) திரு. லட்சுமணன், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரபஞ்ச வெளியில் பால்வெளியின் மையத்தில், என்றோ ஒரு நாள் வெடித்துச் சிதறிய சூரியப் பிஞ்சான இந்த பூமி காற்றால் குளிர்ந்து, மழையால் இறுகி, வெயிலில் உருகி, பள்ளங்களெல்லாம் கடல்களாகப் பரிணமித்து, ஓர் உயிராய், பல்லுயிராய்ப் பல்கிப் பெருகி, மானிட சமுதாயம் உருவெடுத்த இந்தக் கால இடைவெளியில், தமிழகத்தை அந்த நாள் முதல் இந்த நாள் வரை முழுவதுமாக, மொத்தமாக முழு ஆதரவுடன் ஒரு வீரப் பெண்மணி ஆண்டு கொண்டிருக்கின்றார் என்றால், அந்தப் பெருமையை, வரலாறு புரட்சித் தலைவிக்கு மட்டுமே வழங்கியிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பது, புன்னகை புரிகிற உண்மை. அவர் வாழ்கிற காலத்தில் நாங்கள் வாழ்கிறோம் என்பதையே எங்கள் வாழ்நாளில் பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம்.

புரட்சித் தலைவியின் பெருமைகளை, புகழை நாளெல்லாம் பேசுவது என்பது, ஒரு விடியலுக்குப் பாடுகிற சுப்ரபாதத்தைப் போல்; ஒரு நதிக்கு நடக்கிற புகழபிஷேகத்தைப் போல; இது வெளிச்சத்திற்கு நடக்கிற வெற்றி விழாவைப் போல; அவர் சோதனைகளைச் சொல்வது வெற்றிக்கு வழங்கப்படுகிற 'வீர விருது' ஆகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சாதனையைப் பாராட்டுகிற சம்பவம், சரித்திரத்தைப் போற்றுகிற இன்றைய செய்தி, இன்றைக்கும், இனி என்றைக்கும் வாழப் போகிற வரலாற்றுக்கு இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையின் வாயிலாக, புரட்சித் தலைவி ஒரு புதுமைத் தலைவியாக, புரட்சித் தாயாக வடிவெடுத்து, தமிழகத்தை வாழவைத்துக் கொண்டிருக்கிற இந்த நாளில், அவர்களை வணங்குகிறேன். இந்த மாமன்றத்தில், எங்கள் இறைவனாய், தமிழகத்தின் முதல்வராய், எங்கும் நிறைந்தவராய், எல்லாம் அடைந்தவராய், அருளாய், உருவாய், உணர்வாய், உயிராய், உண்மையாய், சத்தியமாய், தர்மமாய், நீக்கமற நிறைந்திருக்கும் இறையின் பேரொளியே, எங்கள் இல்லத்துத் திருவிளக்கே, கோயில்களில் விளக்கேற்றி வைத்த குலவிளக்கே, கோபுரக் கலசங்கள் உயர்ந்து நின்று, பக்திப் பரவசத்தைப் பறைசாற்றுவதைப்போல, ஏழை, எளியோர் ஏற்றம் பெற நல்வழிப் பாதையை ஏற்படுத்தும் தூண்டா விளக்கே, சுடரொளியே, எதிரிகளுக்கும் அருள் பாலிக்கும் அன்னையின் வடிவே, அகிலம் போற்றும் அன்னை சக்தியே, தமிழகத்தைக் காக்க வந்த 'திராவிட சக்தியே', பகவானைப் பார்த்த பக்தனைப்போல், பரவசத்துடன் எங்கள் கழகக் காவல் தெய்வத்தை வணங்குகிறேன்.



பிற்பகல் 7-40

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கத்தின் ஒரு சாதாரணத் தொண்டனாக இருந்த எனக்கு ஒன்றியச் செயலாளராகவும், மாவட்டக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பொறுப்புகளைத் தந்துள்ள எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி என்னுடைய ப்திலுரையைத் தொடங்குகிறேன்.

அன்பு, அறிவு, துணிவு என்கிற கோட்பாட்டின் மையப் புள்ளியாக புரட்சித் தலைவியின் ஆட்சி இன்று கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும், இன்முகம் காட்டி, ஒரு தாயைப்போலப் பரிவு காட்டுகிற பாசமிகுந்த அன்னையே, ஒரு விடியலாய், புதிய புறப்பாடாய், சக்தியின் வடிவாய், தர்மம் காக்க வந்த தாயகத்தின் தர்ம தேவதையாய், தமிழகத்தின் நன்கொடையாய், வாழும் வரலாறாய் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்புத் தாய் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருக்கோயில்களின் வளர்ச்சிக்கு அல்லும், பகலும் அயராது பணியாற்றி, திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்பதில் மிகவும் முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"அண்ணலார் அடியார் தமக்கு அமுது செய்வித்தல் என்பது மிகச் சிறந்த பயன் விளைவிக்கக்கூடியது" என்று பெரிய புராணம் சொல்கிறது. ஆண்டவன் அருளைப் பெறுவதற்குத் திருக்கோயில்களுக்கு வரும் இறையன்பர்களுக்கு அமுது படைத்தல் என்பது மிகச் சிறந்த செயலாகும்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்" என்கிறார் பேரறிஞர் அண்ணா. அவர்களின் கூற்றுக்கு இணங்க நம் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களோ, பக்தனின் சிரிப்பில் பகவானைக் காணலாம் என்ற உயர்ந்த நோக்கத்தில் திருக்கோயில்களில் உச்சிக் காலப் பூஜை முடிந்தவுடன் அன்னதானம் வழங்கும் அகிலம் போற்றும் திட்டத்தினை அறிவித்தார்கள்.

மேதகு ஆளுநர் உரையில் 9-3-2002-ல் அறிவித்ததை, அரசு ஆணை பிறப்பித்து, பதினைந்தே நாட்களில் அதாவது 23-3-2002 அன்று மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களது திருக்கரங்களாலேயே சென்னை, மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதேநாளில் தெரிந்தெடுக்கப்பட்ட மேலும் 62 திருக்கோயில்களில் மிகுந்த வரவேற்புக்கிடையே இத்திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். பசி என்று வருபவருக்குப் புசி என்று உணவை வழங்கி, பசித்தவனை மகிழ்வூட்டிய பாசமிகுந்த தலைவர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வழியாக, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்றுரைத்த வள்ளலாரின் அருள் பரப்பும் வழியாக, 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று சொன்ன தமிழ் இலக்கியத்தின் ஒப்பற்ற வரியாகவே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய திட்டமாக திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வரப்பட்டு, இன்று தமிழ்நாடு மாத்திரமல்ல, இந்தியா மாத்திரமல்ல, உலகமே புகழும் விதமாகச் சீர்மிகு திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. உணவின் வழியாக உயிர் வாழ்வது என்ற நோக்கில், தானத்தில் சிறந்தது அன்னதானம் என்ற நம் மூதாதையரின் வாக்கிற்கிணங்க, இத்திட்டத்தின் மூலம் இன்று எல்லோரும் பயன்பெற்று வருகிறார்கள்.

பிள்ளைகளின் பசி ஒரு தாய்க்குத்தானே தெரியும் என்பதைப்போல நம் கருணைத் தாயின் கரங்கள் இன்று எல்லோருக்கும் உணவூட்டுகிறது. கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கைகள் புரட்சித் தலைவருக்குச் சொந்தமானது. அன்னமிட்டு, அமுதூட்டி அழகு பார்க்கும் கைகள், அன்னமிட்ட கைகள் எங்கள் அன்னைக்குச் சொந்தமானது. அன்னம், அமுதம், அம்மா என்பது காலத்தால் அழிக்க முடியாத காவிய வார்த்தைகள்; பொன் எழுத்தால் பொறிக்க வேண்டிய பொக்கிஷ வார்த்தைகளாய், இன்று கோபுரமாய் உயர்ந்து நிற்கிறது. தான் சாப்பிட மற்றவர்களைப் பட்டினி போடுகிறது ஒரு கூட்டம். தான் பட்டினியிருந்து மற்றவர்களுக்குப் பசியாற உணவளிப்பது எங்கள் தாயின் மாசற்ற மாண்பு. சிந்தனையோ எளிதில் யாருக்கும் வரும். அதைச் செயலாக்கத்தான் ஒரு யுகம் பிடிக்கும். சிந்தனையே செயலாக உருவாக்கும் திறனே எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே வரும்.



அன்னதானத் திட்டத்திற்கென 63 திருக்கோயில்களிலும், தனி உண்டியல் மூலமும், வரைவோலையாகவும், காசோலையாகவும், ரொக்கப் பணமாகவும், உணவுக்குப் பயன்படுத்தப்படும் அரிசி, பருப்பு, எண்ணெய், காய், கனிகளாகவும், தர்ம நெறியாளர்கள் மனமுவந்து அளித்துக் கொண்டே இருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய சம்பளத்தையே அன்னதானத் திட்டத்திற்கு அளித்து சிறப்புச் சேர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள் மற்றும் பலர் நன்கொடைகள் அளித்து வருகின்றனர். இதுவரை பெறப்பட்ட நன்கொடை ரூபாய் 61 இலட்சத்து 4 ஆயிரத்து 712 ஆகும். 63 திருக்கோயில்களிலும் 29-04-2002 வரை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 948 பேர் அன்னதானத் திட்டத்தின் மூலம் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

• •

பிற்பகல் 7-45

63 திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு அளிக்கப்படும் நன்கொடைக்காக, ஆணையர் அலுவலகத்தில் ஒரு நிதி தொடங்கப்பட்டுள்ளது. ஆணையரால் இயக்கப்படுகின்ற அன்னதான நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டப் பிரிவு எண் 80 (ஜி)-ன்கீழ் வருமான வரி விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது என்பது புரட்சித் தலைவி அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்வோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி நபர் ஒழுக்கம் அதிக அளவில் சீர்கெட்டு வரும் இந்த நாட்களில், சிறுவர், சிறுமியர்களுக்குத் திருக்கோயில்களில் சமய மற்றும் நீதி நெறிகளைப் பற்றிச் சொல்லிக் கொடுத்து, அவர்களை எதிர்காலத்தில் நல்வழிப்படுத்துவதற்கும் வழிவகை செய்யும் விதத்தில், ஞாயிற்றுக்கிழமைகளில் 63 திருக்கோயில்களிலும் ஆகம மற்றும் ஒழுக்க நெறி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தமிழகமும், இந்தியத் துணைக் கண்டமும் பாராட்டும் இந்தத் திட்டத்தை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராட்டாமல் இருந்தாலும் பரவாயில்லை. அதை இந்த மாமன்றத்தில் ஓர் உறுப்பினர், இது என்ன பெரிய திட்டம், ஆந்திராவில் இல்லையா, கர்நாடகத்தில்

[திரு. பி.சி. இராமசாமி] [2002 ஏப்ரல் 30

இல்லையா எனக் குறைகூறிப் பேசினார். ஐந்தாண்டு காலம் தமிழகத்தின் அனைத்து அரசுத் துறைகளையும் நாசமாக்கியவர்களால் இத்திட்டத்தின் சிறப்புக்களை உணர முடியாது. இதுபோன்ற திட்டங்களைச் செயல்படுத்த அவர்களுக்கு நேரம் இல்லாமல் போனதால் மக்கள் அவர்களைத் தேர்தலில் நிராகரித்தார்கள் என்பதுதான் உண்மை. 1996 முதல் 2001 வரை தமிழகத்தை ஆண்டவர்கள், ஆண்டவனுக்கு அஞ்சவில்லை. இந்தத் துறையை எப்படியெல்லாம் சீரழித்தார்கள் என்பதற்கு சில எடுத்துக்காட்டுகளை இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கிறேன்.

"நட்ட கல்லைத் தெய்வமென்று நான்கு சுற்றுச் சுற்றியே" என வசனம் எழுதி, தன்னை உலகத்திற்குப் பெரிய நாத்திகவாதியாகப் பிரகடனப்படுத்திக்கொண்ட முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி, திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்கிறேன் எனக் கூறி, சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் 1008 போற்றிகள் தயாரித்தார். அங்கேயும் சுய விளம்பர ஆசை அவரை விடவில்லை. அதன் விளைவாக, 642-வது போற்றியை "கடம்பூர் மேவிய கலைஞரே போற்றி" என அமைத்ததால், பக்தர்கள் கொதித்தெழுந்தார்கள். பத்திரிகை உலகம், "தி.மு.க.-வில் சேர்ந்தாரா மயிலை கபாலீஸ்வரர்" என்று சொல்லி, வினா எழுப்பினார்கள். இதுதான் இவர்கள் தமிழையும், ஆன்மீகத்தையும் வளர்த்த விதமா என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய ஆதாரத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் இங்கே வரவில்லை. வந்திருந்தால் இதைக் காட்டுவதற்காகத்தான் பேசுகிறேனே தவிர, வேண்டுமென்றே அவர்கள்மீது கற்பனையாக இங்கே பேசவில்லை.

முன்னாள் முதல்வரின் வாரிசுகள், கடந்த ஆட்சியில் அரசின் அனைத்துத் துறைகளிலும் தனது கைவரிசையைக் காட்டினார்கள். மதுரையில் ஒரு வாரிசு, மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் பத்திற்கும் மேற்பட்ட தேவையற்ற நியமனங்களைச் செய்து கொண்டார்கள். இதுபோன்ற தேவையற்ற நியமனங்கள் குறித்து தமிழகத்தின் அனைத்துப் பத்திரிகைகளும் சுட்டிக்காட்டின. முன்னாள் முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்தார் தெரியுமா? அப்போதைய அறநிலையத் துறை அமைச்சர், கால்நடைத் துறைக்கு மாற்றப்பட்டார். துறையின் ஆணையரும் உடனடியாக மாற்றப்பட்டார். ஆனால், மதுரை வாரிசு எந்தவிதத் தண்டனைக்கும் உட்படவில்லை. அவர்



2002 ஏப்ரல் 30] [திரு. பி.சி. இராமசாமி]

செய்திருக்கிறதை இங்கே நான் ஆதாரத்தோடு கொண்டு வந்திருக்கிறேன், வேண்டுமென்றே சொல்லவில்லை.

முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் நிலத்தினை எவ்வாறு முறை தவறிப் பயன்படுத்தினார் என்பதை இந்த மாமன்றத்திற்கு ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்கிறேன்.

முந்தைய தி.மு.க. ஆட்சியில், மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 10 கிரவுண்ட் நிலத்தினை, விதிகளுக்குப் புறம்பாக தனது உறவினர்களுக்காக, திரு. அமிர்தம் மற்றும் திரு. வழுவூர் ரவி ஆகியோர்களை நிர்வாகிகளாகக் கொண்ட முத்தமிழ்ப் பேரவைக்கு 20 ஆண்டுகளுக்குக் குறைந்த குத்தகைக்கு முன்னாள் முதல்வரால் விடப்பட்டது. "தாரை வார்க்கப்படுகிறதா கோயில் நிலம்" எனப் பொதுமக்கள் மற்றும் பத்திரிகைத் துறையினர் தெரிவித்த எதிர்ப்பினைத் தொடர்ந்தும், 2001-ல் சட்டமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் எதிரொலியாகவும் அவசரமாக அந்தக் குத்தகை ரத்துச் செய்யப்படுகிறது. முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் அந்த மன்றத்திற்காகக் கோப்புகளிலே கையொப்பமிட்டிருப்பதை உங்கள் முன்னாலே நான் காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கோப்பினை அவையில் காட்டினார்.)

அதற்குப் பின்னாலே அந்தக் கோப்புகளில், இந்த ஆட்சி—மீண்டும் புரட்சித் தலைவி ஆட்சி வரும் என்ற நோக்கத்தோடு, புலனாய்வுத் துறையின் மூலமாக அவர்களுக்குத் தகவல் கிடைத்ததன் பேரில், தேர்தலுக்கு முன்னாலே அதை நீக்கியிருக்கிறார்கள் என்பதையும் இப்போது சொல்கிறேன்.

பிற்பகல் 7-50

பத்திரிகைத் துறையினர் தெரிவித்த எதிர்ப்பைத் தொடர்ந்தும், கோயில், கொடியவர்களின் கூடாரமாகி விடக்கூடாது என்று திரைப்பட வசனம் எழுதியவரின் வாரிசு திரு. மு.க. தமிழரசு அவர்களின் மனைவி, மாண்புமிகு இந்த மன்றத்தினுடைய முன்னாள் முதலமைச்சர், சேப்பாக்கம் தொகுதியினுடைய இன்றைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய மருமகள் பெயராலே--திருமதி மோகனாம்பாள் என்பவர், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், கருங்காலி

கிராமம் அருள்மிகு சிந்தாமணீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ஏப்ரான்புரத்தில் உள்ள 38.05 ஏக்கர் புஞ்சை நிலத்தைக் குத்தகைக்குப் பெற்று இறால் பண்ணை நடத்தி வருகிறார் என்பதை இந்த மாமன்றத்தில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 38.05 ஏக்கருக்கு அளிக்கும் மாதக் குத்தகை எவ்வளவு தெரியுமா? மாதக் குத்தகை ரூ.3,166/- மட்டுமே. இறால் பண்ணை மூலம் ஓராண்டிற்கு வருவாய் எவ்வளவு கிடைக்கும் என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இந்த நிலம் 1994 ஆம் ஆண்டு, அப்போதைய அறங்காவலரால் மற்றொரு இறால் பண்ணைக்குக் குத்தகைக்கு விடப்பட்டதற்கு எதிராக திரு. மு.க. தமிழரசு உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். 1999 ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் உதவியுடன் இந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டு, திரு. மு.க. தமிழரசுவின் மனைவிக்கு 38.05 ஏக்கர் 'நிலம் மிகக் குறைந்த குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த அறங்காவலர் குழு இத்தகைய ஊழலுக்கு உடந்தையாக இருந்துள்ளது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படியெல்லாம் அறநிலையத் துறையைக்கூட விட்டுவைக்காமல் சூறையாடிய முன்னாள் முதல்வரும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள திட்டத்தைக் குறை சொல்வது கேலிக்குரியதாக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களுக்கான விளக்கங்களை இம்மாமன்றத்தில் நான் சமர்ப்பிக்கிறேன். ஒரே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கொடுத்துள்ள தீர்மானங்களுக்கு அந்தந்தப் பணிகள் குறித்த தலைப்பில் விளக்கமளிக்கிறேன்.

*திருக்கோயில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு:*

*தமிழகத்தில் எத்தனை திருக்கோயில்கள் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் எல்லா வெட்டுத் தீர்மானங்களுக்கும் பதில் சொல்ல நேரம் இருக்காது. (குறுக்கீடு) சரி.



**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** இல்லை, மொத்தத்திலிருந்தும் படிக்கிறேன். அதையெல்லாம் படிக்கவில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றவுடன் கண்டறியப்பட்டு, மூன்று ஆண்டு காலத்தில் இந்தத் திருக்கோயில்களுக்கெல்லாம் திருப்பணிகள் செய்யப்பட்டு, குடமுழுக்கும் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆகம விதிகளின்படி, 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்ய வேண்டும். நிதிப் பற்றாக்குறை உள்பட பல்வேறு காரணங்களினால், மேற்குறிப்பிட்ட திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்படாமல் இருந்து வருகிறது. பொது மக்கள் நன்கொடை, அரசு மானியம்,. நிதி வசதியுடைய திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் நிதி ஆகிய பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு, இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் பிற அருளாளர்களால் போற்றிப் பாடப்பட்ட திருக்கோயில்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோயில்கள் மற்றும் தொன்மை வாய்ந்த திருக்கோயில்கள் என்ற முன்னுரிமை அடிப்படையில் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, ஆதிதிராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதிகளிலுள்ள சிறு, சிறு திருக்கோயில்களுக்குத் திருப்பணிக்காகத் தலா ரூ.25,000 என்ற அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அத்திருக்கோயில்களுக்கான திருப்பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதியைச் சார்ந்த திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமெனத் தங்களுடைய ஆர்வத்தை வெட்டுத் தீர்மானங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். நான் ஏற்கெனவே இதுகுறித்துத் தெரிவித்ததன் அடிப்படையில், அவர்கள் கேட்கின்ற திருக்கோயில்களுக்கும், முன்னுரிமைப்படி, நிதி வசதியைப் பொறுத்து, திருப்பணிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோருகின்ற திருக்கோயில்களுக்குத் திருப்பணி நடத்த, பொது மக்களிடத்திலும், செல்வந்தர்களிடத்திலும் நன்கொடை திரட்டி, இத்துறை மேற்கொள்ளும் முயற்சியில் பங்கேற்க வேண்டும் என்று அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்ற ஓராண்டுக்குள்ளாக,

711* திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டு, அதனுடைய அடிப்படையில் இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆணைக்கேற்ப 711 ஆலயங்களில் கும்பாபிஷேகம் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த மன்றத்தில் நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*நிலங்கள் (குத்தகை, ஆக்கிரமிப்பு, விற்பனை):*

இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களுக்கு 4,79,021.23 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகைதாரர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அதேபோல, 33,627 வீட்டுமனைகளும், 20,046 கட்டடங்களும் திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ளன. இந்நிலங்கள் மூலமாக வர வேண்டிய மொத்த நிலுவைத் தொகை சுமார் 96 கோடியாகும். இதற்காக வருவாய் நீதிமன்றங்களில் 15,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன. குத்தகை நிபந்தனை வகையில் சுமார் 100 வழக்குகள் மாநகர உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. சமீபத்தில் மனை மற்றும் கட்டடங்களைப் பொறுத்தவரையில் புதிய வாடகை நிர்ணயம் செய்ய நியாய வாடகைக் குழு அமைக்கப்பட்டு, கடந்த 1-11-2001 முதல் புதிய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

பிற்பகல் 7-55

விவசாய நிலங்கள் மூலமாகவும், வீட்டுமனை, கட்டடங்கள் மூலமாகவும் திருக்கோயில்களுக்கு வரவேண்டிய கேட்பு நிலுவைத் தொகை கோடிக்கணக்கில் உள்ளது என்பது உண்மையே. இது ஒரு புறம் இருக்க, சென்னை போன்ற மாநகரங்களில் நீண்ட காலக் குத்தகை முடியப்பெற்றும், அந்நிலங்களைத் திரும்பப் பெறுவதில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் இருக்கின்றன. மேலும், மாநகரிலுள்ள திருக்கோயில் நிலங்கள் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளன என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இந்த ஆக்கிரமிப்புதாரர்களை அங்கிருந்து வெளியேற்ற இந்து சமய அறநிலையச் சட்டத்தின் பிரிவுகள் 78 மற்றும் 79-ஐப் பயன்படுத்தி, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*திருக்குளங்கள்:* மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்கள் தொகுதிகளில் உள்ள திருக்குளங்களைப் பழுதுபார்க்க வேண்டுமெனக்



கேட்டுக் கொண்டுள்ளனர். இத்துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களில் 534 திருக்குளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்ற பிறகு 62 திருக்குளங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள திருக்குளங்களைப் பழுதுபார்க்க, மாவட்ட நிருவாகத்தின் உதவியுடனும், அரசு சாரா நிறுவனங்கள் உதவியுடனும் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருத்தேர்கள்:* திருக்கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள 515 மரத்தேர்களில் 91 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்ற ஓராண்டு காலத்திற்குள் 29 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. மேலும் திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருத்தேர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றிற்கும் போதுமான கொட்டகைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*அடிப்படை வசதிகள்:* திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்துகிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அரசு பதவியேற்ற ஓராண்டில் 647 திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. அன்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம், நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, கோட்டையில் மக்களைச் சந்தித்து விண்ணப்பங்கள் பெற்ற நேரத்தில், அருகில் இருக்கின்ற கபாலீஸ்வரர் ஆலயத்திலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை என்று சொல்லி, அங்கே வருகின்ற அந்த மக்கள் கொடுத்த விண்ணப்பத்தின் அடிப்படையில், அன்று மாலை 6-00 மணிக்கே, அங்கே பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதனுடைய அடிப்படையில், தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு ஆலயங்களில், வசதி மிகுந்த ஆலயங்களில், பாதுகாக்கப்பட்ட குடிநீரும், நவீனக் கழிப்பிட வசதியும் செய்துதர வேண்டுமென்று சொன்னதற்கிணங்க, அனைத்து வசதியுள்ள ஆலயங்களிலும் இன்றைக்கு அப்படிப்பட்ட

வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்துகிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அரசு பதவியேற்ற ஓராண்டில் 647 திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள், குறிப்பாகப் பெண்களுக்குக் கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 2001-2002 ஆம் ஆண்டில் 399 திருக்கோயில்களில், ஆண்கள், பெண்களுக்கென தனித்தனியாக நவீனக் கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய தொகுதியில் உள்ள திருக்கோயில்களில் தங்கும் வசதிகள் செய்துதர வேண்டுமென வெட்டுத் தீர்மானங்களில் கேட்டுக் கொண்டுள்ளனர். இக்கோரிக்கைகள் குறித்து அந்தந்தத் திருக்கோயில்களின் நிதிநிலைக்கேற்ப அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*கல்வி நிறுவனங்கள்:-* மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது வெட்டுத் தீர்மானங்களில், திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேபோன்று, புதிய கல்வி நிறுவனங்களைத் தொடங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளனர். இத்துறையின் ஆளுகையின் கீழுள்ள திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் எண்ணிக்கை 111 ஆகும். இத்திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கு காரணமாகத் தாமதம் ஏற்பட்டது. தற்போது அந்த வழக்கில் தீர்ப்புப் பெறப்பட்டு, கல்லூரிக் கல்வித் துறையின் ஆலோசனையுடன் வரும் கல்வியாண்டில் நியமனங்கள் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். புதிய கல்வி நிறுவனங்கள் தொடங்குவது தொடர்பாக, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், அந்தந்தத் திருக்கோயில்களின் நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இங்கே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.



*ஒரு கால பூஜை:* மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, அவரது பொறுப்பில் இந்து சமய அறநிலையத் துறை இருந்தது.

பிற்பகல் 8-00

அப்போது இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில், சிதிலமடைந்த பல கோயில்களைப் புனரமைக்க முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியை உருவாக்கினார்கள். அதேபோல, தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் ஒரு கால பூஜையாவது நடைபெறாத பல கோயில்கள் உள்ளன என்பதைக் கண்டறிந்து, அவற்றில் ஒரு வேளையாவது பூஜை நடைபெறுவதற்காக ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு நிதியை ஏற்படுத்தத் தீர்மானித்து, அந்தத் திட்டம் 1993 ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கியது. அந்தத் திட்டத்தின்படி, ஒரு கோயிலுக்கு 25,000 ரூபாய் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் மாதாந்திர வட்டித் தொகை அந்தக் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டு, அதை வைத்துக்கொண்டு, ஒரு வேளையாவது பூஜை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. 1993 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை, இந்தத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, அந்தக் காலகட்டத்தில் 6,260 கோயில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கோயில்களில் எல்லாம் விளக்கேற்றி வைக்கப்பட்டு, நைவேத்யம் செய்யப்பட்டது. அதன் பிறகு வந்த தி.மு.க. ஆட்சி, இந்தத் திட்டத்தின்மீது ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் ஆட்சி புரிந்த ஐந்து ஆண்டு காலத்தில் மொத்தமே 1,982 கோயில்களுக்கு மட்டுமே வைப்பு நிதி திரட்டியிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வைப்பு நிதி அப்படியே பராமரிக்கப்பட்டு வருகிறது. மீண்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இன்னும் ஒரு கால பூஜை நடைபெறாத கோயில்கள் எவ்வளவு என்பது கணக்கிடப்பட்டு, முனைப்போடு இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் 1,000 கோயில்களுக்கு வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், மீதமுள்ள 1,063 கோயில்களுக்கு இந்த நிதியாண்டில் வைப்பு நிதி ஏற்படுத்தப்படும் என்பதையும் இங்கே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம்

பல்வேறு சோதனைகளுக்கிடையே, மீண்டும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் நிறைவேறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*இலவச மின்சாரம்:* விளக்கு இல்லாத திருக்கோயில் இனியேதும் இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு, எல்லாத் திருக்கோயில்களுக்கும் மின் இணைப்பைத் தந்து, குறைந்தது ஒரு மின் விளக்காவது எரிய வைக்க வேண்டும் என்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மிக உறுதியாக உள்ளது. சென்ற நிதியாண்டில் 1,000 திருககோயில்களுக்கு மின்சார இணைப்பு அளிக்கப்பட்டு, மின் விளக்குகள் ஒளிர்கின்றன. இந்த ஆண்டும் அதேபோன்று, மேலும் 1,000 திருக்கோயில்களுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்குவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகப் பெரிய மனதுடன் ஆணையிட்டுள்ளார்கள். படிப்படியாகத் தமிழகத்தில் மீதமுள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித்தர எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதை இம்மாமன்றத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*அன்னதானம்:* மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டத்தினை தங்கள் தொகுதிகளில் உள்ள திருக்கோயில்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கோரியுள்ளனர். இத்திட்டம் முதற்கட்டமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 63 திருக்கோயில்களில், திருக்கோயில் நிதி மற்றும் நன்கொடையாளர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரிவுபடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் நிதி வசதி ஏற்படுத்தித் தருவார்களேயானால், அவர்கள் கோரும் திருக்கோயில்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன் அன்னதானத் திட்டம் தொடங்க அரசு பரிசீலிக்கும் என்பதை, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருமண மண்டபங்கள் கட்டுதல்:* மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களது வெட்டுத் தீர்மானங்களில் தங்கள் தொகுதிகளில் உள்ள திருக்கோயில்கள் சார்பாகத் திருமண மண்டபங்கள் கட்டப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ளனர். சம்பந்தப்பட்ட



திருக்கோயில்களின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி தக்க முடிவுகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*சிலைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் பாதுகாப்பு:* திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக 1,000 இரண்டாம் நிலைக் காவலர்களும், 3,000 முன்னாள் இராணுவ வீரர்களும் கொண்ட திருக்கோயில் பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பைக் கவனித்து வருகின்றனர். மேலும், சிலைகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்டு, கள்வர் எச்சரிக்கை மணியைப் பொருத்துதல், பாதுகாப்புப் பெட்டக வசதிகள் செய்தல், விலை உயர்ந்த ஆபரணங்களைக் காப்பீடு செய்தல், இரவு மற்றும் பகல் நேரக் காவலர்களை நியமனம் செய்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் அளவிலே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து, களவுகள் சம்பந்தமாக அடிப்படை ஆய்வுகள் செய்யப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், முத்தூர் அருள்மிகு அத்தனூர் அம்மன் மற்றும் குப்பியண்ணசாமி திருக்கோயிலில் நடைபெற்ற நிகழ்வில் இறந்த முன்னாள் இராணுவ வீரர் திரு. கோவிந்தசாமியினுடைய வாரிசுதாரருக்கும், படுகாயம் அடைந்த பூசாரி திரு. ஜோதி என்பவருக்கும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்கப்படுவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் இங்கு வரவில்லை என்று சொன்னாலும், அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களுக்காக, இப்பொழுது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டம், மணக்கால் அய்யம்பேட்டை, அருள்மிகு முத்தீஸ்வரர் வைகுண்டநாதப் பெருமாள் திருக்கோயிலில் கட்டடம் கட்டுவதற்காக அடிமனை தோண்டப்பட்டபோது, பல கோடி மதிப்புள்ள

[திரு. பி.சி. இராமசாமி] [2002 ஏப்ரல் 30

ஐம்பொன் சிலைகள் 4 பெரிய சிலைகளும் 11 சிறிய சிலைகளும், அத்துடன் 12 வகை பூஜை சாமான்களும்—கண்டெடுக்கப்பட்டன. இந்த ஐம்பொன் சிலைகள், திருவாரூரில் உள்ள திருக்கோயில் சிலைகள் பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கிறேன்.

பிற்பகல் 8-05

*அறங்காவலர்கள் நியமனம்:* 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை சட்டப் பிரிவு 46(3)-ன்படி, ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ள 65 திருக்கோயில்களுக்கும் அறங்காவலர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். சட்டப் பிரிவு 46(1), 46(2) மற்றும் 49(1)-ன்கீழ் வரும் திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய, மாவட்டக் குழுக்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இதற்கெனத் தகுதி வாய்ந்தவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவற்றைத் தவிர, பல சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட திருக்கோயில்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டுள்ளனர். இவை குறித்து கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தவிர, மாண்புமிகு உறுப்பினர்களால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் பிரச்சினைகள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுரை வழங்கியுள்ளார்கள். இதனடிப்படையில், எந்த நேரமும் மாண்புமிகு உறுப்பினர்களால் கொண்டு வரப்படும் கோரிக்கைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிவிப்புகள்**

இவ்வாண்டில்— 2002-2003 ஆம் ஆண்டில்—திருக்கோயில்களைத் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்திடவும், திருத்தேர்களைத் திருப்பணி செய்து, செம்மைப்படுத்தி, தேர்த் திருவிழா நடத்திடவும் மற்றும் திருக்கோயில்களுக்கு வருகை தரும் சேவார்த்திகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும், திருக்கோயில்



2002 ஏப்ரல் 30] [திரு. பி.சி. இராமசாமி]

வருமானத்தைப் பெருக்க கட்டடங்கள் கட்டிடவும், மேலும், திருக்கோயில்களில் பல மேம்பாடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள், ஆண்டவன் இல்லை என்று சொன்னாலும், ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஆண்டவன் இருக்கிறான் என்று சொன்னாலும், இந்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆண்டவனை நம்புகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(1) நடப்பாண்டில் 500 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்யப்படும்.

(2) திருக்கோயில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களில் பலன் தரும் மற்றும் பலன் தரா மரங்கள் நடப்படும்.

(3) திருக்கோயில்களில் தேவையான இடங்களில் நந்தவனம் ஏற்படுத்தப்படும் மற்றும் ஏற்கெனவே உள்ள நந்தவனங்கள் சீரமைக்கப்படும்.

(4) திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைப் பராமரிக்க, தூர் வாருதல், படிக்கட்டுகள் அமைத்தல், சுற்றுச்சுவர் அல்லது வேலியிட்டுப் பாதுகாத்தல் ஆகிய திருப்பணிகள் செய்யப்படும்.

(5) திருக்கோயில் மற்றும் திருக்குளங்களில் மழை நீர் சேகரிப்புத் திட்டம் நிறைவேற்றப்படும்.

(6) திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(7) ஆண், பெண் இரு பாலருக்கும் தனித் தனிக் கழிவறைகள் மற்றும் குளியலறை வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(8) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, ஒரு கால பூஜைகூடச் செய்ய இயலாத திருக்கோயில்கள் அனைத்திலும், இவ்வாண்டு இறுதிக்குள் குறைந்தது ஒரு கால பூஜையாவது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு கால பூஜைகூட நடைபெறாத திருக்கோயில்களே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப்படும்.

(9) சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சேர்ந்த 1000 இணைகளுக்கு நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் செலவில் திருமணம் நடத்தி வைக்கப்படும்.

(10) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் வராத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25000/- வீதம், 100 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும். 50 திருக்கோயில்கள்—அரசு நிதி; 50 திருக்கோயில்கள்—திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

(11) கிராமப்புறத்தில் உள்ள திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25000/- வீதம் 100 திருக்கோயில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும்.

(12) பழுதடைந்துள்ள மரத் தேர்களில் இவ்வாண்டு 20 தேர்களைச் சீரமைத்துத் தேர்த் திருவிழா நடத்தப்படும்.

(13) திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெறுவதைக் கண்காணிக்கவும், ஆலோசனை வழங்கவும் காஞ்சி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் கீழ்க்கண்ட 12 நபர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது:-

குழுவின் தலைவர்: ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்;

உறுப்பினர்கள்: ஸ்ரீஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகள் (குறுக்கீடு) அவர்களுடைய தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ஸ்ரீஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகள், தருமபுரம் மடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சிவபுண்ணியம், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** நான் முடித்து விடுகிறேன்; பிறகு பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்புகளைச் சொல்கிறபோது: தான் படித்ததாகக் கருதி பதிவு செய்து



கொள்ளவேண்டுமென்று அமைச்சர் கேட்டதுபோலவே, இந்த அறிவிப்புகளையும் படித்ததாகக் கருதி, பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டு முடித்தால், நாளைக்கு மே தினக் கூட்டங்களுக்குப் போவதற்கு வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அறிவிப்புகளை வாசித்துத்தான் தீர வேண்டும்.

பிற்பகல் 8-10

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு எடுத்திருக்கின்ற அந்த முடிவை சட்டமன்றத்திலே சொல்லவில்லை என்று சொன்னால், பதிய வைக்கவில்லை என்று சொன்னால், அது தவறான முறையாக ஆகிவிடும் என்ற காரணத்தாலே அதை நான் சொல்கிறேன்.

ஸ்ரீஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகள், தருமபுரம் மடம்.

சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டார சன்னதி சுவாமிகள், திருவாவடுதுறை மடம்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமி தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள் மடம்.

ஸ்ரீமத்கலியன் வானமாமலை இராமானுஜ ஜீயர் சுவாமிகள், நாங்குநேரி மடம்.

சைவத்திரு விசுவநாத சிவாச்சாரியார், அல்லூர், திருச்சிராப்பள்ளி.

சைவத்திரு சாம்பமூர்த்தி சிவாச்சாரியார், அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயில், சென்னை.

திரு. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை.

திரு. ஏ.சி. முத்தையா, தலைவர், சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், அடையாறு வில்லா, சென்னை-85.

திரு. பி.ஆர். இராமசுப்ரமணிய ராஜா, தலைவர், ராம்கோ குரூப் நிறுவனங்கள், 492/11, தென்காசி சாலை, இராஜபாளையம்.

திரு. வேணு சீனிவாசன், தலைவர், டி.வி.எ. குரூப் ஆஃப் கம்பெனி, சென்னை.

திரு. கருமுத்து கண்ணன், தலைவர், தியாகராஜா மில்ஸ், கப்பலூர், மதுரை.

(14) திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் குறித்த பிரச்சினைகளை, ஆராய்ந்து திருக்கோயில் வருமானத்தைப் பெருக்கிட தக்க ஆலோசனைகள் வழங்கிட காஞ்சி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் 9 நபர் குழு ஒன்று அமைக்கப்படுகிறது.

குழு உறுப்பினர்கள் விவரம்: ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள், காஞ்சி மடம், காஞ்சிபுரம். இவர் அதன் தலைவர். ஸ்ரீஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகள், தருமபுரம் மடம், தருமபுரம், நாகப்பட்டினம் மாவட்டம். சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டார சன்னதி சுவாமிகள், திருவாவடுதுறை மடம், திருவாவடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம். ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிக சுவாமிகள், திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ ஆதீனகர்த்தர், தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம். ஸ்ரீமத்கலியன் வானமாமலை இராமானுஜ ஜீயர் சுவாமிகள், நாங்குநேரி மடம், நாங்குநேரி, திருநெல்வேலி மாவட்டம். திரு. கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு) முன்னாள் ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை. செல்வி எம்.எஸ். ரமேஷ், இ.ஆ.ப. (ஓய்வு).

(15) 26 முக்கியத் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்பட உள்ள முக்கியத் திருப்பணிகள் சுமார் 14 கோடியே 12 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்படும். திருக்கோயில் மற்றும் பணி விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட புதிய அறிவிப்புகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(16) முக்கியத் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய கட்டுமானப் பணிகள் ரூ.26 கோடியே 96 இலட்சத்து 12 ஆயிரம் மதிப்பீட்டில் செய்யப்படும். திருக்கோயில்கள் மற்றும் பணிகள் விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் பட்டியலிலே குறிப்பிடப்பட்டுள்ளன.



(17) 10 முக்கியத் திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கியத் தேர்த் திருப்பணிகள் ரூ. 1 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும். திருக்கோயில் மற்றும் பணி விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. (குறுக்கீடு)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.கே. லட்சுமணன், திரு. பி.எஸ். உலகரட்சகன், திரு. க. பதினெட்டாம்படியான், திரு. போளூர் வரதன், செல்வி க. பாலபாரதி, திரு. வை. சிவபுண்ணியம், திருமதி சான்ட்ரா டான், திரு.எச். ராஜா, இவர்களெல்லாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சான்ட்ரா டான் க்ரவல். பெயரை ஒழுங்காகச் சொல்லுங்கள், கோபித்துக்கொள்வார்கள்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** இவர்களெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, நிதிநிலைக்கு ஏற்ப, அந்தப் பணிகள் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தில், மூன்று முறை, அவர்களுடைய பகுதியிலே இருக்கின்ற, அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்காகப் பேசியதை நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். ஆனால், நிதிநிலை ஆதாரத்தைக் கொண்டு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு ஒரு பிரச்சினை என்று சொன்னால், மாநிலத்திலே இருக்கின்ற அனைவருக்கும் அந்தப் பிரச்சினை ஏற்படும் நீங்கள் ஆலயத்தினுடைய நிலங்களை விற்று, கேரள மாநிலத்திலே இருக்கின்ற அரசைப்போல இங்கே வங்கியிலே போட்டு, அதனுடைய வருவாயில் ஆலயத்தினுடைய ஆண்டவனைப் பூஜை செய்யலாம் என்ற கருத்துகளையெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதற்காக ஒரு குழுவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதில் நல்ல ஒரு முடிவை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, (குறுக்கீடு) நிதிநிலைக்கு ஏற்ப, முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல ஒரு முடிவை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலைக்கு ஏற்ப; அங்கேதான் இடிக்கிறது.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதுவரை கூறிய விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமாய் உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 8-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கோயில் பூசாரிகளுக்கான தனி நல வாரியம் ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய முதல் கூட்டமும் 24-3-2001-ல் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், வாரியத்தின் விதிமுறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அதற்குச் செயலாக்க வடிவம் கொடுக்கவேண்டும். எனவே, இந்த ஆண்டே அரசாங்கம் கிராமக் கோயில் பூசாரிகளுக்கான தனி நல வாரியத்திற்கான பணிகளைத் தொடங்குமா என்பதை உங்கள் வாயிலாக அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் செயலர் அவர்களோடு கலந்து பேசி, அவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியுமோ அந்த அனைத்து உதவிகளையும் புரட்சித் தலைவி அரசு கேட்காமல் செய்யும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரிடம் தனியாகக் கேளுங்கள். இப்போது வாக்கெடுப்பு.



**(ஏ) கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி—பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை—இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கை எண் 45-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.27,32,77,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.49,45,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**(ஏ) கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை. திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை. திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை. திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை. திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை எண் 25-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.108,58,91,000 மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.181,97,16,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குத் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.



அனைவருக்கும் முன்கூட்டியே எனது மே தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் வியாழக்கிழமை (2-5-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 8-17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

208. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

209. மானியக் கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

210. மானியக் கோரிக்கை எண் 27 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய விரிவான மானியக் கோரிக்கை.

211. மானியக் கோரிக்கை எண் 45 - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003 (தமிழ், ஆங்கிலம்)

212. மானியக் கோரிக்கை எண் 45 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - இந்து சமய அறநிலையத் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

213. மானியக் கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

[2002 ஏப்ரல் 30

214. மானியக் கோரிக்கை எண் 25 - 2002-2003 ஆம் ஆண்டிற்கான வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கான விரிவான மானியக் கோரிக்கை.

215. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த புதிய அறிவிப்புகள், 2002-2003 (தமிழ்)

216. காவல், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த புதிய அறிவிப்புகள். (தமிழ்)

217. பொதுப் பணித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (2002) (தமிழ், ஆங்கிலம்)

218. சுற்றுச்சூழல் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (2002) (தமிழ்)

219. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (2002) (தமிழ், ஆங்கிலம்)

220. வனத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (2002) (தமிழ், ஆங்கிலம்)

221. சுற்றுலாத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம் (2002) (தமிழ், ஆங்கிலம்)

222. சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த அறிவிப்புகள். (2002-2003) (தமிழ்)

223. சிறு தொழில் துறையின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த புதிய திட்டங்கள் (2002) (தமிழ், ஆங்கிலம்)

224. செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)



2002 ஏப்ரல் 30]

## இணைப்பு I

(124 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**செய்தி மற்றும் சுற்றுலாத் துறை**

**செய்தி மற்றும் விளம்பரம்**

**மானியக் கோரிக்கை எண் 27**

**கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003**

### முன்னுரை

செய்தி-மக்கள் தொடர்பு நேற்று அறிவியல்! இன்று தொழில்நுட்பம்! என்றும் என்றென்றும், அது இனிய கலை!

'மக்களாட்சி' எனும் சொல்லைப் பிரித்தால் மக்கள் ஆட்சி என்றாகிறது. மக்களுக்கும், ஆட்சிக்கும் இடைவெளியில்லாமல் பார்த்துக் கொள்வது செய்தி-மக்கள் தொடர்புத் துறைக்கே உரிய கடமையாகும்.

இந்த ஜனநாயகப் பணியைச் செவ்வனே செய்வதற்கு, செய்தி-மக்கள் தொடர்புத் துறை அவ்வப்போது தன்னைப் புதுப்பித்துக் கொள்வது அவசியம்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் நோக்கம், செய்திப் பகிர்வும், மக்கள் தொடர்பும் ஆகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும் இதன் சிறப்புமிகு அங்கங்கள்:

* தகவலை வாசித்துத் தெரிந்துகொள்ள 'தமிழரசு' ஏடு.

* அனைவரும் செய்திகளைத் தெரிந்துகொள்ள விளம்பரப் பிரிவு.

* துறைதோறும் நிகழ்ந்து வரும் சாதனைகளை காட்சியால் விளக்கும் பொருட்காட்சி.

* நாட்டுக்கு உழைத்த நல்லோரை நினைவுகூரும் நினைவகப் பிரிவு.

* அவர்தம் பெருமையைப் போற்றிட அரசு விழாக்கள்.

* அரசின் நலத் திட்டங்களையும் ஆக்கப் பணிகளையும் பற்றிய விளக்கப் படங்களைத் தயாரித்து வெளியிட திரைப்படப் பிரிவு.

[2002 ஏப்ரல் 30

* திரைப்படத் தொழில்நுட்பத்தில் இளைஞர்கள் ஆற்றல் பெற்று விளங்கிட பயிற்சி அளிக்கும் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்.

* திரைப்படத் துறையினருக்குப் பல்வேறு வசதிகளை ஒரே வளாகத்தில் ஏற்படுத்தித் தரும் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்.

* இரவும் பகலும் இயங்கும் செய்தி வெளியீட்டுப் பிரிவு.

* கேட்ட தகவலை உடனே வழங்கும் மேற்கோள் பிரிவு.

* அரசு நலத் திட்டப் பணிகளை விளக்கும் பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்.

எச்செயலையும் சரியாகச் செய்வதற்குக் கருவிகள் துணை செய்யும். ஆனால், அவற்றை இயக்குபவர்கள் மனிதர்கள். எனவே, நவீனக் கருவிகளும், பயிற்சி பெற்ற அலுவலர்களும் வளர்ச்சிக்குக் கட்டாயம் தேவை.

நவீன தகவல் தொடர்பு விளம்பரச் சாதனங்களைப் பயன்படுத்தியும், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வாயிலாகவும் மக்கள் நலத் திட்டங்கள், ஆக்கப் பணிகள், அரசின் சாதனைகள் ஆகியவை குறித்த விளம்பரப் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படும்.

2002-2003 ஆம் ஆண்டில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் திட்டங்களும், செயல்பாடுகளும் புதுமைச் சிந்தனையோடு அமைந்திட உள்ளன.

## ஆத்தியாயம்-1

## செய்தியாளர் நலனும், செய்தி வெளியீட்டுப் பிரிவின் பணிகளும்

### செய்தி வெளியீட்டுப் பிரிவு

மக்கள் தொடர்புச் சாதனங்களான நாளிதழ்கள், காலமுறை வெளியீடுகள், தொலைக்காட்சிகள் மற்றும் வானொலி ஆகியவை மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தும் முக்கியச் சாதனங்களாக உள்ளன. தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, அரசுக்கும் அவற்றிற்கும் உள்ள உறவை நிலைப்படுத்தும் முக்கியப் பணியினை நிறைவேற்றும் பிரிவாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்களில் இருந்து பெறப்படும் செய்தி



2002 ஏப்ரல் 30]

வெளியீடுகள் மற்றும் அரசின் அனைத்துத் துறைகளில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் ஆக்கப் பணிகளைப் பற்றிய செய்திகள், நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், வானொலி மற்றும் செய்தி இணைய தளங்கள் என சுமார் 100 தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு நேரிலும், தொலைநகல் மற்றும் கணினி வழியாகவும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்படும் செய்தியாளர் கூட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்து, அங்குள்ள செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாகச் செய்திகள் வெளியாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றைப் புகைப்படமெடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்குதல் மற்றும் தொலைக்காட்சியினர் இந்நிகழ்வுகளைப் படமெடுப்பதற்கான அனைத்து உதவிகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

### செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்

சென்னையிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வெளியாகும் நாளிதழ்களின் சென்னைச் செய்தியாளர்கள் மற்றும் அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கென அரசால் அமைக்கப்பட்ட 'செய்தியாளர் அங்கீகாரக் குழுவின்' பரிந்துரைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் 'செய்தியாளர் அங்கீகார அட்டைகள்' வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 416 பேர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

[2002 ஏப்ரல் 30

அவர்கள் அறிவித்தபடி தனியார் தொலைக்காட்சியினருக்கும் இவ்வாண்டு முதல் 'அங்கீகார அட்டை' வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 128 அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

'அரசு அங்கீகார அட்டைகள்' பெற்ற பத்திரிகையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்ய 'இலவசப் பயண அட்டை', இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகை, அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**காலமுறை வெளியீடுகளின் செய்தியாளர்களுக்கு, செய்தியாளர் அட்டை**

அரசு விழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கென காலமுறை வெளியீடுகளைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு, இலவச பேருந்துப் பயண அட்டை, இரயில் சிறப்புச் சலுகைகள் ஏதுமில்லாமல், செய்திகள் சேகரிப்பதற்கு ஏதுவாக, 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இதுவரை 123 செய்தியாளர்களுக்கு, செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகளும், அதற்கு மேலும் தொடர்ச்சியாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் பணியில் இருக்கும்போதே இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவி வழங்கும் "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, மறைந்த பத்திரிகையாளரின் குடும்பம் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவி நிதி ரூ.50,000-த்திலிருந்து ரூ.2 இலட்சமாக 4-9-2001 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 30]

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் புரட்சித் தலைவர் எம்ஜிஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1986 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதந்தோறும் தலா ரூ.250 பத்திரிகையாளர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர் பத்திரிகையாளர் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, மாதந்தோறும் தலா ரூ. 2,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. ஓய்வு பெற்று, வறுமை நிலையில் உள்ள 72 பத்திரிகையாளர்கள் தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் மாத ஓய்வூதியமாக தலா ரூ. 2,000 பெற்று வருகிறார்கள். இத்தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும் என்ற பத்திரிகையாளர்களின் கோரிக்கையை அரசு பரிவுடன் ஏற்று, கடந்த 2001-2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, பத்திரிகையாளர் மாத ஓய்வூதியத் தொகை தற்போது ரூ. 2,000-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்திவிட்டால், அவரின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் தலா ரூ.500 அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு இத்துறையின் மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, பத்திரிகையாளர்களின் நீண்ட நாளைய கோரிக்கையை ஏற்று, 'பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்' தலா ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு சுலபத் தவணையில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள்/ வீடுகள்**

2001-2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிகையாளர்களும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அல்லது வீடுகள் வாங்குவதற்கு ஏதுவாக ஓர் சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், பாரத மாநில வங்கியும் (ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா) இணைந்து செயல்படுத்தும்.

[2002 ஏப்ரல் 30

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுத்து, உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. புகைப்படப் பிரிவின் பயன்பாட்டிற்காக இவ்வாண்டில் ஒரு புதிய டிஜிட்டல் கேமிரா வாங்கி வழங்கப்பட்டுள்ளது. இதனால் நாளிதழ்களுக்கு விரைவாக, தரமான வண்ணப் புகைப்படங்களை வழங்க ஏதுவாகிறது.

**செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு கணினி மற்றும் ஒளிநகல் இயந்திரம்**

2001-2002 பகுதி-II திட்டத்தின்கீழ் செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு நவீன துணைக் கருவிகளுடன் கூடிய ஒரு கணினியும், டிஜிட்டல் ஒளிநகல் இயந்திரமும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**செய்தித் துறைக்கென ரூ. 25 இலட்சம் செலவில் தனி வலைதள ஒளிபரப்பு வசதி**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் பத்திரிகைகள் மற்றும் ஏனைய செய்தி நிறுவனங்கள் எளிதாகப் பெறும் வகையில் செய்தித் துறைக்கென தனி வலைதள ஒளிபரப்பு (web streaming) ரூ. 25 இலட்சம் செலவில் இந்நிதியாண்டில் அமைக்கப்படும். இதனால் அரசின் முக்கிய நிகழ்ச்சிகள், திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த செய்திகளை உடனுக்குடன் ஒளிபரப்ப இயலும். இந்த வலைதளம் பத்தரிகையாளர்களுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள 'தேசிய தகவல் மையம்' (NIC NET) வழியாக மாநில அரசின் இணைய மேடையில் செய்தி வெளியீடுகள் மற்றும் அரசு புகைப்படங்கள் தற்போது இடம் பெறுகின்றன.



2002 ஏப்ரல் 30]

**மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு தகவல் தொடர்பு மற்றும் நவீன விளம்பரச் சாதனங்கள்**

**அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கு கணினி வசதி**

29 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் ரூ.29 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்கி வழங்கப்படும்.

**மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ஒளிநகல் இயந்திரங்கள்**

ஒளிநகல் இயந்திரங்கள் (Photo copiers) இதுவரை வழங்கப்படாமல் உள்ள 13 மாவட்டங்களுக்கு ரூ.13 இலட்சம் செலவில் ஒளிநகல் இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும். இதன் மூலம் அனைத்து மாவட்டங்களும் இவ்வசதியைப் பெறுகின்றன.

**மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் புகைப்பட இருட்டறை வசதி**

புகைப்பட இருட்டறை வசதி இல்லாத 10 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் ரூ.10 இலட்சம் செலவில் இவ்வசதி ஏற்படுத்தப்படும்.

**மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களில் நிகரி வசதி**

நிகரி இயந்திரங்கள் (Fax Machines) இதுவரை வழங்கப்படாமல் உள்ள 13 மாவட்டங்களுக்கு ரூ. 3.25 இலட்சம் செலவில் நிகரி இயந்திரங்கள் வாங்கி வழங்கப்படும். இதன் மூலம் அனைத்து மாவட்டங்களும் இவ்வசதியைப் பெறுகின்றன.

## அத்தியாயம்-2

### அரசு விழாக்கள்

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழி மேன்மையைக் காக்கவும் அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட, அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில், அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன. அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

[2002 ஏப்ரல் 30

கீழ்க்காணும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை செய்யப்படுகிறது:

1. ஜனவரி 17 - முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்ஜி.ஆர். பிறந்த நாள்.
2. ஜனவரி 23 - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள்.
3. ஜனவரி 30 - மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள்.
4. ஏப்ரல் 14 - டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள்.
5. ஏப்ரல் 27 - சர் பிட்டி. தியாகராயர் பிறந்த நாள்.
6. ஏப்ரல் 29 - பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள்.
7. ஜூன் 5 - கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் பிறந்த நாள்.
8. ஜூன் 24 - கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள்.
9. ஜூலை 15 - பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்.
10. செப்டம்பர் 5 - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள்.
11. செப்டம்பர் 15 - பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்.
12. செப்டம்பர் 17 - தந்தை பெரியார் பிறந்த நாள்.
13. செப்டம்பர் 29 - முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள்.
14. அக்டோபர் 2 - மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள்.
15. அக்டோபர் 30 - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்.
16. நவம்பர் 14 - பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்.
17. டிசம்பர் 10 - மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்.
18. டிசம்பர் 11 - மகாகவி பாரதியார் பிறந்த நாள்.

கடந்த ஆண்டு ஜூலை 17 ஆம் நாளன்று, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலுள்ள தியாகி சங்கரலிங்கனார், தியாகி ஆர்யா என்ற



2002 ஏப்ரல் 30]

பாஷ்யம் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

கடந்த ஆண்டில் கீழ்க்காணும் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள். மாவட்டங்களில் கொண்டாடப்பட்டன:

1. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா மே திங்கள் 12 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

2. சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா அக்டோபர் 2 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

3. மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா அக்டோபர் 30 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

4. அனைத்து மாவட்டங்களிலும், அக்டோபர் 31 ஆம் நாள் மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் நடத்தப்பட்டது.

5. தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளியில், டிசம்பர் 10 ஆம் நாள் மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

6. தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் டிசம்பர் 11 ஆம் நாள் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

7. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் 3-8-2001 அன்று வல்வில் ஓரி விழா கொண்டாடப்பட்டது.

8. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா 10-8-2001 அன்று கொண்டாடப்பட்டது.

9. மருதுபாண்டியர் 200-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் 24-10-2001 அன்று நடத்தப்பட்டது.

[2002 ஏப்ரல் 30

10. ரிபெல் முத்துராமலிங்க சேதுபதியின் பிறந்த நாள் விழா விரைவில் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழா, இனிவரும் காலங்களில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 30 ஆம் நாள் கொண்டாடப்படும்.

11. வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா விரைவில் கொண்டாடப்படவுள்ளது. வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் மார்ச் மாதம் 31 ஆம் நாள் கொண்டாடப்படும்.

சென்னையில், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர், திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் பெயரில் விருது வழங்கும் விழா 24-12-2001 அன்று நடத்தப்பட்டது.

**பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்**

பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அவற்றின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கக்கூடிய வகையில் சிறு புகைப்படக் கண்காட்சிகள் மாவட்டங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நேரங்களில், வீடியோ படக்காட்சிகள் மூலமும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கிராமங்களில் நடைபெறும் மக்கள் குறை கேட்பு தினத்தன்று, பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நிகழ்ச்சியில் அரசின் நலத் திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன. இம்முகாம்கள் மூலமாகப் பொதுமக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டி சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊராட்சி ஒன்றிய அளவில் ஆண்டுக்கு பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு மேலும் கூடுதலான அளவில் முகாம்கள் சிறப்பான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு**

அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2002 ஏப்ரல் 30]

அப்பணியினைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயலாற்றும் வகையில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு" அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் கூட்டம் மாதம் ஒரு முறை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்தப்பட வேண்டிய முறைகள் பற்றி விவாதிக்கப்பட்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம்-3

## நினைவகங்கள்

விடுதலைக்கு வித்திட்டவர்கள் மற்றும் சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ் மொழி மேம்பாட்டிற்கும் உழைத்திட்டவர்கள் ஆகிய பெரியோர் தம் பெருமையைப் போற்றிடும் வகையில், அரசின் சார்பில் அவர்களுக்கு நினைவகங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் அமைத்து சிறப்புச் செய்து வருகிறது. 37 நினைவகங்கள், 2 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நினைவகங்கள் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலும், பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலும் உள்ளன. இத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் பூங்கா ஆகியவை பின்வருமாறு:

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம், பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், சென்னை.
2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், சென்னை.
3. வள்ளுவர் கோட்டம், சென்னை.
4. கலைவாணர் அரங்கம், சென்னை.
5. இராஜாஜி மண்டபம் மற்றும் சீரணி அரங்கம், சென்னை.
6. காந்தி மண்டபம், கிண்டி, சென்னை.
7. இராஜாஜி நினைவாலயம், கிண்டி, சென்னை.
8. காமராஜர் நினைவகம், கிண்டி, சென்னை.

[2002 ஏப்ரல் 30

9. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை.
10. தியாகிகள் மணிமண்டபம், கிண்டி, சென்னை.
11. காமராஜர் நினைவு இல்லம், தியாகராய நகர், சென்னை.
12. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், கிண்டி, சென்னை.
13. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், திருவல்லிக்கேணி, சென்னை.
14. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை.
15. சுதந்திரப் பொன் விழா நினைவுச் சின்னம் (போர் நினைவுச் சின்னம் அருகில்) சென்னை.
16. குடியரசுப் பொன் விழா நினைவுத் தூண் (காந்தி சிலை அருகில்) சென்னை.
17. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், காஞ்சிபுரம்.
18. முத்து மண்டபம்-இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம், வேலூர்.
19. அண்ணா கலை அரங்கம், வேலூர்.
20. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண், வேலூர்.
21. இராஜாஜி இல்லம், தொரப்பள்ளி, தருமபுரி மாவட்டம்.
22. பெரியார்-அண்ணா நினைவகம், ஈரோடு.
23. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
24. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.
25. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், திருச்சிராப்பள்ளி.
26. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.
27. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்.



2002 ஏப்ரல் 30]

28. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
29. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.
30. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.
31. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.
32. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.
33. தியாகசீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம்.
34. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெல்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம்.
35. காமராஜர் இல்லம், விருதுநகர்.
36. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.
37. பாரதி இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.
38. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.
39. காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரி.
40. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கன்னியாகுமரி.
41. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
42. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

[2002 ஏப்ரல் 30

43. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறில் பூங்கா, தூத்துக்குடி மாவட்டம்.

44. பெரியார் நினைவகம், வைக்கம், கேரள மாநிலம்.

| | | |
|---|---|---|
| மொத்த நினைவகங்கள் | - | 37 |
| அரங்கங்கள் | - | 2 |
| நினைவுத் தூண்கள் | - | 4 |
| நினைவுப் பூங்கா | - | 1 |

அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களை இன்னும் செம்மையாகப் பராமரிக்கும் வகையில், குறிப்பிட்ட நினைவகங்களை செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தொடர்ந்து பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்கும் வகையிலும், நிர்வாகக் காரணங்களை முன்னிட்டும், மேலும் சிறப்பான முறையில் பராமரித்திடவும், வருவாயைப் பெருக்கிடவும், சில நினைவகங்களை, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கவும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

சென்னையிலுள்ள காயிதேமில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் மணிமண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் கட்டப்பட்டு முகப்பு அமைக்கும் பணி முடிவடைந்தவுடன் திறக்கப்படவுள்ளது.

வேலூரில் உள்ள அண்ணா கலை அரங்கம் ரூ. 10 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு, 19-11-2001 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் அமைக்க ரூ.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மாநகரில் சுதந்திரப் போராட்டத் தியாகி, செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் நினைவாக மணிமண்டபம் அமைப்பது தொடர்பான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.



2002 ஏப்ரல் 30]

## அத்தியாயம்-4

## திரைப்பட விருதுகள்

திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழிநுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

தேர்வு பெறும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன:

1. முதல் பரிசு - ரூ. 2 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு.
2. இரண்டாம் பரிசு - ரூ. 1 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு.
3. மூன்றாம் பரிசு - ரூ. 75 ஆயிரம் மற்றும் நினைவுப் பரிசு.
4. சிறப்புப் பரிசு - ரூ. 75 ஆயிரம் மற்றும் நினைவுப் பரிசு.
5. பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம் - சிறப்புப் பரிசு - ரூ. 1.25 இலட்சம் மற்றும் நினைவுப் பரிசு.
6. அளவான குடும்பம், திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற படம் - முதல் பரிசு - ரூ. 50 ஆயிரம்.
7. அளவான குடும்பம், திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற படம் - இரண்டாம் பரிசு - ரூ. 25 ஆயிரம்.
8. அளவான குடும்பம், திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற படம் - மூன்றாம் பரிசு - ரூ. 10 ஆயிரம்.

தேர்வு பெறும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

### திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்

தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 1998-99 ஆம்

[2002 ஏப்ரல் 30

ஆண்டு முதல், அவர்கள் செயல்முறைத் தேர்வுக்கென தயாரிக்கும் குறும்படங்களின், சிறந்த இயக்குநர், ஒலிப்பதிவாளர், ஒளிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், படம் பதனிடுபவர் மற்றும் நடிகர் ஆகியோருக்கு விருதாக தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம், ரூ. 5,000 மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. இவ்விருதுகளுக்குரியவர்களும், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்வு செய்ய அமைக்கப்படும் தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.

**கலைத் துறை வித்தகர் விருதுகள்**

திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம்பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளுக்குரியவர்கள் அரசினால் தேர்வு செய்யப்படுவர்.

**அரசு திரைப்பட மானியம்**

சமுதாய நோக்குடன்கூடிய தரமான தமிழ்த் திரைப்படங்கள் குறைந்த செலவில் தயாரிக்கப்படுவதை ஊக்குவிக்கும் நல்ல நோக்குடன், அவ்வாறு தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்வதற்காக அரசினால் ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அமைக்கப்படுகிறது. படம் வெளியான ஆறு மாதங்கள் வரை 8 பிரதிகளுக்குக் குறையாமல் 25 பிரதிகளுக்கு மிகாமல் எடுக்கப்படும் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்குத் தலா ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

**கேளிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம்**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்களுக்கு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 30]

**திரைப்படத் துறையினருக்கு அரசின் சலுகைகள்**

1. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்குத் தலா ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

2. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு, முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

3. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

4. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் சாதனை புரிந்தவர்களுக்கு வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

5. நியாயமான கட்டணங்களில் எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் படப்பிடிப்பு அரங்கு (Studio) மற்றும் வசதிகள் அளிக்கப்படுகின்றன.

6. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது.

7. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. சண்டைக் காட்சிகளில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர்கள் உயிரிழக்க நேரிட்டால் ரூ. 1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ. 50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

## அத்தியாயம் - 5

### தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழகம் முழுவதும் நடைபெறும் தமிழக அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத் திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியன குறித்து செய்திப்படம் தயாரித்து வெளியிடும்

பணியில் ஈடுபட்டு வருகிறது. 1986 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் ஒரு செய்தி மலர் வண்ணப் படச்சுருளில் தயாரிக்கப்பட்டு, 147 பிரதிகள் எடுக்கப்பட்டு, மைய அரசின் திரைப்படப் பிரிவு மூலம் தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில் சுழற்சி முறையில் திரையிடப்பட்டு வந்தன. இந்த நடைமுறையில் திரைப்படச் செய்தி மலர் மக்களைச் சென்றடைய காலதாமதம் ஏற்பட்டது. எனவே, காலதாமதத்தைத் தவிர்க்க தற்போது ஒவ்வொரு மாதமும் செய்தி மலர்கள் வீடியோவில் தயாரிக்கப்பட்டு சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் செயற்கைக்கோள் ஒளிபரப்பு நிறுவனங்கள் மூலம் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. இந்த மாற்று ஏற்பாட்டைச் செய்ததன் பொருட்டு, 35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் ஆண்டொன்றுக்குத் தயாரிக்கப்படும் ஆறு கருத்து விளக்கப் படங்களின் பிரதிகள் 75 ஆகக் குறைத்துத் திரையரங்குகளில் சுழற்சி முறையில் திரையிடப்பட்டு வருகின்றன.

வீடியோ செய்தி மலர்கள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்படுவதுடன் மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் கிராமப் பகுதிகளில் கள விளம்பரப் பணிக்காக மனைப் பயன்பாட்டு வீடியோ முறை (Video Home System) பிரதிகள் மற்றும் வீடியோ குறுந்தகடு (Video Compact Disc) பிரதிகள் எடுத்தும் அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்ப நலம், சமூகக் காடுகள், வேளாண்மை, சுகாதாரம், வனப் பாதுகாப்பு, கூட்டுறவு மற்றும் இதர துறைகள் குறித்து பல்வேறு துறைகள் அளிக்கும் நிதிக்கு ஏற்ப படச்சுருளிலும், வீடியோவிலும் விளக்கப் படங்கள் தயாரித்து வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தாமே விளக்கப் படங்கள் தயாரிப்பதுடன், அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் படத் தயாரிப்பாளர்களையும் பயன்படுத்துகிறது. தமிழ்நாடு திரைப்படப் பிரிவு பிற அரசுத் துறைகளுக்காக மனைப் பயன்பாட்டு வீடியோ முறை (V.H.S.) நகல்கள் எடுத்துத் தரும் பணியையும் மேற்கொள்கிறது.





## அத்தியாயம் - 6

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

இந்தியாவிலேயே திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களையும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு நுணுக்கங்களையும் கற்றுத் தருகின்ற மூன்று முக்கியமான திரைப்படக் கல்லூரிகளில், தமிழக அரசால் சென்னையில் நடத்தப்படும் தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். மற்ற இரண்டு கல்வி நிறுவனங்கள் பூனா மற்றும் கொல்கத்தாவில் மைய அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன:

1. இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்
2. ஒளிப்பதிவு
3. ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்
4. படம் பதனிடுதல்
5. படத்தொகுப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த ஆலோசனைக்கிணங்க, 2001-2002 ஆம் கல்வி ஆண்டு முதல் இந்த நிறுவனத்தால் நடத்தப்பட்டுவரும், இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படம் பதனிடுதல் மற்றும் படத்தொகுப்பு ஆகிய ஐந்து பிரிவுகளில் மூன்றாண்டுப் பட்டயப் படிப்புகளில், ஒவ்வொரு பட்டயப் படிப்புக்கும் கூடுதலாக இரண்டு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடில்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவால் (AICTE) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் தற்போது நடத்தப்பட்டுவரும் பட்டயப் படிப்புகளை பட்டப் படிப்புகளாக உயர்த்தி சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க அரசு அனுமதியளித்துள்ளது.

[2002 ஏப்ரல் 30

பல்வேறு துறைகளின் மாணவர்கள் சேர்ந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு பிரிவு மாணவர் ஒருவர் வீதம் கூடி ஒரு முழுமையான திரைப்படம் தயார் செய்வது குறித்து விவரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இறுதியாண்டு மாணவர்கள் குழு தனியே ஒரு குறும்படம் தயாரிக்கவும் பாடத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு, தயாரிப்புச் செலவிற்காக ஆண்டுதோறும் ரூ.15 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சில குறும்படங்கள் தேசிய விருது மற்றும் சர்வதேச விருதுகள் பெற்றுள்ளன.

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள் என்ற பெயரில், தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம், ரூ.5.000 ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

நைரோபியிலுள்ள முகம்மது அமின் நிறுவனத்தைச் சார்ந்த இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், திரைப்படம் குறித்த கருத்தரங்கம் மற்றும் பண்பாடு பரிமாற்றத் திட்ட நிகழ்ச்சியினைத் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இது தொடர்பாக அவ்வெளிநாட்டு நிறுவனத்தைச் சார்ந்த இயக்குநர்கள் கடந்த 15-04-2002 அன்று தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு வருகை புரிந்து ஆலோசனை நடத்தினர்.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்றுச் சென்ற மாணவர்களில் சிலர் திரைப்பட உலகிலும், இந்திய தொலைக்காட்சி நிறுவனங்களிலும் மற்றும் தனியார் செயற்கைக்கோள் ஒளிபரப்பு நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர்.



2002 ஏப்ரல் 30]

## அத்தியாயம்-7

## சினிமா, வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்றாகும். மேலும், தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்களை அதிக அளவில் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருந்து வருகிறது.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு பல்வேறு சலுகைகளை திரைப்படத் துறைக்கு அளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,237 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | | சாதாரணம் | குளிர்சாதன வசதி |
|---|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1,321 | 171 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 176 | - |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 555 | - |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 12 | - |
| 5. | வீடியோ திரையரங்குகள் | 2 | - |
| | மொத்தம் | 2,066 | 171 |

திரையரங்குகளுக்குச் செல்கின்ற பொதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகள், கட்டட நிலைப்புத் தன்மை, முறையான பராமரிப்பு இவைகளைத் தருகின்ற வகையில் 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

### திரையரங்குகளில் நுழைவுக் கட்டணம் சீரமைப்பு

1994 ஆம் ஆண்டில் திரையரங்குகளின் நிர்வாகமே திரையரங்குகளின் நுழைவுக் கட்டணத்தை, கடைசி வகுப்பைத் தவிர, மற்ற வகுப்புகளுக்கு மாற்றியமைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி அளித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பின்னர், 1996 ஆம் ஆண்டில் திரையரங்குகளின் நுழைவுக் கட்டணம் 28-10-1994இல் இருந்த

கட்டணத்தில் 75 சதவீதத்திற்கு மிகாமல் கடைசி வகுப்பினைத் தவிர மற்ற வகுப்புகளுக்கு மாற்றியமைத்துக் கொள்ள அரசு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்பு, நீண்ட நாட்களாக திரையரங்குகளின் நுழைவுக் கட்டணம் மாற்றியமைக்கப்படவில்லை. தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சி, வீடியோ மற்றும் ஆடியோ போன்ற தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் அதிகமாகப் பெருகியதால் திரையரங்குகளின் வருவாய் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அதன் மூலம் அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பைக் கருத்தில் கொண்டும், திரையரங்குகளின் நுழைவுக் கட்டணங்களை மாற்றியமைப்பதால் கேளிக்கை வரியின் மூலமாக நிதிநிலையை மேம்படுத்த வாய்ப்புள்ளது. எனவே, அரசு (நிலை) ஆணை எண் 317, உள் துறை (சினிமா 1), நாள் 12-4-2002-இல் திரையரங்குகளின் நுழைவுக் கட்டணத்தை உயர்த்தி பின்வருமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது:

(i) உரிமம் வழங்கும் அலுவலர்/வணிக வரித் துறை அலுவலர்களுக்கு முன் அறிவிப்புச் செய்து, திரையரங்கு நிர்வாகம், கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புக் கட்டணத்தில் தற்போதுள்ள கட்டணத்தை விட 75 சதவிகிதம் வரை கூடுதலாக நிர்ணயிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) கடைசி வகுப்புக் கட்டணம் சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் ரூ.10-க்கு (பத்து ரூபாய்) மிகாமலும், மற்ற இடங்களில் ரூ.5-க்கு (ஐந்து ரூபாய்) மிகாமலும் நிர்ணயம் செய்யவும், கடைசி வகுப்புக் கட்டணம் அதற்கு முந்தைய கட்டணத்திற்கு மிகாமல் நிர்ணயம் செய்துகொள்ளவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(iii) திரையரங்குகளின் மொத்த இருக்கையில் கடைசி வகுப்பிற்குத் தற்போதுள்ள 20 சதவிகிதத்திற்குப் பதிலாக 10 சதவிகிதம் இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iv) புதிய திரைப்படங்கள் திரையிடும்போது இரண்டு வாரங்களுக்கு திரையரங்குக் கட்டணம் உச்சவரம்பு இல்லாமல், உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிக வரித் துறையின் அனுமதியுடன் நிர்ணயித்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(V) அரசு ஆணை எண் 1076, உள் துறை நாள் 8-9-1994-ல் அனுமதிக்கப்பட்ட திரையரங்குப் பராமரிப்புக் கட்டணம் திரும்பப் பெறப்படுகிறது.

இவ்வாணை 14-4-2002 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.





**திரையரங்கு தடையின்மைச் சான்றிதழ்**

திரையரங்குகள் கட்டுவதற்குத் தேவைப்படும் கட்டுமானப் பொருட்கள் விலையேற்றம், தொழிலாளர் ஊதிய உயர்வு மற்றும் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் காலதாமதம் ஆவதால் தற்போதுள்ள திரையரங்குகள் கட்டுவதற்கான தடையின்மைச் சான்றின் செல்லத்தக்க காலத்தை நீட்டித்து வழங்குமாறு, தமிழ்நாடு திரைப்படங்கள் வெளியிடுவோர் சங்கத் தலைவர் கேட்டுக்கொண்ட கோரிக்கையினைப் பரிசீலித்து, 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதி எண் 36(3)-ன்படி நிரந்தரத் மற்றும் பகுதி திரையரங்குகள் கட்டுவதற்கான தடையின்மைச் சான்றின் தற்போதுள்ள செல்லத்தக்க காலத்தை மூன்று வருடத்திலிருந்து ஐந்து வருடமாகவும் மற்றும் விதி எண் 106(2)-இன்கீழ், நடமாடும் திரையரங்குகள் கட்டுவதற்கான தடையின்மைச் சான்றிதழ் தற்போதுள்ள செல்லத்தக்க காலத்தை ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடமாகவும் உயர்த்தி அரசு (நிலை) ஆணை எண் 324, உள் துறை (சினிமா 1), நாள் 16-4-2002-ல் ஆணை வெளியிட்டுள்ளது.

நடமாடும் திரையரங்கம் அமைப்பதற்கு, நிரந்தரத் திரையரங்கிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்ற தற்போதைய விதியை 1997 ஆம் ஆண்டிற்கு முன்பு இருந்ததுபோல் நிரந்தரத் திரையரங்கிலிருந்து நடமாடும் திரையரங்கம் அமைக்க 1.609 கிலோ மீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென்று அரசு (நிலை) ஆணை எண் 233, உள் (சினிமா 1) துறை, நாள் 19-3-2002-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

**வீடியோ தொடர்பான சட்டமும், விதிகளும்**

தமிழ்நாடு மாநிலத்தில், வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவி (Video Cassette Recorder) மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதை முறைப்படுத்துவதற்காகவும், இதற்கு இடை நிகழ்வாகவும், தொடர்புடையதாகவும் உள்ள விஷயங்களுக்காகவும், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவி மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவி மூலம் தொலைக்காட்சிப்

பெட்டியில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியாருக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்டங்கள் மட்டத்தில், மாவட்டாட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில், காவல் துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அதிகாரிகளாவர். வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு வீட்டுப் பயனுக்காக, வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவி மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படம் போட்டுப் பார்ப்பதற்கு உரிமம் எதுவும் அவசியமில்லை. இம்மாநிலத்தில், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவி மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் உரிமம் பெற்ற 705 வீடியோ நூலகங்களும், 2 வீடியோ திரையரங்குகளும் உள்ளன.

## திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவானது (Video Piracy Cell) தமிழக அரசு ஆணை எண் (3டி) எண் 16 உள் துறை (சினிமா 2), நாள் 17-02-1995-ன்படி உருவானது. இது தற்போது காவல் துறை கூடுதல் இயக்குநர், குற்றப் பிரிவு, சென்னை-2 அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. காப்பி உரிமச் சட்டம் (Copy Rights Act) மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-ஐ (Information Technology Act, 2000) மீறுகின்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

அதிகப்படியான மக்கள் தற்போது தங்கள் இல்லங்களிலேயே, நவீன அறிவியலால் உருவாக்கப்பட்ட வீடியோ குறுந்தகடு (Video Compact Disc) மூலம் திரைப்படம் பார்க்கிறார்கள். தொலைக்காட்சி மற்றும் கேபிள் மூலம் காட்டப்படும் தொலைக்காட்சிகள் பொதுமக்கள் திரையரங்குகளுக்குச் செல்லாமலேயே திரைப்படங்கள் பார்க்க உதவுகின்றன. வீடியோ குறுந்தகடுகளுக்கு அரசு எந்த உரிமையும் வழங்கவில்லை.. இருந்தாலும் திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தயார் செய்பவர்கள் மூலம் புழக்கத்தில் விடப்பட்டுள்ள திருட்டு வீடியோ மற்றும் திருட்டு வீடியோ குறுந்தகடு தயாரிப்பவர்கள்மீது நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது. அதோடு, முழுமையாக அந்தக் குற்றத்தையும் ஒழித்து வருகிறது. வீடியோ தடுப்புப் பிரிவு அதிக வழக்குகளைத் தொடுத்துள்ளது. அதோடு திருட்டுத்தனமாகத் தயார் செய்யப்பட்ட வீடியோ தொடர்பான சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு உள்ளன. இந்த



சொத்துக்கள் வீடியோ, ஆடியோ, கேபிள் டி.வி. மற்றும் கணிப்பொறி சம்பந்தமாகத் தயாரிக்கப்பட்ட திருட்டுச் சாதனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்பிரிவில் பணிபுரிய ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், ஆறு ஆய்வாளர்கள், இரண்டு உதவி ஆய்வாளர்கள், பதினான்கு காவலர்கள், வாகனம் ஓட்டும் காவலர்கள் இருவர் ஆகியோர் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வீடியோ திருட்டுப் பிரிவானது, ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு. ஒவ்வொரு பிரிவிலும் ஒரு ஆய்வாளர், இரண்டு முதுநிலைக் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னைப் பிரிவில் மட்டும் இரண்டு உதவி ஆய்வாளர்கள், இரண்டு முதுநிலை காவலர்கள் மற்றும் இரண்டாம் நிலையைச் சேர்ந்த வாகனம் ஓட்டும் காவலர் இருவர் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளார்கள். வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையில், மூன்று ஆய்வாளர்கள், ஒரு உதவி ஆய்வாளர், 10 காவலர்கள் சிறப்புப் புலனாய்வு பிரிவிற்கு, காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் 28-9-1997 ஆம் நாளிலிருந்து இணைக்கப்பட்டுள்ளனர். காவல் துறைக் கண்காணிப்பாளர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் இருவரும் சிறப்புப் புலனாய்வுத் துறையின் வழக்குகளை மேற்பார்வையிட்டும், 6 வீடியோ பிரிவுகளினுடைய அலுவல்களை மேற்பார்வையிட்டும் வருகிறார்கள்.

வீடியோ, ஆடியோ குற்றங்கள் என்பது பிரபலமான திரைப்படங்களும், பாடல்களும் திருட்டுத்தனமாகப் பதிவு செய்து, வியாபார ரீதியாக வீடியோ, ஆடியோ நூலக முதலாளிகளும், கடைக்காரர்களும் சேர்ந்து செய்யப்படுகின்ற ஒரு செயலாகும். இந்த நபர்கள் திரையரங்கு உரிமையாளர்கள் மற்றும் திரையரங்கு திரைப்படக் கருவி இயக்குபவர்களுடன் (Operator) சேர்ந்து கொண்டு சட்டத்திற்குப் புறம்பாக புதிய திரைப்படங்களுடைய வீடியோ மற்றும் ஆடியோ கேசட்டுகள் மூலம் திருட்டுத்தனமாகப் பதிவு செய்து, விற்பனை செய்து வருகிறார்கள். மேலும் வெளிநாடுகளில் இருந்து வீடியோ குறுந்தகடுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அது குறித்து விமான நிலையத்தில் சோதனை செய்யப்பட்டு, குற்றங்கள் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 30

தமிழக திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் துணையோடு, இந்த வீடியோ தடுப்புப் பிரிவானது, திருட்டு வீடியோ தயாரிப்பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

(அ) புதிய திரைப்படங்கள் மற்றும் பாடல்கள் சேர்படுத்தும்போதும், பதிவு செய்யப்படும்போதும், சோதனைக்கூட தொழில்நுட்ப உதவியாளர் மூலம் நடக்கும் தவறுதல்களை தமிழக திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் உதவியோடு இப்பிரிவு தடுத்து வருகிறது.

(ஆ) மேலும் இந்தப் பிரிவானது, இந்தச் சங்கத்தின் உதவியோடு திரைப்படத்தினுடைய நகலைத் திரையிடுவதற்கு முன் திரையரங்கத்திற்கும், தனிப்பட்ட முறையில் காண்பிக்கப்படும் திரையரங்கத்திற்கும் எடுத்துச் செல்லும் நபர்களைக் கண்காணித்து வருகிறது.

இந்தத் திருட்டை ஒழிப்பதற்கு படி எடுக்கும் உரிமைச் சட்டம் 1957 (Copyright Act, 1957), தமிழ்நாடு வீடியோ ஒளிநாடா பதிவுக் கருவி (Video Cassette Recorder) மூலம் தொலைக்காட்சிப் பெட்டியில் திரைப்படங்கள் ஒளிபரப்புதல் (முறைப்படுத்துதல்) சட்டம் [Tamil Nadu Exhibition of films on Television Screen through Video Cassette Recorders (Regulations) Act, 1984], கேபிள் தொலைக்காட்சி (ஒழுங்குமுறை) சட்டம், 1984 மற்றும் திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1952 (Cinematography Act, 1952) மற்றும் 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் (Information Technology Act, 2000) மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவின் சிறப்பான பணிகள்**

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவில் 2000-இல் 249 வழக்குகளும், 2001-இல் 514 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1-1-2001 முதல் 31-12-2001 வரை கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 2,69,33,497 ஆகும். 1995 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 6,56,13,377 ஆகும்.

உரிமையாளர்களிடம் படி எடுக்கும் உரிமம் பெறாமலும், கள்ளத்தனமான வீடியோ மற்றும் கணிப்பொறியில் தயார் செய்தவர்கள் மீதும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் (Cable TV Operators) மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசுப்



2002 ஏப்ரல் 30]

பேருந்துகளிலும் மற்றும் தனியார் பேருந்துகளிலும் வீடியோ ஒளிநாடா பதிவுக் கருவி (Video Cassette Recorder) மூலம் சின்னத் திரைகளில் திரைப்படம் காட்டி வருகிறார்கள். இதுபோன்ற குற்றங்கள்மீது படி எடுக்கும் உரிமச் சட்டப்படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது இப்பிரிவு அலுவலர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**கேபிள் தொலைக்காட்சி இணைப்பு முறை**

கேபிள் தொலைக்காட்சி மூலமாகத் திரைப்படங்களைத் திரையிடுவதை முறைப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1991 ஆம் ஆண்டு வீடியோ ஒளிநாடா பதிவுக் கருவி மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தை [Tamil Nadu Exhibition of Films on Television Screen through Video Cassette Recorders (Regulations) Amendment Act, 1991] இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம் 11-11-1991 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

கேபிள் டிவி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டிவி அமைப்பு ஒழுங்குபடுத்துதல் சட்டம் [Central Cable Television Network (Regulation) Act and Rules, 1995] மற்றும் விதிகளை 1995-இல் இயற்றியுள்ளது. இச்சட்டம், இந்தியா முழுவதற்கும் பொருந்தும். அதன்படி தலைமை தபால் அலுவலரே, பதிவு செய்யும் அலுவலராவார். மேலும் திருத்திய கேபிள் டிவி. அமைப்பு முறையை நெறிப்படுத்த மத்திய அரசு கேபிள் டிவி. அமைப்பு (ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2000 [Amended Cable Television Networks (Regulation) Act, 2000 (Act XXXVI of 2000)]-இன்படி மாவட்டக் குற்றவியல் நீதிபதி, உதவி கோட்டக் குற்றவியல் நீதிபதி மற்றும் காவல் ஆணையர், சென்னை, ஆகியோர் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களாக வரையறுக்கப் பட்டுள்ளார்கள். இவர்கள் மேற்படி சட்டத்தில் பிரிவு 3,5,6 மற்றும் 8 ஆகியவைகளை மீறும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்கள்.

திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவானது 2000 ஆம் ஆண்டில் 35 கேபிள் டிவி. வழக்குகளும், 2001 ஆம் ஆண்டில் 37 வழக்குகளும், 1-1-2002 முதல் 31-3-2002 வரை 13 வழக்குகளும் பதிவு செய்துள்ளது. அனைத்து வழக்குகளும் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

[2002 ஏப்ரல் 30

## அத்தியாயம் - 8

### எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்

எம்.ஜி.ஆர். திரைப்பட நகர், சென்னை, தரமணியில் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரின் வருவாயைப் பெருக்கும் வகையில் நீச்சல் குளம், பொழுதுபோக்குப் பூங்கா, சிறுவர் பூங்கா, உணவு விடுதி மற்றும் 11 குடில்கள், துரித உணவகம் மற்றும் சிற்றுண்டி விடுதி ஆகியவை உரிமம் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றன. திரைப்பட நகரின் வருவாயை அதிகரிக்கும் வகையில் தனியார் நிறுவனங்கள் அவர்களது தொடர்புடைய கண்காட்சியை அமைத்தல் போன்றவற்றால் வருமானத்தைப் பெருக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திரைப்பட நகரைக் காண வருபவர்களிடம், பெரியவர்களுக்கு ரூ.20-ம், சிறியவர்களுக்கு ரூ.10-ம் மற்றும் பள்ளிச் சிறுவர்களுக்கு ரூ.5-ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

### எம்.ஜி.ஆர். அறிவுப் பூங்கா

எம்.ஜி.ஆர். திரைப்பட நகரில் சுமார் 24.78 ஏக்கர் நிலத்தில் எம்.ஜி.ஆர். அறிவுப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இந்த அறிவுப் பூங்காவில் தகவல் தொழில்நுட்பம், உயிர்நுட்பவியல், தொலைத் தொடர்பு போன்ற துறைகளின் பல்வேறு ஆராய்ச்சிக் கூடங்கள் அமையும். இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.டி.) தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு ஆகிய துறைகளில் ஓர் ஆராய்ச்சிக் கூடத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மேலும் இப்பூங்காவில் உயிர்நுட்பவியலில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்தக் கோரி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பல்வேறு நிறுவனங்களை அணுகியுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் இந்த அறிவுப் பூங்காவினை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 30]

## அத்தியாயம் - 9

### தமிழரசு

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசின் செய்திகளை மக்களிடையே பரப்பும் மகத்தான பணியில் முத்திரை பதித்து வருகிறது 'தமிழரசு' இதழ்.

அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள், நலத் திட்ட உதவிகள், அவற்றைப் பெறும் முறைகள் ஆகியவற்றை மக்களுக்கு எடுத்துச் செல்லும் எழுத்துத் தூதுவனாக இயங்கி வருகிறது 'தமிழரசு'.

அரசுச் செய்திகளோடு மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல் தொழில்நுட்பம், மருத்துவம் சார்ந்த கட்டுரைகளையும் தாங்கி வரும் 'தமிழரசு' இதழ், பொது மக்களுக்கும், தமிழகத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொள்வோர்க்கும் அரிய தகவல் களஞ்சியமாக விளங்குகின்றது. மக்கள் குறை தீர்க்கும் வகையில் 'எங்கள் ஊர்ப் பிரச்சினை' என்னும் பகுதி மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்களை, உரிய துறைகளுக்கு அனுப்பி, அந்தத் துறைகளிடமிருந்து பெறப்படும் பதில்களை 'தமிழரசு' வெளியிட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 11-7-2001 அன்று செய்தி-மக்கள் தொடர்புத் துறைப் பணிகள் குறித்து மேற்கொண்ட ஆயவின் போது தெரிவித்த ஆலோசனைகள் தற்போது செயலாக்கம் பெற்றுள்ளன. அதன்படி, புகழ்வாய்ந்த பிறமொழிச் சிறுகதைகளின் தமிழ் மொழி பெயர்ப்புகள், 'தமிழரசு' இதழில் ஜூலை 2001 முதல் வெளியிடப்படுகின்றன; 'தமிழரசு' தமிழ் இதழின் 8 பக்கங்கள் நான்கு வண்ணத்தில் அச்சிடப்பட்டு பொலிவுடன் வெளியிடப்படுகிறது.

'தமிழரசு' ஆசிரியர் குழுவை வலுப்படுத்தும் வகையிலும், அதன் உள்ளடக்கத்தின் சிறப்பை உயர்த்தும் வகையிலும், ஆற்றல் மிக்க எழுத்தாளர்கள் குழு ஒன்று அமைக்கப்பெறுகிறது.

'தமிழரசு' இதழ் தமிழில் மாத இதழாகவும், ஆங்கிலத்தில் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகிறது. 'தமிழரசு' தமிழ் இதழின் விலை ரூ.10, ஆங்கில இதழின் விலை ரூ.15, தமிழிதழ் ஆண்டுச் சந்தா ரூ.120, ஆயுள் சந்தா ரூ.1,000 (10 ஆண்டுகள்) ஆகும்.

[2002 ஏப்ரல் 30

'தமிழரசு' இதழுக்குப் புதிய சந்தாதாரர்கள் சேர்க்கும் முயற்சி மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் விளைவாக புதிய ஆண்டுச் சந்தாதாரர்களின் எண்ணிக்கை தற்பொழுது 13,160 ஆகவும், ஆயுள் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1,121 ஆகவும் உயர்ந்துள்ளது.

**சிறப்பு வெளியீடுகள்**

அரசின் ஆக்கப் பணிகள், பல துறைகளின் சாதனைகள், மாண்புமிகு முதலமைச்சரின் உரைகள் ஆகியவை தொகுக்கப்பட்டு, அவ்வப்போது சிறப்பு வெளியீடுகளாக வெளியிடப்படுகின்றன. நினைவகங்களில், நினைவுக்குரிய பெரியோர்களின் வாழ்க்கை மற்றும் பணிகளை விளக்கும் மடிப்பேடுகளை விநியோகிப்பதற்கு ஏதுவாக 'தமிழரசு' அவற்றைத் தயாரித்து வெளியிடவுள்ளது.

1. இந்த அரசு ஏழை எளியோர்களின் அரசு.

2. 'வளம் தரும் திசையில் வளரும் தமிழகம்'
(100 நாள் சாதனை).

3. பெரியார் விருது - அம்பேத்கர் விருது - திரு.வி.க விருது - பாரதியார் விருது - பாரதிதாசன் விருது - கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா (தகுதி உரைத் தொகுப்பு).

4. 'முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம்' எனும் தலைப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-3-2002 அன்று சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடந்த விவாதங்களுக்கு அளித்த பதிலுரை.

5. 'தன்னிகரற்ற தமிழகத்தை உருவாக்க 15 அம்சத் திட்டம்' ஆகிய சிறப்பு வெளியீடுகள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன.

**தமிழரசு அலுவலகக் கட்டட விரிவாக்கப் பணிகள்**

'தமிழரசு' அலுவலகம் மற்றும் அச்சகம் ஆகியவற்றிற்குரிய ஆவணங்களைப் பாதுகாத்து வைப்பதற்காகவும், கணக்கர் மற்றும் அச்சக, அலுவலகப் பணியாளர்கள் ஆகியோரின் பயன்பாட்டிற்காகவும், 'தமிழரசு' அச்சக அலுவலகக் கட்டடத்தின் இரண்டாவது தளத்தின் விரிவாக்கப் பணிகள் ரூ. 6 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 30]

## அத்தியாயம்-10

## பொருட்காட்சி

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படும் பொருட்காட்சிகள் அரசு வகுத்திடும் கொள்கைகள், நலத் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களை மக்களறியச் செய்திடும் பணியினைச் செவ்வனே செய்து வருகிறது. ஆண்டுதோறும் மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழாவின்போது ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், கோயம்புத்தூரில் தொழிலாளர் தின விழாவின் போது ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், சேலத்தில் நடைபெறும் மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது ஜூலை - செப்டம்பர் மாதத்திலும், இரண்டாண்டிற்கு ஒரு முறை வேலூரில் கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகை விழாவின்போது டிசம்பர் - ஜனவரி மாதத்திலும், திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் திருவிழாவின்போது ஜூன் - ஜூலை மாதத்திலும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கு கொள்கின்றன.

1978 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2001 வரை இத்துறை மூலம் 106 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் பொருட்காட்சிகள் நடத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியிலும், புது தில்லியில் நடைபெறும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியிலும் தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளும் பங்குகொள்ளும் அரங்குகள் அமைக்கப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புது தில்லியில் அக்டோபர் மாதம் நடைபெறும் மலர்ப் பேரணி விழா (Phool Walon ki Saire)-விலும் இத்துறை பங்கேற்றுச் சிறப்புச் செய்து வருகிறது.

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்று, ஒருங்கிணைப்புப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. இந்த ஆண்டும் அலங்கார ஊர்தி அணிவகுப்பு, கலை நிகழ்ச்சிகள், வர்ணனையாளர்கள் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டது.

## அத்தியாயம்-11

### விளம்பரம்

மாநில அரசின் அனைத்துத் துறைகள், கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களைப் பத்திரிகைகளில் வெளியிடும் மைய நிறுவனமாக செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயங்கி வருகிறது. அரசின் மைய விளம்பர வெளியீட்டுக் கொள்கையின் கீழ், அதிக எண்ணிக்கையில் விற்பனையாகும் பத்திரிகைகளில் மட்டுமன்றி, சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கும் விளம்பரங்கள் அளிப்பதன் மூலம் அவை ஊக்குவிக்கப்படுகின்றன. விளம்பரச் செலவினத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் நோக்குடன், மிகவும் இன்றியமையாத விளம்பரங்கள் மட்டுமே நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதுடன், கூடுதலாக தேசிய தகவல் மையத்தின் கணினி இணைய தளத்தின் (www.tn.gov.in) மூலம் இலவசமாக வெளியிடப்பட்டு வருகின்றன.

**ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்**

ரூ.25 இலட்சம் வரை மதிப்புடைய, அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புத் தகவல்கள் அனைத்து மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்களில் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அலுவலரான அந்தந்த மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்களால் வெளியிடப்படுகின்றன. ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புத் தகவல்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அலுவலரான செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால், சென்னை



தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை வெளியிடப்படுகின்றன. அரசு அலுவலகங்களுக்கு இலவசமாகவும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கு ரூ.1,000-ம், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கு ரூ.600-ம் ஆண்டுச் சந்தா செலுத்தும் தனி நபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும் இம்மலர்கள் அளிக்கப்படுகின்றன. மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கென இதுவரை 334 சந்தாதாரர்கள் உள்ளனர். மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலருக்கென இதுவரை 926 சந்தாதாரர்கள் உள்ளனர்.

## அத்தியாயம்-12

### செய்தி நிலையங்கள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னையில் மாநிலச் செய்தி நிலையமும், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் புது டெல்லியிலும் செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையிலுள்ள மாநிலச் செய்தி நிலையம், அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்த தகவல்களைப் பொது மக்களுக்கும், கல்வியாளர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கும் வழங்கும் ஒரு முக்கியத் தகவல் மையமாகச் செயல்பட்டு வருகிறது.

திருச்சி-தஞ்சாவூர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத் தலைநகரங்களில் அமைந்துள்ள செய்தி நிலையங்களில் பல்வேறு தலைப்புகளில் அமைந்த நூல்களும், நாளிதழ்கள், பருவ இதழ்கள், அரசின் நலத் திட்டப் பணிகள் குறித்த கையேடுகளும் பொது மக்கள் படிப்பதற்காக வழங்கப்படுகின்றன. அரசின் சாதனைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் நடைபெறும் முக்கிய அரசு நிகழ்ச்சிகள், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் குறித்த புகைப்படங்கள் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்படுகின்றன.

## அத்தியாயம் - 13

### மேற்கோள் பிரிவு

நாளிதழ் மற்றும் பருவ இதழ்களின் முக்கியச் செய்தி நறுக்குகளை அன்றையதினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலாளர்கள் பார்வைக்காகவும், நடவடிக்கைக்காகவும் எனத் தொகுத்து அனுப்பி வைக்கும் பணியை இத்துறையில் இயங்கி வரும் மேற்கோள் பிரிவு ஆற்றி வருகிறது. மற்றைய மாநிலங்களின் அரசியல் நிலவரங்கள், அந்தந்த அரசுகள் நிர்வாகத்தில் மேற்கொள்ளும் திட்டங்கள், அவற்றின் செயல்பாடுகள் பற்றிய செய்திகளின் நறுக்குகள், வெளி மாநில ஆங்கில நாளிதழ்களிலிருந்து மற்றும் பருவ இதழ்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டு தொடர்புடையவர்களுக்குப் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆவணப் பிரிவு உட்பட, இப்பிரிவின் செயல்பாடுகளை நவீனமயமாக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## அத்தியாயம் - 14

### 2001-2002 ஆம் ஆண்டில் பகுதி-I மற்றும் பகுதி-II திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரம்

| | | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம், கடலூர், திருநெல்வேலி, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வீடியோ ஒளிநாடாப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) வசதியுடன் 4 வீடியோ திரைப்படக் கருவிகள் தலா | 9.41 |
| 2. | 26 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 26 வீடியோ ஒளி குறுந்தகடு கருவிகள் (வி.சி.டி.) | 1.10 |



| | | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 3. | காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய 9 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 9 ஒளிநகல் இயந்திரங்கள் | 7.71 |
| 4. | தலைமையிடத்திலுள்ள புகைப்படப் பிரிவுப் பயன் பாட்டிற்காக ஒரு டிஜிட்டல் புகைப்படக் கருவி | 1.00 |
| 5. | தலைமையிடச் செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு ஒரு கணினி மற்றும் தேவையான துணைக் கருவிகள் | 0.97 |
| 6. | தலைமையிட மக்கள் தொடர்பு அலுவலகப் பயன்பாட்டிற்காக ஒரு டிஜிட்டல் ஒளிநகல் இயந்திரம் | 1.05 |
| 7. | தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு ஒரு நவீன ஒளிப்பதிவுக் கருவி மற்றும் தொடர்புடைய துணைக் கருவிகள் | 14.84 |
| 8. | மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகத்திற்குத் தேவையான அலுவலகப் பொருட்கள் மற்றும் விளம்பரக் கருவிகள் | 4.16 |
| 9. | செய்தி-மக்கள் தொடர்புத் துறையில் 8 மாவட்டங்களுக்கு வீடியோ விளம்பர ஊர்திகள், 2 விளம்பர ஊர்திகள் மற்றும் 2 தானியங்கி இரு சக்கர ஊர்திகள் | 50.00 |
| | மொத்தம் .. | 90.24 |

குறிப்பு: 2001-2002 நிதியாண்டில் பகுதி-I மற்றும் பகுதி-II திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ.105.55 இலட்சத்தில், ரூ.90.24 இலட்சத்தில் ஒப்பளிக்கப்பட்ட அனைத்துப் பொருட்களும் விலைப்புள்ளி அடிப்படையில் வாங்கப்பட்டு, ரூ.15.31 இலட்சம் சேமிப்பு செய்யப்பட்டது.

[2002 ஏப்ரல் 30

## இணைப்பு II

(173 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை
### இந்து சமய அறநிலையத் துறை
### மானியக் கோரிக்கை எண் 45
### கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

**முகவுரை:**

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது அவ்வைப் பெருமாட்டியாரின் பொன் மொழி. ஆலயங்களைப் பேணிக் காத்தலே இத்துறையின் தலையாய கடமையாகும். வழிபாட்டு மையமாக மட்டுமல்லாது. சிற்ப. ஓவிய. கட்டடக் கலைகளின் நிலைக்கலன்களாகவும், இந்து சமய பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பறைசாற்றும் பெட்டகமாகவும் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கண்டாலே, கேட்டாலே, நினைத்தாலே இறையன்பர்களுக்கு மன நிறைவைத் தருகின்ற கற்பகத்தருவாகக் காட்சி தருகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைக் காத்து, சரிவரப் பராமரித்து, ஆகம விதிகளின்படியும், பழக்கவழக்கங்களின்படியும், கால வழிபாடுகளை நடத்தவும், திருக்கோயிலை நாடி வரும் பக்த பெருமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்வதிலும் முழுவதுமாக இத்துறை ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் திருக்கோயில்களிலும் விளக்கு அமைக்கவும், பூஜை நடைபெறவும் இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

"மண்ணி னிற்பிறந் தார் பெறும் பயன்மதி சூடும்
அண்ண யார்அடி யார்தமை அமுது செய்வித்தல்"

என்னும் பெரியபுராண வாக்கிற்கேற்ப அருள் நிதி தேடி வரும் இறையன்பர்களுக்கு, தெரிவு செய்யப்பட்ட 63 திருக்கோயில்களில் மதியம் அமுது படைக்கும் அரிய அரும்பணியையும் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

**இந்து சமய அறநிலையங்களும், சட்டமுறை நிருவாகமும்:**

சமய நிறுவனங்களின் பராமரிப்பு, அவற்றின் நிருவாகம் மற்றும் அவற்றைச் சார்ந்த அறக்கொடைகளின் நிருவாக நெறிமுறை ஆகியவற்றைக் கண்காணிப்பது அரசின் தலையாய கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1925 ஆம் ஆண்டிற்கு முன்பு இந்து சமய அறநிலையங்கள் மற்றும் அறக்கொடைகளின் நிருவாகத்தைக் கட்டுப்படுத்தி, கண்காணிக்கும் பொருட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் 1-ன்படி, அரசு நியமிக்கும் ஒரு தலைவரும், அவருடன் இரண்டு முதல் நான்கு ஆணையர்களும் அடங்கிய இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் வாரியம் ஒன்று அரசால் நிறுவப்பட்டு, இந்து சமய நிறுவனங்கள், மடங்கள் முதலியன கண்காணிக்கப்பட்டன. 1925 ஆம் ஆண்டு சட்டம் நீக்கப்பட்டு 1927 ஆம் ஆண்டில் பிறிதொரு சட்டம் இயற்றப்பட்டது. அதன் பிறகு பல திருத்தங்கள் 1951 வரை கொண்டுவரப்பட்டன. 1940-ல் தனி அதிகாரி ஒருவர், வாரியத்தின் நிருவாக முறைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி வாரியத்தை சீர்படுத்தி அமைக்க நியமிக்கப்பட்டார். அவர் வாரியத்திற்குப் பதிலாக அரசே இந்து சமயம் மற்றும் அறக்கொடைகளை நிருவகிக்கலாம் என கருத்துத் தெரிவித்தார். இந்நிருவாகம் மேலும் சீரான முறையில் செயல்படுவதற்கும், அதன் நிதியைப் பெருக்குவதற்கும் எவ்விதம் திருத்தி அமைக்கலாம் என்று பரிந்துரை செய்ய 1942-ல் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ப. வெங்கட்ரமணராவ் நாயுடு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவும் பல பரிந்துரைகளில் ஒன்றாக இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் வாரிய நிருவாகத்தினை மாற்றி மாநில அரசு நிருவாகத் துறையாக அமைத்தல் நல்லது என்று பரிந்துரை செய்தது. இந்தப் பரிந்துரையை ஏற்றுக்கொண்டும், அன்று வரை அமலில் இருந்த பல்வேறு சட்டங்களைத் தொகுத்தும் ஒரு தொகுப்புச் சட்டத்தை 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இயற்றியது. மேலும் இச்சட்டம் விரிவாகத் திருத்தி அமைக்கப்பட்டு, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டமாக வெளியிடப்பட்டு 1960 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளிலிருந்து அமல்படுத்தப்பட்டு வருகின்றது.



2002 ஏப்ரல் 30]

(ii) திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் ஆகியவற்றைச் சீரிய முறையில் நிருவகிக்க வேண்டும் என்ற நோக்கில் தனிக் கவனம் செலுத்தும் பொருட்டு இந்து சமயக் கோயில்கள் மற்றும் சமண சமயக் கோயில்கள், அறக்கொடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றை முறையாகப் பேணுவது, பராமரிப்பது தொடர்பாக ஆன்மீகம் மற்றும் சமயத் தலைவர்களையும் ஈடுபடுத்தி, அவர்களது கருத்துகளையும், ஆலோசனைகளையும் பெறுவதற்கு 1991ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு, 1959 ஆம் வருடத்திய இந்து சமயம் மற்றும்

அறக்கொடைகள் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் செய்யப்பட்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டன.

(iii) மேற்கண்ட நடைமுறையின் பலனாக, திருத்தப்பட்ட சட்டம் 1991 (திருத்தச் சட்டம் 46/91) அமலுக்கு வந்தது. இத்திருத்தப்பட்ட சட்டத்தின்படி இரண்டு அடுக்கு முறை நிருவாகம் (அதாவது மாநில அளவில் திருக்கோயில் நிருவாக வாரியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள்) ஏற்படுத்தப்பட்டது. மேற்படி திருத்தச் சட்டம் 13-12-1991ல் அமலுக்கு வந்தது.

(iv) 1996 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசு மேற்கண்ட இரண்டு அடுக்கு முறை அமைப்பினை முடிவுக்குக் கொண்டு வந்து, ஏற்கெனவே 1991-க்கு முன் இருந்த நிலையை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார வரம்புகளை நிர்ணயித்து சட்டத் திருத்தம் செய்தது. 1996 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டம் (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 39/1996) இயற்றப்பட்டு, 9-12-1996 முதல் அமலுக்கு வந்தது.

**சமய நிறுவனங்களின் எண்ணிக்கை:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தமிழகம் முழுவதுமுள்ள கீழ்க்கண்டவாறான இந்து சமய மற்றும் சமண சமய அறநிலையங்கள் மற்றும் இந்து அறக்கொடைகள் நிருவாகத்தை மேற்பார்வை செய்து வருகிறது.

| | | |
|---|---|---|
| (1) | திருக்கோயில்கள் | 34,315 |
| (2) | மடங்கள் | 56 |
| (3) | மடங்களுடன் இணைந்த திருக்கோயில்கள் | 57 |
| (4) | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| (5) | அறக்கட்டளைகள் | 189 |
| (6) | சமண அறநிறுவனங்கள் | 17 |
| | மொத்த நிறுவனங்கள் | 36,355 |

**சமய நிறுவனங்களின் வகைப்பாடு:**

சமய நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் ஆண்டு வருவாய் அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில்



சேராத நிறுவனங்கள் என இரு வேறு வகைகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:—

| வரிசை எண் | வகைப்பாடு | திருக்கோயில்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | பட்டியலில் சேராத திருக்கோயில்கள் | |
| | ரூ.10,000-க்கும் குறைவாக வருவாய் ஈட்டும் திருக்கோயில்கள் எண்ணிக்கை | 32,552 |
| (ii) | பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்கள் | |
| | (i) வருடாந்திர வருமானம் ரூ. 10,000-க்குக் குறையாமலும் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை | 3,266 |
| | (ii) வருடாந்திர வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ. 10.00 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை | 403 |
| | (iii) வருடாந்திர வருமானம் ரூ. 10.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை | 134 |
| | மொத்தம் | 36,355 |

*நிருவாகக் கூட்டமைப்பு:*

(i) ஆணையாளர் இத்துறையின் நிருவாகத்திற்குத் தலைவராவார். துறையின் பொது நிருவாகம், மேற்பார்வை மற்றும் செயல்பாடுகள் அனைத்திற்கும் இவரே பொறுப்பானவர். துறையின் தலைமையிடத்தில் ஆணையருக்கு உதவியாக கீழ்க்கண்ட அலுவலர்கள் இருப்பர்:

(1) ஒரு கூடுதல் ஆணையர்

(2) ஒரு இணை ஆணையர் (தலைமையிடம்)

(3) உதவி ஆணையர் நிலையிலான இரண்டு ஆணையரின் நேர்முக உதவியாளர்கள்

(4) ஒரு உதவி ஆணையர் (சட்ட சேர்மம்)

(5) ஒரு உதவி ஆணையர் (சரிபார்ப்பு), தலைமையிடம்

[2002 ஏப்ரல் 30

(ii) மண்டலம் மற்றும் கோட்டம் வாரியாக முறையே 10 இணை ஆணையர்களும், 22 உதவி ஆணையர்களும், திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு ஒரு உதவி ஆணையரும், 9 உதவி ஆணையர்கள் (நகைகள் சரிபார்ப்பு), ஒரு துணை ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) மற்றும் பல்வேறு நிலையில் 693 செயல் அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்த உதவுகின்றனர்.

(iii) சமய நிறுவனங்களின் நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளை உதவி ஆணையர்கள் (சரிபார்ப்பு) தத்தம் பணியாளர்களுடன் மதிப்பீடு செய்கின்றனர்.

(iv) சமயு நிறுவனங்களின் திருப்பணிகளுக்கான மதிப்பீடு தயார் செய்யவும், திருப்பணிகளை மேற்பார்வையிடவும் ஆணையருக்கு உதவியாக, ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு கோட்டப் பொறியாளரும், தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களும் உள்ளனர்.

(v) திருக்கோயில் நிலங்களைக் கண்டறியவும், அவற்றிற்கான ஆதாரப் பதிவேடுகளைத் தயார் செய்யவும், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவர் தலைமையிடத்திலும், பிற இடங்களில் நான்கு சிறப்பு வட்டாட்சியர்களும் பணியாற்றி வருகின்றனர். இதுதவிர சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறிய தேவையான பணியாளர்களுடன் ஒரு சிறப்பு வட்டாட்சியர் உள்ளார்.

(vi) இத்துறையின் வரவு-செலவுத் திட்டம் மற்றும் கணக்கு ஆகியவற்றிற்குக் கருவூல கணக்குத் துறையைச் சேர்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும், அவருக்கு உதவியாக உதவி கணக்கு அலுவலர் ஒருவரும் பொறுப்பு வகிக்கின்றனர்.

(vii) திருக்கோயில்களுக்குச் சொந்தமான உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலையுயர்ந்தவை ஆகியவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் மூன்று காவல் துறை ஆய்வாளர்களைக் கொண்ட "திருக்கோயில் பாதுகாப்புப் பிரிவு" இத்துறையில் இயங்கி வருகிறது.

(viii) சமய நிறுவனங்களின் வரவு-செலவுக் கணக்குகளைச் சரிபார்த்து தணிக்கை செய்யும்பொருட்டு சார்நிலை அலுவலர்களுடன் அரசு நிதித் துறை அலுவலர் ஒருவர் மாற்றுப் பணியில் தலைமைத் தணிக்கை அதிகாரியாகப் பணிபுரிந்து வருகிறார்.



2002 ஏப்ரல் 30]

(ix) இந்து சமய அறநிலையத் துறை மாநில அளவில் 10 மண்டலங்களாகவும், 22 கோட்டங்களாகவும் ஆட்சி எல்லை பிரிக்கப்பட்டு முறையே இணை ஆணையர்களாலும், உதவி ஆணையர்களாலும் கீழ்க்கண்ட விவரப்படி நிருவகிக்கப்பட்டு வருகிறது:—

| வரிசை எண். (1) | மண்டலங்கள். (2) | வரிசை எண். (3) | உள்ளடங்கிய கோட்டங்கள். (4) |
|---|---|---|---|
| 1. | இணை ஆணையர், சென்னை. | 1. | உதவி ஆணையர், சென்னை. |
| 2. | இணை ஆணையர், வேலூர். | 2. | உதவி ஆணையர், காஞ்சிபுரம். |
| | | 3. | உதவி ஆணையர், வேலூர். |
| | | 4. | உதவி ஆணையர், திருவண்ணாமலை. |
| 3. | இணை ஆணையர், சேலம். | 5. | உதவி ஆணையர், சேலம். |
| | | 6. | உதவி ஆணையர், தர்மபுரி. |
| 4. | இணை ஆணையர், கோயம்புத்தூர். | 7. | உதவி ஆணையர், கோயம்புத்தூர். |
| | | 8. | உதவி ஆணையர், ஈரோடு. |
| 5. | இணை ஆணையர், தஞ்சாவூர். | 9. | உதவி ஆணையர், தஞ்சாவூர். |
| | | 10. | உதவி ஆணையர், நாகப்பட்டினம். |
| 6. | இணை ஆணையர், மயிலாடுதுறை. | 11. | உதவி ஆணையர், கும்பகோணம். |
| | | 12. | உதவி ஆணையர், கடலூர். |
| | | 13. | உதவி ஆணையர், விழுப்புரம். |
| 7. | இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி. | 14. | உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி. |
| | | 15. | உதவி ஆணையர், அரியலூர். |
| | | 16. | உதவி ஆணையர், புதுக்கோட்டை |
| 8. | இணை ஆணையர், மதுரை. | 17. | உதவி ஆணையர், மதுரை. |
| 9. | இணை ஆணையர், சிவகங்கை | 18. | உதவி ஆணையர், பரமக்குடி. |
| | | 19. | உதவி ஆணையர், விருதுநகர். |
| 10. | இணை ஆணையர், திருநெல்வேலி. | 20. | உதவி ஆணையர், திருநெல்வேலி. |
| | | 21. | உதவி ஆணையர், தூத்துக்குடி. |
| | | 22. | உதவி ஆணையர், நாகர்கோவில். |

[2002 ஏப்ரல் 30

(x) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, ஆணையர் உட்பட 55 வகைகளடங்கிய மொத்தம் 2,465 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

**சமய நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் நிருவாகம்:**

திருக்கோயில்கள், அவற்றின் முக்கியத்துவம், வருமானம், அவற்றிற்குச் சொந்தமாக உள்ள சொத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், செயல் அலுவலர்கள் நிலை-1 முதல் நிலை-4 வரையிலான பதவித் தரங்களில் செயல் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பதவித் தரங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | பதவித் தரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணை ஆணையர்கள் | 8 |
| 2. | துணை ஆணையர்கள் | 12 |
| 3. | உதவி ஆணையர்கள் | 27 |
| 4. | செயல் அலுவலர் நிலை-1 | 66 |
| 5. | செயல் அலுவலர் நிலை-2 | 112 |
| 6. | செயல் அலுவலர் நிலை-3 | 269 |
| 7. | செயல் அலுவலர் நிலை-4 | 199 |

*திருமடங்கள் நிருவாகம்:*

திருமடங்கள் நிருவாகம் "ஆதினகர்த்தர்களால்" நிருவகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 19 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிருவாகம் மேலும் சிறப்புற நடைபெறவும், நிருவாகத்தை மேம்படுத்தவும், மடங்களின் வரவு-செலவுத் திட்டங்களைப் பரிசிலித்து ஒப்புதல் வழங்கவும் ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அதிகாரி மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு செயல்படுகின்றது. இப்பிரிவால் திருமடங்கள் ஆய்வு செய்யப்படுகின்றன.



2002 ஏப்ரல் 30]

**அறங்காவலர் குழு நியமனம்:**

(i) திருக்கோயில்கள் மற்றும் ஏனைய சமய நிறுவனங்களுக்கு அறங்காவலர்கள் விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டு நிருவாகத்தைக் கவனிக்க அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். அவற்றில் சில அறநிலையங்கள் பரம்பரை அறங்காவலர்களைக்கொண்டும் சில, நிருவாகத் திட்டங்கள் அடிப்படையிலும் நிருவகிக்கப்படுகின்றன.

(ii) குறைவான வருமானம் பெறும் கிராமப்புறத்தில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்களுக்கு அல்லது பரம்பரை அறங்காவலர்கள் நிருவகிக்கும் திருக்கோயில்களுக்கு, மடாதிபதிகளால் நிருவகிக்கப்படும் மடங்கள் ஆகிய 9350 சமய நிறுவனங்களுக்குப் பரம்பரை முறை சாரா அறங்காவலர்களை நியமனம் செய்ய இயலாது. இது தவிர, அறங்காவலர்களை நியமனம் செய்யக்கூடிய திருக்கோயில்கள் 27,005 உள்ளன. இக்கோயில்களின் நியமன விவரம் கீழ்க்கண்டவாறு:—

| வரிசை எண் | நிலை | பரம்பரை முறை சாரா அறங் காவலர்கள் நியமனம் செய்ய இயன்ற மொத்தத் திருக்கோயில் களின் எண்ணிக்கை | பரம்பரை முறை சாரா அறங் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு பதவிகளில் உள்ள திருக்கோயில் களின் எண்ணிக்கை | பரம்பரை முறை சாரா அறங் காவலர்கள் பதவிக் காலம் முடிந்து நியமனம் செய்யப்பட வேண்டிய திருக்கோயில் களின் எண்ணிக்கை | அறங் காவலர் நியமன அதிகாரி |
|---|---|---|---|---|---|
| 1 | 49(i) | 24,490 | 2,163 | 22,327 | உதவி ஆணையர் |
| 2 | 46(i) | 2,145 | 325 | 1,820 | இணை ஆணையர் |
| 3 | 46(ii) | 284 | 64 | 220 | ஆணையர் |
| 4 | 46(iii) | 86 | 12 | 74 | அரசு |
| | மொத்தம் | 27,005 | 2,564 | * 24,441 | |

(iii) ஒவ்வொரு வருவாய் மாவட்ட அளவிலும், பதவி முறை ஒருங்கிணைப்பாளர் (உதவி ஆணையர்) மற்றும் ஐந்து அலுவல் சாரா உறுப்பினர்கள் கொண்ட மாவட்டக் குழு உள்ளது. இம்மாவட்டக்

[2002 ஏப்ரல் 30

குழுப் பட்டியலில் சேராத திருக்கோயில்களுக்கும், சட்டப் பிரிவு 46(i) மற்றும் 46(ii)கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கும் பரம்பரை முறை வழிசாரா அறங்காவலர்கள் நியமனம் செய்ய தகுதியானோர் பட்டியல் தயார் செய்யும் அதிகாரம் கொண்டது. இத்திருக்கோயில்களுக்கு நியமன அதிகாரி, மூன்று அறங்காவலர்களையும், அரசு, இரு அறங்காவலர்களையும் நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சட்டப் பிரிவு 46(iii)ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ய அரசுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**சமய நிறுவனங்களின் நில நிருவாகம்:**

**(அ) நிலங்கள், மனைகள் மற்றும் கட்டடங்கள் விவரம்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்கள் தமிழ்நாடு முழுமையும் 4,79,021,23 ஏக்கர்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் கீழ்க்காணும் விவரப்படி அடங்கியுள்ளன:—

| நிலத்தின் தன்மை | திருக்கோயில்களுக்குச் சொந்தமானவை | | திருமடங்களுக்குச் சொந்தமானவை | | மொத்தப் பரப்பளவு | |
|---|---|---|---|---|---|---|
| | ஏக்கர் | செ. | ஏக்கர் | செ. | ஏக்கர் | செ. |
| நன்செய் | 1,83,870 | 51 | 21,282 | 05 | 2,05,152 | 56 |
| புன்செய் | 2,18,570 | 62 | 34,543 | 15 | 2,53,113 | 77 |
| மானாவாரி | 20,754 | 90 | - | - | 20,754 | 90 |
| மொத்தம் | | | | | 4,79,021 | 23 |

மேற்குறிப்பிட்ட நிலங்களை 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர்செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 20,046 கட்டடங்களும், 33,627 மனைப் பகுதிகளும் உள்ளன. இதில் முறையே, 24,458 மற்றும் 54,251 குத்தகைதாரர்கள் உள்ளனர்.

**(ஆ) வருவாய் நீதிமன்றம்:**

நிலக் குத்தகை நிலுவைத் தொகைகள் வசூலிப்பது தொடர்பான வழக்குகளை விசாரிக்கவும், நிலுவைகளை வசூலிக்கவும், நியாய வாடகை



2002 ஏப்ரல் 30]

நிர்ணயம் செய்யவும், குத்தகைதாரர்களை வெளியேற்றவும் தனித் துணை ஆட்சியர் தலைமையில் வருவாய் நீதிமன்றங்கள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

1. தஞ்சாவூர்
2. திருச்சிராப்பள்ளி
3. மயிலாடுதுறை
4. திருவாரூர்
5. கடலூார்
6. மதுரை

மேலும், கீழக்கண்ட இடங்களில் வருவாய் அமர்வு நீதிமன்றங்கள் உள்ளன:—

1. மன்னார்குடி
2. கும்பகோணம்
3. சேலம்

வருவாய் நீதிமன்றங்களில் ரூ.38.01 கோடி குத்தகைத் தொகை பாக்கியை உள்ளடக்கிய மொத்தம் 17,874 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, 1,598 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.1.09 கோடி குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. 16,276 வழக்குகள் வருவாய் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.

**(இ) நியாய வாடகை நிர்ணயம்:**

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டடங்களுக்கான வாடகை குறைந்தது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையேனும் ஆணையரால் அமைக்கப்பட்டுள்ள குழுவினால் திருத்தியமைக்கப்பட வேண்டும். அரசாணைப்படி, நிலத்தின் சந்தை மதிப்பு மற்றும் கட்டடத்தின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். 4-6-1999-ல் நியாய வாடகை நிர்ணயம் செய்வதற்கான கணக்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. அந்த ஆணை 27-4-2000-ல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் மேற்கண்ட 27-4-2000 தேதிய ஆணை

மறுபரிசீலனை செய்யப்பட்டு, 1-11-2001 முதல் அமல்படுத்த ஆணையிடப்பட்டது. இதன் மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள், மனைகள் ஆகியவற்றிலிருந்து கூடுதல் வருவாய் கிடைக்கப்பெறும் நியாய வாடகை நிர்ணயம் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திருக்கோயில் திருப்பணி:**

தமிழ்நாட்டில் ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடிப் போற்றப்பட்ட புகழ்மிகு புனிதத் திருத்தலங்கள் பல உள்ளன. இவற்றையும், வரலாற்று முக்கியத்துவம் மற்றும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்களையும், நன்முறையில் பேணிப் பாதுகாத்துவர அவற்றிற்குத் திருப்பணி செய்வது இன்றியமையாததாகும். மேலும் வேறு சில முக்கியமான திருக்கோயில்களுக்கும் திருப்பணி மேற்கொள்ள வேண்டும். திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்தல், அவற்றிற்குப் பழுதுபார்த்தல் ஆகியவை பின்வரும் நிதியாதாரங்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன:—

(அ) பொது மக்கள் அளிக்கும் நன்கொடை:

சேவை மனப்பான்மை உள்ள நன்கொடையாளர்கள், தொழில் அதிபர்கள், பொறுப்பாட்சி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் தாமாக முன்வந்து அளிக்கப்படும் தொகை அல்லது பொருட்களைக் கொண்டு திருப்பணிகள் செய்யப்படுகின்றன.

(ஆ) உபரி நிதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் நிதி:

நிதி வசதி தேவையுள்ள திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டப் பிரிவு 36-ன்கீழ் ஆணையரின் அனுமதியுடன் வசதி மிகுந்த திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும் உபரி நிதி மூலம் திருப்பணி செய்யப்படுகின்றது.

(இ) அரசு மானியம்:

ஒவ்வோர் ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், பழுதுபார்த்தலுக்காகவும் இத்துறை வரவு-செலவுத் திட்டத்தின்மூலம் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதுதவிர, இத்துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின்





திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(ஈ) பொது நல நிதி:

சமய நிறுவனங்களால் அல்லது தனி ஒருவரால் தானாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு பொது நல நிதி ஒன்று ஏற்படுத்த ஆணையருக்குத் தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறக்கொடைகள் சட்டம் பிரிவு 97 வழிவகை செய்துள்ளது. இந்நிதி வைப்பீடு செய்யப்பட்டு, அதன் மூலம் பெறும் வட்டியிலிருந்து திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கும், பேணிக் காத்தலுக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டு 22 திருக்கோயில்களுக்கு ரூ.43.15 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) ஆலய மேம்பாட்டு நிதி:

வசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ. 5 கோடி பெறப்பட்டு இவ்வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டது. இவ்வைப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையினைக்கொண்டு அரசின் முன் அனுமதி பெற்று பழமை வாய்ந்ததும், சரித்திர முக்கியத்துவம் பெற்றதும், பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப் பெற்றதுமான திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதி ஆணையரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் 7 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.23.37 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஊ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி:

(i) நமது கலாச்சார மரபுரிமையைக் கட்டிக் காக்க வேண்டும் என்னும் நோக்கில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து ரூ.1,08,000-ஐ அளித்து "முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை 5-8-1991-ல் உருவாக்கினார்கள். மேலும் இந்நிதிக்கு, தொண்டுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் நன்கொடைகள் பெறப்பட்டன. பின்பு இந்நிதி "திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ii) ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற, பாடல் பெற்ற, வரலாற்றுப் பெருமை வாய்ந்த,

[2002 ஏப்ரல் 30

தொன்மையான கலைச் சிறப்புகள் மிக்க திருக்கோயில்களின் திருப்பணிக்கு இந்நிதியிலிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது. 77 திருக்கோயில்களின் திருப்பணிக்கு 1992 சனவரி முதல் 2001 சனவரி வரை ரூ.366.89 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு 5 திருக்கோயில்களின் திருப்பணிக்கு ரூ.78.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(iii) மேலும், ஒரு கால பூசை வைப்பு நிதி ஏற்படுத்த, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1300 வீதம் இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2001 சனவரி மாதம் வரை 8210 திருக்கோயில்களுக்கு ரூ.186.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு 2,000 திருக்கோயில்களுக்கு ரூ. 26.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(iv) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இந்நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வைப்பு நிதி ஏற்படுத்தி, அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஆண்டுதோறும் ரூ.14 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

(v) மேலும் இத்துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்காக, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் நிதியுதவி இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 50 திருக்கோயில்களின் திருப்பணிக்கு மொத்தம் ரூ.12.50 இலட்சம் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு ரூ.12.50 இலட்சம் 50 திருக்கோயில்களின் திருப்பணிக்காக வழங்கப்பட்டுள்ளது.

(vi) சேலம் மாவட்டம், தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குப் புதிய மரத்தேர் செய்ய ரூ.25.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது

**திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் செய்தல்:**

(i) ஆகம விதிகளின்படி ஒவ்வோர் திருக்கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பாபிஷேகம் நடத்தப்பட வேண்டும். பொதுவாக திருக்கோயில்கள் கீழ்க்கண்டவாறு மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு திருப்பணிகள் நடத்தப்படுகின்றன:—



2002 ஏப்ரல் 30]

1. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற மற்றும் நாயன்மார்களால் பாடப்பெற்ற திருக்கோயில்கள்.

2. சரித்திரப் புகழ்பெற்ற மற்றும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த திருக்கோயில்கள்.

3. உடனடியாகத் திருப்பணி செய்யவேண்டியதும், ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்குள் கும்பாபிஷேகம் செய்யவேண்டியதுமான திருக்கோயில்கள்.

(ii) தமிழகத்தில் நாயன்மார்களால் பாடப் பெற்ற திருக்கோயில்களும், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திருக்கோயில்களும் பழமையான மற்றும் பெரிய திருக்கோயில்களும் பெருமளவில் உள்ளன. தவிர, தமிழ்நாட்டில் கலை மற்றும் கலாச்சாரப் பெட்டகமாக விளங்கும் மேற்கண்ட பழமையான திருக்கோயில்களில் திருப்பணி செய்யவேண்டிய அனைத்தையும் வருகின்ற மூன்றாண்டுகளுக்குள் செய்து, குடமுழுக்கு நடத்திடும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டு 711 திருக்கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

**மழை நீர் சேகரித்தல் மற்றும் திருக்குளங்கள் திருப்பணி:**

மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டங்களில் ஒன்றான மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்கீழ் வரும் திருக்கோயில் திருக்குளங்களில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான மொத்தத் திருக்குளங்களில் 534 திருக்குளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளன. மேற்படி திருக்குளங்களில் தெப்பத் திருவிழா நடத்துவதற்கும் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளவும் இவற்றைப் புதுப்பிக்கவேண்டியது அவசியமாகும். இத்திருக்குளங்களைப் புதுப்பித்தல் மற்றும் பேணுதலைக் கீழ்க்கண்ட வழிகளில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:—

(i) திருக்குளங்களில் உள்ளும் புறமும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.

[2002 ஏப்ரல் 30

(ii) திருக்குளங்களைச் சுற்றி வேலி அல்லது சுற்றுச்சுவர் அமைத்தல்.

(iii) தூர் எடுத்தல் மற்றும் ஆழப்படுத்துதல்.

(iv) திருக்குளங்களுக்கு மழை நீர் வருவதற்கு வழி ஏற்படுத்துதல்.

(v) திருக்குளங்களில் உள்ள படிகளைப் பழுதுபார்த்தல். 2001-2002 ஆம் ஆண்டு 62 திருக்குளங்கள் பழுதுபார்க்கப்பட்டன. மேலும் இதர திருக்குளங்களைப் பழுதுபார்க்கவும் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திருத்தேர்களைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக 515 மரத்தேர்கள் உள்ளன. அவற்றில் 91 திருத்தேர்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்தேர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தீப்பிடிக்காத தகடுகளால் கூரை, இரும்பு அச்சு மற்றும் சக்கரம், பேணுதல் ஆகிய பராமரிப்பு ஏற்பாடுகள் செய்யவும், திருத்தேர்களின் மதிப்பிற்குரிய காப்பீடுகள் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் 29 திருக்கோயில்களின் திருத்தேர்கள் பழுது நீக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**பக்தர்களுக்கு வசதிகள்:**

(அ) திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி:

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் திருக்கோயில்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 647 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) கழிப்பிட வசதி:

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகள் பயன்படுத்தும் வண்ணம் நவீனக் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கவும், ஆண்கள், பெண்களுக்கென தனித்தனியாக வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டு



2002 ஏப்ரல் 30]

இத்திட்டத்தின்படி 399 திருக்கோயில்களில் இவ்வசதி செய்யப்பட்டுள்ளது.

(இ) குடில்கள், அறைகள், பொருள்கள் பாதுகாப்பு அறை போன்ற வசதிகள்:

திருக்கோயில்களுக்கு வரும் சேவார்த்திகளின் தேவைக்கேற்ப போதிய அளவில் தங்குவதற்குத் தேவையான குடில்கள், அறைகள் மற்றும் பொருள் பாதுகாப்பு அறை மற்றும் வாகனங்கள் நிறுத்துமிட வசதிகள் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஒரு கால பூசைத் திட்டம்:**

ஒரு கால பூசைகூட முறையாக நடத்திட இயலாத நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு ஒரு கால பூசையினை முறைப்படி நடத்திட இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பொது மக்களை ஈடுபடுத்தும் நோக்கில் பொதுமக்கள் நன்கொடையாக ரூ.2,500 ஒரு திருக்கோயிலுக்கு அளித்தால், நிதி வசதியுள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து ரூ.20,000-மும், திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதியிலிருந்து ரூ.1,300-ம், ஆலய மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1,200-ம் வழங்கி அத்திருக்கோயிலின் பெயரில் ரூ.25,000 நிரந்தர முதலீடு செய்யப்படும். அம்முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து நாள்தோறும் ஒரு கால பூசை நடைபெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி 2001 பிப்ரவரி வரை மொத்தம் 8,242 திருக்கோயில்கள் பயனடைந்து வருகின்றன. ஒரு கால பூசைகூட நடத்த இயலாமல் உள்ள திருக்கோயில்கள் கண்டறியப்பட்டு அத்தகைய அனைத்து திருக்கோயில்களிலும் ஒரு கால பூசை நடத்தப்பட வேண்டும் என இவ்வரசு முடிவு செய்தது. அதன் அடிப்படையில், நிதியுதவி வழங்கிடக் கேட்டு, நன்கொடையாளர்கள், தெய்வீக நெறியாளர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதங்கள் எழுதினார்கள். இதன் வழி இதுவரை ரூ.17.25 இலட்சம் வரப்பெற்று, திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 1000 திருக்கோயில்கள் பயனடைந்துள்ளன.

**உலோகத் திருமேனிகள் மற்றும் விலையுயர்ந்தவை பாதுகாப்பு:**

(i) திருக்கோயில்களில் நிகழ்ந்துள்ள களவுகளை அறிந்து அவை நடைபெறாமல் தடுக்கும் வண்ணம், இயன்ற அனைத்து

[2002 ஏப்ரல் 30

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள், கோள்சொல்லிக் கடிகாரம், தொட்டிப் பூட்டுகள், இரும்புக் கதவுகள் நிறுவுதல், இரவுக் காவலர்கள் நியமனம், முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்களைத் திருக்கோயில் பாதுகாப்புப் படை மூலம் நியமித்தல், உலோகத் திருமேனி மையங்கள் ஏற்படுத்துதல், கிராமப்புற விழிப்புக் குழு ஏற்படுத்துதல் போன்ற முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூர் காவல் துறை மற்றும் சிலைகள் பாதுகாப்புப் பிரிவு, திருக்கோயில்களில் நிகழும் களவுகளைக் கண்டறியும் பொறுப்பில் உள்ளது. இத்துறை கீழ்க்கண்ட இடங்களில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையங்களை ஏற்படுத்திப் பேணி வருகிறது:—

1. திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையம் (அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வளாகம்), திருவாரூர்.

2. அருள்மிகு அகிலாண்டேசுவரி உடனுறை ஜம்புகேஸ்வரர் திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

4. அருள்மிகு காந்திமதி உடனுறை நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

5. அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயில், சேலம்.

(ii) உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்களில் 3,042 உலோகத் திருமேனிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

(iii) மேலும், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், கும்பகோணம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் பாதுகாப்பு மையங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருக்கோயில் பாதுகாப்புப் படை:**

மாநிலம் முழுவதுமுள்ள திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள், உண்டியல்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் பாதுகாப்பிற்காக திருக்கோயில் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இதில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. காவல் துறையினரால் 889 இரண்டாம் நிலைக் காவலர்களும், 2,778 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம்



2002 ஏப்ரல் 30]

செய்யப்பட்டு அவர்கள் உள்ளூர் காவல் நிலையத்துடன் இணைக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இதுவரையிலும் 2674 திருக்கோயில்களில் பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ளனர்.

**கருணை இல்லங்கள்:**

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம், கல்வி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இயங்கும் திருக்கோயில்களில் கருணை இல்லங்கள் தொடங்கப்பட்டன. இத்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள 37 திருக்கோயில்களில் 42 கருணை இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அவற்றில் 894 சிறுவர்களும், 459 சிறுமியர்களும், ஆக மொத்தம் 1353 சிறார்கள் பயன்பெற்று வருகின்றனர். இக்கருணை இல்லங்களுக்கான செலவில் 50 விழுக்காடு அந்தந்தத் திருக்கோயில் நிதியிலிருந்து செலவிடப்படுகிறது. எஞ்சிய 50 விழுக்காடு நிதியுதவியை சமூக நலத் துறை வழங்குகின்றது.

**திருக்கோயில்களால் நடத்தப்படும் கல்வி மற்றும் பிற நிறுவனங்கள்:**

பொதுக் கல்வி அளிப்பதோடு, தெய்வ நெறிகளைக் கடைப்பிடிக்கத் தேவையான கட்டுப்பாட்டினையும், கலாச்சாரம் மற்றும் சமயக் கோட்பாடுகளையும் இளமையிலிருந்தே பயிற்றுவிக்கும் சமூக நோக்கோடு திருக்கோயில்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளைப் பேணி வருகின்றன. அவற்றின் விவரம் கீழ்வருமாறு:—

**(அ) கல்வி நிறுவனங்கள்:—**

| | | |
|---|---|---|
| 1. | கல்லூரிகள் | 5 |
| 2. | தொழில்நுட்பப் பயிலகங்கள் | 2 |
| 3. | மேல்நிலைப் பள்ளிகள் | 12 |
| 4. | உயர்நிலைப் பள்ளிகள் | 10 |
| 5. | நடுநிலைப் பள்ளிகள் | 3 |
| 6. | ஆரம்பப் பள்ளிகள் | 10 |
| 7. | மெட்ரிகுலேஷன் பள்ளி | 1 |
| 8. | நாதசுரம் மற்றும் தவில் பள்ளிகள் | 4 |
| 9. | வேத ஆகமப் பாடசாலைகள் | 4 |
| 10. | தேவாரப் பாடசாலைகள் | 2 |

| | | |
|---|---|---|
| 11. | திவ்யப்பிரபந்த பாடசாலைகள் | 3 |
| 12. | காது கேளாதோர்-பேச இயலாதோர் பள்ளி | 1 |

(ஆ) சமூக நல நிறுவனங்கள்:—

| | | |
|---|---|---|
| 1. | சித்த வைத்தியசாலைகள் | 9 |
| 2. | கருணை இல்லங்கள் | 42 |
| 3. | முதியோர் இல்லங்கள் | 3 |
| | மொத்த நிறுவனங்கள் | 111 |

**இலவசத் திருமணம்:**

சமுதாயத்தில் நலிவுற்ற ஏழை, எளிய மக்களுக்கு, வசதிமிக்க திருக்கோயில்கள் சார்பாக இலவசத் திருமணங்கள் நடத்திட திட்டம் ஒன்று செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருமணம் ஒன்றுக்கு ரூ.3000 செலவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்டுதோறும் இலவசத் திருமணங்கள் நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் நடத்தப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் 132 திருமணங்கள் நடத்தப்பட்டன.

**தமிழில் வழிபாடு:**

திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதை நெறிப்படுத்துவதற்கும் மற்றும் ஊக்கப்படுத்துவதற்கும் 108 மற்றும் 1008 போற்றி அர்ச்சனை நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**சேக்கிழார் விழா:**

தெய்வப் புலவர் சேக்கிழார் விழா ஆண்டுதோறும் நடைபெற ஏதுவாக ரூபாய் ஐந்து இலட்சம் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து மூலதனம் ஏற்படுத்தப்பட்டது. அம்முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித் தொகையைக்கொண்டு சேக்கிழார் விழா ஆண்டுதோறும் சிறப்புற நடத்தப்பட்டு வருகிறது.

**திருஞானசம்பந்தர் இசை விழா:**

சமயக்குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் நினைவைப் போற்றும் வகையில் "திருஞானசம்பந்தர் இசை விழா" இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீசுவரர் திருக்கோயிலில் 2001 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று



வருகிறது. இவ்விழாவிற்கான செலவுத் தொகை "ஆணையர் பொது நல நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகிறது.

**தமிழ்ப் பெருமாட்டியார் அவ்வை விழா:**

தமிழ்ப் பெருமாட்டியார் அருள்மிகு அவ்வையார் திருக்கோயில், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், துளசியாபட்டினம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ளது. மேற்படி கிராமத்தில் "அவ்வை விழா" நடத்த இத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பழனியில் கம்பி வட ஊர்தி அமைத்தல்:**

பழனி திருக்கோயிலுக்கு வருகை புரியும் பெருவாரியான பக்தர்களில் மலை உச்சி வரை நடக்கவியலாதோரின் நீண்ட நாள் கோரிக்கையான "கம்பி வட ஊர்தி" அமைத்தல் பணியினை நிறைவேற்ற இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுகுறித்து "அலுவலர் குழு" ஒன்று நியமிக்கப்பட்டு, அக்குழு தனது அறிக்கையினைச் சமர்பித்துள்ளது. தற்போது மேற்படி பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகளை முடிவுசெய்யும் பொருட்டு "ஒப்பந்தப் புள்ளிகள் தீர்வுக் குழு" அமைக்கப்பட்டு, விரைவில் முடிவு செய்யவுள்ளது. மேற்படி முடிவு கிடைத்தவுடன் கம்பி வட ஊர்தி நிர்மாணப் பணி துவக்கி, அதிவிரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பழனியில் கிரிவலப் பாதை அமைத்தல்:**

திருவண்ணாமலை திருக்கோயிலில் உள்ளதைப் போலவே, பழனி திருக்கோயிலிலும் சேவார்த்திகளின் புனிதக் கடப்பாட்டினை நிறைவேற்ற, நீண்ட நாளைய விருப்பத்திற்கேற்ப கிரிவலப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

**செயல் அலுவலர்களாக மகளிர்:**

திருக்கோயில்களில் செயல் அலுவலர்களாக மகளிர் நியமிக்கப்படுவதைத் தவிர்த்திடும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சார்நிலைப் பணிகளின் சிறப்பு விதிகளில் தக்க திருத்தம் செய்யப்பட்டது. இத்திருத்த விதிகளின்படி இதுவரையிலும் செயல் அலுவலர்களாக மகளிர் நியமனம் செய்யப்படவில்லை. தற்போதுள்ள மாறிய சூழ்நிலைக்கேற்ப செயல் அலுவலர்களாக மகளிர்

நியமிக்கப்படுவதைத் தவிர்த்திடத் தெரிவிக்கப்பட்ட காரணங்களை விரிவாகப் பரிசிலித்து, அவை நடைமுறைக்கு ஏற்றதாகயில்லை என்ற நிலையில் செயல் அலுவலர்களாக மகளிரைத் திருக்கோயில்களில் நியமிக்க இவ்வரசு முடிவு செய்து, மேலே கண்ட விதிகளில் திருத்தம் நீக்கப்பட்டுள்ளது.

**தல வரலாறு மற்றும் தல புராணம்:**

திருக்கோயில்களின் சிறப்புகள், பெருமைகள், வரலாற்று முக்கியத்துவங்கள், கல்வெட்டுச் செய்திகள் மற்றும் புராண வரலாறுகள் ஆகியவற்றை மக்கள் அறியும் வண்ணம் திருக்கோயில்களில் தல வரலாறுகள் மற்றும் தல புராணங்கள் வெளியிடப்படுகின்றன. இதுவரை 1,711 தல வரலாறுகளும், 9 தல புராணங்களும், 2 பிள்ளைத் தமிழ் மற்றும் 2 கலம்பக நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் தல வரலாறு மற்றும் தல புராண நூல்களை வெளியிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டு 249 தல வரலாறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆகம மற்றும் இதர நூல்கள் தமிழில் வெளியிடுதல்:**

(i) வடமொழியில் உள்ள ஆகம சாஸ்திரங்களைத் தமிழில் அறியும் வண்ணம் முதற்கட்டமாக "உத்ரகாமிக ஆகம நூல்" தமிழில் மொழிபெயர்ப்பு செய்து வெளியிடப்பட்டது. பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்நூல் விரைவில் மறு பதிப்பு செய்யப்படவுள்ளது.

(ii) "ஆலய நிர்மாண பிம்ப லட்சண சிற்ப நூல்" தமிழில் அச்சில் உள்ளது; இது விரைவில் வெளியிடப்படும்.

(iii) "பூசாரிகள் வழிபாட்டுப் பயிற்சி நூல்" மற்றும் "குமார தந்திரம்" என்னும் நூல்கள் தமிழில் அச்சிடும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் வெளியிடப்படவுள்ளன.

(iv) "இந்து மத இணைப்பு விளக்கம்" மற்றும் "சைவமும் வைணவமும்" எனும் நூல்கள் மறு பதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**"திருக்கோயில்" இதழ் வெளியிடுதல்:**

1958 ஆம் ஆண்டு முதல் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையால் "திருக்கோயில்" என்ற பெயருடைய தமிழ் திங்கள் இதழ்





வெளியிடப்படுகிறது. இவ்விதழில் சிறந்த அறிஞர்கள் தொடர்ந்து படைப்புகளை எழுதி வருகிறார்கள். இந்து மதத்தினுடைய பல்வேறு தத்துவங்களையும், கருத்துகளையும் பரப்புவதற்குத் "திருக்கோயில்" சிறப்புறச். செயலாற்றி வருகிறது. இவ்விதழுக்கான ஆண்டுச் சந்தா ரூ.60, ஆயுள் சந்தா ரூ.500 ஆகும். தற்போது 4000 பிரதிகள் வெளியிடப்படுகின்றன.

**பட்டயப் பொறியாளர் அங்கீகாரம்:**

திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்திட மதிப்பீடுகள் தயாரித்தளிப்பதில் தொய்வு ஏற்படுவதைக் கருத்தில்கொண்டு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற பொறியாளர்களைப் பட்டயப் பொறியாளர்களாக இத்துறை அங்கீகாரம் செய்கிறது. இதுவரை 71 பட்டயப் பொறியாளர்கள் அங்கீகாரம் பெற்றுள்ளனர். இத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் பொறியாளர்கள் திருக்கோயிலுக்குத் தேவையான மதிப்பீடுகளைத் தயார் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

**ஸ்தபதிகள் அங்கீகாரம்:**

திருக்கோயில்களில் திருப்பணி செய்யப்படும்போது திருக்கோயில் அமைப்பு முறை, ஆகம சாஸ்திரங்களின்படியும், கலை நுணுக்கத்தோடு உள்ள வேலைப்பாடுகளுடனும் அமைவதை உறுதி செய்யும் வகையில் ஸ்தபதிகள் உதவி புரிகின்றனர். கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் ஸ்தபதி ஆலோசகர் நியமிக்கப்பட்டு, மேற்கூறியவை பரிசீலிக்கப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றன. மதிப்பீடு தயாரிப்பதில் உதவி புரிய ஏதுவாக, சிற்பக் கலையில் பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பு பெற்றவர்களையும், வழிவழியாக இத்தொழிலில் ஈடுபட்டு அதன் வாயிலாகக் கற்றறிந்தோர்களையும் ஸ்தபதிகளாக அங்கீகாரம் செய்து திருப்பணி வேலைகளை ஊக்கப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஸ்தபதிகள் நியமனம்:**

ஆகம விதிமுறைகளின்படி வடிவமைப்பு மற்றும் மதிப்பீடுகளை உறுதி செய்ய கீழ்க்காணும் ஐந்து மண்டலங்களில் ஸ்தபதிகளை நியமனம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது. ஸ்தபதி ஒருவருக்குத் தொகுப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.4,000- வழங்கப்படும். இச்சம்பளச் செலவு நிதி வசதி மிக்க கீழ்க்காணும் திருக்கோயில்களிலிருந்து

[2002 ஏப்ரல் 30

வழங்கப்படும். துவக்கத்தில் இப்பணியிடம் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது.

| வ. எண் (1) | தலைமையிடம் (2) | இணை ஆணையர் பிரிவு (3) | சம்பளம் வழங்கும் திருக்கோயில் (4) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 1. சென்னை | 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி. |
| | | 2. வேலூர் | 2. அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு. |
| 2. | மதுரை | 1. மதுரை | 1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை. |
| | | 2. சிவகங்கை. | 2. அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம். |
| | | | 3. அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி. |
| 3. | திருச்சிராப்பள்ளி | 1. திருச்சிராப்பள்ளி | 1. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சமயபுரம். |
| | | 2. தஞ்சாவூர் | 2. அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம். |
| | | 3. மயிலாடுதுறை | |
| 4. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மருதமலை. |
| | | | 2. அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில், பண்ணாரி. |
| 5. | திருநெல்வேலி | திருநெல்வேலி | 1. அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர். |
| | | | 2. அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில், சங்கரன்கோயில். |



2002 ஏப்ரல் 30]

**சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து:**

வசதியுடைய திருக்கோயில்களில் ஆண்டுதோறும் சுதந்திரத் திருநாள் மற்றும் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் ஆகிய நாட்களில் அனைத்துச் சமுதாய மக்களும் ஏற்றத்தாழ்வு இன்றிப் பங்குபெறும் வகையில் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் ஆண்டில் 524 திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நடத்தப்பட்டன.

**அன்னதானத் திட்டம்:**

"தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்" என்பது நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற அருள்மொழிகளில் ஒன்றாகும்.

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே"

என்பது மணிமேகலை.

திருக்கோயில்களில் மதிய நேரத்தில் அருள்நிதி தேடிவரும் இறையன்பர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கும் உயரிய திட்டம் மேதகு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டது.

தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட 63 திருக்கோயில்களில் இத்திட்டம் நடைமுறைக்கு வர, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 23-3-2002 அன்று, சென்னை, மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் இப்புனிதத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

நமது நாட்டின் கலை, பண்பாடு, மரபு, சமூக வரலாறு, தொன்மை ஆகியவற்றின் கருவூலங்களாக விளங்கிக்கொண்டிருப்பவை திருக்கோயில்களாகும். இன்றைய இளம் தலைமுறையினரிடையே நல்ல பண்புகளையும், நாட்டின் பழம்பெருமையையும் வளர்ப்பதற்குத் திருக்கோயில்கள் பயன்பட வேண்டும் என்ற கருத்தினை உள்ளடக்கி, தெரிவு செய்யப்பட்ட அனைத்துத் திருக்கோயில்களிலும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறிகளைக் குழந்தைகளுக்குக் கற்பிக்க ஒரு மணி நேரம் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

[2002 ஏப்ரல் 30

**திருக்கோயில் நிலங்களில் மரங்கள் வளர்த்தல்:**

மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தின் மூலமாக அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் இலட்சியத்தின்படி திருக்கோயில் நிலங்களில் மரக்கன்றுகளை நடுவதற்கும், வளர்ப்பதற்கும் இத்துறை திட்டமிட்டுள்ளது.

**புத்தொளிப் பயிற்சித் திட்டம்:**

திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் ஓதுவார்கள் தங்கள் பணிகளைத் திறம்படச் செய்ய ஏதுவாக 1991 ஆம் ஆண்டு "புத்தொளிப் பயிற்சித் திட்டம்" தொடங்கப்பட்டு செம்மையுற நடைபெற்று வந்தது. கடந்த ஆண்டுகளில் தொய்வு ஏற்பட்டதை நிவர்த்தி செய்து, இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்க முடிவு செய்யப்பட்டது. புத்தொளிப் பயிற்சித் திட்டம் நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2001-2002 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 3 மாத புத்தொளிப் பயிற்சித் திட்டம் 54 திருக்கோயில்களில் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | பயனடைந்தோர் வகை | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓதுவார் | 85 |
| 2 | அர்ச்சகர் (சைவம்) | 941 |
| 3 | பட்டாச்சாரியார்கள் (வைணவம்) | 330 |
| | மொத்தப் பயனாளிகள் | 1356 |

**திருக்கோயில்களில் நாதசுர இசைப் பணியாளர்கள் நியமனம்:**

நிதி வசதி இல்லாத காரணத்தால் பாடல் பெற்ற மற்றும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற வரலாற்றுப் புகழ்வாய்ந்த பழமையான



2002 ஏப்ரல் 30]

பல திருக்கோயில்களில் கால பூசை மற்றும் திருவிழாக்களின்போது நாதசுர இசை இசைக்கப்படுவது குறைந்து வருவதைக் கருத்தில்கொண்டு நாதசுரம், தவில் மற்றும் தாள இசைக் கலைஞர்களை நியமனம் செய்து, முறையே ரூ.1500/-, ரூ.1000/- மற்றும் ரூ.750/- வீதம் மாத ஊதியம் துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென ரூபாய் ஒரு கோடி மூலதன முதலீடு செய்யப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் மாத ஊதியங்கள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 11 நபர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**தமிழ்ப் புலவர்கள் நியமனம்:**

நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் திருமுறை, திவ்யப்பிரபந்தங்கள் பாடுதல், முற்றோதல் செய்தல், சொற்பொழிவுகள் செய்தல், சமயக் கருத்துகளைப் பரப்புதல், தல வரலாறு, தல புராணம் வெளியிட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நூல் நிலையம் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக 150 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அப்புலவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1500 தொகுப்பு ஊதியமாக திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

**கிராமக் கோயில் பூசாரிகள் ஓய்வூதியத் திட்டம்:**

தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயதினை அடைந்து ஓய்வு பெற்ற பூசாரிகளுக்கு நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500/-வீதம் ஓய்வூதியம் வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவோர் விவரம் பின்வருமாறு:—

| அனுமதிக்கப்பட்ட ஆண்டு | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | ஓய்வூதியம் பெறுவோர் |
|---|---|---|
| 2000-2001 வரை | 1500 | 1418 |
| 2001-2002-ல் | 1000 | 366 |
| மொத்தம் | 2500 | 1784 |

**திருக்கோயில் பணியாளர்கள்:**

தமிழ்நாடு முழுவதும் உள்ள இந்து சமய அறநிலையங்களில் 37,815 முழு நேரப் பணியாளர்கள் பல்வேறு பதவித் தரங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்குத் தொகையாகவோ அல்லது பொருளாகவோ அல்லது இரண்டு வகைகளிலுமோ சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மொத்தப் பணியாளர்களில் 4715 பணியாளர்கள், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் நிலைகளில் உள்ள செயல் அலுவலர்கள் மேலாண்மையில் உள்ள நிதி வசதி மிக்க திருக்கோயில்களில் முழு நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களுக்குக் கீழ்க்கண்ட வகையிலான நலத் திட்டங்கள் அமல்படுத்தப்பட்டுள்ளன:—

(1) பங்குத் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதி:—

ஆண்டு வருமானம் ரூ.10,000/-மும், அதற்கு மேலும் உள்ள ஒவ்வொரு அறநிலையமும் பணியாளர்களின் நலனை முன்னிட்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் சந்தாதாரர்கள் அவர்கள் பெறும் மொத்தச் சம்பளத்தில் 12 விழுக்காட்டிற்குக் குறையாமல் சந்தாத் தொகை செலுத்த வேண்டும். திருக்கோயிலிலிருந்து 12 விழுக்காடு தொகை சந்தாதாரர் கணக்கில் செலுத்தப்படும்.

(2) குடும்ப நல நிதி:—

பணியிலிருக்கும்போது மரணமடையும் திருக்கோயில் பணியாளரது குடும்பத்திற்கு உதவும் பொருட்டு இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.75,000/- உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்கென உபரி நிதி மிக்க திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம் மூலம் ரூபாய் ஐந்து கோடி மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும்





வட்டித் தொகையைக்கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் 133 குடும்பங்களுக்கு ரூ.66.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(3) சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்:—

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சமும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குச் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென ரூபாய் எட்டு இலட்சம் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பணியாளர் ஓய்வுபெறும்போது அவர் செலுத்திய உறுப்பினர் கட்டணத் தொகை திருக்கோயில் மூலம் வட்டியுடன் வழங்கப்படுவதுடன் துறை மூலம் ரூ.1000/-மும் வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் 71 பணியாளர்களுக்கு ரூ.0.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(4) ஆலயப் பணியாளர்கள் நல நிதி:—

ஆண்டு வருமானம் ரூ.40,000/-க்கும் குறைவாக உள்ள திருக்கோயில்களில், மாத ஊதியம் ரூ.400/-க்கும் குறைவாகப் பெறும் பணியாளர்களுக்குச் சம்பள நிலுவை ஏற்படின் அப்பணியாளர்களுக்குத் துறை மூலம் சம்பள நிலுவைத் தொகை வழங்கிட ஆலயப் பணியாளர்கள் நல நிதித் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அம்மூலதனத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக்கொண்டு இத்திட்டம் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 446 திருக்கோயில்களில் பணிபுரியும் 729 பணியாளர்களுக்கு ரூ.14.87 இலட்சம் சம்பளப் பாக்கி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(5) ஓய்வூதியத் திட்டங்கள்:— [2002 ஏப்ரல் 30

ஓதுவார்கள், அர்ச்சகர்கள் ஏனையோர்:

திருக்கோயில்களில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து 60 வயது நிறைவடைந்து ஓய்வுபெற்ற அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர்கள், அரையர்கள், திவ்யப்பிரபந்தம் பாடுவோர் மற்றும் இசைக் கலைஞர்கள் போன்றோருக்கு அரசு நிதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.500/- இத்துறை மூலம் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி கீழ்க்காணும் விவரப்படி ஓய்வூதியம் வழங்கப்படுகிறது:—

அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை:

| அனுமதிக்கப்பட்ட ஆண்டு | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலைஞர்கள் | அர்ச்சகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2000-2001 வரை | 117 | 43 | 100 | 591 | 851 |
| 2001-2002-ல் | 8 | 16 | 25 | 100 | 149 |
| மொத்தம் | 125 | 59 | 125 | 691 | 1000 |

ஓய்வூதியம் பெறுவோர்:

| அனுமதிக்கப்பட்ட ஆண்டு | ஓதுவார் | வேதம்/ பிரபந்தம்/ அரையர் | இசைக் கலைஞர்கள் | அர்ச்சகர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2000-2001 வரை | 117 | 43 | 99 | 591 | 850 |
| 2001-2002-ல் | 6 | 1 | — | 46 | 53 |
| மொத்தம் | 123 | 44 | 99 | 637 | 903 |

(6) கருணைக் கொடை:

திருக்கோயில்களில் நடைபெறும் கும்பாபிஷேகம் மற்றும் திருவிழாக் காலங்களில் சிறப்புப் பணியாற்றும் திருக்கோயில் பணியாளர்கள் ஒவ்வோர் ஆண்டும் கருணைக் கொடை தொகுப்புத் தொகையாகப்



பெற்று வந்தார்கள். 2001-2002 ஆம் ஆண்டில் இக்கருணைக் கொடை திருக்கோயில் பணியாளர்களின் ஒரு மாத அடிப்படைச் சம்பளமாக உயர்த்தப்பட்டது.

(7) திருமண முன்பணம்:

திருக்கோயில் பணியாளர்களின் மகன் மற்றும் மகள் திருமணத்திற்கென முறையே ரூ.6,000/- மற்றும் ரூ.10,000/- திருமண முன்பணமாக வழங்கப்படுகிறது.

(8) வாகன முன்பணம்:

தகுதி வாய்ந்த திருக்கோயில் பணியாளர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வாங்க ரூ.20,000/- முன்பணம் வழங்கப்படுகிறது.

(9) மருத்துவப்படி:

திருக்கோயில் பணியாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

(10) சலவைப்படி:

திருக்கோயில் சீருடைப் பணியாளர்களுக்கு சலவைப்படியாக மாதம் ஒன்றுக்கு ரூ.10/- வழங்கப்படுகிறது.

(11) பண்டிகை முன்பணம்:

பண்டிகை முன்பணமாக ரூ.1,000/-வழங்கப்படுகிறது.

(12) விடுப்புச் சலுகை:

(அ) ஈட்டிய விடுப்பு:

திருக்கோயில் பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு 30 நாட்கள் ஈட்டிய விடுப்பு சேமிக்கவும், அதில் ஆண்டொன்றுக்கு 15 நாட்களை ஒப்படை செய்து அதற்குரிய சம்பளம் பெறவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மருத்துவ விடுப்பு:

திருக்கோயில் பணியாளர்கள் அவர்களது மொத்தப் பணிக்காலத்தில் 240 நாட்கள் மருத்துவ விடுப்புப் பெறத் தகுதியுள்ளவர்கள்.

(இ) மகப்பேறு விடுப்பு:

திருக்கோயில்களில் உள்ள பெண் பணியாளர்களுக்கு 60 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது.

(ஈ) ஓய்வு பெறும்போது ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்தல்:

திருக்கோயில் பணியாளர்கள் ஓய்வுபெறும்போது அவர்களது ஈட்டிய விடுப்பிலிருந்து 60 நாட்களை ஒப்படைப்பு செய்து அதற்குரிய சம்பளம் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது.

(13) வீட்டு வாடகைப்படி:

திருக்கோயில் பணியாளர்களுக்கு அவர்களது சம்பள விகிதம் மற்றும் பணிபுரியும் இடத்திற்கேற்ப வீட்டு வாடகைப்படி அனுமதிக்கப்படுகிறது.

(14) தட்டச்சர்களுக்கான சிறப்பூதியம்:

திருக்கோயில்களில் பணிபுரியும் தட்டச்சர்களுக்கு, ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் முதுநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.80/- வீதமும், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் ஒன்றில் முதுநிலை, மற்றொன்றில் இளநிலை தட்டச்சுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருப்பின் மாதம் ஒன்றுக்கு ரூ.60/-வீதமும் சிறப்பூதியம் வழங்கப்படுகிறது.

(15) தொகுப்பு ஊதியம் பெறுவோர்க்கு சம்பள உயர்வு:

திருக்கோயில்களில் தொகுப்பூதிய முறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 30 சதவிகித சம்பள உயர்வு வழங்கப்படுகிறது.

(16) நகர ஈட்டுப்படி:

இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் நிலையில் செயல் அலுவலர்கள் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் இதர திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், முறையே நகர ஈட்டுப்படி மற்றும் கிராமப்படி வழங்கப்படுகிறது.



(17) தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை:

15-10-1997 அன்றும், அதற்குப் பின்னும் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் ஒரே பதவியில் பணிபுரிந்துள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு, முறையே தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை சம்பள விகிதம் வழங்கப்பட்டு வருகிறது.

(18) கருணை அடிப்படையில் நியமனம்:

திருக்கோயில்களில் பணியாற்றும்போது இறந்து போகின்ற திருக்கோயில் பணியாளர்களின் சட்டரீதியான வாரிசுதாரர்களுக்கு உதவிடும் முகத்தான் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் 27 திருக்கோயில் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**நிறைவுரை:**

தமிழ்நாட்டின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் கட்டிக்காக்கும் எண்ணிலடங்காத் திருக்கோயில்கள், கட்டடக் கலையின் நுட்பத்தையும், சிற்பக் கலையின் எழிலையும், வரலாற்றின் தொன்மையையும் மனித சமுதாயத்திற்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அனைத்து மக்களும் ஒருங்கே கூடி ஆண்டவனைத் தரிசித்து அருள்பெறும் அமைதியின் சின்னமாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. தன்னேரில்லாத தமிழ் என்று தரணியெல்லாம் போற்றப்படும் நமது தமிழ் மொழியின் இலக்கிய மாட்சிமைக்கு மகுடம் சேர்த்த பக்தி இலக்கியங்களில் போற்றிக் கூறப்பட்டிருப்பதும், பாடப்பட்டிருப்பதும் திருக்கோயில்களே. மொத்தத்தில் அறநெறியைப் போற்றும் தமிழக மக்களின் அன்றாட வாழ்க்கையில் பின்னிப் பிணைந்து இருக்கும் கலாச்சாரச் சின்னங்களாகிய திருக்கோயில்களைப் பாதுகாக்கும் பெரும்பணியைச் சிறப்புறச் செய்து தமிழ்நாட்டில் தெய்வீகச் சூழ்நிலையைத் திருக்கோயில்கள் வழியாக உருவாக்க இத்துறை இடையறாது பாடுபடும்.

[2002 ஏப்ரல் 30

# இணைப்பு III

(181 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மானியக் கோரிக்கை எண் 25 கொள்கை விளக்கக் குறிப்பு, 2002-2003

### 1. முன்னுரை

1.1. தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளை மேற்கொண்டுள்ளது. தமிழக அரசின் இக்குறிக்கோளை நிறைவு செய்யும் வண்ணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மற்றும் அதன் சார்புச் சங்கங்கள் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுக்கு தகுந்த வீடுகள் மற்றும் வீட்டுமனைகளை உருவாக்கித் தரும் திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்தி வருகின்றன.

1.2. அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக, குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டி செயல்படுத்தி வருகிறது. மேலும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் குறைந்த வாடகையில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்வதும் நடைமுறையில் உள்ளது.

1.3. தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டம் 1971-ஐச் செயல்படுத்துதல் நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும், மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான சுற்றுச்சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர்-ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற திட்டங்களைத் தயாரித்தல் நகர்-ஊரமைப்புச் சட்டத்தின் முக்கியக் குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

1.4. இந்தியாவிலுள்ள நகர்மயமான மாநிலங்களில், தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இம்மாநிலத்தில் 43.86 சதவிகித



2002 ஏப்ரல் 30]

மக்கள் நகர்ப்புறங்களில் வாழ்ந்து வருகிறார்கள். நகர்ப்புற மக்கள் தொகையில் 25 சதவிகித பகுதிக்கும் அதிகமானவர்கள் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வசிக்கின்றனர். இம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 10 விழுக்காடு இப்பெருநகர்ப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

1.5. நகர்மயமாக்கத்தின் தேசிய ஆணைக் குழு நாட்டிலுள்ள முன்னுரிமை நகரங்களில் ஒன்றாக, சென்னையை அங்கீகரித்துள்ளது. சென்னைப் பெருநகரின் முக்கியத்துவத்தினால், அது பெரியதாகவும் விரைவாகவும் வளரும் வாய்ப்புள்ளது. பொருளாதாரம், தாராளமயமாக்கப்பட்ட சூழ்நிலை மற்றும் தொழில் துறை வளர்ச்சியின் தனித்துவம், தொழில் துறையில் பன்னாட்டு நிறுவனங்களின் நுழைவினால் ஏற்பட்ட தற்போதைய நிலை ஆகியவற்றின் அடிப்படையில் சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியின் வேகம் மிக அதிகமாக இருக்கும். இந்த நிலையில் சென்னைப் பெருநகரப் பகுதியின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுகின்ற வகையில் திட்டமிடவும், திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், வளர்ச்சிக்கு வழிகாட்டவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைத்து, செயல்படுத்தி வருகிறது.

### 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளையும் நிறைவு செய்வது வீட்டு வசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனைத்து வருவாய்ப் பிரிவினருக்கும் வேண்டிய மேம்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மனைகளை வாங்கத்தக்க நிலையில் அளிக்கிறது.

### 2.1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சாதனைகள் :

கடந்த 41 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குவதிலும், வீடுகள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,93,082 மனைகள்/குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. இவற்றுள் 2,04,389, மேம்படுத்தப்பட்ட மனைகளாகும்; மீதமுள்ளவை

வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகும். மேற்குறிப்பிட்ட 2,04,389 மனைகளில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக உருவாக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 1,25,623 ஆகும். 1960-61 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் திட்ட முதலீடு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது.

## 2.2. தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழக அரசு அலுவலர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது. இதுவரை 29,055 குடியிருப்புகள் ரூ.268.88 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. தமிழக அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கு சிறப்புச் சீரமைப்புப் பணிகளுக்காக அரசு 2001-2002-ல் ரூ.13 கோடி அனுமதி அளித்து; சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டன. இப்பணிகள் இவ்வாண்டில் செய்து முடிக்கப்படும்.

## 2.3. குடிசை மாற்றுக் குடியிருப்புகள்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு வரை, 20,060 குடிசை மாற்றுக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. அவற்றுள் மாவட்டத் தலைநகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள 9,637 குடிசை மாற்றுக் குடியிருப்புகள் இதுவாறும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தாலேயே தற்சமயம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## 2.4. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக மேம்படுத்தப்பட்ட மனைகளில் இன்றைய தேதியில் சுமார் 8,600 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்குக் கிடைக்கின்றன. இவற்றுள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 6,860 மனைகளும், வாரிய நில வங்கித் திட்டத்தின்கீழ், 1,740 மனைகளும் உள்ளன.

மேற்படி மனைகளின் அளவு 350 சதுர அடியிலிருந்து 750 சதுர அடி ஆகும். இந்த வீட்டுமனைகள் நலிவுற்ற பிரிவினருக்கு மிகக் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. அவற்றின் விலை அவை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து, ரூ.4,300-லிருந்து ரூ.23,000 வரை



உள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு பெறுவதற்கான மாத வருமான வரம்பு கீழ்வருமாறு:

ஏ பிரிவிற்கு ரூ.920-ம் அதற்குக் குறைவாகவும்

பி பிரிவிற்கு ரூ.1,340-ம் அதற்குக் குறைவாகவும்

நில வங்கித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பெற மாத வருமானம் ரூ.2,100-க்குள்ளாகவும் இருக்க வேண்டும்.

## 2.5. குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான தகுதி பெற மாத வருமானம் ரூ.2,101-லிருந்து ரூ.4,500 வரை இருத்தல் வேண்டும். இக்குடியிருப்பிற்கான ஒதுக்கீடு பெற்றோர், மனையின் கிரயத்தில் 30 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாதத் தவணைகளில் செலுத்தலாம். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை 91,463 மனைகள்/குடியிருப்புகளை ரூ.148.36 கோடி செலவில் உருவாக்கியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 1,923 மனைகள்/வீடுகளை ரூ. 3.30 கோடி செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.6. நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்.

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்திற்குத் தகுதி பெற, மாத வருமானம் ரூ.4,501-லிருந்து ரூ.7,500 வரையில் இருத்தல் வேண்டும். இக்குடியிருப்பிற்கான ஒதுக்கீடு பெற்றோர், கிரயத்தில் 35 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாதத் தவணைகளில் செலுத்தலாம். இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 1752 மனைகள்/குடியிருப்புகளை ரூ.6.88 கோடி செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டத்திற்குத் தகுதி பெற, மாத வருமானம் ரூ.7,500-க்கு மேல் இருக்க வேண்டும். ஒதுக்கீடு பெற்றோர், இக்குடியிருப்புக்குரிய கிரயத்தில் 40 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள

தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாதத் தவணைகளில் செலுத்தலாம். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ரூ.961 கோடி செலவில் 1,20,094 மனைகள்/குடியிருப்புகளை நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர்களுக்கு உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003-ல் 988 மனைகள்/வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகளை ரூ.7 கோடி செலவில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு மற்றும் உயர் வருவாய்ப் பிரிவு ஒதுக்கீடுதாரர்கள், அவர்கள் விரும்பினால் மிகக் குறைந்த அளவான 15 சதவீதம் முன்பணம் செலுத்தவும், மீதமுள்ள தொகையை 15 ஆண்டு காலத்தில் சம மாதத் தவணைகளில் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்துபவர்கள் கூடுதலாக ஒரு சதவீத வட்டி செலுத்த வேண்டும்.

### 2.7. சிறிய மற்றும் நடுத்தர நகர்த் திட்டங்கள்

மாநிலம் முழுவதிலும் தெரிந்தெடுக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டம் 1990-91 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இம்மக்களின் வீட்டு வசதி தேவைகளின் அடிப்படையில் நில மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, இத்திட்டப் பகுதியில் வீடுகள் கட்டவும் கருதப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 68 நகரங்களில் 12,125 வீடுகளும், 11,176 மேம்படுத்தப்பட்ட மனைகளும் ரூ.218.85 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

### 2.8. சூரிய சக்தியை சேமித்துப் பயன்படுத்துதல் மற்றும் மழை நீரைச் சேகரித்தல்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சென்னைப் பெருநகர எல்லைக்குள், சமீப காலத்தில் செயல்படுத்தப்படும் தனது வீட்டு வசதித் திட்டங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளைக் கட்டாயமாக அமைத்து வருகிறது. இதுபோன்றே தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் வீட்டு வசதித் திட்டங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வாரியத்தின் திட்டங்களில் சூரிய சக்தியை, தகுந்த வகைகளில் சேகரித்து, தண்ணீரைச் சூடாக்குதல் போன்றவற்றிற்குப் பயன்படுத்த எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.



### 2.9. அபிவிருத்தி செய்யப்பட்ட மனை விரைவு ஒதுக்கீடு திட்டம்

மேதகு ஆளுநர் அவர்களின் 2001 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவை உரையில் அறிவிக்கப்பட்டுள்ள "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றும் முகத்தான் 1,384 மனைகள் இந்த ஆண்டில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒதுக்கீடு செய்யத் தயார் நிலையில் உள்ள 27,800 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை இந்த நிதியாண்டில் (2002-2003) விரைவு வீட்டுமனை ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்ய முனைப்பான விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

விரைவு வீட்டு மனை ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் 8 திட்டங்களில் நெடுங்காலமாக விற்கப்படாமல் உள்ள மனைகளைப் பொது ஏலத்தில், இவற்றிற்கு முதன் முதலில் நிர்ணயித்த விலையையே குறும விலையாகக் கொண்டு, விற்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மனைகளுக்கான விலையிலிருந்து வட்டி முதலாக்கம் நீக்கப்படும்.

### 2.10. தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சி

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து கூட்டு முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. சோழிங்கநல்லூரில் நில மேம்பாட்டுத் திட்டத்தில் மேம்படுத்தும் ஒரு முன்னோடித் திட்டமாக சுமார் 50 ஏக்கர் பரப்பில் உள்ள மனைகளைத் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து அவர்கள் மூலம் வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தரும் கூட்டு முயற்சித் திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின் வெற்றியைப் பொறுத்து இது மற்ற திட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

முக்கியமான இடங்களில் உள்ள மனைகள்/வீடுகளின் உரிமையாளர்களில் பலர் தனியார் வீடு கட்டும் நிறுவனங்களுடன் இசைவாவணம் மூலம் கூட்டுச் சேர்ந்து தமது பழைய வீடுகளை இடித்து விட்டு அந்த மனைகளில் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி இருவருமாகப் பங்கிட்டுக்கொள்கின்றனர். இதேபோல் தனியார் வீடு/மனை உரிமையாளர்களுடன் கூட்டுச் சேர்ந்து கூட்டு முயற்சியால் திட்டங்களை நிறைவேற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டுள்ளது. இதனால் கட்டட வரைமுறைகளுக்கு உட்பட்டு சீரான மேம்பாடு உருவாக வழி ஏற்படும்.

[2002 ஏப்ரல் 30

**2.11. வாரியக் கட்டுமானப் பணிகளில் புதிய உத்திகள்**

வாரியம் இதுவரை, கட்டிய பின் விற்றல் (Build and sell) என்ற கொள்கை அடிப்படையில், வீடுகளைக் கட்டி முடித்தபின் விற்பது என்ற நடைமுறையைக் கடைப்பிடித்து வந்தது. அதன்படி வீட்டு வசதி நிதி நிறுவன்ங்களிடமிருந்து வீட்டு வசதி வாரியம் கட்டடப் பணிகளுக்காகக் கடன் வாங்கி திட்டப் பணிகளில் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. கடனுக்குச் செலுத்தப்படும் வட்டித் தொகை, வீடுகள் மற்றும் குடியிருப்புகளின் விலையில் சேர்க்கப்பட்டு ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது. உண்மையான கேட்பு நிலவரம் அறியப்படாததால் கட்டிய வீடுகளின் விற்பனையில் தேக்க நிலை ஏற்பட்டு நிதி முடக்கம் ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றி, விற்றபின் கட்டுவது (sell and build) என்ற கொள்கையின் அடிப்படையில், திட்டத்தைத் தொடங்கும் முன்பே விலை நிர்ணயிக்கப்பட்டு, அதனை விளம்பரம் செய்து ஒதுக்கீடுதாரர்களைத் தேர்வு செய்து, அவர்களிடம் முன்பணம் பெற்று அதனை முதலீடாகக் கொண்டு வீடுகளைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால் ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டிப் பளு குறைவதுடன், வாரியத்திற்கு விற்பனையில் பிரச்சினைகள் குறைகின்றன. இதுபோன்று சுயநிதித் திட்டத்தின்கீழ் முன் முயற்சியாக வேலூரில் 85 வீடுகள் கட்டும் திட்டம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மற்றும் வேறு பல இடங்களில் சுய நிதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.12. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று வீடுகள் கட்ட உதவும் திட்டம்**

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்கள் தங்கள் மனைகளில் வீடு கட்டிக்கொள்ள போதிய நிதி வசதி இன்மையால் அவதிப்படுகின்றனர். இவர்களுக்கு வீட்டு வசதிக் கடன் வழங்கும் நிறுவனங்கள்/ வங்கிகள் மூலம் கடன் பெற்று வீடுகள் கட்ட உதவும் திட்டம் ஒன்றினைச் செயலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2002 ஏப்ரல் 30]

**2.13. வீடுகள்/குடியிருப்புகள்/மனைகள் விற்பனையை மேம்படுத்த முனைப்புடன் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

தற்போதுள்ள மந்தமான சந்தை நிலவரம், தனியார் நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள கடுமையான தொழில் போட்டி, நிதி நிறுவனங்கள் குறைந்த வட்டியில் கடன் வாங்கப் பெருமளவில் முன் வந்துள்ள நிலை, வாரியத்தின் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நிலை, கூடியுள்ள விற்பனையாகாமல் உள்ள வீடுகள்/குடியிருப்புகள்/மனைகள் வாங்குவோரின் முன்னுரிமைத் தேவைகள் மற்றும் மன நிறைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வாரியம் தனது விற்பனைக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு இணையான பல்வேறு விற்பனை உத்திகளைப் பயன்படுத்தியும், விலைக் குறைப்பு, ஒதுக்கீடு விதிகளைத் தளர்த்துதல், பரிசு மற்றும் தள்ளுபடித் திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப் படுத்தியும், விற்பனையைப் பெருக்க முனைப்புடன் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

இவை தவிர, கீழ்க்கண்ட விற்பனை உத்திகளும் கையாளப்பட்டு வருகின்றன:

(1) வாரிய தலைமைச் செயலகம், வட்டங்கள், கோட்டங்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே விற்பனைக் குழுக்களை ஏற்படுத்தி விற்பனைக் குறியீடுகளை நிர்ணயித்தல்;

(2) நில உடைமைப் பொருட்காட்சிகள், வர்த்தகக் கண்காட்சிகள், சுற்றுலாப் பொருட்காட்சி ஆகிய இடங்களில் அரங்குகள் அமைத்து விற்பனையைப் பெருக்குதல்.

(3) அரசுத் துறை அலுவலகங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், சென்னைத் துறைமுகம், தெற்கு இரயில்வே, ஐ.சி.எஃப்., தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றில் விற்பனை முகாம்கள் நடத்துதல்.

(4) திரை அரங்குகளில் ஸ்லைடுகள் மூலம் விளம்பரம் செய்தல்.

(5) விழாக் காலப் பரிசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(6) பொருட்காட்சி அரங்குகளில் பதிவு செய்வோர்க்கு, செலுத்தும் பணத்தில் ஒரு சதவீதம் தள்ளுபடி செய்தல்.

(7) விற்பனை முகவர்களை நியமித்தல்.

(8) அரசு விருப்புரிமைப் பங்கீட்டின்கீழ் விற்பதற்குத் தயாராக உள்ள வீடுகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள் குறித்த விவரங்கள் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு ஆணைகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

## 2.14. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயல்பாடுகளை திறன்மிக்கதாக்க குழுக்களை அமைத்தல்

விற்பனையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், சந்தை உத்திகள் மற்றும் விற்பனைக் கொள்கை ஆகியவை குறித்துப் பரிந்துரைக்க மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அரசாணை (நிலை) எண் 479, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 5-12-2001 மூலம் அமைக்கப்பட்டு, குழு 14-12-2001 அன்று நடந்த முதல் கூட்டத்தில் சில பரிந்துரைகளை வழங்கியது.

அதன்படி, மிக அதிக அளவில் விற்பனை ஆகாமல் உள்ள 8 திட்டங்களுக்கு மனைகளை, முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையையே குறும விலையாகக் கொண்டு ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 60, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 21-02-2002 மூலம் ஆணைகள் வழங்கி உள்ளது. இதன் அடிப்படையில் இந்த மனைகளை விரைவில் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாரியத்தின் தற்போதைய விலை நிர்ணயக் கொள்கையை மறு ஆய்வு செய்து, தேவைப்படின் மாறுதல்களைப் பரிந்துரைக்க, குழு ஒன்றினை, அரசாணை (நிலை) எண் 418, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 22-10-2001 மூலம் ஆணைகள் வழங்கப்பட்டன. இக்குழுவின் கூட்டம் நடைபெற்று, பரிந்துரைகள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. இப்பரிந்துரைகளின் அடிப்படையில் புதிய விலை நிர்ணயக் கொள்கைகள் உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்படும்.

நில உடைமைச் சந்தையில் நிலவி வரும் தளர்வு, சந்தையில் நிலவி வரும் கடுமையான போட்டி, பயனாளிகளின் மனப்போக்கு ஆகியவற்றுக்கு உகந்தவாறு நகர்ப்புற வளர்ச்சி முகமை என்ற வகையில் வாரியத்தின் பங்கு பணிகள் ஆய்வு செய்யப்பட்டு மாற்றி அமைக்கப்பட





வேண்டும் என்ற கருத்துடன் அரசு தனது ஆணை எண் (நிலை) 419, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24-10-2001-ல் ஒரு குழு அமைக்கப்பட்டு, இக்குழுவின் பரிந்துரைகளின்படி வாரியத்தின் பங்கு பணிகள் மாற்றியமைக்கப்படும்.

நில உடைமைச் சந்தைகளில் நிலவி வரும் தளர்வு, வாரியத்தின் கட்டுமானப் பணிகள் குறைந்துள்ளது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாரியத்தின் சரியான அமைப்பினை முடிவு செய்தல் மற்றும் வாரியப் பணியாளர்களின் எண்ணிக்கையை, தேவைப்படின் குறைத்தல் குறித்த வழிவகைகளை ஆய்ந்து தெரிவிக்க, குழு ஒன்றினை அரசு தனது ஆணை (நிலை) எண் 17, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 18-1-2002-ன் மூலம் அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் மீது உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## 2.15. வாரியத்தின் வட்டிச் சுமையைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2001-2002 ஆம் நிதியாண்டின் தொடக்கத்தில் வாரியம், வீட்டு வசதிக் கடன் வழங்கும் நிறுவனங்களுக்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.843 கோடியாக இருந்தது. இதில் சுமார் ரூ.400 கோடிக்கான கடன்கள் 14 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலான அதிக வட்டிக் கடன்களாகும். வட்டிச் சுமையைக் குறைக்க, குறைந்த வட்டியில் புதிய கடன்களைப் பெற்று அதிக வட்டிக் கடன்களைத் திரும்பச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாரியம் இதுவரை 11 சதவீதத்திலிருந்து 11.1 சதவீதம் வரையிலான ரூ.205 கோடிக்கான குறைந்த வட்டிக் கடன்களைப் பெற்று, அதிக வட்டிக் கடன்களை அடைத்துள்ளது. மேலும் வர்த்தக வங்கிகளிடமிருந்து ரூ.100 கோடி கடன் பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் வாரியத்திற்கு ஆண்டுதோறும் ரூ.13 கோடிக்கான வட்டிச் சுமை குறைவதோடு மொத்தக் கடன் தொகையில் ரூ.100 கோடி வட்டிச் சுமை குறையும்.

## 2.16. வாரியச் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல்

வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள், ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகள் ஆகியவை கணினிமயமாக்கப்படும். அனைத்துக் கோட்டங்களும், சரகங்களும் வலைப்பின்னல் (network system) மூலம் ஒருங்கிணைக்கப்படும். இதற்காக அரசின் பகுதி-2 திட்டத்தின்கீழ் பெறப்பட்ட ரூ. 50 இலட்சம் நிதியில் ஒதுக்கீடு பெற்று, புதிய கணினி

அமைப்புகள் வாங்கப்பட்டு, கோட்டங்கள் மற்றும் சரகங்களில் நிறுவப்படும். செயல்பாடுகளைக் கணினிமயமாக்குதல் மற்றும் தேவைப்படும் மென்பொருட்களை உருவாக்குதல் போன்ற பணிகளும் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும்.

**2.17. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வீட்டு வசதித் திட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளித்தல்**

வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களிலும் (சுயநிதித் திட்டம் நீங்கலாக) மனை/வீடு/குடியிருப்பு ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடருக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும் தனியாக ஒதுக்கி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இச்சலுகை இனிவரும் திட்டங்களிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

**2.18. அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்**

இனி வரும் காலங்களில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையரகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து வரைபட ஒப்புதலுக்கான தடையின்மைச் சான்று வழங்குதல், ஒதுக்கீடு, ஏல முறை விற்பனையை உறுதி செய்தல் போன்றவற்றில் சரகங்கள் மற்றும் கோட்டங்கள் மட்டத்திலேயே முடிவெடுக்கப்படும் வகையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளன.

**2.19. 2002-2003-ஆம் ஆண்டிற்கான கட்டுமான மற்றும் நில மேம்பாட்டுத் திட்டக் கருத்துருக்கள்**

2002-2003 ஆம் நிதியாண்டில் 567 வீடுகள்/அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம், 4,630 மேம்படுத்தப்பட்ட மனைகள் உருவாக்கும் திட்டம், நிலமெடுப்பு, தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கான சிறப்புச் சீரமைக்கும் பணிகள், துணைப் பணித் திட்டங்கள் ஆகியவை, ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

**3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

குடிசைப் பகுதிகளை, குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்படும் மற்றும் அபாயகரமான பகுதிகளிலுள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அப்பகுதிவாழ்க் குடும்பங்களை அடிப்படை வசதிகளுடன்கூடிய தன்னிறைவான வீடுகளில் நகருக்கு அருகாமையில் மறு குடியமர்வு செய்தல் மற்றும் அனைத்துக் குடிசைப் பகுதிகளுக்கும் அடிப்படை





வசதிகளான குடிநீர் வசதி, சாலை, மழை நீர் வடிகால், பொதுக் கழிப்பிடங்கள், கழிவு நீரகற்றும் வசதி மற்றும் தெரு மின் விளக்குகள் அமைத்தல் போன்றவை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் நோக்கங்களாகும்.

**3.1. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்**

குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த கீழே கூறப்பட்டுள்ள பல்வேறு திட்டப் பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செயல்படுத்தி வருகிறது.

**குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்**

குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வசதி, கழிவு நீரகற்றும் வசதி, சாலைகள் மற்றும் தெரு மின் விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளுடன் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டம் வாரியம் தொடங்கப்பட்டது முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகாறும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 68,550 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.259.28 கோடி செலவில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, தஞ்சாவூர், கரூர், கும்பகோணம், நாகப்பட்டினம், திருப்பூர் மற்றும் சங்கரன்கோவில் ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ளன.

சென்னை மாநகரில் சுதந்திரா நகர் பகுதியில் 576 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.7.08 கோடி மொத்தச் செலவினத்தில் 31-03-2003-க்குள் அமைத்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியுதவி ஹட்கோ நிறுவனத்திடம் கடனாகப் பெறப்பட்டு, அக்கடன் தொகை அரசால் 15 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்படும்.

**நகர குடிசைப் பகுதிகளில் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்**

குடிசைப் பகுதிகளை நல்ல உறைவிடங்களாக மேம்படுத்த, நகரங்களிலுள்ள சுகாதாரமற்ற குடிசைப் பகுதிகளில், குடிநீர் வசதி, சாலை வசதி, தெரு மின் விளக்கு, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள், குடும்பம் ஒன்றிற்கு சராசரி செலவினம் ரூ.2,000/- அளவில் ஒரு குறுகிய காலத் திட்டமாக, “உள்ளது உள்ளபடி நிலையில்” அமைக்கப்படுகின்றது. ஒவ்வோர் ஆண்டும், அரசின் வரவு-செலவுத்

[2002 ஏப்ரல் 30

திட்டத்திலிருந்து அளிக்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 3,20,710 நகர குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்கு ரூ.46.34 கோடி செலவில் இதுகாறும் மேலே கூறப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் 15,000 குடும்பங்களுக்கு ரூ.3.00 கோடி செலவில் மேற்கூறப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் 2002-2003 ஆம் ஆண்டில் அமைக்கப்படும்.

**சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்—மைய அரசின் பத்தாவது நிதிக் குழுவின் சிறப்பு மானியம்**

சென்னை மாநகரிலுள்ள குடிசைப் பகுதிகளை மேம்படுத்த, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மைய அரசின் பத்தாவது நிதிக் குழுவிடம் ரூ.54.00 கோடி சிறப்பு மானியமாகப் பெற்றுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு, சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் ரூ.54.00 கோடி செலவில் 6500 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன. இதுகாறும், சென்னை துரிதப் போக்குவரத்துத் தடங்கள் மற்றும் இதர ஆட்சேபகரமான பகுதிகளில் வாழ்ந்த குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு 4,265 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகள் துரிதப் போக்குவரத்துத் திட்டத்தால் பாதிக்கப்படும் குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்கு மாநகரப் போக்குவரத்துத் திட்டத் துறையினரிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டவுடன் ஒதுக்கீடு செய்யப்படும்.

**வெள்ளக் குறைப்புத் திட்டம்—குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல்**

வெள்ளக் குறைப்புத் திட்டத்தின்கீழ் நதிகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக இந்நதிக் கரைகளில் வாழும் குடிசை வாழ்க் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2,688 குடியிருப்புகளை ரூ.23.87 கோடி செலவில், ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2,296 வீடுகள் ரூ.20.37 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மீதமுள்ள 392 குடியிருப்புகள் ரூ.3.50 கோடி செலவில் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக அரசால் ரூ.3.50 கோடி மானியமாக வழங்கப்படும்.



2002 ஏப்ரல் 30]

**பதினொன்றாவது நிதிக் குழு—சிறப்பு மானியம்—பெரு நகரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்**

தமிழகத்திலுள்ள மூன்று பெரு நகரங்கள் முறையே சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மறு குடியமர்வு செய்ய மைய அரசின் பதினொன்றாவது நிதிக் குழுவிடமிருந்து சிறப்பு மானியமாக ரூ.49.00 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இம்மானிய உதவியினைக் கொண்டு, சென்னை மாநகரில் 2,820 மூன்றடுக்கு மாடிக் குடியிருப்புகளும் மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் 1,832 தனி வீடுகளும் கீழே கூறப்பட்டுள்ளவாறு படிப்படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது:

| வ. எண் | பெருநகரத்தின் பெயர் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | செலவினம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 2820 | 35.250 |
| 2. | மதுரை | 916 | 6.875 |
| 3. | கோவை | 916 | 6.875 |
| | மொத்தம் | 4652 | 49.000 |

முதற்கட்டமாக, சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1,620 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.19.44 கோடி செலவில் அமைக்க கட்டுமானப் பணிகள் 03/2002-ல் தொடங்கப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்டுள்ள பெருநகரங்களில் மீதமுள்ள 3,032 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் ரூ.29.56 கோடி செலவில் பதினொன்றாவது நிதிக் குழுவினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கால வரம்பான 31-03-2005-க்குள் நிறைவேற்றி முடிக்கப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப் பகுதியில் 1,620 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.19.44 கோடி செலவில் அமைக்கப்படும். மேலும், மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகரங்களில் 1,832 குடியிருப்புகள் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 2002-2003 ஆம் ஆண்டில் தொடங்கப்படும். இத்திட்டப் பணிகளுக்காக 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.20.00 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 30

## தமிழ்நாடு சிறப்பு நல நிதி—குடியிருப்புகள் கட்டுதல்

குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்க தமிழ்நாடு சிறப்பு நல நிதியின்கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அரசு 1994-95 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் மானிய உதவி வழங்கி வருகிறது. இத்திட்டப் பணிகளுக்காக இதுகாறும் அரசிடமிருந்து ரூ. 270.90 இலட்சங்கள் மானியமாகப் பெறப்பட்டு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், சென்னை மாநகரில் 295 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.263.80 இலட்சங்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறப்பு நல நிதியின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியினைக் கொண்டு, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால், சென்னை மாநகராட்சி கோட்ட எண் 40-ல் உள்ள வாசுகி நகர் பகுதியில் 64 குடியிருப்புகள் ரூ.92.30 இலட்சங்கள் செலவில் அமைப்பதற்கான பணிகள் வெகுவான நிலைகளில் முன்னேற்றத்திலுள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சங்கள் செலவிடப்பட்டு 64 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றவுடன் குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

## "வால்மீகி அம்பேத்கர்" வீட்டுவசதித் திட்டம்

தற்போது மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "வால்மீகி அம்பேத்கர்" வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரத்தில் 50 சதவீதம் மைய அரசிடமும், 40 சதவீதம் அட்கோ நிறுவனத்தின் கடன் உதவியாகவும், 10 சதவீதம் பயன்பெறும் குடும்பங்களிடமிருந்தும் பெறப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2002-2003 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் 1,000 வீடுகள் ரூ.4.00 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக அட்கோ நிறுவனத்திடம் பெறப்படும் கடன் தொகையான ரூ.1.60 கோடி, 15 ஆண்டுகளில் 10 சதவீத வட்டியுடன் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திருப்பிச் செலுத்தப்படும்.

மேலும் இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் கூடுதலாக 6,250 குடும்பங்களுக்கு ரூ.25.00 கோடி செலவில் வீடுகள் அமைக்க



2002 ஏப்ரல் 30]

பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்திற்கான நிதியுதவி ரூ.12.50 கோடி மைய அரசின் மானியமாகவும், அட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ.10.00 கோடி கடனுதவியாகவும், பயன்பெறும் குடும்பங்களிடமிருந்து ரூ.2.50 கோடி பெற்றும் பணிகள் நிறைவேற்றப்படும்.

### (அ) வால்மீகி-அம்பேத்கர் வீட்டு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 02-12-1995 அன்று நடைபெற்ற, வாரியத்தின் வெள்ளி விழாவின்போது ஒரு முன்னோடி நடவடிக்கையாக அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்குப் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கத்துடன் குடியிருப்புகளுக்கு அவசரப் பழுதுபார்ப்புப் பணிகளை நிறைவேற்றிட ரூ.5.00 கோடி நிதியுதவி மானியமாக அரசு வழங்கும் என அறிவித்தார்கள். அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேலும் தொடர, பின்னர் 7/1997-ல் ரூ.9.50 கோடி அரசால் வழங்கப்பட்டது. இந்நிதியுதவியினைக் கொண்டு, சென்னை மாநகரில் உள்ள 45,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி மொத்தச் செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுள், 30,514 குடியிருப்புகளுக்கு பெரும் கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகளை ரூ.8.93 கோடி செலவில் செயல்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் மைய அரசின் 'வால்மீகி அம்பேத்கர்' திட்டத்திற்கான மானிய உதவி மற்றும் அட்கோ நிறுவனத்தின் கடனுதவி 50:50 அடிப்படையில் பெற்றுச் செயல்படுத்தப்படும். இத்திட்டப் பணிகளுக்காக அட்கோ நிறுவனத்திடம் பெறப்படும் கடன் தொகையான ரூ.4.465 .கோடி, 15 ஆண்டுகளில் 10 சதவீத வட்டியுடன் தமிழ்நாடு குடிசைப்' பகுதி மாற்று வாரியத்தால் திருப்பிச் செலுத்தப்படும்.

[2002 ஏப்ரல் 30

(ஆ) சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்றுதல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ.2.19 கோடி நிதியுதவி பெறப்பட்டு அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில் கீழே கூறப்பட்டுள்ள கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 2000-2001 | : | ரூ.1.74 கோடி |
| 2001-2002 | : | ரூ.0.45 கோடி |
| மொத்தம் | : | ரூ.2.19 கோடி |

மேலும், சென்னை நகரில் 8 சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்கள் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்ற சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு ரூ.1.45 கோடி மானிய உதவி வழங்க, பரிந்துரைத்துள்ளனர். இந்நிதியுதவியிலிருந்து ரூ.0.725 கோடி நிதியுதவியாக மார்ச் 2002-ல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மானிய உதவியினைக் கொண்டு சென்னை நகரில் 8 சட்டமன்றத் தொகுதிகளில் அமைந்துள்ள 38 அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதிகளில் 19,226 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுது பார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை ரூ.1.45 கோடி செலவில் 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவேற்ற தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்குத் தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைத்தல்.

நகர குடிசைப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்களைத் தடுக்கவும், அதன் காரணமாக ஏற்படக்கூடிய உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களைப் போக்கவும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 45,308 குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு



2002 ஏப்ரல் 30]

ரூ.56.92 கோடி செலவில் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை நகரில் சுற்றுச்சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கும் பணிகள் தொடர் திட்டமாக 2,724 குடிசை வாழ்க் குடும்பங்களுக்கு ரூ.4.24 கோடி செலவில் 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும். இத்திட்டப் பணிகளுக்கான நிதியுதவி, அட்கோவிடம் கடனாகப் பெறப்படும்.

நகர் சீரமைப்புத் திட்டம்

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்புச் செலவினங்களுக்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சென்னை மற்றும் தமிழகத்தின் இதர பெருநகரங்களில், முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் வணிக வளாகங்கள் மற்றும் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்க அரசாணை நிலை எண் 129, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-02-1993-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இதுகாறும் சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் 8 இடங்களில் ரூ.5.07 கோடி செலவில் வணிக வளாகங்களும், 12 இடங்களில் ரூ.14.92 கோடி செலவில் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான 722 அடுக்ககங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் அட்கோ மற்றும் தேசிய வீட்டு வசதி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று நிறைவேற்றப்பட்டன. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை வாரியம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கீழே கூறப்பட்டுள்ள இடங்களில் நகர சீரமைப்புத் திட்டங்களை 2002-2003 ஆம் ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | குடியிருப்புகள் எண்ணிக்கை | செலவினம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | விஜயராகவா சாலை | 32 | 2.80 |
| 2. | சிங்காரவேலன் நகர் (திருவான்மியூர்) | 112 | 4.72 |
| | மொத்தம் | 144 | 7.52 |

மேலே கூறப்பட்டுள்ள இரண்டு இடங்களில் 144 மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டப் பணிகளுக்காக ரூ.4.00 கோடி செலவிடப்படும். இத்திட்டப் பணிகள் டூஃபிட்கோ நிறுவனத்திடம் கடனுதவி பெற்று நிறைவேற்றப்படும். இக்கடன் தொகை வாரியத்தால் திருப்பிச் செலுத்தப்படும்.

**பாலர் பள்ளிகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள்**

அரசு, சமூக நலத் துறையின் மூலம் வழங்கப்படும் மானிய உதவியினைக் கொண்டு சென்னையிலுள்ள 146 பாலர் பள்ளிகள் மற்றும் சத்துணவு மையங்களுக்கு ரூ.90.07 இலட்சங்கள் செலவில் பழுது பார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

**சமுதாய வளர்ச்சிப் பணிகள்**

பல்வேறு திட்டங்களின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் கீழே கூறப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சிப் பணிகள் 1981 ஆம் ஆண்டு முதல் அரசு சாரா நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(அ) வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

குடிசைப் பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத இளைஞர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்து அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரித்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சியின் காலம் ஒரு மாதம் முதல் ஓராண்டு வரையாகும். வேலைவாய்ப்பிற்கான இப்பயிற்சிகள், பதிவு செய்யப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள், முறையான அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 9,536 குடிசைப் பகுதி வாழ் இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். அரசு மானியம் ரூ.137.34 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன.

(ஆ) குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டம்

கடந்த 02-12-1995 அன்று நடைபெற்ற தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள், சென்னை மாநகரில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்திற்காக ரூ.100 கோடி மானியம் அளித்தார்கள். இம்மானிய உதவியினைக் கொண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1996 ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

குழந்தைத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறார்களை அத்தொழிலிலிருந்து படிப்படியாக மீட்டு, அரசு சாரா மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அச்சிறுவர்களின் உரிமையைத் திரும்பப் பெறச் செய்து குழந்தைத் தொழிலாளர் முறையினைப் போக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 8-14 வயதுடைய குழந்தைகளை அவர்கள் பணிபுரியும் இடங்களிலிருந்து மீட்டு, பயிற்சி அளித்த பின்னர் அவர்கள் ஓராண்டு காலத்திற்கு இடைக்காலப் பள்ளிகளில் சேர்க்கப்படுவர். இத்திட்டத்தில் இடைக்காலப் பள்ளிகளை ஓராண்டு நடத்துதல், சமுதாய ஒருங்கிணைப்பு, அடிப்படைப் புள்ளிவிவரம் சேகரித்தல், பயிற்சி, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் புத்தறிவுப் பயிற்சி ஆகியவை அடங்கும். இத்திட்டப் பணிகளுக்கான ஒருங்கிணைந்த பன்னாட்டு மற்றும் தேசிய நிதி நிறுவனங்களான United Nations International Children's Emergency Fund மற்றும் Child Relief and You ஆகிய நிறுவனங்கள் பயிற்சி மேம்பாடு மற்றும் குழந்தை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 6,050 குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத குழந்தைகளும் இடைக்காலப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, மறுவாழ்வு பெற்றுள்ளனர். இத்திட்டப் பணிகளின்கீழ் இதுவரை ரூ.94.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் அரசு வரவு-செலவுத் திட்டத்தில் நிதியுதவி பெற்று நிறைவேற்றப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் குடிசைப் பகுதிகளில் வாழும் 750 குழந்தைத் தொழிலாளர்கள் ரூ.6.00 இலட்சங்கள் செலவில் பயனடைவர்.

(இ) மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நகர குடிசைப் பகுதிகளில் வாழும் பெண்களிடையே சமூகப் பொருளாதார உணர்வுகளை ஏற்படுத்தி, விழிப்புணர்ச்சி பெறுதல் மூலம் தன்னம்பிக்கை உடையவர்களை மேம்படுத்தி மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்பவர்களாக்குதல் ஆகியவற்றினை உறுதி செய்து அதன் மூலம் அவர்களது ஒருங்கிணைந்த சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் சென்னை நகர குடிசை வாழ்ப் பெண்களுக்குத் திறனாய்வினை அதிகரிக்கவும், தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காகவும் பயிற்சி அளித்து, அதன் மூலம் அவர்களது பொருளாதார நிலையினை உயர்த்தி தன்னம்பிக்கை உடையவர்களாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.30.00 இலட்சங்கள் அரசு மானிய உதவி அளித்துள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு குடிசைப் பகுதிகளில் வாழும் 6,000 பெண்களுக்குப் பயிற்சிகள் அளிக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

**குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடக் குடும்பங்கள் பயனடைய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (2002-2003)**

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் குடும்பங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது.

சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக குடிசைப் பகுதிகளை நல்ல உறைவிடங்களாக மாற்ற குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளான, சாலைகள், மின் விளக்குகள், மழை நீர் வடிகால், குடிநீர்க் குழாய் போன்ற பணிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தக் குறியீடான 15,000 குடும்பங்களுக்கு ரூ.3.00 கோடி செலவில் நிறைவேற்றும் திட்டப் பணிகளுள் ஆதிதிராவிடர் குடும்பங்களைச் சேர்ந்த 12,000 குடும்பங்களுக்கு ரூ.2.40 கோடி செலவில் இப்பணிகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் மூலம் 80 சதவிகித ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன் பெறுவர். மேலும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்படும் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களான குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம் பதினோராவது நிதிக் குழு, வெள்ளக் குறைப்புப் பணிகள், கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் மற்றும் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டம் போன்ற திட்டப்பணிகள் மூலம் பயன்பெறும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுள் 60 சதவீதத்தினர் ஆதிதிராவிடர் வகுப்பினைச் சேர்ந்தவர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2002-2003-ல் நிறைவேற்றப்படவுள்ள பல்வேறு திட்டப் பணிகள் மூலம் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த 38,382 குடும்பங்கள் ரூ.49.96 கோடி செலவில் பயன்பெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.



**மழை நீர் சேகரிக்கும் மற்றும் சூரிய சக்தியினைப் பயன்படுத்திக்கொள்ளும் முறைகள்**

சென்னை நகரில் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் மழை நீர் சேகரிக்கும் முறைகளை நிறுவ தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை நகரிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் நிலத்தடி நீரை வளப்படுத்துவதன் மூலம் தங்குதடையற்ற தண்ணீர் விநியோகிக்க இயலும். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் ஒரு முன்னோடித் திட்டமாக ரூ.11.50 இலட்சங்கள் செலவில் மழைநீர் சேகரிக்கும் முறைகள் குறிப்பிட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள், வாரியத் தலைமை மற்றும் கோட்ட அலுவலகங்களிலும், சமுதாயக் கூடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்துத் திட்டப் பகுதிகளிலும் மழை நீர் சேகரிக்கும் முறைகளை வாரியம் நிறுவி வருகிறது.

சென்னை நகரில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டத் திட்டமிடப்பட்டுள்ள 576 குடிசைப் பகுதி வாழ்க் குடும்பங்களுக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 144 மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் அமைக்கப்படும் திட்டப் பகுதிகளில் 2002-2003 ஆம் ஆண்டில் மழை நீர் சேகரிக்கும் முறைகள் ரூ.50.00 இலட்சங்கள் செலவில் நிறுவப்படும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இனிவரும் காலங்களில் நிறைவேற்றப்படவுள்ள வீட்டு வசதித் திட்டப் பகுதிகளில் திட்டச் செலவினத்தில் நிதி ஆதாரம் பெறப்பட்டு, மழை நீர் சேமிப்பு முறைகளை நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படும்.

வீட்டு வசதித் திட்டங்களில் சூரிய சக்தியினைக் கொண்டு தண்ணீரைச் சூடேற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**4. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்**

**4.1.** *நிர்வாகம்*

தமிழக மக்களின் அடிப்படை அவசியத் தேவைகளில் 'உறைவிடம்' ஒரு தலையாய தேவையாக பல்லாண்டு காலமாகக் கருதப்பட்டு வருகிறது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய தமிழக அரசின் வீட்டு

[2002 ஏப்ரல் 30

வசதிக் கொள்கைக்கு ஏற்ப ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் வீட்டு வசதியினை மேம்படுத்துவதில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1,033 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நகர்ப்புற மக்களின் சேவைக்கென 837 தொடக்க நிலை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய வட்ட அளவில் 196 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. குறிப்பாக, தமிழக அரசின் பொருளாதாரத்தில் நலிவடைந்தோர் வீட்டு வசதித் திட்டம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் கடந்த 25-5-2001 முதல் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த தனி அலுவலர் வசம் ஒப்படைக்கப்பட்டு இயங்கி வருகிறது. மாநில அளவிலான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் நிர்வாகப் பொறுப்பு, கூடுதல் பதிவாளர் அந்தஸ்தில் உள்ள தனி அலுவலரின் வசம் ஒப்படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தொடக்க நிலையில் உள்ள 1,033 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் தனி அலுவலர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்தி வருகின்றனர். 1,033 வீட்டு வசதிச் சங்கங்களில் 150 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. 644 சங்கங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. செயலற்ற நிலையில் உள்ள 239 சங்கங்களில் 217 சங்கங்களைக் கலைப்பதற்கு உரிய நடவடிக்கை தொடருமாறு மண்டல துணைப் பதிவாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் சுமார் ஏழு இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கங்களின் செயல்பாடுகளில் வளர்ச்சி காணவும், சரியான முறையில் சங்கங்களை நிலைநிறுத்தவும் இச்சங்கத் தனி அலுவலர்கள் அயராது பணியாற்றுகின்றனர். மீண்டும் இச்சங்கங்கள் ஜனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்படும்.

## 4.2. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் தலைமைச் சங்கமாக விளங்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி



2002 ஏப்ரல் 30]

இணையம், தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்படுகின்ற நிதியுதவியைத் திரட்டுகின்றது. வீட்டு வசதிக் கடன் வழங்க மாநில வீட்டு வசதி இணயத்திற்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்கள் தமிழ்நாடு அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டு வசதி வங்கி, வீட்டு வசதி மேம்பாட்டு நிதிக் கழகம், தேசிய மயமாக்கப்பட்ட வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து அரசுப் பொறுப்புறுதியின்பேரில் பெறப்படுகின்றன. தொடக்க காலத்திலிருந்து இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு 31-03-2002 வரை 10,94,061 வீடுகள் கட்ட ரூ. 3,665.64 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், முதலாவது இடத்தில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு நிதியுதவி செய்கின்ற அனைத்து நிறுவனங்களும் தாங்கள் வழங்குகின்ற நிதியுதவிக்கு, தமிழக அரசின் பொறுப்புறுதியினை வலியுறுத்துகின்றன. தமிழக அரசின் நிதித் துறை ஆணை எண் 520-ன்படி நடப்பு ஆண்டு 2001-2002-ல் சுமார் 25,000 வீடுகள் கட்டும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு ரூ.300 கோடிக்கு தமிழக அரசால் பொறுப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.290 கோடி வங்கிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ரூ.10 கோடி தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மூலம் ,வால்மீகி அம்பேத்கர் திட்டத்திற்காகச் செலவிடப்படும்.

## 4.3. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் எய்திய சாதனைகள்

### பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வீட்டு வசதியினைப் பெருக்குவதில் தொலைநோக்குக் கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வீட்டு வசதித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூ.412.10 கோடியில் சுமார் 6,27,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[2002 ஏப்ரல் 30

### கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத் தொடக்க காலத்திலிருந்து ரூ.466.85 கோடி கடன் வழங்கப்பட்டு சுமார் 83,533 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2001-2002 ஆம் நிதியாண்டில் மட்டும் குறைந்த வருவாய்ப் பிரிவில் 2,511 வீடுகளும், நடுத்தர வருவாய்ப் பிரிவில் 1,385 வீடுகளும் கட்டுவதற்கு முறையே ரூ.25.12 கோடி மற்றும் ரூ.24.41 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்

2001-2002 ஆம் நிதி ஆண்டில் 12,736 நகர்ப்புறப் பயனீட்டாளர்களுக்குப் புதிய வீடுகள் கட்ட ரூ.268.25 கோடி கடன் வழங்கப்பட்டது. நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் 2,91,802 வீடுகள் கட்ட ரூ.2,703.54 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### நகர்ப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின்படி இதுவரை நகர்ப்புறம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை எளியோர் 27,717 பேர் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ள ரூ.65.79 கோடி கடன் வழங்கப்பட்டது. இதில் 2001-2002-ஆம் ஆண்டில் 1,235 வீடுகள் கட்டுவதற்கு ரூ.3.55 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்

பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.1,00,000 வீதம் 1998-99 ஆம் ஆண்டு முதல் கடனுதவி வழங்கப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் 2001-2002 ஆம் நிதியாண்டில் 553 வீடுகளைப் புதுப்பித்து விரிவாக்கம் செய்ய ரூ.3.63 கோடி கடன் வழங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தில் 59,114 வீடுகளைப் புதுப்பிக்கவும், விரிவாக்கம் செய்யவும் மொத்தம் ரூ.49.90 கோடி வழங்கப்பட்டுள்ளது.



2002 ஏப்ரல் 30]

### 4.4. 2002-2003 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

வீட்டு வசதித் தேவையில் ஒரு பெரும் பகுதியினைக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் ஈடுசெய்யும் பொருட்டு, 2002-2003 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்கான முதலீட்டுத் தொகை ரூ.251.44 கோடியாகக் கீழே குறிப்பிட்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அ. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 200.00 |
| ஆ. வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டம் (வாம்பே) மற்றும் ஊரக வீட்டு வசதித் திட்டம் | 51.44 |
| மொத்தம் | 251.44 |

(2) நகர்ப் புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2002-2003-ஆம் ஆண்டில் 28,000 வீடுகள் கட்ட ரூ.200 கோடி கடனுதவி வழங்கப்படும்.

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வசிக்கின்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு வீட்டு வசதி அளிக்கும் நோக்கத்தில் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (வாம்பே) என்னும் புதிய திட்டத்தினை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன்படி தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்படி சென்னைப் பெருநகரத்திற்கு ஒரு வீட்டிற்கு ரூ.60,000/- எனவும், ஏனைய இடங்களில் ரூ.40,000 எனவும் கடன் மற்றும் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.1,000 இலட்சம் வழங்கப்பட உள்ளது. இதில் மத்திய அரசு மானியமாக ரூ.500 இலட்சமும், தமிழக அரசுக் கடன் அட்கோ மூலமாக ரூ.400 இலட்சமும், உறுப்பினர்களின் பங்களிப்பாக ரூ.100 இலட்சமும் இத்திட்டத்தில் பயன்படுத்தி சென்னைப் பெருநகரத்தில் 500 வீடுகளும், இதர இடங்களில் 1,750 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

[2002 ஏப்ரல் 30

**2001-2002 ஆம் ஆண்டில் "வாம்பே" திட்டம் செயல்படுத்துதல்**

**வாம்பே திட்டத்தின்கீழ் உள்ளடக்கப்பட்ட மாநகராட்சி மற்றும் நகராட்சி தொடர்பான விவரங்கள்**

| வ. எண் | மாநகராட்சியின் பெயர் | மாவட்டம் | நகராட்சியின் பெயர் நகராட்சி | அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | — | — | 500 |
| 2. | மதுரை | — | — | 410 |
| 3. | திருச்சி | — | — | 300 |
| 4. | சேலம் | நாமக்கல் | (1) நாமக்கல்<br>(2) இராசிபுரம்<br>(3) திருச்செங்கோடு | 300 |
| | | ஈரோடு | (1) ஈரோடு<br>(2) தாராபுரம்<br>(3) கோபிச்செட்டிபாளையம்<br>(4) சத்தியமங்கலம் | |
| 5. | திருநெல்வேலி | திருநெல்வேலி | (1) கடையநல்லூர்<br>(2) புளியங்குடி<br>(3) சங்கரன்கோவில் | 180 |
| | | தூத்துக்குடி | (1) தூத்துக்குடி | |
| 6. | கோவை | கோவை | (1) பொள்ளாச்சி<br>(2) உதகமண்டலம் | 560 |
| | | | மொத்தம் | 2,250 |

சுருக்கம்

| | |
|---|---|
| 1. மாநகராட்சிகளின் எண்ணிக்கை | 6 |
| 2. நகராட்சிகளின் எண்ணிக்கை | 13 |
| மொத்தம் | 19 |

வாம்பே திட்டம் தவிர, ஊரக வீட்டு வசதித் திட்டத்திற்கென ரூ.18.84 கோடி ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டுள்ளது. இத்தொகையும் உறுப்பினர் பங்களிப்பான 10% மூலம் பெறப்படும் ரூ.1.88 கோடி மற்றும் மைய அரசிடம் இருந்து பெறப்பட உள்ள ஈடான மானியத் தொகை ரூ.20.72 கோடி ஆகியவற்றின் மூலம் 9,000 வீடுகள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும்.



2002 ஏப்ரல் 30]

**4.5. ஆய்வு**

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் துறை அலுவலர்களால் முறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 12 மாதங்களில் 264 அரை ஆண்டு ஆய்வுகளும் 660 திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின்போது கடுமையான முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**4.6. விசாரணை**

சுமார் ரூ. 60 கோடி அளவிற்கு நடைபெற்றுள்ள கடுமையான முறைகேடுகள் தொடர்பாக 49 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன் கீழ் விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

**4.7. குற்ற வழக்கு**

சுமார் ரூ.201.92 லட்சம் உள்ளிட்ட 31 சங்கங்களில் உள்ள 152 நபர்கள் மீது குற்ற வழக்கு அனுமதியளிக்கப்பட்டு இவற்றை வணிகவியல் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மேல் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**4.8. இலஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை வழக்குகள்**

விசாரணை அலுவலரின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் 11 நேர்வுகள் இலஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு புலனாய்வு நடைபெற்று வருகிறது.

**4.9. தண்டத் தீர்வை**

1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 87-ன்கீழ் 76 நேர்வுகளில் சுமார் ரூ.245.12 லட்சம் வசூல் செய்வதற்கு தண்டத் தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**4.10. வட்டி வீதம்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் அரசின் பொறுப்புறுதியின் அடிப்படையில் ஹட்கோ நிறுவனம் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து நிதியுதவியைப் பெற்று இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு 16.5 சதவீதத்தில் கடன் வழங்கி வந்தது. பின்னர்

1-3-2002 முதல் 1 சதவீதம் வட்டி குறைக்கப்பட்டுள்ளது. 1-4-2002 முதல் இந்த வட்டி வீதம் மேலும் 1.5 சதவீதம் குறைக்கப்பட்டு சங்க உறுப்பினர் 14 சதவீதத்திற்குக் கடன் பெறுகின்ற வகையில் குறைக்கப்படவுள்ளது.

**4.11. கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் மழை நீர் சேகரிப்புத் திட்டம்.**

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் வீடு கட்டுவதற்குக் கடன் வழங்கப்படும்போது கட்டப்படவுள்ள வீடுகளில் மழை நீர் சேகரிப்புக்கு வழிவகை செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்ததின் கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6.00 இலட்சமும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வீடு கட்ட முன்பணமாக வழங்கப்படுகிறது.

**5.1. இம்முன்பணம் கீழ்க்கண்ட இனங்களுக்கு வழங்கப்படுகிறது:**

1. வீட்டுமனை வாங்கி வீடு கட்டுதல்
2. புதிதாக வீடு கட்டுதல்
3. தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல் .
4. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்
5. தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்; மற்றும்
6. தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்

5.2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 2-6-2000 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 232-ல், தற்போது கட்டப்பட்டுள்ள வீட்டை விரிவாக்க/மேம்படுத்த வழங்கப்படும் முன்பணத் தொகையின் உச்சவரம்பு ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.



5.3. 2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்திற்கு ரூ.100.20 கோடியும் திருத்தி அமைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் கூடுதலாக ரூ.50.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு;

| வ. எண் | அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் | வரவு செலவுத் திட்டத்தில் (2001-2002) | திருத்தி அமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் (2001-2002) |
|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | |
| 1. | இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் | 2.20 | 2.20 |
| 2 | தலைமைச் செயலக அலுவலர்கள் | 7.50 | 7.50 |
| 3. | பிற அரசு ஊழியர்கள் | 80.50 | 125.50 |
| 4. | ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் | 10.00 | 15.00 |
| | மொத்தம் | **100.20** | **150.20** |

5.4. 2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இடவசதிக் கட்டுப்பாடு

தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960, திருத்தப்பட்ட சட்டம் 23/1973, கீழ்க்கண்ட நோக்கங்களை கொண்டுள்ளது:

1. இடவசதிக் கட்டுப்பாடு : வீடுகள் வாடகைக்கு விடுவதைச் சீர் செய்வது-முறைப்படுத்துவது.
2. வாடகைக் கட்டுப்பாடு : வாடகைகள் கட்டுப்படுத்துவது
3. வெளியேற்றுகைக் கட்டுப்பாடு: முறையற்ற வெளியேற்றங்களை தடுப்பது.

6.1. இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரி (சென்னையை பொறுத்தவரை சென்னை மாவட்டாட்சியர்) இடவசதிக்

[2002 ஏப்ரல் 30

கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பானவராவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளைக் கவனிப்பதற்கு இடவசதிக் கட்டுப்பாட்டு அதிகாரி அவர்கள் மேற்படி சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராவார். மற்ற மாவட்டங்களில் கோட்ட வருவாய் அலுவலர் இப்பணியைக் கவனிக்கிறார். மேலும், மேற்படி தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 ஒருங்கியல் சட்டம் என்பதால் எந்தவிதத் திருத்தங்களும் மத்திய அரசாலும் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்டாட்சியர்/கோட்ட வருவாய் அலுவலர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும்.

கட்டடங்கள், பிரிவு 3-ன்கீழ் அரசுக் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு நோக்கத்திற்கும், அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பில்லாத நோக்கத்திற்கும், ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கட்டடங்கள் எடுத்துக்கொள்ளப்படுவது சட்டப்பூர்வமான அதிகாரத்தின்கீழும், வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவது அரசு அவ்வப்போது வழங்கும் நெறிமுறைக் கட்டளைகள்படி செயலாக்கப்படுகிறது. பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால் கடந்த 5 வருடங்களாக சென்னை மாநகரில் எந்தக் கட்டடங்களும் அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படவில்லை.

6.2. குடியிருப்பவர்களும், வீட்டின் உரிமையாளர்களும் எதிர் நோக்கும் சில நடைமுறை இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏற்கெனவே ஆய்வில் உள்ளது. தற்போது சட்டத் துறையில் இருந்து பெறப்பட்ட தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் "வாடகைக் கட்டுப்பாடு சட்டம்" டிசம்பர் 2001, அறிக்கையில் உள்ள மேலும் சில பரிந்துரைகளின் அடிப்படையிலும் தொடர்ந்து ஆய்வு செய்து தக்க சட்டத் திருத்தம் விரைவில் வெளியிடப்படும்.

## 7. நகர்-வரைமைப்பு இயக்கம்

நகரங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது என்பது ஓர் உலகளாவிய நிகழ்வாக அமைகிறது. விரைவான நகர்மயமாதலில்



2002 ஏப்ரல் 30]

பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாக உள்ளது. மேலும் நகர்மயமாதல், குறிப்பாக வளரும் நாடுகளில் பல்வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக நகரங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அளிப்பதில் நெருக்கடி ஏற்படுகிறது. இதனால் நகரங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரம் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை ஆண்டுக்கு ஆண்டு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. 1931-லிருந்து 2001 வரை மாநிலத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 18 விழுக்காட்டிலிருந்து 43.86 விழுக்காடாக அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் அதிகரிக்கும் நகர்ப்புற மக்கள் தொகை விழுக்காடு விகிதம் 0.36 லிருந்து 2.84 ஆக 1991 முதல் 2001 வரையிலான காலத்தில் உயர்ந்துள்ளது. நமது நாட்டில் அதிக அளவு நகர்ப்புறமயமான மாநிலங்களில் 1991 ஆம் ஆண்டில் ஐந்தாவது மாநிலமாக இருந்த தமிழகம் 2001 ஆம் ஆண்டில் மூன்றாவதாக உள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 6.2 கோடியில் 2.72 கோடி (43.86%) மக்கள் தொகை 832 நகர் மையங்களில் வசிக்கின்றனர். மொத்த நகரங்களின் எண்ணிக்கை 1991லிருந்து 2001 வரையிலான காலத்தில் 469-லிருந்து 832 ஆகக் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் மொத்த நகர்ப்புற மக்கள் தொகை ஆறு மாநகராட்சிகளில் 79.13 இலட்சமும் (29.05%), 102 நகராட்சி மற்றும் இரண்டு கன்டோன்மெண்ட்களில் 82.46 இலட்சமும் (30.27%), 611 பேரூராட்சிகளில் 95.75 இலட்சமும் (35.15%), நகர்ப்புற மக்கள் தொகைக் கணக்குத் துறையினால் தேர்வு செய்யப்பட்ட 111 நகர் மையங்களில் 15.06 இலட்சமும் (5.53%) பரவியுள்ளது.

மக்கட் பெருக்கம் அதிகமாகும் நிலையில், உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் மதிப்பு மிக்க விவசாய நிலங்கள் பாதிக்காத வண்ணம், குடியிருப்பு வசதிகள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். பெரிய நகரங்களின் அபிவிருத்திக்கு அதிகமான முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதால், சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் வளர்ச்சி அடைய இயலவில்லை என்றும், இதனால் கிராமப்புறங்களில் இருந்தும் சிறிய நகரங்களிலிருந்தும் மக்கள் பெருநகரங்களை நோக்கி இடம் பெயர்ந்து விட்டனர் என்று நகர்மயமாதல் குறித்த தேசியக் குழு தன் கருத்தினைத் தெரிவித்துள்ளது. நகரங்களுக்கான முதலீடுகளில் சரியான

முன்னுரிமை அளிப்பது மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி நெறிமுறைகளை ஏற்படுத்துவது இதுபோன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும்.

7.1. நகர்ப்புற வளர்ச்சிக்கான நெறிமுறைகள்

இம்மாநிலத்திற்குத் தயாரிக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி நெறிமுறைகளுக்கான வரைவு அறிக்கை, பொருளாதாரத் திட்டம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் சீரான வளர்ச்சியடைகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கீழ்க்கண்டவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது:

(அ) போக்குவரத்து சாலை இணைப்பில் உள்ள விடுபட்ட பகுதிகளை ஆராய்ந்து மாநிலம் முழுவதும் சீரான போக்குவரத்து அபிவிருத்திக்கு வகை செய்தல்.

(ஆ) மாநிலத்தில் மிகக் குறைந்த அளவில் நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள வட்டங்களில் சிறு நகரங்களை மேம்படுத்துவதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

மேற்குறிப்பிட்ட நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு இம்மாநிலத்தில் உள்ள நகரங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நகர் ஊரமைப்புத் துறை பல்வேறு ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

7.2. முக்கிய கொள்கைக் குறியிலக்குகள்

தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டம் 1971-ஐச் செயல்படுத்துதல் நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாகும். சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான சுற்றுச்சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர்-ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. நகர்-ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வருவதுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்ட மேம்பாட்டுப் பணிகளையும் நகர்-ஊரமைப்பு இயக்ககம் ஒழுங்குபடுத்துகிறது.



7.3. முழுமைத் திட்டங்கள்

ஒரு பகுதியின் எதிர்கால மக்கட் தொகையைக் கணக்கிட்டு முழுமைத் திட்டங்கள் முன்கூட்டியே தயாரிக்கப்படுகின்றன. அதற்கேற்ப, முழுமைத் திட்டங்கள் முன்கூட்டியே தயாரிக்கப்படுகின்றன. வெவ்வேறு நில உபயோகங்களுக்குத் தக்கவாறு பகுதிகளை ஒதுக்குவது, இடையூறு இல்லாத வாகனப் போக்குவரத்துக்கு வழிவகுக்கும் வகையில் சாலை அமைப்புகளை ஏற்படுத்துதல், மேலும் அப்பகுதியில் வாழும் மக்களுக்கான வசதிகளின் தேவை அளவைக் கண்டறிதல் போன்றவை முழுமைத் திட்டங்கள் தயாரிக்கும்பொழுது கருத்தில் கொள்ளப்படும். முழுமைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதை ஒழுங்குபடுத்துவதற்கும் முழுமைத் திட்டத்தில் வழிவகை செய்யப்படுகிறது. அரசால் உள்ளூர்த் திட்டப் பகுதிகளாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ள மொத்தம் 114 பகுதிகளில் 102 முழுமைத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிலையிலும் மற்றும் 12 இணக்கம் அளிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன. 1980 ஆம் ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சில முழுமைத் திட்டங்கள் மறு ஆய்வு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, ஐந்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மாற்றத்தை முழுமைத் திட்டத்தில் சேர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் தாராபுரம், பத்மநாபபுரம், ஓசூர், ஆற்காடு, அவினாசி, தஞ்சாவூர், அறந்தாங்கி, விருதுநகர், மதுரை மற்றும் கோவை ஆகிய 10 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.4. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

முழுமைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ள நகரங்களில் உள்ள விரைவான வளர்ச்சியடையக்கூடிய வளமுள்ள பகுதிகளுக்கு முழுமைத் திட்டத்துடன் விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. சாலை மேம்பாடு, வெவ்வேறு பயன்களுக்கான நில ஒதுக்கீடு, கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவது விரிவு அபிவிருத்தித் திட்டத்தின் நோக்கங்களாகும். இதுகாறும் 1,625 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அவை

அங்கீகரிக்கப்பட்ட நிலை, வரைவு நிலை என வெவ்வேறு நிலைகளில் உள்ளன. 2001-2002 ஆம் ஆண்டில் 40 புதிய விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கவும், மேலும் 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் அப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள தற்போதைய வளர்ச்சியினைத் திட்டங்களில் சேர்க்கும் பொருட்டு 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்களை மறு ஆய்வு செய்யவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.5. புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

ஓசூர் போன்ற வேகமாக வளர்ந்துவரும் தொழிற்சாலை நகரங்கள் அல்லது மாமல்லபுரம் போன்ற பாரம்பரியம்மிக்க நகரங்களுக்குச் சட்ட ரீதியாக புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. 14 பகுதிகள் அரசால் புதுநகரங்களாக அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 8 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்காண் சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பது தவிர, கீழே விவரிக்கப்பட்டுள்ள சிறப்பு மிக்க பல திட்டங்களையும் இத்துறை தயாரிக்கிறது:

(அ) பாரம்பரியம் மிக்க நகர மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரித்தல்

தமிழ்நாட்டின் கலாச்சார பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்ததாகவும், செறிவுடையதாகவும், பன்முகங்களைக் கொண்டதாகவும், தனித் தன்மையுடன் விளங்குகிறது. அதன் அழகு மிளிரும் கடற்கரைகள், எழில்மிகு மலைப் பிரதேசங்கள், பிரம்மாண்டமான கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவை மாநிலத்தின் விலைமதிப்பற்ற சொத்துக்களாக அமைந்துள்ளன. இந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் முக்கிய இடங்கள் ஆகியவை விரைவான நகர்ப்புற வளர்ச்சியினால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் தொடர்ச்சியாக 38 நகரங்களை பாரம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு



அறிவித்துள்ளது. அந்நகரங்களை அழகுபடுத்தவும், வசதிகளை ஏற்படுத்தவும் அப்பகுதியில் கட்டட அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தவும், பேணிப் பாதுகாக்கவும் திட்டங்கள் தயாரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 2001-2002 ஆம் ஆண்டில் கலந்தாய்வர்கள் உதவியுடன் பாரம்பரியமிக்க 5 நகரங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

(ஆ) மிகக் குறைந்தளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டம்

நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்காக மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள வட்டங்களில் நகர் ஊரமைப்பு இயக்ககம் கலந்தாய்வர்களின் உதவியுடன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. நகர்-ஊரமைப்பு அபிவிருத்தி நிதி உதவியின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டில் 12 வட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) போக்குவரத்து செயல்பாடு மேலாண்மைத் திட்டம்

தமிழ்நாட்டில் பெரிய நகரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் மக்கள் மற்றும் பொருட்களின் பயணச் செலவு அதிகரிக்கின்றது. போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நகரின் வளர்ச்சி குறைந்து போகிறது. மேலும் நகரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் பாதிப்புக்குள்ளாகின்றன. போக்குவரத்து இடையூறு அதிகம் உள்ள நகர்ப்புறப் பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றிற்கான சரியான தீர்வு ஏற்படுத்துவதற்காக பல நகரங்களுக்குப் போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களை இயக்ககம் தயாரித்து வருகிறது.

7.6 ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்

பேருந்து நிலையம் கட்டுதல், வணிக வளாகங்கள் கட்டுதல் மற்றும் வாரச் சந்தை, தினசரிச் சந்தை ஆகியவற்றை மேம்படுத்துதல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளாட்சி

நிறுவனங்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் வருவாய் ஈட்டும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 15 உள்ளாட்சிகளுக்கு ரூ.139.27 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்திட்டங்கள் வெவ்வேறு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

7.7. புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாக நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல்

வெகு வேகமாகப் பெருகிவரும் மக்கட் தொகை மற்றும் விரைவான நகர்ப்புற வளர்ச்சியுடைய இக்காலகட்டத்தில், திட்டமிடுதல், வரைபடங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் சாதாரணமாகப் பயன்படுத்தும் முறைகளைக் கையாளுவதால் அதிகமான மனித ஆற்றல் தேவைப்படுவதோடு அதிக காலமும், நிதியும் தேவைப்படுகிறது. ஆதலால், புதிய தொழில்நுட்ப உத்தியான புவியமைப்புத் தகவல் முறையினை நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியில் இத்துறை பயன்படுத்தி வருகிறது.

7.8. புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்துதல்

முழுமைத் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகிய சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதற்கு நகர்-ஊரமைப்புச் சட்டம் வகை செய்கிறது. இத்திட்ட உத்தேசங்கள் செயல்படுத்துதல் அப்பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்.

முழுமைத் திட்டம், விரிவு/அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசங்களைச் செயல்படுத்துவதற்காக, அரசு



தனது வரவு-செலவு அறிக்கையில் இத்திட்டச் செயல்பாட்டினைச் சேர்த்துக் கொண்டு அதற்கான தக்க நிதியுதவி வழங்கி வருகிறது.

7.9. முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களின் பூங்காக்கள் அபிவிருத்தி

மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகர மையங்களில் பூங்காக்களும், விளையாடுமிடங்களும், அப்பகுதியில் சுத்தமான காற்றைத் தரும் மையங்களாகவும், புத்துணர்ச்சியூட்டும் இடங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அவ்வாறான பூங்காக்கள் மற்றும் விளையாடுமிடங்கள் ஆகியவை உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நெருக்கடியால் தக்க பராமரிப்பின்றி உள்ளன: கைவிடப்பட்ட இந்தக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி, பராமரிப்பதற்காக ஒரு முறை வழங்கப்படும் மானியமாக முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுக்கு நிதியுதவி வழங்குவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.2.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுவதில் 50:50 என்ற விகிதத்தில் அரசும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனம் அல்லது அரசு சாரா நிறுவனமும் பங்களிக்க வேண்டும். 2001-2002 ஆம் ஆண்டில் தூத்துக்குடி மற்றும் திருச்செங்கோடு நகராட்சியில் அமைந்துள்ள பூங்காக்கள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளது.

7.10. 2002-2003 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் திட்டங்கள்

நகரப் பகுதியில் விரும்பத்தக்க, கட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சி ஏற்படுவதை உறுதி செய்வதற்காகவே அனைத்து உள்ளூர்த் திட்டப் பகுதிகளுக்கும் முழுமைத் திட்டங்களையும் மற்றும் உடனடியாக வளர்ச்சி அடையக்கூடிய வளமிக்க பகுதிகளுக்கென விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் தயாரிப்பதில் இயக்ககம் மிகவும் கவனம் செலுத்தி வருகிறது. பொது மக்களிடமிருந்தும், தொழில் முனைவோர்களிடமிருந்தும் எழும் பல்வேறு கோரிக்கைகளால் முழுமைத் திட்டங்களையும், விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல் உள்ளது என்பது அனுபவத்தில் உணரப்பட்டுள்ளது. ஆதலால் 5 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட முழுமைத் திட்டங்கள் மற்றும் 10 வருடங்களுக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்

[2002 ஏப்ரல் 30

திட்டங்களை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள இயக்ககம் முடிவு செய்துள்ளது. நகர்-ஊரமைப்புச் சட்டம், 1971-ல் இம்மாதிரியான மறு ஆய்வுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் மொத்தம் 60 முழுமைத் திட்டங்களும், 500 விரிவு அபிவிருத்தித் திட்டங்களும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. மறு ஆய்வு செய்யப்படும் சமயத்தில் தொழில் சார்ந்த நபர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களையும் கலந்தாலோசித்துச் செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் 10 முழுமைத் திட்டங்களையும், 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதர 40 பகுதிகளுக்குப் புதிதாக விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணியும் தொடர்ந்து நடைபெறும்.

**7.11 புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்**

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றின் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றும் வகையில் உள்ளூர்த் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் ஆகியவற்றிற்கு நகர்-ஊரமைப்பு வாரிய அபிவிருத்தி நிதியின்கீழ் நிதியுதவி வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசத் திட்டங்கள் அப்பகுதியின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமையும்.

**7.12. பாரம்பரியமிக்க நகரங்களுக்கான திட்டங்கள்**

எந்தவிதமான திட்டமிடுதலும் இல்லாமல் நகரங்கள் விரிவடைந்து வருவதால் நமது விலைமதிப்பற்ற, பாரம்பரியமிக்க நகரங்களின் சுற்றுச்சூழல் பாதிப்புக்குள்ளாகின்றன என்பதை உணர்ந்து, அப்பகுதிகளைக் கண்டறிந்து, அவற்றை பாரம்பரியமிக்க நகரங்களாக மாநில அரசு அறிவித்துள்ளது. நகரத்தை அழகுபடுத்துதல், கட்டட மேம்பாட்டைத் திட்டமிட்டுக் கட்டுப்படுத்துதல், வசதிகள் ஏற்படுத்துதல், வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதிகளைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல் அரசின் செயல் திட்டமாக அமைந்துள்ளது. 1997-98 முதல் 2000-2001 வரை 33 நகரங்களுக்கு இத்திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் எஞ்சியுள்ள கீழ்க்காண் 5 நகரங்களுக்கும் திட்டங்கள் தயாரிக்கும் பணி 2002-2003ஆம் ஆண்டிலும் தொடர்ந்து, முடிக்கப்படவுள்ளது.



2002 ஏப்ரல் 30]

| | |
|---|---|
| 1. செட்டிநாடு | சிவகங்கை மாவட்டம் |
| 2. வாலிநோக்கம் | இராமநாதபுரம் மாவட்டம் |
| 3. மருதூர் | கடலூர் மாவட்டம் |
| 4. பிச்சாவரம் | கடலூர் மாவட்டம் |
| 5. மரக்காணம் | விழுப்புரம் மாவட்டம் |

இந்தப் பாரம்பரியமிக்க இடங்களையும், அவற்றின் சுற்றுப்புறங்களையும் பாதுகாப்பதுடன், எவ்விதமான மாசடைவதிலிருந்தும் காப்பது இன்றியமையாததாகும். இக்குறிக்கோளை எய்துவதற்கு பாரம்பரியமிக்க இடங்களுக்கு அருகே ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் வாகனங்கள் நிறுத்த தகுந்த இடங்களைத் தெரிவு செய்ய வேண்டும். அதனால் இப்பாரம்பரியமிக்க இடங்களுக்கு வருகை தரும் யாத்ரீகர்களும் சுற்றுலாப் பயணிகளும் அவ்விடங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு பாரம்பரியமிக்க இடங்களுக்கு நடந்துவர ஏதுவாக இருக்கும். இவ்வாகன நிறுத்த வளாகங்களிலேயே கட்டணக் கழிப்பிடங்கள், உணவகங்கள் போன்ற வசதிகளையும் செய்தல் நலம் பயக்கும். பின்வரும் 11 பாரம்பரியமிக்க இடங்களில் இத்திட்டத்தை முதல் கட்டமாகச் செயல்படுத்தும் கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

| | |
|---|---|
| •சிதம்பரம் | •பூம்புகார் |
| •பழநி | •காரைக்குடி |
| •நாகூர் | •வேளாங்கண்ணி |
| •செஞ்சி | •கங்கைகொண்ட சோழபுரம் |
| •பேரூர் | •குளச்சல் |
| •இராமேஸ்வரம் | |

**7.13. மிகவும் குறைந்த அளவே நகர்ப்புற அபிவிருத்தி அடைந்துள்ள வட்டங்களில் நடுத்தர நகரங்களை மேம்படுத்துதல்**

நகர்-ஊரமைப்புத் துறையால் தயாரிக்கப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி நெறிமுறை பற்றிய வரைவு ஆய்வறிக்கையில் நகர மையங்கள் ஏதுமற்ற

குறைந்த அளவே நகர்ப்புற வளர்ச்சி அடைந்துள்ள பல வட்டங்களைக் கண்டறிந்து குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோன்ற 33 வட்டங்களில் தக்க மையங்களைக் கண்டறிந்து, அவற்றை நடுத்தர நகரங்களாக மேம்பாடு செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டிலும் கீழ்க்காண் 12 வட்டங்களுக்கு ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணி தொடர்ந்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| 1. கிருஷ்ணராயபுரம் | கரூர் மாவட்டம் |
| 2. வானூர் | விழுப்புரம் மாவட்டம் |
| 3. செய்யாறு | திருவண்ணாமலை மாவட்டம் |
| 4. பாப்பிரெட்டிப்பட்டி | தருமபுரி மாவட்டம் |
| 5. ஆரணி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 6. உடையார்பாளையம் | பெரம்பலூர் மாவட்டம் |
| 7. திட்டக்குடி | கடலூர் மாவட்டம் |
| 8. கங்கவள்ளி | சேலம் மாவட்டம் |
| 9. ஒட்டன்சத்திரம் | திண்டுக்கல் மாவட்டம் |
| 10. கீழ்வேளூர் | நாகப்பட்டினம் மாவட்டம் |
| 11. குடவாசல் | திருவாரூர் மாவட்டம் |
| 12. கந்தர்வக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம் |

**7.14. ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம்**

வருவாய் ஈட்டும் திட்டங்களை உள்ளாட்சி நிறுவனங்கள் நிறைவேற்றுவதற்காக ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் முதற்கொண்டு முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம், புதுநகர் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சாலைகள் அமைத்தல், நிலையிலுள்ள சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற திட்டங்களையும் செயல்படுத்துவதற்கு நகர் ஊரமைப்பு அபிவிருத்தி நிதியிலிருந்து செலவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், ஒரு திட்டத்திற்கு ஆகும் செலவில் அதிகபட்சமாக ரூ.30.00 இலட்சம் வரையிலும் உள்ளாட்சி நிறுவனத்திற்குக் கடன் மற்றும் மானியமாக வழங்கப்படும்.



**7.15. போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்**

நகரங்களில் உள்ள போக்குவரத்து இடையூறுகளை இனங்காணவும் அவற்றிற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்கவும் போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட 10 நகரங்களுக்கு போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி 2001-2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு ஆரணி, ஆத்தூர், கோபிச்செட்டிபாளையம். இராசிபுரம் ஆகிய 4 நகரங்களுக்கு வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாவட்ட அளவிலான போக்குவரத்து கண்காணிப்புக் குழுவினால் இறுதி செய்யப்பட உள்ளது. மீதமுள்ள ஆறு நகரங்களுக்கு அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணி தொடர்ந்து 2002-2003-ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. ஆரணி | திருவண்ணாமலை மாவட்டம் |
| 2. ஆத்தூர் | சேலம் மாவட்டம் |
| 3. கோபிச்செட்டிபாளையம் | ஈரோடு மாவட்டம் |
| 4. இராசிபுரம் | நாமக்கல் மாவட்டம் |
| 5. திருப்பத்தூர் | வேலூர் மாவட்டம் |
| 6. பண்ருட்டி | கடலூர் மாவட்டம் |
| 7. விருத்தாச்சலம் | கடலூர் மாவட்டம் |
| 8. தாராபுரம் | ஈரோடு மாவட்டம் |
| 9. பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் மாவட்டம் |
| 10. அறந்தாங்கி | புதுக்கோட்டை மாவட்டம். |

**7.16. புவியமைப்புத் தகவல் முறை வாயிலாக நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் (Geographical Information System)**

வெகு வேகமாகப் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பவும், நகர்ப்புற அபிவிருத்திக்கேற்பவும், பழைய வழிகளின்படி திட்டமிடுவதற்கு மிகுந்த

கால அவகாசமும், பொருட்செலவும் ஏற்படுகிறது. வான்வழியான முறை, தொலை உணர்வு முறை மற்றும் புவியமைப்புத் தகவல் முறை ஆகிய நவீன தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்தி இவ்வலுவலகத்தால் இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள அனைத்து நகரங்களின் முழுமைத் திட்ட வரைபடங்களைக் கணினியின் உதவியுடன் தயாரிக்க வேண்டியது தற்போது அவசியமாகிறது. திட்டமிடுதல் பணியில், கணக்கிலடங்கா விவரங்கள் மற்றும் வரைபடங்கள் ஆகியவற்றை புவியமைப்புத் தகவல் முறையின் வாயிலாகக் கணினியின் உதவியுடன் கையாள்வது மிக எளிதாகிவிடுகிறது. புவியமைப்புத் தகவல் முறை அமைப்பதற்குத் தேவையான கணினி போன்ற கருவிகளை வாங்குவதற்கு, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.14.00 இலட்சத்திற்கு இத்துறைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. கருவிகள் வாங்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்துறையில் திண்டிவனம், இராஜபாளையம், நாகப்பட்டினம் ஆகிய நகரங்களுக்கான நகர்ப்புற அபிவிருத்தி சம்பந்தமான விவரங்கள் புவி அமைப்புத் தகவல் முறை மூலம் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அவற்றுடன் இந்நகரங்கள் சம்பந்தமான கூடுதல் விவரங்களைக் கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இத்துறையில் உள்ள கணினி கருவிகளின் உதவியுடன் சாத்தூர், திருவண்ணாமலை மற்றும் இராணிப்பேட்டை ஆகிய நகரங்கள் குறித்த விவரங்கள் புவி அமைப்புத் தகவல் முறை மூலம் கணினிமயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணி 2002-2003 ஆம் ஆண்டிலும் தொடரப்படவுள்ளது.

### 7.17. கட்டடம் மற்றும் திட்ட அனுமதி

**மழை நீர் சேகரிப்பு மற்றும் சூரிய சக்தி பயன்பாடு**

மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு மற்றும் சூரிய சக்தி பயன்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் வீட்டு வசதியினை மேம்படுத்தும் பொருட்டு இத்துறையால் கட்டடத்திற்குத் திட்ட அனுமதி வழங்கும்போது கட்டடத்தில் மழை நீர் சேகரிப்புக்கான வழிவகைகள் மேற்கொள்ள வேண்டும் என நிபந்தனையிடப்படுகிறது. இதனால் பல மாடிக் கட்டடங்கள், தனியார் வீடுகள், மழை நீர் சேகரிப்புத் திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்படுவதால் நிலத்தடி நீர் மீள நிரப்பப்படுகிறது. மேலும் மழை நீர் சேமிக்கப்படுவதுடன், கோடை காலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதும் தவிர்க்கப்படுகிறது.



நமது மாநிலத்தில் சூரிய சக்தி இயற்கையாக அபரிமிதமாகக் கிடைக்கிறது. இச்சூரிய சக்தியின் மூலம் குடிநீரைக், குறைந்த செலவில் சுற்றுச்சூழல் பாதிக்காத வண்ணம் வெப்பமாக்க இயலும். பொதுக் கட்டடங்களான மருத்துவமனை, நர்சிங் ஹோம், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், கல்யாண மண்டபம் ஆகியவற்றில் வென்னீர் அதிகம் தேவைப்படுமாதலால் இதுபோன்ற பொதுக் கட்டடங்களுக்குத் திட்ட அனுமதி வழங்கும்போது, சூரிய சக்தியைப் பயன்படுத்தி தண்ணீரை வெப்பமாக்கும் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என நிபந்தனையிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது குறித்து தக்க வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட துறைகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. முன்னதாக உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் உள்ளாட்சிகள் மூலம் இது குறித்து விழிப்புணர்ச்சி இயக்கமும் செயல்படுத்தப்படும்.

### 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டம், 1971-ன்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு சட்டமுறை ஆணைக் குழுவாக அமைக்கப்பட்டதாகும். இக்குழுமம் ஆரம்ப நிலையில் 1972-ஆம் ஆண்டு தற்காலிக அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, 1975-ல் சட்டமுறை அமைப்பு அடைந்தது. தமிழக அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இக்குழுமம் உள்ளது. சென்னை மாநகரம், 8 நகராட்சிகள், 28 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய 1177 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட சென்னைப் பெருநகர்ப் பரப்பு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லையில் உள்ளது. சென்னைப் பெருநகர்ப் பரப்பின் தற்போதைய மொத்த மக்கட் தொகை 75 இலட்சமாகும். இக்குழுமத்தின் முக்கியக் குறிக்கோள்கள் பின்வருமாறு:-

அ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிற்காக நேரிடை உள்ளமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் திட்டமிடுதல்.

ஆ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிற்கான முதன்மைத் திட்டத்தினைச் செயல்படுத்துதல் மற்றும் முதன்மைத் திட்டத்தின் ஒரு பகுதியான வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளை அமல்படுத்துதல்.

இ) பெருநகர் வளர்ச்சிக்காகத் திட்டங்கள் அமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.

[2002 ஏப்ரல் 30

**8.1. திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்-இரண்டாம் கட்டம்**

சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் வரையிலான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் (முதல் கட்டம்) ஏற்கெனவே மக்கள் பயன்பாட்டில் உள்ளது. துரித இரயில் போக்குவரத்துத் திட்டம், இரண்டாம் கட்டமாக லஸ் முதல் வேளச்சேரி வரையில் உள்ள 11.17 கி.மீ. தூரத்திற்கு தோராய மதிப்பீடு ரூ.605 கோடி செலவில் அமைத்திட மாநில அரசு ஆணை எண் 297, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 27-7-1998-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இது தற்போதைய மதிப்பீட்டின்படி ரூ.689 கோடியாகும். இத்திட்டச் செலவில் மாநில அரசு மூன்றில் இரண்டு பங்கும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கும் ஏற்க உள்ளன. இத்திட்டத்திற்காக மாநில அரசின் பங்காக ரூ. 354 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைத்து வழிநடத்தியும், ஒத்துழைத்தும் வருகிறது. இத்திட்டம் முழு வீச்சில் நடைபெறுவதால் வரும் டிசம்பர் 2002-ல் நிறைவேற்றப்படும். இரயில் நிலையங்களில் எஞ்சியுள்ள கட்டுமானப் பணிகள் மட்டும் மேலும் தொடரும். இத்திட்டத்திற்காக 31-3-2002 முடிய ரூ. 401.36 கோடி செலவிடப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணி பரங்கிமலை வரை 4.5 கி.மீ. தூரத்திற்கு நீட்டித்து சென்னைக் கடற்கரை-தாம்பரம் புறநகர் இரயில் பாதையை அடையுமாறு ஏற்படுத்தும் திட்டம் தீவிரப் பரிசிலனையில் உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், கலந்தாலோசகர் மூலம் இத்திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்துள்ளது.

**8.2. திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்—இரண்டாம் கட்டத்தில் உள்ள இரயில் நிலையங்களின் மேல் பகுதியில் வணிகப் பகுதி மேம்பாடு:**

சென்னைக் கடற்கரை முதல் திருமயிலை இரயில் நிலையம் வரையிலான திரள் துரித இரயில் போக்குவரத்து—முதல் கட்டம் 8.96 கி.மீ. தூரத்திற்கு 1995 மற்றும் 1997-ஆம் ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாகத் தொடக்கி வைக்கப்பட்டது. இரயில்வே அமைச்சகத்தின் மூலம் மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான நிதி பெறப்பட்டது.

திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்ட இரண்டாம் கட்டம், திருமயிலை நிலையத்திலிருந்து வேளச்சேரி நிலையம் வரையிலான



2002 ஏப்ரல் 30]

11.17 கி.மீ. தூரத்திற்கு, திட்டச் செலவை தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசின் நிதி உதவியுடன், முறையே 67:33 என்கின்ற விகிதத்தில், ஏற்கும் அடிப்படையில், அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அட்டவணைப்படி முன்னேற்றம் அடைந்து வருகின்றன. மேலும் 2002-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் இரயில் போக்குவரத்து தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ஒன்பது இரயில் நிலையங்களின் கூரைப் பகுதியின் மேலே உள்ள ஆகாயப் பகுதியில் (Air Space) வணிகப் பகுதியாக அபிவிருத்தி செய்ய முழு உரிமை பெற்றுள்ளது. இதன் மூலம் நகர கட்டட பகுதிகளின் அளவை அதிகரித்து, திரளான துரித இரயில் போக்குவரத்தை அதிகரிக்கவும் இயலும். இதன் காரணமாக நான்கு கலந்தறிதற்குரிய நிறுவனங்கள், ஒன்பது நிலையங்களுக்கான கூரைப் பகுதியின் மேலே வணிகப் பகுதி அபிவிருத்தி செய்வதற்கான வடிவமைப்புகளைத் தயாரிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளன. இந்த கலந்தறிதற்குரிய நிறுவனங்கள், ஒன்பது நிலையங்களின் அபிவிருத்திக்கான விரிவான வரைபடங்களைச் சமர்ப்பித்துள்ளனர். இவற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இரயில்வே துறையால் கட்டப்பட்டு வரும் இரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நிலையங்களின் கூரைப் பகுதிக்கு மேலே உள்ள வணிகத் தளக் கட்டமைப்புக்கான விரிவான வடிவமைப்புகள் மற்றும் செயல் முறை வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. 9 நிலையங்களின் கூரைப் பகுதிக்கு மேலேயுள்ள தளங்களைப் பயன்படுத்த பல்வேறு வகைப்பட்ட தேவைகளின் ஆய்வுகள் முடிக்கப்பட்டபின் இதனைப் பயன்படுத்திக் கொள்ள விருப்பம் கோரப்படும்.

**8.3. திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டப் பாதை அருகில் அபிவிருத்தி செய்வது குறித்து ஆய்வு**

திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான துரித இரயில் போக்குவரத்தின் இரண்டாம் நிலை 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலிருந்து செயல்படுத்தப்படவுள்ளது. இந்த துரித இரயில் போக்குவரத்தினால் சுமார் 60000 பயணிகள் ஒரு மணி நேரத்தில் ஒவ்வொரு மார்க்கத்திலும் பயணம் செய்யலாம். இத்திட்டத்தை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக ரூ. 10 இலட்சம் செலவில்

கலந்தறிதற்குரியவர் மூலமாக திட்டப் பாதை அருகில் இருபுறமும் 1 கி.மீ. பரப்பளவில் மக்கள் நெருக்க வளர்ச்சி, பணி செய்யும் இடங்கள், வியாபார மையங்கள், பொழுதுபோக்கு மையம் மற்றும் பலவிதமான அபிவிருத்திகளை அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கலந்தறிதற்குரியவர்கள் மேற்படி நோக்கங்களைச் செயல்படுத்த, பரிந்துரைகளை அளிக்க உள்ளார்கள். இந்த ஆய்வுப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**8.4. சென்னைப் புறநகர்ப் பேருந்து முனையம் - கோயம்பேடு.**

தற்போதுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காவும், எஸ்பிளனேடு, பேசின் பிரிட்ஜ், பிராட்வே மற்றும் எம்.டி.சி. கிரவுண்ட் பேருந்து நிலையங்களில் தற்போது நிலவும் நிர்வகிக்க முடியாத சூழலைத் தவிர்ப்பதற்காகவும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை நகரின் புறத்தே ஜவஹர்லால் நேரு சாலையில் (உள்வட்டச் சாலை) அமைந்துள்ள கோயம்பேட்டில் புறநகர்ப் பேருந்து முனைய வளாகத்தை (CMBT Complex) உருவாக்க முனைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு, ரூ.89.21 கோடிக்கு திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல் அளித்து, அதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்படைத்துள்ளது. இப்பணிகளுக்காக ஹட்கோ/டுஃபிட்கோ ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் தொகை மற்றும் அதற்கான வட்டியை ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையின் மூலம் தமிழ்நாடு அரசு திரும்பச் செலுத்துவதாகப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இந்தத் திட்டத்திற்கு நிதியுதவி அளிக்குமாறு ஹட்கோ மற்றும் டுஃபிட்கோ நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டது. அதன்படி, இரு நிதி நிறுவனங்களும் முறையே, ரூ.84.25 கோடி மற்றும் ரூ.10.00 கோடி நிதியுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளன. எனவே, அனைத்துப் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன. இத்திட்டம் விரைவில் செயல்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**8.5. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் காய்கறிக் கழிவை மூலப்பொருளாக்கி மின்சார உற்பத்தி செய்வதற்கான திட்டம்:**

கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தில் காய்கறிக் கழிவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றை ரூபாய் 5 கோடி



செலவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எழுபத்தைந்து சதவிகித மானியத் தொகையை மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்திடமிருந்து பெற்று, இந்தியாவிலேயே இத்திட்டம் முதலாவதாகச் செயல்படுத்தப்படவுள்ளது. மீதமுள்ள 25 சதவிகிதமாகிய ரூபாய் 1.25 கோடியை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் முகவர் அமைப்பாக இருந்து, பன்னாட்டு நிறுவனங்களும் பங்குபெறுமாறு ஒப்பந்தப்புள்ளியைக் கோரியுள்ளது.

**8.6. அட்கோ நிதியுதவியுடன் சென்னை நோக்கி வரும் ஆரச் சாலைகளின் மேம்பாட்டுப் பணி**

சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குள் 250 கி.மீ. நீளத்திற்கான எட்டு ஆரச் சாலைகளை ரூ.212.54 கோடி செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இத்திட்ட காலம் 2 ஆண்டுகள் ஆகும். அரசின் ஆணைக்கிணங்க ரூ.147 கோடியை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடம் இருந்து கடனாகப் பெற குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் ரூ.132.28 கோடியை குழுமம் பெற்று இத்தொகையை, திட்டத்தை அமல்படுத்தும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது.

எட்டு ஆரச் சாலைகளின் மேம்பாட்டுப் பணி பெரும் பகுதி முடிவடைந்துவிட்டது. ஒரு சில இடங்களில் நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளால் நான்கு சாலைகளில் பணியை முழுமையாக முடிக்க இயலவில்லை. சில பாலங்கள் கட்டும் பணிகளும் எடுக்கப்படவேண்டும். பணிகள் முழுவதும் 2002-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகப் பெறப்பட்ட கடன் தொகையினை வட்டியுடன் ஆண்டுதோறும் அட்கோ நிறுவனத்திற்குத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்காக ரூ.36.80 கோடியை 2002-2003-ஆம் வருடத்திய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது.

**8.7. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வெள்ளத் தடுப்பு மற்றும் மழை நீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டம்**

அரசு, சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வெள்ளத் தடுப்பு மற்றும் மழை நீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டம் என்ற கட்டமைப்பு வேலைகளை நான்கு சிப்பங்களாகச் செயல்படுத்துவதற்கு, அரசாணை

(நிலை) எண் 321, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-9-1998 மூலமாக ரூ.300 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளானது, தொடர்ந்து ஏற்பட்டு வரும் வெள்ளப் பெருக்கினை மட்டுப்படுத்தி சுற்றுச்சூழலை மேம்படுத்துவதேயாகும்.

*இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமானது—*

(அ) பிரதான வடிகால் அமைப்பு முறையில் போதிய நீரோட்டத்தை உறுதிப்படுத்துவது மற்றும் பராமரிப்பது.

(ஆ) வடிகால் அமைப்பில் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தடுப்பது மற்றும் களைவது.

(இ) கட்டுக்கடங்காத வெள்ளத்திற்கு எதிராக, பாதுகாப்பு அரண்களை அமைப்பது.

(ஈ) சென்னைப் பெருநகரின் பெரும்பான்மையான நீர் வழிகள் மற்றும் கால்வாய்களில் பெருவடிகால் அமைப்பு முறையினை மேம்படுத்துவதும், சென்னை நகரில் மழை நீர் வடிகால் மேம்பாட்டுத் திட்டத்திற்கான சிறுவடிகால் அமைப்பு முறையினை மேம்படுத்துவதுமேயாகும். மேம்பாட்டு நடவடிக்கையானது, சென்னைப் பெருநகர்ப் பகுதியிலுள்ள நீர் வழிகளில் படிந்துள்ள மாசுகளை, சகதிகளை அகற்றி, அவற்றின் கரைகளை வலுப்படுத்துவது மற்றும் நீர் வழிகளைப் புனரமைத்தல், வெள்ளத் தடுப்பு வழிமுறைகளைக் கண்டறிதல், பழைய பாலங்களை அகற்றுதல், நீர்வழிகளின் அகலம் மற்றும் வரைமுறைப்படுத்துவதின் மூலம் முறைப்படுத்துவதேயாகும். இதில், மற்றும் ஒரு முக்கியக் குறிக்கோள், நீர் வழிகளில் வசிக்கும் ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி அவர்களுக்கு மறு குடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் உறைவிடங்களை ஏற்படுத்தித் தருவது. பொதுப் பணித் துறையானது இத்திட்டத்தின் பெரும் கட்டமைப்புப் பணிகளைச் செயல்படுத்துகிறது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வு திட்டத்தினைச் செயல்படுத்துகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இத்திட்டத்தின் இணைய மையமாகவும், அட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் உதவி பெற்று, திட்டத்தினை ஒருங்கிணைத்து வழிநடத்தியும் வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிதி 70 சதவிகிதம் அட்கோ நிறுவனத்திடமிருந்து கடனாகவும், எஞ்சிய 30 சதவிகிதம் மாநில





அரசின் வரவு–செலவுத் திட்டத்தின் மூலமும், மானியமாகப் பெறப்பட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில அரசின் வரவு–செலவுத் திட்டத்தின் மூலம் கடனையும் ஆண்டுதோறும் திரும்பச் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பெருவடிகால் பணிகளானது நிலவியற் தன்மை மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதியில் உள்ள நீர் வழி நிலையைப் பொறுத்து கடன் பெறவும், மேலாண்மை மற்றும் செயல்முறைப்படுத்தவும் ஏதுவாக நான்கு சிப்பங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

சிப்பம் 1: சென்னை நகரில் கூவம் ஆறு, விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் வடிகால், ஓட்டேரி ஓடை முதலானவற்றை மேம்படுத்துதல் மற்றும் மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டம்.

சிப்பம் 2: சென்னை நகரில் பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்துதல்.

சிப்பம் 3: சென்னை நகரில் அடையாறு நதி மேம்பாடு மற்றும் கொசஸ்தலையாற்றின் வெள்ளத் தடுப்புக் கரைகளை மேம்படுத்துதல்.

சிப்பம் 4: எஞ்சிய சென்னைப் பெருநகரிலுள்ள நீர்நிலைகளின் வெள்ளக் கால்வாய்களை மேம்படுத்துவது, கூவம் மற்றும் அடையாறு ஆறுகளின் முகத்துவாரங்களில் படிந்துள்ள மணல் தடுப்புகளை அகற்றுவதாகும்.

கூவம் ஆற்றின் பணிகளானது, மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்தின் மீதான அரசின் கொள்கை முடிவைப் பொறுத்து, பொதுப் பணித் துறையினரால் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

தமிழக அரசானது, நான்காவது சிப்பத்தைச் செயற்படுத்த, முதல் கருத்துருவான ரூ.56.21 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான கடன் தொகையானது திட்ட வரைபடம் மற்றும் பணிச் செயல் முறை அட்டவணை ஆகியவற்றின் அடிப்படையில் அட்கோவிடமிருந்து பெறப்படும்.

முதல் மூன்று சிப்பங்களுக்கான திருத்திய மதிப்பீடு ரூபாய் 132.51 கோடி ஆகும். ரூ.80.87 கோடி இத்திட்டப் பணிகளுக்காக 2002 மார்ச் வரை செலவிடப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.21.56 கோடி அட்கோ நிறுவனத்திற்குக் கடன் மற்றும் வட்டியைச் செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.8. வெளிவட்டச் சாலை:**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் வெளிவட்டச் சாலையை சென்னைப் பெருநகரப் பரப்பின் எல்லையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. சென்னை-திருச்சி சாலை (தெற்கு நீளப் பெருஞ்சாலை), சென்னை-பெங்களூர் சாலை (மேற்கு நீள நெடுஞ்சாலை) சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை (செ.தி. நெடுஞ்சாலை), சென்னை-நெல்லூர் சாலை (வடக்கு நீளப் பெருஞ்சாலை) மற்றும் திருவொற்றியூர், பொன்னேரி–பஞ்செட்டி சாலை (தி.பொ.ப. சாலை) ஆகிய சாலைகளை இணைக்கும் வகையில் வெளிவட்டச் சாலை ஒன்றினை அமைத்திட தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இச்சாலையானது, தெற்கில் வண்டலூரையும், வடக்கில் மீஞ்சூரையும் இணைக்கும் வகையில் 62 கி.மீ. நீளம் கொண்டதாகும். இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.450 கோடிகளாகும். முதற்கட்டமான சென்னை-திருச்சி நெடுஞ்சாலை மற்றும் சென்னை-திருவள்ளூர் சாலை இடையே நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இதுவரை 15 கிராமங்கள் தொடர்பான நில எடுப்பிற்குத் தீர்வாணை விசாரணை நடத்தப்பட்டு, 14 கிராமங்களுக்குத் தீர்ப்பாணை செய்யப்பட்டுள்ளது. முதற்கட்ட சாலையை அமைப்பதற்குத் தேவைப்படும் 29.2 கி.மீ. தெற்கு நீளப் பெருஞ்சாலை (வண்டலூர்) முதல் திருவள்ளூர் நெடுஞ்சாலை வரையிலான நீளத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தும் பணி ஜூன் திங்கள் 2002 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம் இந்தச் சாலைத் திட்டத்தை, அமைத்து–இயக்கி-மாற்றுதல் முறையின் கீழ் (BOT) அல்லது இதுபோன்ற மற்ற முறையில் நடைமுறைப்படுத்தும் வகையில் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது. இரண்டாம் கட்ட வழித்தடத்தில், பரப்பில் வெளிவட்டச் சாலையின் போக்கை நிலத்தில் முளை குறியீடு செய்யும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. இரண்டாம் கட்டம் திருவள்ளூர் நெடுஞ்சாலையிலிருந்து, திருவொற்றியூர், பொன்னேரி-பஞ்செட்டி சாலைகளை இணைக்கும் வகையில் 33.10 கி.மீ. நீளத்தினைக் கொண்டதாகும்.

**8.9. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பூகோள தகவல் தொகுப்பு:**

பூகோள தகவல் தொகுப்பு என்பது, சிறிய மற்றும் பெரிய அளவிலான பூகோள தகவல்களைச் சேகரிக்கவும், கையாளவும்,



பகுப்பாய்வு செய்யவும் மற்றும் அனைவரும் பகிர்ந்து கொள்ளவும் வகை செய்ய உதவும் ஒரு கருவியாகும். இத்தகவல் தொகுப்பு நகர வளர்ச்சிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தேவையான தகவல்களைப் பெறவும் உபயோகமாக இருக்கும்.

தமிழ்நாடு அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, அரசாணை (நிலை) எண் 200, நாள் 3-6-1998 மூலம் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பூகோள தகவல் தொகுப்பு ஏற்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தை முதன்மை நிறுவனமாக அறிவித்துள்ளது. மேலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் பூகோள தகவல் தொகுப்பு பிரிவு ஏற்படுத்தவும் அனுமதி அளித்துள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னைப் தொலைபேசி ஆகிய துறைகளை இணைத்து சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பூகோள தகவல் தொகுப்பிற்கான முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகருக்கான நில உபயோகத் தகவல் தொகுப்பை உருவாக்கத் திட்டமிட்டு, அதன் முதற்கட்டமாக, சென்னை, அடையாறு பகுதிக்கான நில உபயோகத் தகவல் தொகுப்பை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் எந்த ஒரு இடத்திற்கும் அதன் நில அளவை எண்ணைக் குறிப்பிட்டு அந்த இடத்திற்கான நில உபயோகத்தை அட்டவணையிலும், வரைபடத்திலும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்த அடிப்படையில், மேற்கொண்டு இத்திட்டத்தை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-2-ன் உதவியுடன் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பூகோள தகவல் தொகுப்பைச் செயல்படுத்த இத்துறையில் மிகுந்த தேர்ச்சியும், பயிற்சியும் தேவை. எனவே, இத்திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னைப் பெருநகர்ப் பகுதி முழுமைக்கும் பூகோள தகவல் தொகுப்பு உருவாக்க அதிகப் பணம் தேவைப்படும். எனவே, நிலம் மற்றும் கட்டமைப்பு வசதிகளின் தேவை அதிகரித்துள்ள சென்னை மாநகரத்திற்கும் மற்றும் கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்த வேண்டிய மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குமாக படிப்படியாக இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2002 ஏப்ரல் 30

பூகோள தகவல் தொகுப்பை முதற்கட்டமாக, அடையாறு, ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளுக்கு உருவாக்கி செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆலந்தூர், சென்னை மாநகரை ஒட்டி அமைந்துள்ளதால் ஆலந்தூர் பகுதியும், அடையாறு பகுதிக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஏற்கெனவே நில உபயோகத் தகவல் தொகுப்பை உருவாக்கியுள்ளதால் அடையாறு பகுதியும், தகவல் தொழில்நுட்ப தொழிற்கூடப் பகுதியில் சோழிங்கநல்லூர் அமைந்துள்ளதால் சோழிங்கநல்லூர் பகுதியும் முதற்கட்ட பூகோள தகவல் தொகுப்பு ஏற்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

சென்னை மாநகரின் இதர பகுதிகள் மற்றும் ஏனைய பகுதிகளுக்கு இரண்டாவது மற்றும் அதற்கடுத்த கட்டங்களில் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

## 8.10. சோழிங்கநல்லூர் தகவல் தொழில்நுட்பப் பகுதிக்கான செயல் முறைத் திட்டம்:

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் 30-11-2000 அன்று நடந்த உயர்மட்டக் குழுக் கூட்டத்தில், தகவல் தொழில் நுட்பப் பகுதிக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையான மற்ற அனைத்து வசதிகளும் செய்து கொடுக்க செயல் முறைத் திட்டம் ஒன்றை உருவாக்க முடிவெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அடிப்படைக் கட்டமைப்புத் திட்டம் ஒன்றை சோழிங்கநல்லூர் தகவல் தொழில்நுட்பப் பகுதிக்கு உருவாக்கி, அரசிடம் முதற்கட்டமாகச் சமர்ப்பித்துள்ளது. சென்னை பெருநகர எல்லைக்கு அப்பால் திருப்போரூர் வரையிலான தகவல் தொழில்நுட்பப் பகுதிக்கு அடிப்படைக் கட்டமைப்பு செயல் முறைத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 8.11. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டம்.

சென்னை நகர் மற்றும் சென்னைப் பெருநகர்ப் பகுதி ஆகியவற்றின் வளர்ச்சிகள் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான முதல் முழுமைத் திட்டத்தின் மூலம் வரைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து, நீட்டிக்கப்பட்ட பகுதிகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1996 ஆம் ஆண்டில் விரிவான வளர்ச்சித் திட்டம் வரைய ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதன்கீழ் 57 பகுதிகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. இந்த 57 பகுதிகளில் இதுவரை



2002 ஏப்ரல் 30]

20 விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் இரண்டு விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு அதாவது, சைதாப்பேட்டை பகுதி 1 மற்றும் பகுதி 2-க்குரிய திட்டங்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. இதற்கான வரைபடம்-2 தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டு வரைபடம்-4 இறுதி முடிவு எடுக்கும் நிலையில் உள்ளது. 12 விரிவான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள 43 விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு, வருவாய்த் துறையின் நில உடைமைப் பதிவேடு விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில் இவற்றை முழுமையாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8.12. பரப்பு திட்டப் பிரிவு:

*மழை நீர் சேகரிப்பு*

மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர்வளத்தை அதிகரித்து ஆழ்துளை மற்றும் கிணறுகளில் நீர்மட்டம் சீராக இருக்க உதவுகிறது. மேலும் குடியிருப்புப் பகுதியில் மழை நீர் சேகரிப்பால், சாலைகளிலும் மற்றும் தாழ்வான பகுதிகளிலும் உண்டாகும் வெள்ள நீர்த் தேக்கத்தைத் தடுக்க இயலும். இதன் முக்கியத்துவத்தினால், மழை நீர் சேகரிப்பானது அனைவரின் கவனத்தினையும் கவர்ந்துள்ளது.

அரசாணை (நிலை) எண் 383, (வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை), நாள் 14-9-2001-ல் மழை நீர் சேகரிப்பு சம்பந்தமாக வளர்ச்சித் திட்ட விதி மாற்றங்களுக்கு ஒப்புதலளித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதன்படி திட்ட அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்திலும் மழை நீர் சேகரிப்பதற்கான வழிமுறைகளை வரைபடத்தில் கண்டிப்பாகக் காண்பிக்க வேண்டும் என்ற விதி கட்டாயமாக்கப்படுகிறது. திட்ட அனுமதி வழங்கப்பட்ட கட்டடங்களில், மழை நீர் சேகரிப்பு முறைகள் உரிய முறையில் சரியாக அமல்படுத்தப்பட்டுள்ளதால் அம்முறை சரிவரச் செயல்படுகிறதா என்பதை உறுதி செய்து கொண்ட பின்னரே திட்ட முடிவிற்கான சான்றிதழினை சென்னைப் பெருகர் வளர்ச்சிக் குழுமம் வழங்குகிறது. இது தவிர, குழுமம் வளர்ச்சித் திட்ட விதிகளில் குறிப்பிட்டுள்ள முறைகள் மட்டுமல்லாமல், மண்பாங்கிற்கேற்ற மற்றும் பலதரப்பட்ட கட்டட வகைகளுக்கும் ஏற்ற வகையில் அமையும் மற்ற மேம்படுத்தப்பட்ட முறைகளையும் கட்டட அபிவிருத்தியாளர்கள் மத்தியில் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 8.13. சூரிய சக்தி

மாற்று எரிசக்தித் தொழில்நுட்பம் மட்டுமே எதிர்காலத்திற்கான தொழில்நுட்பமாகும். சூரிய சக்தியானது இந்நாட்டில் முதன்மை சக்தியாக எங்கும், ஏராளமாகவும், இலவசமாகவும், மாசுக் கட்டுப்பாடின்றியும் கிடைக்கிறது. இது வியாபார ரீதியாகவும் பயன்படுத்த உகந்தது. இச்சக்தியை, நீரைச் சூடாக்குவது, கட்டடத்தின் அறைகளை வெப்பமாக்குவது போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். மருந்துவமனைகள், உணவுக்கூடங்கள், தங்கும் விடுதிகள், விருந்தினர் மாளிகை, மாணவர் இல்லங்கள் மற்றும் திருமண மண்டபம் போன்றவற்றிற்கு, புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களில் சூரிய சக்தியால் நீர் சூடாக்கும் முறைகளுக்கான உபகரணங்களைக் கட்டாயம் பொருத்தி, எரிசக்தி சேமிப்பிற்கு வழிவகுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்ய சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில், வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உரிய திருத்தம் வெளியிட்டு, மேற்கூறப்பட்ட பயன்பாட்டுக் கட்டடங்கள் சூரிய சக்தியால் நீர் சூடாக்கும் முறையைப் பின்பற்றினால் மட்டுமே புதிதாகக் கட்டட அனுமதி அளிப்பதை உறுதி செய்து கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

### 8.14. வரன்முறைப்படுத்தும் திட்டம்

1-3-1999-க்கு முன் அனுமதி மீறி/அனுமதியின்றிக் கட்டப்பட்ட/முடிவுற்ற கட்டடங்களை வரன்முறைப்படுத்த, "வரன்முறைப்படுத்தும் கட்டண விதிகள் (சென்னைப் பெருநகர்ப் பகுதி) 1999" முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்கீழ், மிகக் குறைந்த அளவு விண்ணப்பங்களே பதிவானதால் இந்த வரன்முறைப்படுத்தும் கட்டணம் 50 விழுக்காடு குறைக்கப்பட்டு, இத்திட்டம் 31-12-2000 வரை நீட்டிக்கப்பட்டது. வரன்முறைப்படுத்தும் திட்டம் 2000-ன்படி 31-8-2000 வரை கட்டப்பட்ட/முடிவுற்ற கட்டடங்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றன. இந்த வரன்முறைப்படுத்தும் திட்டம் 2000-த்தின்கீழ் ஏறத்தாழ 16314 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, மனுதாரர்கள் மொத்தத் தொகையாக ரூபாய் 98.79 கோடி செலுத்தியுள்ளனர்.

பொது மக்கள் கோரிக்கைக்கு இணங்க, அரசு இத்திட்டத்தைத் திருத்தியமைக்க முடிவு செய்தது. அதன்படி 31-7-2001-க்கு முன் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கு 30-11-2001 வரை விண்ணப்பிக்க இத்திட்டத்தை நீட்டித்து மற்றும் ஏற்கெனவே உள்ள கட்டண



மதிப்பீட்டில் 10 விழுக்காடு குறைத்து 9-8-2001-ல் அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது.

மீண்டும் அரசு 30-11-2001-ல் அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து 5-12-2001-ல் அறிவிக்கை வெளியிட்டது. அதில் 31-12-2001 வரை மனுப் பதிவு செய்ய கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு 31-10-2001 வரை கட்டப்பட்ட கட்டடங்களையும் சேர்த்து வரன்முறைப் படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் வரன்முறைப்படுத்தும் கட்டணமாக ரூ.20.36 கோடி, பதிவான 12714 விண்ணப்பங்கள் மூலம் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தாலும், பெருநகரில் உள்ள சம்பந்தப்பட்ட மற்ற உள்ளாட்சி மன்றங்களாலும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் மீண்டும், 31-3-2002 வரை கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கு 30-6-2002 வரை இறுதி நீட்டிப்பு வழங்கப்பட்டு, கட்டண விகிதமும் 50 விழுக்காடுகள் குறைக்கப்பட்டுள்ளது.

31-03-2002 வரையில் இத்திட்டத்தின் மூலமாக மொத்தம் ரூபாய் 122.06 கோடி கிடைக்கப்பெற்றுள்ளது.

ஐஐ

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 225162

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.